

## யதார்த்தன்

பேர்சியசின் கையில் இருந்து வீழ்ந்த மெடூசாவின் தலையைக் கடல் மீண்டும் உருட்டி வந்தது. கடல் பார்த்திருக்க அங்கே நிலத்தினது உரித்து மக்கள் உத்தரித்து மாண்டனர். இவன் கடலை வெறித்துப் பார்த்தான். மழை வலுத்தது. உடலைக் குத்தி இறங்கும் கந்தக நாற்றமுள்ள துளிகள். கடற்பரப்புக்கு மேல் அலைகளுக்கு எட்டும் தூரத்தில் சுழன்று எழுந்தது தலை. இன்னும் இறக்காத அவளுடைய சர்ப்பக்கேசம் ஒவ்வொன்றும் தரையைப்பார்த்துச் சீறின உருண்டு திரண்டு விழும் மழைத் துளிகளின் நடுவே பளபளவென அவளுடைய கண்கள் கறுத்த மீனின் காதுச்சவ்வுகளைப் போல திறந்தன. இவனும் இதர எல்லோரும், எல்லாமும் அதனைக்கண்டனர். இவன் கண்களை மூடிக்கொண்டான். உடல் ஒரு முறை உதறி அடங்கியது. கடலின் மேலே வானத்தின் கீழே, மழையின் நீர்மை உருண்டைகளின் நடுவே அவளின் கண்கள். கடல் ஆர்ப்பரிக்க மறுகணம் எல்லாம்,

கல்.

# மெடூசாவின் கண்களின் முன் நிறுத்தப்பட்ட காலம்

# மெடூசாவின் கண்களின் முன் நிறுத்தப்பட்ட காலம்

• கதைகள் •

**யதார்த்தன்**

**மெடூசாவின் கண்களின் முன் நிறுத்தப்பட்ட காலம் • கதைகள்**
• யதார்த்தன் *(Piratheep Kunarathnam)* • *© Pratheep Kunarathnam* • வெளியீடு : ஆக்காட்டி • *63 Rue de Lisbonne, 77550 Moissy-Cramayel.* • மின்னஞ்சல் : *aakkaddi@gmail.com* • அகப்பக்கம் : *aakkaddiarchives.wordpress.com* • பேச : *+33 6 52 33 75 84* • முதலாம் பதிப்பு : *July 2017* • அட்டை ஓவியம் : *Kyendo* • உள்/வெளி வடிவமைப்பு : தர்மு பிரசாத் • பிரதிகள் : *300* • உள் எழுத்துரு : விஜயா *(Vijaya)* யுனிக்கோட். *11pt.* • அச்சு : *AJ Prints (Pvt) Ltd. Dehiwala.* • இந்தியாவில் விற்பனை : கருப்புப் பிரதிகள் • விலை : ரூ.*300* (இலங்கை); *8* யூரோ (அய்ரோப்பா)

**மெடூசாவின் கண்களின் முன் நிறுத்தப்பட்ட காலம்** • (STORIES)
• Yatharthan • © Piratheep Kunarathnam • Published by : AAKKADDI • web : aakkaddiarchives.wordpress.com • First Edition : July 2017 • Mobile : +33 6 52 33 75 84 • E-Post : aakkaddi@gmail.com • Address : 63 rue lisbonne - 77550 Moisy Cramayal • Cover Art : Kyendo • Layout : Dharmu Pirasath (reysath@gmail.com) • Copies : 300 • Wrapper font : Vijaya (unicode). Size : 11pt • Printed : *AJ Prints (Pvt) Ltd. Dehiwala.* • Price : Rs.300 *(Srilanka); 8 Euro (Europe)*

**ஆக்காட்டி வெளியீடு 1**

**ISBN 978 - 955 - 7481- 00 - 5**

• பொறுப்பேற்பு •

*© : Kyendo*
அட்டைப்பட ஓவியம் இணையத்திலிருந்து எடுத்துப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இதன் அசல் வடிவத்தை இந்தக் கீழ்வரும் சுட்டியில் பார்க்கலாம்.
*http://kyendo.deviantart.com/art/Florence-and-the-Machine-The-Ghost-279213302*

நிலம் உத்தரித்துக் கிடக்கையில்
பார்த்திருந்த கடலுக்கு

• யதார்த்தன் (பிரதீப் குணரட்ணம்) 1993 •

யாழ் பல்கலைக்கழக மொழியியற்துறை மாணவர்.

கல்குதிரை, காலம், ஆக்காட்டி, புதியசொல், தடம், நடு மற்றும் குறி போன்ற இதழ்களில் கதைகள் வெளியாகியிருக்கின்றன.

மரபுரிமைகள், வரலாறு, கதைகள், கவிதைகள், கட்டுரைகள் என எழுத்துச் செயற்பாட்டில் ஈடுபட்டுவரும் இவருடைய கதைகளின் தொகுப்பு இது.

Email.: phoenixatheep@gmail.com
web.: yatharthan.com

• கதைக்காலங்களில் உடனிருந்தவர்களுக்கு நன்றிகள்.

அருண்மொழிவர்மன், கிரிசாந்த், சதீஸ், அனோஜன் பாலகிருஷ்ணன், ஆதிபார்த்தீபன், ஸ்வஸ்திகா, சயந்தன், தர்மு பிரசாத், தனுஜன், மகிதரன், கமலாபரன்.

## மீந்திருக்கும் வாழ்வும், நினைவில் அழியாத காலக்கோடுகளும்.

கடந்த இருபதாண்டுகளில் புனைவின் உள்ளார்ந்த வெளி சிதைக்கப்பட்டு, கதை கூறலின் புதிய சாத்தியங்கள் பின்-நவீனத்துவ உரையாடலை முன்வைத்தவர்களால் தீவிரமாக முயன்று பார்க்கப்பட்டன. அவற்றின் சிதைந்த கூறுகளை உட்செரித்த நவீனத்துவத்தின் கதை கூறல் முறை புதிர்வட்ட மீள் சுழற்சியில் இங்கு முன்மொழியப்படுகின்றது. இலக்கியத்தின் புனிதவுரு சிதைக்கப்பட்டு, அதன் அதிகாரம் கேள்விக்குள்ளானதில், இலக்கியத்தை அதீத விளையாட்டாக, கலகமாக, புனிதங்களைக் கவிழ்க்கும் செயற்பாடாகக் கைக்கொள்ள முடிகிறது. பெருங்கதையாடல்களின் தகர்வும், புனிதங்களின் தலைகீழ்க் கவிழ்ப்பும் புனைவுகளை உப வரலாறுகளாக வாசிக்கும் புனைவுசார் வெளியைத் தந்திருக்கிறது.

கடந்த முப்பதாண்டுகளின் போர்ப் புனைவுகளுள் அதிகமானவை போராளிகளால் எழுதப்பட்டவை. அவை போருக்கான தம்மளவிலான நியாயப்பாடுகளுடன் இருந்தன அல்லது இயக்கங்களின் உள்ளார்ந்த வீழ்ச்சியின் விசனங்களாக இருந்தன. ஆயுத வன்முறைகளின் குற்றமொப்பும் பிரதிகளாகச் சொற்பப் புனைவுகளையே வாசிக்க முடியும். போரின் புனிதப்படுத்தல்சார் உளவியலி

லிருந்து வாசிக்கப்பட்ட, எழுதப்பட்ட புனைவுகளிலிருந்து விலகுப வையாகப் போரினுள் பிறந்தவர்களின் புதிய புனைவுகளை வாசிக் கலாம். அவர்களுக்கு முந்தைய தலைமுறை அணுகிய 'சாகச' நோக்கிலிருந்து விலகி, புதிய அலைப் புனைவுகள் போரை அதி காரங்களால் பலியிடப்பட்ட உடல்களாகப் முன்வைப்பதில் தொட ங்குகின்றன.

போர் நினைவுகளும், வெளிப்பாடுகளும், அணுகுமுறையும் தன்னிலை சார்ந்தவை. அவற்றைப் பொதுமைப்ப டுத்தல்களுக்குள் அடைபட முடியாத விலகல்களின் தொகுப்பாக மட்டுமே வாசித்து, உரையாட முடியும். யதார்த்தனின் புனைவுகளில் திரளும் போர்த் தன்னிலை, போரை உள்ளிருந்து அணுகிய சுயமாகவே இரு க்கிறது. அதற்குப் போர் குறித்த புனிதக் கதையாடல்களைத் தக்க வைத்திருக்க வேண்டிய தேவை இருப்பதில்லை. போரை இரத்து-ச் செய்யும் போக்கே புனைவில் உருவாகி வருகிறது. முள்ளிவா ய்க்கால் வரை போரோடு இழுபட்டவனின், போரை மீந்திருக்கும் உடல்களின் வலியாக உரையாடும் புனைவுகளாக வாசிப்பின் வசதிக்காகவகைப்படுத்தலாம்.

நினைவில் அழியாத காலக்கோடுகளாகும் கதைகளில், முகா ம்கள் துயர்சார் குறியீடாகி மீந்திருக்கும் உடல்களின் வலிகளைப், போரில் இலக்குகளாக முன்நிறுத்தப்பட்ட மக்கள்சார் உளவியலில் இருந்து புனைவாக்குகிறார். யதார்த்தன் போரின் உள்ளார்ந்த அழிவை, வீழ்ச்சியை துயரங்களாக முன்வைத்துக் கழிவிரக்க த்தைக் கோருவதில்லை. அவர் போரின் கொடூர எதார்தத்தைப் புனைவுகளாக்கும் போது, நாம் இதுகாறும் ஆதுரமாக நம்பி வந்த 'போரின் புனிதவுடல்' அழுகி நம்மைத் தொந்தரவு செய்வதாக உருமாறி விடுகிறது. போரின் / போராட்டத்தின் உள்ளார்ந்த அழிவுகளை உரையாடும் புதிய அலைப் படைப்புகள், இன்னொரு முரண் உரையாடல்சார் வெளியைத் திறந்திருக்கிறது. இப்புதிய அலைப் புனைவுகளின் தொடக்க உரையாடலாக 'மெடூசாவின் கண்களின்முன் நிறுத்தப்பட்ட காலம்' கதைகளின் தொகுப்பை வெளியிடுகிறோம்.

- ஆக்காட்டி

## கதைகள்


| | | |
|---|---|---|
| 1. | இலங்கைப்பூச்சி | .09 |
| 2. | கோழிக்கால் பட்டியின் கடைசிப் பசு மாடு | .23 |
| 3. | தீட்டுத்துணி | .33 |
| 4. | கோலியாத் | .48 |
| 5. | லெப்ரினன்ட் கேணல் இயற்கை | .62 |
| 6. | மிளகாய்ச் செடி | .70 |
| 7. | மக்ரலின் அறுபதாயிரம் புறாக்கள் | .81 |
| 8. | மரநாய் | .91 |
| 9. | மெடூசாவின் கண்களின் முன் நிறுத்தப்பட்ட காலம் | .102 |
| 10. | இறைச்சி | .111 |
| 11. | வோண்டர் கோன் | .123 |

சூரியனுக்குக் கீழே உள்ள பொருட்களில்
மிகவும் குழப்பமானதும்
புரிந்துகொள்ள முடியாததுமான ஒரே விசயம்
உண்மை மட்டுமே.

-ஹர்மன் மெல்வின் -

# இலங்கைப்பூச்சி

*நானே படுகொலையின் சாட்சி*
*நானே நிலப்படத்தின் பலியாள்*
*நானே எளிய சொற்களின் புதல்வன்*
*-மஹ்மூத் தர்வீஷ் -*

எல்லாரும் இலங்கைப்பூச்சியெண்டு கூப்பிடும் தர்மலிங்கம் ஜெயசீலன் 'குடும்பக்காட்' கூட இல்லாத ஆள். விதானையார் அலோசியஸ், அவன்ர பேரில இருக்கிற 'குடும்பக்காட்டை' வச்சுத்தான் நிவாரணத்தை சுருட்டுறதாயும் ஊருக்க வதந்தி இருந்தது. விதானையின் பெடியன் இயக்கத்தில முக்கிய பொறுப்பாளரா இருக்கும் போது விதானையோட சண்டைக்குப்போய் இலங்கைப்பூச்சியின் 'குடும்பக்காட்டை' மீட்டுக்குடுக்க ஆருக்கும் துணிவில்லை.

ஜெயசீலன் முப்பத்தெட்டு வயது நிமிந்த ஆம்பிளை. ஊத்தச் சேட்டும், சறமும் போட்டு, கண்ணெல்லாம் இடிஞ்சு போய், மொட்டை அடிச்ச தலையைக்குனிஞ்சு கொண்டு திரிஞ்சாலும் ஒரு காலத்தில ஊரில வடிவான இளந்தாரி எண்டுறது இப்ப பாக்கேக்கையும் தெரியும். ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி எண்பத்தி ஆறில எங்கட ஊரில இருந்து, களனிக் கம்பசுக்குப் படிக்கப் போன ஆள் ஜெயசீலன் தான். படிக்கப் போன இடத்தில மட்டக்களப்புப் பெட்டைய விரும்பியிருக்கிறான். அதைக் கேள்விப்பட்ட பெட்டையின்ர தாய்-தேப்பன் செய்வினை செஞ்சு தர்மலிங்கத்தாற்ற பெடிக்கு புத்தி பேதலிச்சுப் போச்சுது. எண்டு ஊரெல்லாம் கதைச்சினம். சிலபேர் ஜே.வி.பி. கலவரத்திலை இவனும் சிங்களப் பெடியளோட சேர்ந்து பொலிசுக்கு கல்லால எறிஞ்சவன் எண்டும், பொலிஸ்காறர் கொண்டு போய் அடிச்சதிலை அப்பிடி ஆகீட்டான் எண்டும் கதைச்சினம். இப்பவும் அவன் அளவுக்குச் சிங்களம் கதைக்கவும் எழுதவும் தெரிஞ்ச ஆள் ஒருத்தரும் இல்லையெண்டு கோதைக்கு அப்பா அடிக்கடி

சொல்லுவார். இந்தியனாமிப் பிரச்சனேக்க ஒரு நாள் ஊரிலை இருக்கிற பெடியளோட சேர்த்து கோதையின்ர அப்பாவையும், தலையாட்டிய வச்சு பிடிச்சு முட்டுக்கால்ல இருத்தி வச்சிருந்தாங்கள். அங்க வந்த ஜெயசீலன் ஆமிக்கொமாண்டரோட கதைச்ச இங்கிலிசில இந்தியனாமி எல்லாரையும் விட்டுட்டாங்களாம். அண்டைக்குப் பிறகு தர்மலிங்கத்தாற்ற பெடியன் ஊரில பிரலபலமான ஆளா மாறிப்போனான். இண்டைக்கு அவனுக்கு ஆரும் இல்லாட்டியும் அவனைக் கூப்பிட்டுச் சனம் சோறு போடுதெண்டா, பதினைஞ்சு ஆம்பிளையளை ஆமிற்ர இருந்து காப்பாற்றினது தான் எண்டும் அப்பா அடிக்கடி சொல்லுவார்.

எண்டாலும் கோதைக்கு அவனைக் கண்டாலே புளுத்த பயம். அம்மன் கோயில் திருவிழாவில மேளமடிக்க வாற மணியம் கோஷ்டியில இருக்கிற தவில் வித்துவானவை தலையைச் சுழற்றி இசையை அனுபவிச்சு மேளம் அடிக்கிற மாதிரி ஒரு பக்கம் தலையைத் திருப்பிச் சுத்திச் சுத்தி பாக்கிறத பாத்தாலே இவளுக்கு நடுநெஞ்சில திக்கெண்டு இருக்கும். பள்ளிக்கூடம் விட்டு வரும் போது சின்னப்பெடியள் 'இலங்கைப்பூச்சி' எண்டு அவனைப் பார்த்துக் கத்திப் போட்டு ஓடுவாங்கள். அவன் கல்லொண்டை எடுத்துக்கொண்டு துரத்தி வருவான். ஒரு நாளும் அந்தக்கல்லை எறிஞ்சமாதிரி இவளுக்குத் தெரியாது. இவளும் வெருண்டடிச்சுப் பெடியளோட சேர்ந்து ஓடுவாள். அந்தப் பயம் அப்பிடியே தங்கீட்டுது. இலங்கைப்பூச்சி வீட்டுப்பக்கம் வந்தா, வெளியிலை வரவே மாட்டாள். அவனுக்கு இதுதான் குரல் எண்டு கூட அவளுக்குத் தெரியாது. அப்பாவோடையும், அண்ணாவோடையும் கதைக்கேக்க ஏதோ இரகசியம் கதைக்கிறது போலத்தான் குரல் கேக்கும். ஒரு நாளில அவன் கதைக்கிற வார்த்தையளை கைவிரலாலை எண்ணி முடிச்சிடலாம். அடிக்கடி தொண்டையை செருமிச்செருமிக் கரகப்பான மெல்லிய குரல்ல கதைப்பான்.

டியூசன் முடிஞ்சு குளக்கட்டு ரோட்டால இவளும் சினேகிதியளும் வருவினம். குளத்தில பிரேதம் மிதக்கிறமாதிரி கைகால்களைப் பரப்பிபோட்டு இலங்கைப்பூச்சி மிதந்து சின்னப் பெடியளுக்குப் பிராக்குக் காட்டிக்கொண்டிருப்பான். இல்லையெண்டால் கோயில் வளவுக்கு நேர் முன்னால் இருக்கிற வொலிபோல் கிறவுண்டுக்க நிக்கிற தூணில் இருந்து பெடியள் வொலிவோல் விளையாடுறத இலங்கைப்பூச்சி பார்த்துக்கொண்டிருப்பான். ஊரில அவனை இலங்கைப்பூச்சியெண்டு கூப்பிடாமல், சீலன் எண்டு கூப்பிடுறது கோதையின்ர அப்பாவும் அண்ணாவும் தான். அதாலதானோ என்னவோ அப்பாவிலையும் அண்ணாவிலையும் அவனுக்குத் தனிவாரப்பாடு இருக்குதெண்டு கோதை நினைச்சுக்கொள்ளுவாள்.

தர்மலிங்கம் ஜெயசீலனுக்கு 'இலங்கைப்பூச்சி' எண்ட பட்டப்பெயர் வரக்காரணம், அந்த ஊரிலை இலங்கைப்படத்தை அச்சொட்டாக் கீறத்தக்க ஒரே ஆள் இலங்கைப்பூச்சிதான். இலங்கைப்பூச்சி மெல்லிய இருவாட்டி மணல் நிறத்திலையே இருக்கும். வாய்ப் பக்கம் நட்டுவாக்காலிக்கு இருக்கிறது மாதிரி கொடுக்கு இருக்கும். மணல்ல சின்னக் குழியெடுத்து அதுக்குள்ள இருக்கும். வயித்தில தொப்புள் இருக்கிற மாதிரி அந்தக் குழியள் இருக்கு எண்டு கோதை சொல்லுவாள். பெடி-பெட்டையள் வாயால அந்தக் குழியை ஊதப் பூச்சி தெரியும். அதப் பிடிச்சு மணல்ல விட்டா அது நகர்ந்து நகர்ந்து இலங்கைப் படத்தைக் கீறும் எண்ட நம்பிக்கை ஊர்ப் பெடி-பெட்டையளிட்ட இருந்தது. கோதையும் அண்ணாவோட சேர்ந்து அதைப்பிடிச்சு மணலில விட்டுப்பாத்தாள். வட்டம் வட்டமாய் கீறிச்சு இலங்கை வரவேயில்லை. "உது தமிழீழப் பூச்சிபோல அதுதான் இலங்கையைக் கீற மாட்டன் எண்டுது" எண்டு அப்பா கெக்கட்டமிட்டுச் சிரிச்சார்.

ஊரில இருக்கிற பள்ளிக்கூடப் பெடி பெட்டைக்கும் இலங்கைப்படம் கீற வேணுமெண்டா போற இடம் இலங்கைப்பூச்சி வீடுதான். பென்சிலை எடுத்துப் பேப்பரில் வைத்தான் எண்டால் ஒரு முறை கூட அழிக்காமல் இலங்கையின் தீவுகள், குடா, வளைவு, சுழிவு ஒண்டையும் விடாமல் அசலாய் கீறிக் குடுப்பான். அதனாலேயே அவனுக்குப் பள்ளிக்கூடப் பெடியள் வைச்ச பெயர் இலங்கைப்பூச்சி.

கோதையின் வீடு இருக்கும் ஒழுங்கை முடிஞ்சு, ஏழாம் வாய்க்கால் வயலடி தொடங்கிற இடத்தில இருந்தது இலங்கைப்பூச்சியின் பெரிய நாற்சார் வீடு. வயல் வெளி தாண்டிப் போனா, ஈச்சம் பத்தை தொடங்கும், அந்தப் பத்தையின் முடிவில், எட்டாம் வாய்க்காலுக்குப் பக்கமாய் இருக்கிற தென்னந்தோப்பு வளவுக்கை வீடிருந்தது. தர்மலிங்கத்தார் தனிய உழைச்சுக்கட்டின வீடு எண்டு சனம் கதைக்கும். ஆமி இருந்த காலத்தில கொமாண்டர் அந்த வீட்டில தான் இருந்தவனாம். முல்லைத்தீவு அடிபாட்டுக்குள்ளையும் வீடு தப்பீட்டுது. இலங்கைப்பூச்சியின் தகப்பனை பொலிசர் தர்மலிங்கம் எண்டா அறுபதுகளில பிறந்தவை எல்லாருக்கும் தெரியும். இலங்கைப் பொலீசில் வேலை செய்ததாலை அவரை ஊருக்க அப்பிடிக் கூப்பிட்டிச்சினம். அப்ப இயக்கத்தின்ர பொலீசுக்குப் பொறுப்பா போட்டிருந்த நடேசம்மானும் அவரும் ஒரே பச்சாறர் எண்டும் சொல்லுவினம். பிரச்சினை தொடங்கேக்க அவர் பென்சன் வாங்கிக் கொண்டு ஊருக்கு வரவும், படிக்கப்போன பெடியன் விசராக்கி வீட்ட வரவும் சரியாய் இருந்தது. மனுசன் அதோட உடைஞ்சு போனார். கலியாணம் செய்து பத்து வருசத்துக்குப் பிறகு பிறந்த ஒரே

பெடியனுக்கு இப்பிடி ஆனது மனிசனை நொறுக்கிப்போட்டுது. யோசிச்சு யோசிச்சு கைகால் இழுத்துக் கட்டில்ல சுருண்டு கிடந்த தர்மலிங்கத்தார் சிவராத்திரியண்டு செத்துப்போனார். அதுக்குப் பிறகு குஞ்சம்மா தான் மனுசன்காறர் போனாலும் பெடியனை கரைக்குச் சேர்க்க வேணும் எண்டு கஸ்ரப்பட்டுது. தர்மலிங்கத்தாரின்ர பென்சன் காசில இலங்கைப் பூச்சிக்கு வைத்தியம் பார்த்து ஓரளவு குணமாக்கினார். வைரவர் கோயில் ஐயரிட்ட இலங்கைப்பூச்சிக்குத் திருநீறு போடக் கூட்டி வரேக்க கோயில் வாசல்லயே மயங்கி விழுந்து செத்துப்போனார். தாய்க்குப் பக்கத்தில குந்தியிருந்தபடி முகத்தை வெறிச்சுப் பார்த்துக்கொண்டிருந்தான் இலங்கைப்பூச்சி.

குஞ்சம்மா செத்தாப் பிறகு, வீடும் இலங்கைப்பூச்சியும் தனிச்சுப் போச்சினம். வீட்டச்சுத்திப் பத்தையள் அடர்ந்து வெளவால் குடிவாற அளவுக்கு இருண்டு போச்சுது. அந்த வீட்டின் சுவரெல்லாம் இலங்கைப்பூச்சி கணக்கெல்லாம் எழுதி வச்சிருப்பான். இல்லையெண்டா இங்கிலீசிலையோ, சிங்களத்திலையோ கிறுக்கி அழிச்சிருக்கும். அதெல்லாம் ஏதோ கவிதையோ, பாட்டோ மாதிரி இருக்கும். அரிவாள், நட்சத்திரமும் கரித்துண்டால கீறி இருக்கும். வீட்டுக்கு ஆக்கள் போய் வாறதுக்கு ஒற்றையடி பாதையும் முத்தத்தில மட்டும் கொஞ்சம் வெளிப்பும் இருந்தது. அந்த வீட்டுக்க நுழையும் போது வெளவால் பீ நாற்றமடிக்கும். அப்பாவோட கொக்கைச்சத்தகம் வாங்க ஒரே ஒருக்கா அந்த வீட்டுக்குப் போயிருக்கிறாள் கோதை.

இலங்கைப்பூச்சி பசித்தால் யார் வீட்டுப்பக்கமாவது போய் நிப்பான். ஒண்டும் வாய் திறந்து கேட்கமாட்டன். எப்பிடியும் யாராவது கூப்பிட்டுச் சாப்பாடு போடுவினம். சாப்பிட்டா பிறகு, விறகு வெட்டுறது, தோட்டம் கொத்துறது, தேங்காய்ப் புடுங்கிறது எண்டு ஏதாவது வேலையள் இருந்தால் செய்து குடுத்திட்டு வருவான். பெரும்பாலும் அது கோதை வீடாகத்தான் இருக்கும். கோதையின் அப்பாவோடும் அண்ணாவோடும் இலங்கைப்பூச்சி நல்ல மாதிரி. அவன் கொஞ்சமெண்டாலும் கதைக்கிறது கோதையின் அப்பாவோடும் அண்ணாவோடும் தான். அப்பா என்ன சொன்னாலும் இலங்கைப்பூச்சி செய்வான். அப்பாவும் எங்கேயாவது போவதென்றால் இலங்கைப் பூச்சியையே துணைக்குக் கூட்டிக்கொண்டு போவார். தீவாளி, பொங்கல் எண்டா அம்மா இலங்கைப் பூச்சிக்கு உடுப்பு எடுத்துக்குடுப்பா. இவளுக்கு மட்டும் இலங்கைப் பூச்சியெண்டா புளுத்த பயம். அண்ணாவும் சின்னன்ல இவளை ஏதாவது வெருட்டோணும் எண்டா இலங்கைப்பூச்சியெண்டு தான் வெருட்டுவான்.

அப்ப கோதை பத்தாம் வகுப்பு இரண்டாம் தவணை படிச்சுக்கொண்டு இருந்தாள். கௌரி ரீச்சர் "பிள்ளையள் இலங்கைப்படம் கீறி வடிவா

குறிச்சுக்கொண்டு வாங்கோ" என்றுவிட்டார். அப்பிடி ஒரு நிலைமை வருமெண்டு இவள் நினைக்கவேயில்லை. அம்மாட்ட போய் "நீ போய்க் கீறிக்கொண்டு வாவனணை" எண்டு கெஞ்சி பாத்தாள். அம்மா மாதர்சங்கக் கூட்டத்துக்குப் போகோண்ணும் எண்டும் பயப்பிடாமல் போய்க் கீறிக்கொண்டு வா பெரிய பெட்டையான பிறகு என்னடி பயம் உனக்கு எண்டு அதட்டிவிட்டுப் போனாளர்.

அண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை. இவள் தன்ர லேடீஸ் சைக்கிளை எடுத்துக்கொண்டு வெளிக்கிட்டாள். கூடைக்குள் ஒரு வெள்ளை நிற பிறிசில் போட் சுற்றி வைத்திருந்தாள். அதோட நடராசர் கொம்பாசும் கொஞ்சம் கலர் பென்சில்களும் எடுத்துக்கொண்டாள். பயத்தில் குலப்பன் அடிச்சுது நாலு வீடு தள்ளி இருக்கும் பாமினி வீட்ட போய் அவளைக் கூப்பிட்டாள்.. அவளுடைய அம்மா கிணத்தடியில் நின்று குறுக்குக்கட்டோட எட்டிப்பார்த்து, பாமினி தகப்பனோட கிளிநொச்சிச் சந்தைக்குப் போட்டா எண்டு சொன்னா. இவளுக்கு வேறு வழியில்லை. பெடலை மிதித்தாள். அண்ணாவை வா எண்டு கேட்டாள். அவன் வேலைக்கு வெளிக்கிடுறன் எண்டு போட்டான். அப்பாவும் அம்மாவும் திருநகரில் இருக்கும் பெரியப்பா வீட்ட வெளிக்கிட்டினம். இலங்கைப்பூச்சி வீட்ட இவள்தான் போக வேணும். வேற வழி இல்லை.

ஒழுங்கை ஓடி முடியச் சைக்கிள் ஒற்றையடிப் பாதைக்குள் நுழைந்தது. சைக்கிளின் அசமந்தத்தில் ஒற்றையடிப்பாதையின் மருங்குகளை மூடி வளர்ந்து நின்ற தொட்டாச்சுருங்கிகள் சுருங்கிக்கொண்டே வந்தன. பாதையின் இருபக்கங்களும் வளர்ந்திருந்த நாயுருவிகள் வேறு. காலெல்லாம் கீறி எரிஞ்சுது. நாயுருவி விதைகள் கால்களில் ஒட்டிக்கொண்டு குறுகுறுத்தன. இவளுக்கு இலங்கைப்பூச்சியை எப்படி எதிர்கொள்ளப்போகின்றோம் என்ற குலைப்பனில் அவையொன்றையும் பொருட்படுத்தாமல் சைக்கிளை மிதித்தாள். வெளிக் கேற் திறந்து கிடந்தது. வீட்டைச் சுற்றித் தென்னந்தோப்பு பரந்து கிடந்தது.ஒரு பக்கத்தில் பற்றை வளர்ந்து நான்கைந்து புலுனிகள் அந்தப் பக்கத்தில் சத்தமெழுப்பி கொண்டிருந்தன. லேசான வெளவால் வாடை வந்தது. கல்மடுக் குளத்தின் வாய்க்கால் போக்கின் கீழே அப்படியொரு நாற்றத்தை இவள் முகர்ந்திருக்கிறாள். சைக்கிளை நிறுத்தி விட்டு, வாசலுக்கு நடந்து போனாள். அடி வயிற்றில் பீதி வலுத்துக்கொண்டு வந்தது.

"ஆரது" இவளுக்குப் பின்னாலிருந்து குரல் வந்தது. வெடுக்கெனத் திரும்பினாள். இலங்கைப்பூச்சி சண்டிக்கட்டு கட்டிய சறத்துடன், தோளில் பெரிய நொங்குக் குலையுடன் நின்றிருந்தான். அவனின் வெற்றுடல் பனந்தூசிகள் உதிர்ந்து வியர்வையில் ஊறிக்கிடந்தன. இவள்

அதிர்ச்சியுடன் பார்த்துக்கொண்டிருந்தாள். "என்ன விசயம் அப்பா ஏதும் வரச்சொன்னவரோ? வறட்சியாய் வந்தது குரல். கோதை அழுதுவிடுவேனோ என்று நினைத்தாள். நெஞ்சு விக்கியது. "இலங்கைப் படம் கீறோணும்" இறுகிக்கிடந்த அவன் முகத்தில் சட்டென்று புன்னகை. "திண்ணேல பாய் கிடக்கு எடுத்து போட்டிட்டு இருங்கோ வாறன்"

நொங்குக் குலையைத் திண்ணையில் வைத்துவிட்டு அவளைக்கடந்து வீட்டுக்குள் போனான். இவள் பாயை இழுத்துப் போட்டு விட்டுத் திண்ணையில் அமர்ந்து பிரிசில் போட்டை எடுத்துப் பரப்பினாள். யன்னல் பக்கம் எட்டிப்பார்த்தாள். மேல் கழுவி விட்டு பச்சைக் கோடு போட்ட வெள்ளை டீசேட்டை கைகளுக்குள் நுழைத்தபடி நாற்சார் முற்றத்தைத் தாண்டி வெளித்திண்ணையை நோக்கி அவன் வருவது தெரிந்தது. அவள் யன்னலில் இருந்து பார்வையை விலக்கி இயல்பாய் இருப்பது போல், பிறிசில் போட்டிலிருந்த அதன் சுருள் தன்மையை நிமிர்த்தும் முயற்சியில் இருந்தாள். அவளைப்பார்த்து "நொங்கு வெட்டித்தாறன் குடியுங்கோ நான் கீறுறன்" எண்டான். இவள் இல்லை வேண்டாம் என்று தலையாட்டினாள். அவளைக் கண்டுகொள்ளாதவனாய் திண்ணை மூலையில் இருந்த கத்தியை எடுத்து அதன் பிறப்பக்கத்தால் நொங்குக்குலையில் இருந்து சில நொங்குகளைத் தட்டி விழுத்தி நொங்குகளின் பனுவிலைப் பியத்து விட்டு நொங்கைச்சீவி இவளுக்கு நீட்டினான். இவள் வாங்கிக்கொண்டாள். உருத்திப் போட்ட பனுவில் கவளம் ஒன்றை எடுத்துத்துடைத்து விட்டு இவளிடம் கொடுத்தான். இவள் வாங்கிக்கொண்டாள். அவன் கைகளைச் சறத்தில் துடைத்து விட்டுத் திண்ணையில் ஏறி பிறிசில் போட்டை எடுத்து இலங்கைப்படத்தை யாழ்ப்பாணத்தில் தொடங்கி வரையத்தொடங்கினான். இவள் ஒரு நொங்கின் மூன்று கண்களையும் நோண்டிப் பனுவிலில் ஊற்றி அவனைப் பார்த்தபடி குடித்து முடிப்பதற்குள், அவன் கை இலங்கையை வரைந்து முடித்து விட்டது. இவள் பிரமிப்பாகப் பார்த்தாள். அவனை எல்லோரும் இலங்கைப்பூச்சி என்று கூப்பிடுவதன் காரணத்தை அன்று அவள் நேரிற் கண்டுவிட்டாள். கறுப்புக் கலர் பென்சிலை எடுத்து இலங்கையின் நில எல்லைக் கோடுகளை இன்னும் கருமையாக்கினான். சட்டென்று நிமிர்ந்து. "உள்ளுக்கு என்ன குறிக்கோணும்? மாகாணமோ மாவட்டமோ?"

"மாகாணங்கள்" இலங்கையின் மாகாணங்களின் எல்லைகள் அவனின் கைகளில் இருந்து இறங்கி ஓடின. "எட்டுத்தான் வந்திருக்கு ஒம்பது எல்லோ?". சட்டென்று பெரிசாச் சிரிச்சான். அவன் ஏன் சிரிக்கிறான் எண்டு விளங்காமல் பார்த்தாள். கொஞ்சம் குறைந்திருந்த குலப்பன் வயிற்றில் மீண்டும் தொடங்குவது போலிருந்தது. இலங்கைப்பூச்சி சிவப்புப் பென்சிலை எடுத்து வடக்கு மாகாண எல்லையில் தொடங்கிக் கிழக்கு மாகாணத்திற்குச் சிவப்புக் கலரைத் தீட்டினான்.

இவளின் இலங்கைப்படத்துக்குக் கௌரி டீச்சர் பத்துக்கு எட்டுப் போட்டது இவளுக்குச் சந்தோசம். அதுக்குப் பிறகு இலங்கைப்பூச்சில இருக்கிற பயம் இவளுக்குக் கொஞ்சங்கொஞ்சமாப் போகத்தொடங்கிட்டு. அவன் பூ ஆய வரும் போது தைரியமாக வெளியில் வந்து நிற்பாள். இவளைக்கண்டதும் தன்னுடைய புருவங்கள் இரண்டையும் தூக்கி வேடிக்கையாகச் சிரிப்புச் சிரித்து விட்டுப் போவான். இவள் ஏதாவது கதைப்பாள். அவன் வரும் போது அம்மா தேத்தண்ணி குடுப்பா. முன்பெல்லாம் அம்மா குசினிக்க நிண்டு கொண்டு தேத்தண்ணியக் கொண்டு போய்க் குடடி எண்டுசொன்னால் இவள் பயத்தில் போகவே மாட்டாள். இப்போது அவளே அவனுக்குக் கொண்டு போய்க் கொடுத்தாள். அவன் வரும் போது கணக்குக் கொப்பியைக் கொண்டு போய்க் காட்டுவாள். அவன் இவளுக்குப் பிரசினங்கள் எழுதிச் செய்து காட்டுவான். நன்றாக விளங்கப்படுத்துவான். பிறகு அடிக்கடி இவள் தனது தோழிகளை அழைத்துக்கொண்டு அவனிடம் இலங்கைப்படம் கீறவும் கணக்கு ஏதாவது விளங்காட்டி கேக்கவும் போவாள். "ஏன் அம்மா அவரை விசர் எண்டீனம் நல்லாத்தானே இருக்கிறார்?" ஒரு நாள் கேட்டாள். அம்மா ஏதோ வேலைப் பிராதியில் பதிலொன்றும் சொல்லவில்லை.

அண்டைக்கு ஒரு செவ்வாய்கிழமை காலமை அண்ணா இவளைப் பள்ளிக்கூடத்தில் இறக்கி விட்டிட்டுக் கிளிநொச்சி ரவுணுக்குப் போனான். இவள் மத்தியானம் இன்ரவலுக்கு முதல் பாடம் பிறீ எண்டுறதால நூலகத்தில போய் இருந்து கதைப் புத்தகம் ஒண்டை எடுத்து வைச்சுக்கொண்டு கதைக்குள்ள மெய்மறந்து போனாள். லைபிரரிக்கு வந்த பியோன் மரியதாஸ் அண்ணை "கோதை உம்மள உடன அதிபர் ஒஃபிசுக்குக் கையோட கூட்டி வரட்டாம்" எண்டார். இவள் எதுக்கு அதிபர் கூப்பிட்டு இருப்பார் எண்டு எட்டி மிதிச்சுப் போனாள். அதிபற்ற மேசைக்குப் பக்கத்தில இலங்கைப் பூச்சி நின்றிருந்தான். மேல் சட்டை போடேல்ல. ஒரு அரைக் காற்சட்டை மட்டும் போட்டு இருந்தான். அவன்ர கால், முதுகெல்லாம் புழுதி ஒட்டி வேர்வை தேகமெல்லாம் பூத்துப் போய்க் கிடந்தது. இவளுடைய கண்கள் இலங்கைப் பூச்சியை ஏறிட்டுக்கொண்டே ஓடி அவனுடைய பார்வையைச் சந்தித்தது. அதே சலனமொண்டும் இல்லாத இறுகின பார்வை. இவள் விளங்காமல், அவனையும் அதிபரையும் மாறி மாறிப்பார்த்தாள்.
அதிபர், குரலைச் செருமிக்கொண்டே "பிள்ளை சிலன் மாமாவோட வீட்ட போங்கோ" கோதைக்கு நெஞ்சுக்குள்ள சூடு பரவக் குரல் தடுமாறி வந்தது.
"ஏன் சேர் என்ன நடந்தது?"
"அண்ணாவைப் பிடிச்சுக்கொண்டு போட்டாங்கள்"
இலங்கை பூச்சியின் குரல் நொறுங்கி வெளிப்பட்டது.

2

அண்ணாவை இயக்கம் கிளிநொச்சியில் வைச்சுப் பிடிச்சுக்கொண்டு போனதில வீடே இருண்டு போச்சு. பதினைஞ்சு நாள் ஆச்சு. முகமாலைப்பக்கம் சண்டை அடிக்கடி நடந்தது. மன்னாரில் ஆமி முன்னேறுறான் என்றார்கள். ஊருக்குள் வீரச்சாவுச் செய்திகள் அதிகம் வரத்தொடங்கின. அம்மா மணித்தியாலத்துக்கு ஒருக்கால் சொல்லி அழுவதும் மண்ணள்ளித்தூற்றுவதுமாக இருந்தார். அப்பா தாடி வழிக்காமல் முகம் இருண்டு போய்த் திரிஞ்சார். இவளின் அன்றாடம் மிகவும் குறுகிப்போனது. செத்த வீட்டிற்கு வந்து போவதுபோல் உறவினர்கள் வந்து போனார்கள். வீட்டின் சமையல் வேலையைக் கோதையே எடுத்துக்கொண்டாள். காலமை அவிச்ச புட்டு அப்பிடியே கிடக்கும். எதோ கடமைக்கு இவள் சொன்னாத்தான் அப்பா சாப்பிட்டார். அம்மாக்கு இவள் குழைச்சுத் தீத்திவிடுவாள். அம்மாக்குக் கண்ணில எப்பவும் தண்ணி நிறைஞ்சு போய்க் கிடக்கும். சோறு தீத்தும் போது இவள் அம்மாக்கு ஏதும் ஆறுதல் சொல்லுவம் எண்டு துடங்கிக் கடைசில இவளும் அழுதபிறகு தான் சாப்பாடு முடியும். அம்மா கோயில் கோயிலாகப் போகத்தொடங்கினார். சீவியத்துக்கும் சாத்திரங் கேக்கிறதுக்கும் வேற அலுவல் பாக்கிறதுக்கும் தோட்டத்தில வாற வருமானம் காணாது. அண்ணான்ர சம்பளமும் இல்லை. அப்பா தோட்டத்துக்கும் ஒழுங்காப் போறேல்ல. இலங்கைப் பூச்சிட்டச் சொல்லி இவள்தான் தோட்டத்தைக் கவனிக்கச்சொன்னாள். அப்பா, கோதையின் இரண்டு பவுண் சங்கிலியைத் தமிழீழ வைப்பகத்தில் வைச்சுக் காசு கொண்டுவந்தார். பொம்பிளைப்பிள்ளேன்ர கழுத்து வெளிச்சுப் போச்சுதெண்டு அதுக்கும் அம்மா ஒப்பாரி வைச்சா.

இலங்கைப் பூச்சியும் அப்பாவும், அப்பான்ர எம்.டி90ல் அண்ணாவை மீட்கும் அலுவல் பார்க்க வள்ளிபுனம் அரசியல் துறை தலைமைச்செயலகத்திற்கும் கிளிநொச்சிக்கும் போய் வந்தார்கள். விதானையாரைப் பிடிச்சு அவன்ர மோன் மூலமாக அலுவல் பார்க்கச் சொல்லி எல்லாரும் அப்பாக்குச் சொல்லிச்சினம். விதானை இழுத்தடிச்சுக் கடத்திக்கொண்டு திரிஞ்சான். ஒரு மாதம் அலைஞ்சு எந்தப்பயனுமில்லை என்று தெரிந்துவிட்டது. விதானை வீட்டுக்கும், அரசியல் துறைக்கும் போய் இனிப் பல்லுக்காட்டிப் பிரியோசனம் இல்லை என்று ஒரு நாள் அப்பா கோபமாகச் சொன்னார். பிறகு அப்பா எங்கேயும் போவதில்லை. அம்மாவோடு சாத்திரம் கேட்பதிலும் நேர்த்திவைப்பதிலும் அப்பாவும் மினக்கெடத் தொடங்கினார். நாட்களைப்போல் அப்பான்ர தாடியும் வளர்ந்து அவற்ற முகத்தை மூடியது. இலங்கைப்பூச்சி அடிக்கடி வீட்டுப்பக்கம் வந்து "ஏதாவது தெரிஞ்சுதோ?" என்று இவளிடம் தான் கேட்பான். இவள் விரக்தியாய்த் தலையசைப்பாள். மேலே ஒண்டும் கேக்காமல் தலையைக் குனிஞ்சு கொண்டு போய்விடுவான்.

அண்ணா என்றால் அவனுக்கு எவ்வளவு வாரப்பாடு எண்டு இவளுக்கு நல்லாத்தெரியும். ஏற்கனவே பெரிசாக்கதை பேச்சில்லாமல் திரியிற மனிசன் அதுக்குப் பிறகு இன்னும் இறுகிப்போன மாதிரி இவளுக்குப்பட்டது. அண்டைக்கு வெள்ளிக்கிழமை. அப்பாவும் அம்மாவும் ஸ்கந்தபுரம் சாத்திரிட்டச் சாத்திரம் கேட்டிட்டு வந்து இவள் அவிச்சு வச்ச புட்டைச் சாப்பிடத்தொடங்கிச்சினம். அப்ப ஒரு மோட்டச்சைக்கிள் வந்து கேற்வாசல்ல நிண்டது. ஆர் எண்டு எல்லாரும் வாசலைப்பார்க்க மோட்டச்சைக்கிள் டக்கெண்டு வெளிக்கிட்டுப் போச்சுது. படலையைத் திறந்து ஓர் உருவம் வேகமாப் படியில தாவி ஏறத் திண்ணேல கிடந்த லாம்பு வெளிச்சம் அந்த உருவத்தின்ர முகத்தில பட்டுது. அண்ணா! அம்மா அண்ணாவைக் கட்டி பிடிச்சு அழத்தொடங்கினா. அகப்பையோட நிண்ட இவளை அவனே கழுத்தைச் சுற்றி இழுத்துப் போட்டுக் கொஞ்சினான். திகைச்சுபோய் நிண்ட அப்பாவைப் பார்த்து "ஓடிவந்திட்டன் அப்பா எப்பிடியும் தேடி வருவாங்கள் இடம் மாறோணும்" என்றான்.

அங்க இங்க எண்டு அம்மா சொந்தக்காரர் வீடெல்லாம் சொன்னார். அப்பா, சொந்தக்கார வீடுகள நோட் பண்ணுவாங்கள் எண்டார். கடைசியில் சீலன் மாமா வீட்டில விடுவம் எண்டு இவள்தான் யோசினை சொன்னாள். அப்பா மோட்டச்சைக்கிள் எடுத்தாச் சத்தம் வரும் எண்டு சொல்லிப்போட்டுச் சைக்கிள்ல அண்ணாவை ஏத்திக்கொண்டு இலங்கைப் பூச்சி வீட்ட போனார்.

அடுத்த நாளே இயக்கம் அண்ணாவைத் தேடி வந்தது. வீடெல்லாம் தேடி எல்லாரையும் துருவித் துருவி விசாரிச்சாங்கள். அதுக்குப் பிறகும் நாலஞ்சு தரம் இயக்கம் வந்து அப்பாவை வெருட்டிப் விட்டுப்போனது. அப்பா, "நீங்கள் தானேடா பிடிச்சுக்கொண்டு போனனீங்கள்" என்று அவர்களுடன் வீம்பாய் சண்டைக்குப் போனார். அம்மா அடிச்சு வைச்சு ஒப்பாரி வைச்சா. இவளுக்கே சில வேளை "அண்ணா ஓடி வந்தது கனவோ" என்று தோன்றியது. இயக்கம் தேடி வருவது குறைந்தது. அப்பா காட்டுக்கு அரசியல் துறைக்குப் போய், ஓடின பெடியன் பற்றி ஏதாவது தெரிஞ்சுதோ எண்டு விசாரித்தார். அம்மாவும் அப்பாவுடன் போய்த் தன் பங்குக்கு ஒப்பாரி வைச்சுக் காட்டிட்டு வந்தார். காட்டுக்க இருந்து தப்பி ஓடி இருக்கிறார், படையகப் புலனாய்வுக்காறர் ஏதாவது சொன்னால் தான் நாங்கள் சொல்லாம் எண்டு அவர்கள் சொன்னார்கள். இலங்கைப் பூச்சி வீட்டிற்கு இவள் மட்டும் எப்போதாவது அரிசி- சாமான் கொண்டு போவாள். எப்போதும் சமைக்காத இலங்கைப் பூச்சி அண்ணாவுக்காகச் சமைத்தான்.

அப்பா அடிக்கடி கிராஞ்சிக்கும் வலைப்பாட்டுக்கும் போய் வந்தார்.

அண்ணாவைக் கடலால் மன்னாருக்கு அனுப்ப அப்பா அலுவல் பார்க்கின்றார் என்று அம்மா ஒருமுறை இவளின் காதுக்குள் கிசுகிசுத்தாள். பத்து லட்சம் வரை ஓட்டிகள் கேட்பதாக அப்பா, அம்மாவிடம் சொல்லியிருக்கிறார். அம்மாவின் நகைகள் இவளின் நகைகள் எல்லாம் விற்ற போது கூட மூன்று லட்சம் தான் வந்தது. அப்பா எப்பிடியாவது காசைப்புரட்டி விட வேண்டும் என்று திரிந்தார். இயக்கம் அப்பாவை ஓரிரு தடவைகள் கிளிநொச்சிக்கு விசாரணைக்கு அழைத்திருந்தது. அவர்களுக்கு டவுட் வந்திட்டோ தெரியாது என்று அப்பா பயப்பிட்டார். அம்மா மறுபடியும் நேர்த்திகளை ஆரம்பித்தாளர்.

அப்பாவும் காசு திரட்ட ஓடித்திரிந்தபடியிருந்தார். மன்னார் ரூட் வர வர கடற்புலிப்பெடியளின் நோட்டற் கூடிக்கொண்டு போறதாலை ஓட்டியளின்ர ரேட்டும் கூடிக்கொண்டு வருவதாகவும் நாள் போகப் போக ஓட்டிகள் கூடக் காசு கேட்பார்கள் என்று அப்பா பயந்துகொண்டிருந்தார். இயக்கம் அண்ணாவைத் தேடிக்கொண்டே இருந்தது. அண்ணா இலங்கைப்பூச்சி வீட்டின் வெளவால் நெடிக்குள் பயந்து பயந்து வாழ்ந்துகொண்டிருந்தான்.

ஒரு நாள் இரவு அப்பா நள்ளிரவில் வெளிக்கிட்டுப் போனார். அடுத்த நாள் இரவு இரண்டு கறுப்பு நிற உரப்பைகளைக் கொண்டு வந்தார். ஒரு பையை அம்மாவுடன் சேர்ந்து மாட்டுக் கொட்டிலுக்குள் வைத்தார். இவளுக்கு ஓ.எல். பரீட்சை நெருங்குவதால் இரவு கனநேரம் முழிச்சிருந்து படிப்பாள். அதனால் இரவு நடப்பவை இவளுக்குச் சொல்லாட்டியும் தெரியும். படுத்துக்கிடந்து எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்தாள். அப்பாவும் அம்மாவும் குசு குசுவெண்டு கதைச்சினம். திடீரெண்டு சத்தம் வராமல் சண்டை பிடிச்சினம். அம்மா தலையில் கை வைத்து அழுதாள். இவள் எழும்பி அவடத்த போக வெளிக்கிட அப்பா, "ஒண்டுமில்லை பிள்ளை நீ போய்ப் படி" என்று இவளை அறைக்குள் அனுப்பிவிட்டார். பிறகு கொஞ்ச நேரத்தில் ரெண்டு பேரும் படுத்துக்கொண்டனர் ஆனால் நித்திரைகொள்ளவில்லை. அதே குசுகுசுப்புக் குரலில் கதைத்தனர். இவள் லாம்பைத் தணித்து விட்டு நித்திரையாயிருப்பளைப்போல அந்தக் குசுகுசுப்பைக் கேட்க முயற்சித்தாள். முடியவில்லை. அப்பிடியே எப்ப நித்திரையாகிப்போனாள் எண்டு தெரியாமல் நித்திரையாகிப் போனாள்.

அதிகாலை மூன்று மணிக்கு ஏதோ அசமந்தம் கேட்டு விழித்துக்கொண்டாள். வெளியில் டோர்ச் லைட் மாட்டுக்கொட்டில் பக்கம் அசைந்தது யன்னலுக்கால நல்லாத் தெரிஞ்சது. அது அப்பாவும் அம்மாவும்தான். அப்பா, மாட்டுக் கொட்டிலுக்குள் வைத்த உரைப்பை ஒன்றை எடுத்துச் சைக்கிளில் கட்டிக்கொண்டார். மெதுவாக வெளிக்கிட்டுப்போனார்.

அம்மா தூங்காமல் வெளித்திண்ணையில் இருந்து வாசலையே பார்த்துக்கொண்டிருந்தாள். விடிய ஐஞ்சு மணி போல அப்பா வீட்ட வந்தார்.

அண்டைக்கு வெள்ளிக்கிழமை. பூ ஆயப் பூக்கூடையுடன் வந்த இலங்கைப்பூச்சி செவ்வரத்தையில் பூ ஆய்ந்து கொண்டிருந்தான். இவள் தன்னுடைய பள்ளிக்கூடச் சப்பாத்தைத் துடைத்துக்கொண்டிருந்தாள். அப்பா மாட்டுக்கொட்டிலடியில் கோமதியின் நாணயக்கயித்தை இளக்கிக்கட்டிக் கொண்டிருந்தார். அம்மா குசினிக்குள் புட்டுக்குழலை நிரப்பிப் பானையின் வாயில் நட்டுக்கொண்டிருந்தாள். அப்போது வடக்கால குளத்தடிப்பக்கம் வெடிச்சத்தம் கேட்டது. இலங்கைப்பூச்சி வெடிச்சத்தம் வந்த திசையில் தலையை நிமிர்த்திப் பார்த்தான். இவள் கிபீர் ஏதும் அடிக்குதோ என்று நினைத்தாள். வானம் அமைதியாய்க் கிடந்தது. அப்பாவைப்பார்த்தாள், அவர் எதுவும் கேட்காதவராய் நாணயக்கயித்தை இளக்கிக்கட்டினார். மாடு ஒரு முறை மிரண்டு திமிறியது.

சைக்கிளை எடுத்துக்கொண்டு படலையால் வெளிப்பட்டுப் பெடலை மிதித்தாள். சினேகிதிகள் குளத்தடி சந்தியில் சேர்ந்து கொண்டனர். கிரவல் ரோட்டில் போகாமல் குளத்தடி வீதியால் போவோம் என்றாள் பவித்திரா. இவர்களைத்தாண்டி சில இயக்க வாகனங்கள் புழுதிபறக்கச் சென்றன. அம்புலன்ஸ் ஒன்றும் இவர்களைக் கடந்து விரைந்தது. இவர்கள் குளக்கட்டடியில் திரும்ப முதலாவது வாய்க்கால் வோக்கெடியில் சனம் கூடியிருந்தது. இவர்களை இயக்க அண்ணாமார் வோக்கைத் தாண்டி இறங்கிப்போகுமாறு சொன்னார்கள். ஆமிக்காரர் கிளைமோர் அடிச்சிட்டாங்கள் என்றான் ஒருவன். வோக்கைக் கடந்து செல்லும் போது பச்சை, இயக்க ஜீப் ஒன்று சரிந்து கிடந்தது. அருகில் நாலைஞ்சு இயக்கப் பெடியளின் உடல்கள் கிடத்தப்பட்டிருந்தன. சறங்களால் அவற்றை மூடியிருந்தனர். சறங்கள் ரத்தத்தில் ஊறி ஈரப்பளபளப்புடன் தெரிந்தன. இவளுக்குக் கால்கள் சில்லிட உடல் விறைத்து நடுங்கியது. வெடி மருந்து மணம் அப்பகுதியில் பரவியிருந்தது. தாக்குதலுக்குள்ளான வாகனத்தின் உடலெங்கும் ஆயிரக்கணக்கான துவாரங்கள் ஏற்பட்டிருந்தன. உருக்குலைஞ்சு போய்கிடந்த அந்த ஜீப்பையும் உடல்களையும் பார்க்கும் போது பதட்டம் தலைக்கேறியது. இவள் பள்ளிக்கூடத்து வாசலில் சைக்கிளைப்போட்டு விட்டு ஓடிப்போய்ச் சத்தியெடுத்தாள்.

பின்னேரம் வீட்ட வந்த போது வீடு உட்பக்கம் பூட்டி இருந்தது. அம்மாவும் அப்பாவும் ஸ்கந்தபுரம் போயிட்டினம் எண்டும் சாப்பிடச்சொல்லியும் பக்கத்து வீட்டு மணியக்காட்டச் சொல்லிட்டுத் திறப்பும் குடுத்திட்டுப் போயிருந்தினம். இவள் கதவைத் திறந்து வீட்டுக்க போய்ச் சட்டையை மாத்திட்டு முகத்த அலம்பிட்டுக் குசினிக்க வந்து கறிச்சட்டியைத் திறந்து

பார்த்தாள். கோழியிறைச்சிக்கறி சிவந்து இறுகிப்போய் இருந்தது. இவளுக்கு ஏதோ குழப்பமாயிருந்தது. நல்லா ஞாபகம் இருந்தது. காலமை பள்ளிக்கூடத்தில சிவபுராணம் இவள்தானே பாடினவள். அண்டைக்கு வெள்ளிக்கிழமைதான்.

*3*

அண்ணாவை வலைப்பாட்டுக்குக் கொண்டு போய் அப்பாவும் போட்டில ஏத்தி அனுப்பி மூன்றாம் நாள், டெலிபோனில் வவுனியாவில் இருக்கும் அப்பாவின் தங்கச்சி பவளம் அத்தை, மன்னார் நேவியின் முகாமில் அண்ணா இருக்கிறான் எண்டும், இனிப் பயமில்லை, விசாரணை முடிச்சு விட்டிடுவாங்கள் எண்டும் சொன்னா. அப்பாவுக்கு அதுக்குப் பிறகுதான் முகம் விடிஞ்சுது. வீட்டில் வந்துசெய்தியைச் சொல்லிவிட்டு அப்பா ஷேவெடுக்கச் சலூனுக்குப் போனார். போனவர் போன வேகத்திலேயே அரக்கப்பரக்க ஓடிவந்தார். இயக்கம் காட்டுக்க ஆமிக்காரன் ஒருத்தனைப் பிடிச்சிட்டாங்கள். அவன் ஊருக்குள்ள தான் கிளைமோறக் குடுத்து வச்சிருக்கிறதாச் சொல்லிட்டானாம் இயக்கம் ஊரையும் காட்டையும் ரவுண்டப் பண்ணுது என்றார். அம்மா "துலஞ்சம்" என்று தலையைப்பிடித்துக்கொண்டு உட்கார்ந்து விட்டார். மாட்டுக்கொட்டில் வைக்கோலுக்குக் கீழ இருக்கும் மற்ற உரப்பை இவளுக்கு அப்ப தான் ஞாபகம் வந்தது. இவளுக்குத் தலை சுற்றியது.அம்மா ஒப்பாரி வைக்கத் தொடங்கினார்.

அப்பா, அவளை வாயை மூடச்சொல்லித் தூசணத்தால் பேசிவிட்டு, இவளிடம் வந்தார். "பிள்ளை நீ தான் உரப்பைய எப்பிடியாவது எங்கையும் கொண்டு போய்ப் போட்டிட்டு வரோண்ணும்" என்றார். இவள் அப்பாவை அதிர்ச்சியாகப் பார்த்துக்கொண்டிருக்கும் போதே அம்மா "ஐயோ வேண்டாமப்பா பிள்ளை" என்று குழறத்தொடங்க அப்பா சீறினார், "சும்மா குழறாதையடி புண்டை நான் கொண்டு போனா மறிச்சுச் செக் பண்ணுவாங்கள் பிள்ளை கூடைக்குள்ள கொண்டு போனா மறிக்க மாட்டாங்கள்" இவள் உடம்பு வெட வெடவென நடுங்கச் சைக்கிளை எடுத்தாள். அப்பா, இவளுடைய பள்ளிக்கூடப் பையினுள் வைத்து மேலே கொஞ்சப் புத்தகம் கொப்பிகளைப்போட்டு கூடைக்குள் வைத்து விட்டார். குளக்கரைப்பக்கமாய் அதைப் போட சொல்லி சொல்லியிருந்தார். இவள் ஒழுங்கையால் சைக்கிளை ஊண்டி மிதித்தாள். ஏதோ காற்றில் போகின்றவள் போல் போனாள். சைக்கிள்செயின், செயின் கவறில் உரஞ்சும் சத்தம் கூடப் பயத்தை உண்டு பண்ணியது. கைகாலெல்லாம் விறைத்துப் போயிருந்தன. வியர்வை வழிந்தோடியது. இலங்கைப்பூச்சியின் வீட்டு வளவை நெருங்கும் நேரம் தூரத்திலே பச்சை நிற இயக்கவாகனம் புழுதியைக் கிளப்பிக்கொண்டு வருவது தெரிந்தது. இவளுக்கு இதயம்

நின்று விட்டது. சட்டென்று ஒற்றையடிப்பாதைக்குக் கான்ரிலைத் திருப்பிச் சைக்கிளை இலங்கைப்பூச்சி வீட்டு வளவிற்குள் விட்டாள். பற்றையைத் தாண்டிக் கேற்றடிக்குப்போனாள். கேற்றடியில் பிறேக்கில் கையை வைக்கும் போதே, வீட்டுக்கதவு பூட்டப்பட்டிருந்தது தெரிந்தது.

*4*

இலங்கைப்பூச்சியை இயக்கம் பிடித்த போது இலங்கைப்பூச்சி வழமை போலக் குளத்தடி வைரவர் கோயிலின் முன்னால் இருந்த ஒற்றைத்தூணில் இருந்துகொண்டு சின்னப்பெடியள் கிளிக்கோடு விளையாடுவதைப் பார்த்துக்கொண்டிருந்தான் என்று இவள் கேள்விப்பட்டாள். நான்கு நாட்களாக இவள் வீட்டை விட்டு வெளியே வரவில்லை பள்ளிக்கூடமும் போகவில்லை. ஐந்தாம் நாள், இவள் பள்ளிக்கூடத்தால் வரும் போது இயக்கப்பெட்டையள் கோதையைப் பிடித்துக்கொண்டு போனார்கள். அப்பா அரசியல் துறை அலுவலகத்தில் போய்க் கேட்டபோது, "பெரிய பெடியனைக் கொண்டு வந்து குடுத்திட்டுப் பிள்ளையைக் கூட்டிக்கொண்டு போங்கோ" என்றார்கள். அண்ணா, மன்னாரில் நேவி முகாமில் இருப்பதைப் புலனாய்வுத்துறைக்காறர் கண்டு பிடிச்சிட்டாங்கள் என்று சொன்னார்கள். அப்பா, கோதை படிக்கிற பிள்ளை எண்டார். "ஓ.எல். தானே படிக்கிறா போராடுற வயசுதான்" என்று பொறுப்பாளர் ஒருத்தி சொன்னாள். இனிப் பிரச்சினை பண்ணினால் இயக்கத்தை ஏமாத்திப் பெடியனை மன்னாருக்கு அனுப்பினதுக்கு உங்களையும் கைது செய்ய வேண்டி வரும் எண்டும் அவர்கள் அப்பாவை உறுக்கியிருக்கிறார்கள். அப்பாவும் அம்மாவும் நொறுங்கிப்போய் வந்தார்கள்.

சரியாக மூன்று மாத ரெயினிங்கின் பின்னர் கிளிநொச்சிப் பள்ளிக்கூடத்தில் பெற்றோர் சந்திப்பு நடந்தது. கிரவுண்டில் பச்சை உடையில் கையில் துவக்குடன் அணிவகுப்பில் நின்ற கோதையைப்பார்த்த அம்மா, அப்பாவின் தோளில் கிடந்து அழுதார். பச்சை யூனிபோமில் கோதை பெரிய மனுசி போல அம்மாவுக்குத்தெரிந்தாள். தலை நிமிர்ந்து எதிரில் ஏறும் கொடியை நோக்கிக் கண்களைக் குத்தி நிறுத்தி, கைகளை நெஞ்சில் வைத்துக் கொடி மரியாதையில் நிற்கும் கோதையைத் தாடியடர்ந்த அப்பாவின் முகமும் பார்த்தது.

அணிவகுப்பு முடிந்து கூட்டத்திற்குள் வர அம்மா ஓடிப்போய் இவளைக்கட்டிக்கொண்டு அழுதார். கோதை சொட்டும் அழவில்லை. அவளுடைய உடலைப்போலவே முகமும் இறுகிக்கிடப்பதை, அம்மா அவளை அணைத்ததிலிருந்து உணரத்தொடங்கினாள். இவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்திலிருந்த பிளாஸ்ரிக் கதிரைகளில் இருந்த போது அம்மா ஒரு கையையும் அப்பா ஒரு கையையும் பிடித்தபடி இருந்தனர்.

இவள் கனநேரம் ஒண்டும் கதைக்கவில்லை. அப்பாவும் அம்மாவும் அழுதனர்.

கல்மடு குளத்திற்குக் கிட்ட ஒலிபெருக்கியில் இலங்கைப்பூச்சி செய்த தேசத்துரோகச்செயல் சொல்லப்பட்டு வைரவர் கோயிலடி ஒற்றைத்தூணில் இலங்கைப்பூச்சி சாய்த்து நிறுத்தப்பட்டான். சனம் பார்த்திருக்க, சாவுறுப்புக்கான காரணம் படிக்கப்பட்டு முகமூடி அணிந்த போராளியால் தேசத்துரோகி ஜெயசிலன் என்கின்ற இலங்கைப்பூச்சியின் நெற்றிக்கு மேல் பிடிக்கப்பட்ட பிஸ்ரல் வெடித்தது. வெளியே பீச்சிய இரத்தம் அந்த ஒற்றைத்தூணில் சிதறி ஊறியது.

கோதை கண்களை மூடினாள். தலை குனிந்திருந்தது.

தட்டுக்களில் இறைச்சிச்சாப்பாடு பரிமாறப்பட்டது. அம்மா வெள்ளிக் கிழமை என்று மறுத்துவிட்டார். அப்பா தட்டை வாங்கிக்கொண்டார். நீ வரோண்ணும் எண்டு விரதமிருக்கிறன் பிள்ளை என்றபடி இவளின் தட்டை வாங்கித் தீத்திவிடத் தயாரானார். அப்பா "பிள்ளை எப்பிடியாவது ஒடியா, குடும்பத்தோட போறதுக்குக் கதைச்சு வச்சிருக்கிறன்" என்றார். தலை ஒரு முறை நிமிர்ந்து தாழ்ந்தது. இமைகள் மூடிக்கொண்டன. மணிக்கட்டில் கட்டியிருந்த தகட்டை விரல்கள் நிமிர்த்தின. கண்களைத்திறந்தாள், தகட்டில் தவிபு *2331992*.

# கோழிக்கால் பட்டியின் கடைசிப் பசு மாடு

பூளை இறுகிப்போய்க் கிடந்த கண்களை இவள் திறக்கும் போது முதலில் கேட்டது கோமதியுனுடைய குரலைத்தான். மாட்டுக்கொட்டில் கோமதியின் அறை யன்னலுக்கு நேர் எதிரிலே இருந்ததால், கோமதியின் குரல் அவளுடைய செவிப்பறைக்குள் கேட்டது. கைகளை நீட்டி முறு வலித்தவள்கண்களைத்திறக்காமல் கையைத் தலைமாட்டிற்கு வளைத்தாள். கடல் நண்டு ஒன்று வாய் தூர்ந்து போன பொந்துக்குள் நுழைகின்ற மாதிரிக் கைவிரல்களை மெத்தையில் இறக்கித் தலையணைக்குள் புதைந்து போய்க் கிடந்த போனைத் தடவி எடுத்தாள். திரையின் மேல் விரல்களை ஓடவிட்டு 'நோட்டிபிகேசன்' களைச் சோதித்தாள். வட்சப்பில் எந்த மெசேஜ்ஜூம் இல்லை. கடைசியாய் இவள் அவனுக்கு அனுப்பிய மெசேஜ் சீன் என்று இருந்தது. ஆனால் அவன் எந்தப்பதிலும் போட்டிருக்கவில்லை. ஒரு முறை இரவு நடந்த சண்டையை ஸ்க்ரோல் செய்து பார்த்தாள். வைபரில் லண்டனில் இருந்து அண்ணா, "அப்பான்ர திவசத்துக்குக் காசு போட்டிட்டன் மத்தியானத்துக்குப் பிறகு எடு" என்று மேசேஜ் அனுப்பியிருந்தான். அண்ணாவுக்கொரு 'ம்ம்' போட்டு விட்டு, மீண்டும் வட்சப்பில் அவனுடைய 'சட்' பொக்சினுள் நுழைந்தாள். கடைசி மெ்சேஜ் கண்களில் பட்டது.

*Solla entha karanamum illai ithu set aavathu. Bye.*

கோமதி மீண்டும் கத்தினாள் 'ம்ம்மா'

அவளுடைய சத்தம் இவளுக்கு எரிச்சலைத்தந்தது. தலை இடிப்பது போலிருந்தது. இரவு இருந்த நெஞ்சுப்படபடப்போ தலை வலியோ கண்ணீரோ வரவில்லை. ஆனால் ஏதோவொரு பாரம் நெஞ்சுக்குழிக்குள் இறுகிப்போய்க்கிடந்தது. வெளிக்கு வந்து இரண்டாவது நாள்வேறு,

மார்புக்கடியில் லேசான வலியிருந்தது. அடி வயிற்றிலும் வலி தெரிய ஆரம்பித்திருந்தது. கைகளைக் கீழே இறக்கி பாடைச் சோதித்தாள். விலகாமல் இருந்தது. நாசியில் இருந்து மூச்சு சீராக வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. உடல் முழுவதும் அசதி இறுகிப்போய்க் கிடந்தது. ஒரு வித வெப்பம் போர்த்திருந்த பெட் சீட்டினுள் பரவியிருந்தது. போர்த்திருந்த பெட்சீட்டை உதறிப் பக்கவாட்டில் சுருட்டி விட்டாள். மெல்லிய குளிர் மேலுடலில் பரவியது.

ஃபோனைத் தலைமாட்டிற்குச் சற்று மேலாக இருந்த பிளக்கில் பொருத்தியிருந்த சார்ச்சரின் மெல்லிய வயர் நுனியில் சொருகி விட்டு எழுந்தாள். தலையை வாரிச் சுருட்டிக் குடுமியாக்கினாள். படுக்கையைத் தட்டி போட்டவள், மெத்தை விரிப்பையும் போர்வையையும் சுருட்டித் தோய்க்கின்ற உடுப்புகள் போடும் கூடைக்குள் போட்டாள். நேரே இருந்த ட்ரெஸ்சிங் ரேபிள் கண்ணாடியில் இவளுருவம் தெரிந்தது. கண்கள் வீங்கி சிவந்து போயிருந்தன. ட்ரெஸ்சிங் ரேபிளின் லாச்சியை இழுத்து வாய்ப்பகுதி பிரிக்கப்பட்டிருந்த விஸ்பர் பக்கெற்றினுள் எட்டிப்பார்த்துக்கொண்டிருந்த பாட்களில் ஒன்றை உருவி எடுத்துக்கொண்டவள், துவாயையும் எடுத்துத் தோளில் போட்டு விட்டு பாத்ரூமிற்குள் நுழைந்தாள்.
'ம்ம்மா' கோமதியின் குரல் ஒலிக்கும் நேர இடைவெளி அதிகரித்தது. அவளுடைய கத்தும் சத்தம் அதிகமானது.

நைட்டியைக் களைந்து விட்டு, ஸ்கினியைச் சுருட்டித் தோய்க்கப்போட்டாள். உள்ளாடைகளை நீக்கிவிட்டுப் பாடை உரித்தாள். குருதியும் பிசுபிசுப்பும் சிவப்பும் மஞ்சளுமாய் திரண்டு கிடக்க, அதன் வெடுக்கு முகத்தில் வந்து அடித்தது. சுருட்டிப் பொலித்தீன் பைக்குள் போட்டவள், ஷவர் குழாயைத் திறந்து விடத் தலைக்கு மேல் படமெடுத்து நின்ற ஷவர் தண்ணீரைச் சீராகப் பொழியத்தொடங்கியது. தலையிலும் தோள்களிலும் இறங்கிய நீர், மார்பில் வழிந்தது. திம்மென்று லேசான நோவுடன் இருந்த மார்பின் மீது குளிர்ந்த நீர் இறங்குகையில் சுகமாயிருந்ததது. தலையை நிமிர்த்தி நீர்த்திவலைகளை முகத்தில் வாங்கத்தொடங்கினாள். தலைக்குள் குளிர்ச்சி இறங்கி உடலின் மொத்த இறுக்கத்தையும் சூட்டையும் இறக்கத்தொடங்கியது. மூச்சு குளிர்ச்சியாய் வெளிப்பட்டது. அடிவயிற்றின் வலிக்கு இதமாகக் கையை அடி வயிற்றுக்கு நகர்த்தி லேசாய் அழுத்தினாள். கை அனிச்சையாகக் கீழே இறங்கிச் சுத்தம் செய்யத்தொடங்க, அவனுடைய வார்த்தைகள் தலைக்குள் வெட்டின. நெஞ்சு மீண்டும் அடித்துக்கொள்ளத்தொடங்கியது.

நெஞ்சுக்குள் திரண்ட திண்மம் உடலில் வழிந்திறங்கும் நீரில் கரையமாட்டேன் என்பதைப்போல் இறுகிக்கொண்டிருந்தது. கத்தி அழ

வேண்டும் போல் இருந்தது. நீர்க்குழாயின் திருகியைத்திருப்பி நீரின் பொழிவின் வேகத்தை அதிகப்படுத்தினாள், தலையைச் சற்று விலக்கி, தன் மார்பின் மீது நீரை வீழ்த்தினாள், அதன் வேகம் வலியோடிருக்கும் மார்பிற்கு இதமாக இருந்தாலும் நெஞ்சுக்குள் ஏறி நின்ற அந்தரத்தையும் விம்மலையும் அதனால் கரைக்க முடியவில்லை.

'ம்ம்மா'

கோமதியின் குரலின் சுருதி நீளம் இன்னும் இழுபட்டது.

துவாயைச்சுற்றிக்கொண்டு வெளியே வந்து பஞ்சாபியொன்றினுள் நுழைந்துகொண்டாள். கோமதியின் குரல் தொடர்ந்து கேட்டுக் கொண்டேயிருந்தது. வெளியே வந்தாள், ஹோலில் அம்மா அப்பாவின் படத்தை எடுத்து துடைத்துக்கொண்டிருந்தாள். பிரம்புக்கதிரையில் அவளின் கிளைச்சர் சாய்த்து வைக்கப்பட்டிருந்தது. இவளின் சந்தடி கேட்டதும் அம்மா நிமிர்ந்து பார்த்தாள்.

"என்ன பிள்ளை கண் வீங்கியிருக்கு?"

"முழுகினான்"

"சரி கீற்றர் போட்டிட்டன் தேத்தண்ணி போட்டு குடி, புட்டு சருவத்தால இறக்கேல்ல. சூடாய் இருக்கட்டும் எண்டு விட்டனான் அத உருத்தி சாப்பிடு".

"பசிக்கேல்ல" என்றாள்.

கோமதி மீண்டும் 'ம்ம்மா' என்றாள். இவளுக்கு எரிச்சலாக வந்தது

"ஏன் கோமதி கத்துது?"

"அதுக்குச் சினைக்காலம் தொடங்கீட்டு அதுதான் கத்துது"

"மாட்டுக்கு விடவேணுமோ?"

"ஓம் பிள்ளை, ஆனா டொக்ரர் போன முறை ஊசி போட்டால் நல்லம் எண்டுதானே சொன்னவர்"

இவளுக்கு அம்மா சொல்லச்சொல்ல எரிச்சலாக இருந்தது. கோமதியை விற்றுவிடுங்கோ என்று எத்தனையோ முறை அம்மாவிடம் சொல்லிவிட்டாள். தினமும் கோமதியைப் பராமரிக்கக் கிளச்சரை ஊன்றி ஊன்றி அம்மா மாட்டுக்கொட்டிலில் ஏதாவது செய்துகொண்டிருப்பாள். காலமை அவிட்டு விட்டால் கோமதி எங்காவது போய் மேஞ்சிட்டு வருவாள். எண்டாலும், சாணம் அள்ளுறது, வைக்கல் போடுறது, கோமதிக்கு தவிடோ பிண்ணாக்கோ கரைத்து வைப்பதற்கு அம்மாவாலை ஏலாது. ஆனால் அம்மா ஒருடத்தில் இருக்க மாட்டார், கிளச்சரை ஊன்றிக்கொண்டு கோமதியோடையே நிற்பார். காலமை இவள் எழும்பி வேலைக்கு வெளிக்கிடவே நேரம் சரியாக இருக்கும். மாட்டுக்கொட்டில் பக்கம் போகேலாது. அம்மா இவள் சொல்லிக்கேட்கமாட்டார். அண்ணாவிடம் சொல்லி அவன் ஸ்கைப்பில் கதைக்கும் போது, கோமதியை விற்கச்சொல்லி கெஞ்சிப்பார்த்தான். அம்மா அசையவில்லை. "மாடெல்லாம் அப்பாவோட போகட்டும் அம்மா அதை வில்லுங்கோ" அம்மா சம்மதிக்கவேயில்லை.

அப்பாவின் 'கோழிகால் பட்டியின் கடைசி மாட்டை' அம்மா கைவிடத் தயாராகவில்லை.

*****

பரந்தனில் இருந்த பெரிய பட்டிகளில் அப்பாவின்கோழிக்கால் பட்டியும் ஒண்டு. அப்பான்ர பட்டிக்குறி கோழிக்கால் வடிவமுள்ள மூன்று கோடுகளாலான குறி. எல்லா மாட்டிலும் அந்தக் கோழிக்கால் குறிச் சுடப்பட்டிருக்கும். பரந்தனில் இருந்து ஆனையிறவு போகும் வழியில் இருந்தது அப்பாவின் கோழிக்கால் பட்டி. மூண்டு ஆலமரத்தடி என்று அவடத்த சொல்லுவார் அப்பா. மூண்டு பெரிய ஆலமரங்கள் விழுது விட்டு நிழலோட நிக்கும். அந்த ஆலநிழலிலைதான் அப்பாவின் பட்டியிருந்தது. காட்டுத்தடியாலை வேலி வரைஞ்சு பட்டியைச் சுற்றி எல்லை ஓடும். பட்டி எரு வழித்துக் குவித்து அருகில் எப்போதும் எருக்குவியல் இருக்கும். பட்டிக்குப்பக்கத்தில் ஒரு பெரிய ஊரிப்பிட்டி இருக்கு அதிலைதான் பட்டியை பராமரிக்கிற பெடியள் நிக்கவும், வேலைச்சாமான்கள் வைக்கவும் அப்பா போட்டிருந்த சின்னக் கொட்டிலும் திண்ணையும் பட்டிப்பக்கம் பார்த்தபடி கட்டப்பட்டிருந்தன. பிட்டியிலை ஏறிப்பார்த்தா பட்டி வடிவாத் தெரியும். கோழிக்கால் குறி சுடப்பட்ட எழுநூறு மாடுகள் நின்ற பட்டியது. அப்பாவின் பட்டி இரண்டு விதத்தில் பரந்தனில் ஃபேமசான ஒன்று. அந்தக் கோழிக்கால் குறி. கோழிக்கால் குறி போட்ட மாடுகள் தரமான மாடுகள். என்று ஊருக்க மட்டுமில்லை, எரு ஏத்த வாற யாழ்ப்பாணத்து லொறிக்காரர் வரைக்கும் ஃபேமஸ். அடுத்தது கோழிக்கால் பட்டியில் நிற்கும் எல்லா மாடுகளும் வெள்ளை நிறத்தில் தான் இருக்கும்.

அப்பா அதில் கடும் கவனமாக இருந்தார். மாவெள்ளை மாடுமட்டும்தான் தன்ர பட்டியில் நிற்கவேண்டும் என்பதில் அப்பா எப்பவும் கடும் கவனம். பசு மாடுகள் பட்டியில் இருக்கும் வெள்ளை எருத்தன் மாடுகளுடன் சேர மட்டும்தான் அனுமதிப்பார். மேயப்போகும் இடத்தில் மேய்க்கிற பெடியளிடம் கடுமையாக "வேற எருதனவையோட சேர்ந்தால் துலைச்சுப்போடுவன்" என்று சொல்லி வைத்திருப்பார். அப்பாவின் கோபத்திற்கு அஞ்சி அவர்கள் அதில் கவனமாக இருப்பார்கள். தப்பித்தவறி கன்று கலர் மாறிப்பிறந்தால். கொஞ்சம் வளரும் மட்டும் தாயையும் கன்றையும் தனிப்பட்டியில் அடைத்து விடுவார். அல்லது வீட்டிற்குக் கொண்டுவந்து கட்டி வளர்ப்பார், பட்டியுடன் சேர விடுவதில்லை.

ஒவ்வொரு நாள் காலமையும் தன்ர மோட்டச்சைக்கிளை எடுத்துக்கொண்டு பட்டிக்குப்போவார். ஊரிப்பிட்டியில் ஏறி நின்றுபட்டியைப்பார்ப்பார். வெள்ளை வெளேரென்று மாடுகளைப் பார்க்கும் போது அவரின்ர முகம்

பிரகாசமாகி அவற்ற சொண்டுக்குள் பெருமைச்சிரிப்பு கசியும் அதை இவள் அப்பாவுடன் பட்டிக்கு போகும் போதெல்லாம் பார்த்திருக்கிறாள்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் குளத்தடிக்கு பட்டியைச் சாய்ச்சுக்கொண்டு போய் அப்பாவும் வேலை செய்யிற பெடியளும் மாடுகளைப் பொச்சாலைதேய்ச்சுக் குளிப்பாட்டி, எருவழிச்சுச்சுத்தமாக்கின பட்டியில் கொண்டுவந்து அடைப்பார்கள். இவள், அப்ப சின்னப் பிள்ளை. அப்பா அவளைத் தூக்கிக்கொண்டு பட்டிக்குள்ள மாடுகளுக்கு இடையில் நடந்து போவார். மாடுகள் அப்பாக்கு வழிவிடும். அப்பாவைக் கண்டதும் வாலைச் சுழட்டிக் கத்துங்கள். அப்பாக்கு மாடுகளில் சரியான விருப்பம். ஒவ்வொண்டுக்கும் பேர் வச்சிருப்பார். அத்தினை மாட்டின்ர பேரையும் எப்பிடி அப்பாவாலை அடையாளம் காண முடியுது எண்டு இவளுக்கு ஆச்சரியமா இருக்கும். அப்பாவும் பொடியளும் பால் செம்போட காலமையில் போய் நிண்டு பேரைச் சொல்லி கூப்பிடுவினம். பட்டிக்க எங்க நிண்டாலும் அந்தப் பேர்க்காறி நடந்து வருவா. அவாக்கு மற்ற மாடுகள் வழிவிடுவினம். நேர வந்து பால்கறக்க ஏதுவா நிப்பா. பால் கறந்து முடிய கண்டுகள் அடைக்கிற இடத்தின்ர கதவத் திறக்க அவான்ர கண்டு பாஞ்சு வந்து தாயின்ர முலைய முட்டும். அதைக் கொஞ்ச நேரம் பாத்துக்கொண்டு நிண்டிட்டுத்தான் அடுத்த மாட்டைக் கூப்பிடுவார். தண்ணி கலக்காத பாலெண்டா கோழிக்கால் பட்டின்ர பால்தான் எண்டு சனம் பால் வாங்க வரும். அப்பா ஊசி போட்டுச் சினைப்படுத்த கூடாதெண்டு சொல்லுவார். எங்கட மாட்டின்ர மடி வெளிநாட்டு மொந்தனுகளை நோகச் நோக சுமக்கோணுமோ எண்டு கேட்பார். அப்பான்ர பட்டியில நிண்ட மாடுகளில் அப்பாக்கு நல்லா பிடிச்ச பசு மாடுவெள்ளச்சிதான். அவதான் கோமதின்ர அம்மா. பெரிய கொம்பும் திமிலுமாய் நல்ல நாம்பன் மாதிரி ஒரு வடிவான வெள்ளைப் பசுமாடு வெள்ளாச்சி.

"என்ர பட்டின்ர ராணியடா அவள்" எண்டு அப்பா சொல்லுவார். இரண்டாயிரத்தில் ஏழாம் ஆண்டுச் சனவரியிலை வெள்ளாச்சி சினைப்பட்டாள். அவளுக்குக் கோமதி பிறந்தாள். இளங்கொடி விழாமை கோமதி வெள்ளாச்சியைக் கஸ்ரப்படுத்திக்கொண்டே பிறந்தாள். அவள் பிறக்கும் போதே நல்ல வடிவு அம்மா தான் அவளுக்குக் கோமதியெண்டு பேர் வச்சவா. குஞ்சுப்பரந்தனில் ஷெல் விழத்தொடங்க சனமெல்லாம் இடம் பெயரத்தொடங்கீட்டு. பட்டிக்கதவைத் திறந்து மாடுகளைக் காட்டுப்பக்கம் கலைச்சு விடும் போது வெள்ளாச்சியைக் கட்டிப்பிடிச்சு அழுத அப்பான்ர குரல் இப்பவும் இவளுக்குக் கேட்டுக்கொண்டே இருக்கும்.

விசுவமடு ரெட்பானாவில் அப்பாவும் அம்மாவும் ஷெல்விழுந்து

காயப்பட்டு விசுவமடு கொஸ்பிற்றல்ல இருந்தினம். அம்மாக்கு கால் ஏலாமல் போச்சு. அப்பான்ர காயம் ஏற்பாக்கி அவர்மோசம் போகும் வரையான அஞ்சு நாளிலை தன்ர மாடுகளைப் பற்றி அம்மாட்டையும் அண்ணாட்டையும் இவளிட்டையும் முனகும் போது மூண்டு பேரும் அவரைக் கட்டிப்பிடிச்சு அழுறத தவிர எந்த வழியும் அப்ப இருக்கேல்ல. முகாமிலை இருந்து மீள் குடியேற்றத்துக்குப் பரந்தனுக்கு வந்து வீட்டைத் திருத்திக்கொண்டார்கள். அப்பாவும் இல்லை பட்டியும் இல்லை ஒரு வருமானமும் இல்லை. மாடுகள் எல்லாம் சண்டையில செத்தது. இறச்சிக்கு ஏத்தினது போகக் காடுகளுகுள்ள கொஞ்சம் மேஞ்சு திரியுதெண்டு சொன்னார்கள். கோழிக்கால் பட்டியின் வெள்ளை மாடுகள் பற்றிய செய்தியே இல்லை. அம்மாவின் நகைகள், அப்பா பாங்கில் சேர்த்து வைத்த பணத்தில் கனடாவில் இருக்கும் செல்வம் மாமா ஸ்பொன்சர் பண்ணி அண்ணாவை வெளிநாட்டுக்கு எடுத்தார். அதுக்குப் பிறகுதான் குடும்பம் மெல்ல மெல்ல மீளத்தொடங்கியது.

ஒரு நாள் வீட்ட வந்த நேசமணியக்கா வயல் பக்கம் கோழிக்கால் குறியோட ஒரு மாடு நிண்டு மேஞ்சதக் கண்டன் எண்டு சொன்னா. அம்மா பூரித்துப்போனாளர். அழுதே விட்டார். உடனே குமரனைக் கூப்பிட்டு அவன்ர மோட்டச்சைக்கிளில் ஏறி போய்ப் பின்னேரம் கோமதியோடதான் வீட்ட வந்தா. வளர்ந்து தாய் வெள்ளாச்சி போலக் கொம்பெல்லாம் ஒரளவுக்கு வளந்து நல்ல சதைப்பிடிப்போட இருந்தாள். அம்மாக்கு அப்பாவே திரும்பி வந்ததைப்போலச் சந்தோசம். புது மாட்டுக்கொட்டில் அடிச்சு, கோமதியை பராமரிக்கத்தொடங்கினாள்.

முதல் பிரசவம் கன்று இறந்தே பிறந்தது. கோமதியின் பின் புறம் நாகபடம் என்றும் கன்று சரியாகத்தங்காது என்றும், அதை விற்கச்சொல்லியும் நிறையப்பேர் சொன்னதா குமரன் வந்து அம்மாட்டைச் சொன்னான் "கோழிக்கால் பட்டி சற்குணத்தின்ர மனுசியடா நான் எனக்குத்தெரியும் என்ர கோமதி எப்ப கண்டு போடுவாளெண்டு" என்று அம்மா வீம்புக்கு நின்றாள். இரண்டாவது முறையும் கன்று இறந்தே பிறந்தது. தாய் வெள்ளாச்சியைப்போல் இளங்கொடி விழாமல் சாகக்கிடந்து பிழைத்தது. மாட்டு டொக்டர் தணிகாசலத்தைக் கூட்டிவந்து காட்டியபோது அவரும் கோமதியின் பிருஷ்டத்தைச் சுட்டிக்காட்டி நாகபடம் பற்றிச்சொன்னார். அடுத்த முறை நல்ல மாட்டுடன் விடவேணும், இல்லையெண்டால் நல்ல இன ஊசியாய் தானே போட்டுவிடுவதாய்ச் சொன்னார். இண்டைக்கு மீண்டும் கத்தத்தொடங்கிவிட்டாள்.

"ம்மா" வெளியில் கோமதியின் குரல் கேட்டது.

இவள் தேனீரை உறிஞ்சிக்கொண்டே மாட்டு டொக்டரின் நம்பரை அழைத்து விசயத்தைச்சொன்னாள். "பின்னேரம் வாறன்பிள்ளை எண்டார்".

அம்மாவிடம் சொல்லிவிட்டு, அவனுக்கு ஒரு குட் மோனிங்கைத் தட்டிவிட்டாள்.
*Gm* என்று குட்மோனிங் சுருங்கி 'ரிப்ளே' வந்தது அவன் பதில் ஏதோ ஒருவித நிம்மதியைப்பரவ விட்டது.
*Sorry* யைத்தட்டி விட்டாள்.
பதில் இல்லை.
*Meet pannanum.*
*Ethukku ?*
*Plz.*
*Velai irukku.ennai konjam ninmathiya vidu plz.*
*mm.*
கொஞ்ச நேரம் இருந்து யோசித்தாள். ஒபிஸுக்கு அழைத்து விடுப்பு எடுத்துக்கொண்டாள். ஏதோ முடிவுக்கு வந்தவள் உடையை மாற்றிக்கொண்டு வெளிக்கிட்டாள். அம்மாவிடம் சொல்லி விட்டு, பிளசரை தெருவில் இறக்கி அக்சிலேட்டரை முறுக்கினாள்.

அவன் நேற்று ஏதோ கோவத்தில் பேசிவிட்டான் என்றே யோசித்தாள். நானும் அநியாயத்துக்கு வார்த்தைகளை விட்டுவிட்டேன் என்று தன்னை நொந்துகொண்டாள். அவன் அப்படியில்லை. நம்பித்தானே பலமுறை தன்னையும் கொடுத்தாள். உச்சியிலும் கழுத்திடுக்கிலும் முத்தமிடும் போதும் 'என்னை விட்டிட்டு போக மாட்டாய் தானேடா?' என்று கேட்கும் போது, 'இல்லையடி செல்லம்' என்று உச்சி முகர்வான். மீண்டும் மீண்டும் அவனுடைய பழைய உறுதி மொழிகளும், 'செட்டாவாது' என்ற சமீப நாட்களின் வார்த்தைகளும் புறக்கணிப்புகளும் மனதுக்குள் காட்சித்துண்டுகளாகச் சிதறிச்சிதறி எழுந்தன. "நேரில் சென்று கேப்பம். அவன் என்ர கண்ணைப் பாத்துப் பொய் சொல்லமாட்டான். என்னிலையும் பிழைதானே? நான் கொஞ்சம் பொறுமையாக் கதைச்சிருக்கலாம்" என்றது இதயத்துக்குள் இருந்து ஒரு குரல். ஆனால் எண்டைக்குமில்லாமல் அவன் இவளைத் தூசணத்தால் பேசுமளவிற்குச் சண்டை முற்றும் என்று அவள் நினைக்கவேயில்லை. ஆனால் அவன் சமீப நாட்களாக அவளை 'அவோய்ட்' செய்த விதங்களை மூளைக்குள் இருந்து ஒரு குரல் பட்டியலிட்டுக்கொண்டேயிருந்தது. அந்தப் பிரச்சினையையும் அவன் வார்த்தைகளையும் மீண்டும் மீண்டும் ஞாபகப்படுத்தக்கூடாது என்று தனக்குச் சொல்லிக்கொண்டாள்.

வைபரேட் மூட்டில் போட்டிருந்த ஃபோன் அதிர்வது கேட்டது. வேகத்தை மிதமாக்கி ஹோல்டரில் தொங்கிய ஹான்ட் பாக்கினுள் கையை விட்டுப் போனை எடுத்தாள். *'Doctor cow'* என்ற ஆங்கில எழுத்துகள் மின்னின. பச்சைக் குறியைத் தேய்த்து நகர்த்திக் காதுக்குள் கொடுத்தாள். "பிள்ளை

அந்தப்பக்கம் தட்டுவன் கொட்டிக்கு மத்தியானம் ஊசி போடப்போறன். அதிலை வீட்டையும் கையோடவந்திட்டு போறன்"
என்றார். இவள் சரி டொக்டர் என்று ஃபோனை அணைத்து ஹாண்ட் பாக்கினுள் சொருகி விட்டு, பைக்கை கிளிநொச்சி டவுனுக்குள் நுழைத்து, அவனுடைய ஸ்டுடியோ வாசலில் கொண்டு போய் நிறுத்தினாள்.

வெளியில் அவனுடைய வெள்ளைநிற அப்பாச்சி நின்றிருந்தது. கடைக்குள் நுழைந்தாள். ஏசியின் குளிர்ச்சி உடலை மோதிச் சிலிர்க்க வைத்தது. ரிசப்சனில் காயத்திரி இருந்தாள்.
"அவர் மேலையோ?"
"இல்லை அக்கா.பொஸ் இல்லை"
"வெளிலை மோட்டச்சைக்கிள் நிக்குது?"
"கரன் அண்ணேன்ர பைக்கிலக் கொஞ்சம் முதல்தான் சாமத்திய வீடு ஒண்டுக்கு போட்டோ சூட்டுக்கு போனவர்"
கடைக்குள் கண்களை ஓட விட்டாள். மெயின் கொம்பியூட்டர் திரை அணையாமல் இருந்தது. அவனைத்தவிர வேறு யாரும் அதில் தொட விடமாட்டான். ஷட் டவுன் செய்யாமல் போயிருப்பானோ? என்று நினைத்துக்கொண்டே அவளின் முகத்திற்குப் பார்வையைத் திருப்ப, அவளுக்கு ஏசிக்குள்ளும் வியர்த்தது. சட்டென்று போனை எடுத்து அவனுக்கு அழைத்தாள். ரிங் போனது. பிறகு துண்டிக்கப்பட்டது. ஒரு மேசேஜ் மட்டும் வந்தது.
*I am in work*
*I want to talk with you, now.*
*"en?"*
*"nerla solran"*
*"there is no reson to talk with you. Its over"*
*"neenka velaiya mudichidu vanka nan, kadaila wait pannuran"*
*"sonna kekka madiya ne?"*
*"plz vaa enaai kadaika nindu alavaikkatha"*
*"nadikkatha.. thayavu seithu kilampu, set aavathu namakku"*
*"enna karanamnnu sollu plz"*
*"fuck.. unakku sonna vilankatha?"*
இவளுக்குக் கண்ணீர் முட்டியது. காயத்திரி இவளையே பார்த்தபடியிருந்தாள், நன்றாகக் குனிந்து ஃபோன் திரையைப் பார்ப்பவள் போலக் கண்ணீர் முட்டும் கண்களை அவளுக்கு மறைத்தாள்.
*"plz sandai poda ennila thempillai. plz vaa pesanum"*
*"oru ollum thevai illai kilampu"*
*"plz da"*
*"use your finger please leave me"*

தலை கிறுகிறுத்தது. கதவைப் படாரெனத் திறந்து கொண்டு விம்மலோடு கடையை விட்டு வெளிப்பட்டாள். ஏசிக்குள் இருந்து மீண்டதும் வெளிச்சூழலின் வெப்பம் உடலில் வந்து சுட்டது. கதறி அழவேண்டும் போலிருந்தது. கண்ணீரை லேஞ்சியால் ஒற்றியெடுத்தாள். லேஞ்சி ஈரமாக உள்ளங்கைக்குள் குளிர்ச்சியாய்ச்சுருண்டது. அதில் நிற்க மனமில்லை. பைக்கில் ஏறி அதை வேகமாகச்செலுத்தத்தொடங்கினாள். அவனுடைய கடைசி வார்த்தைகள் மீண்டும் மீண்டும் எழத்தொடங்கின. விம்மல் முற்றிக்கொண்டு வந்தது. அவனுடைய முத்தம், தழுவல், வியர்வை எல்லாம் அருவருப்பான தோற்றத்துடன் உள்ளே எழுந்து வந்தது. அந்த வார்த்தைகளின் அர்த்தம் தலைக்குள் ஏறி நோகத்தொடங்கியது. கரடிப்போக்குச் சந்தியை தாண்டி வயல் வெளிகளால் பைக்கை வேகமாகச்செலுத்தினாள். விசுக்கென்று இரைச்சலுடன் கடக்கும் ஒவ்வொரு வாகனமும் இவள் முகத்தில் அறைந்து விட்டுப் போவது போல் கேட்டது. இதயம் படபடவென அடித்தது. எதிர்க்காற்று மோதும் ஒலியில் யாருமில்லாத வெளியில் குழறி அழுதுகொண்டே அக்சிலேட்டரை முறுக்கினாள். கண்ணீர், காற்றில் தெறித்து வெப்பத்தில் கரைந்தது.

*Use your finger leave me.*

வீட்டுக்குள் நுழையும் போது லேஞ்சி வெள்ளத்திற்குள் வீழ்ந்தது போல் ஈரமாயிருந்தது. முகத்தைத் துடைத்து விட்டு முற்றத்திற்குள் நுழைந்தாள். டொக்டரின் மோட்டச்சைக்கிள் நின்டது. அதன் பக்கத்தில் பையில் இருந்து கையுறைகளை எடுத்து அணிந்து கொண்டிருந்தார் டொக்டர். அம்மா அருகில் கிளைச்சுரை ஊன்றி நின்றிருந்தாள். அருகில் கோமதியின் மூக்கணாங் கயிற்றைச் சரிசெய்து கொண்டு குமரன் நின்றிருந்தான். இவள் பைக்கை நிறுத்தி விட்டு, கொழும்புப்பூவரசு மரத்தின் நிழலில் இருந்த குற்றியில் தலையைப் பிடித்துக்கொண்டு இருந்து கொண்டாள்.

அம்மா, அழுவதைப்பார்த்து விடக்கூடாது. அடி வயிற்றில் நோ இன்னும் அதிகமானது. பிளீடிங் அதிகரித்து விட்டதை உணர்ந்தாள். அந்த வலி பெரிதாகத்தெரியவில்லை. அம்மா, வீட்டைக் குமரனைக்கொண்டு கழுவி விட்டிருந்தார். அதை உளக்கிக்கொண்டு போகவேண்டாம் என்றுதான் மரத்தடியிலேயே இருந்துகொண்டாள். நெஞ்சு விம்ம விம்ம மூச்சு விட்டு அடக்கினாள், கண்ணீரைப் பிழிந்து விட்டுக்கொண்டேயிருந்தாள்.

*Use your finger leave me.*

டொக்டர் கையுறைகளைக் கொழுவிக்கொண்டபின் ஊசியைப் பையிலிருந்து எடுத்தார். இவள் கண்ணெதிரே நடப்பவற்றைப்

பார்த்துக் கொண்டிருந்தாள். குமரன், கோமதியின் நாணயக்கயிற்றை இறுக்கியிருந்தான். டொக்டர் அருகில் சென்று அதன் பெரிய வாலைப்பிடித்தார். பின் ஒரு கையில் ஊசியை எடுத்துக்கொண்டு வாலைத்தூக்கி கோமதியின் யோனியை நோக்கி ஊசியைக் கொண்டு போனார்.

*Use your FINGER leave me*

வார்த்தைகள் உள்ளே வெட்டின.
இவள்.
"டொக்டர் நிப்பாட்டுங்கோ" ஏறக்குறையக்கத்தினாள். திடுக்கிட்டுப்போன டொக்டர் இவளின் பக்கம் திரும்பினார். இவள் இரண்டு எட்டில் கோமதியின் பக்கம் போய் நின்றாள்.
"டொக்டர் நிப்பாட்டுங்கோ வேண்டாம்"
அம்மா இடை மறித்தாள்
"ஏன் பிள்ளை?"
ஊசி போட வேண்டாம் கோமதியை மாட்டுக்கே விடுவம்"
"ஏன் பிள்ளை என்ன நடந்தது?" அம்மா திரும்பவும் கேட்டாள். அவள் குரலில் குழப்பம் மண்டியிருந்தது.
இவள் தாயைக் கையமர்த்தி விட்டு, டொக்டரிடம் காசைக்கொடுத்து அனுப்பினாள். அவள் ஏன் அப்படி நடந்து கொள்கின்றாள் என்று தெரியாமல் டொக்டர் ஏதோ புறுபுறுத்துக்கொண்டே வெளிக்கிட்டுப்போனார். இவள் குமரனிடம் திரும்பி
"அண்ணை ஆற்ற பட்டிக்குக் கூட்டிக்கொண்டு போகோணும்?"
"குஞ்சுப்பரந்தனுக்குத்தான் போகோணும் பிள்ளை. நான் கொண்டு போய்க் கொண்டு வாறன்"
"சரி இந்தாங்கோ" என்று பேர்சுக்குள் இருந்து ஆயிரம் ரூபாய்த்தாள் ஒன்றை எடுத்துக்கொடுத்து விட்டு, கோமதியின் தாடையில் ஒருக்கால் தடவி விட்டு, ஒன்றும் பேசாமல் வேகமாக அறைக்குள் சென்று கதவைச்சாத்திக்கொண்டாள்.

# தீட்டுத்துணி

துணியின் உபகதை

*துணியினுடைய உபகதை வவுனியா மாவட்டத்தில் பூவரசங்குளத்திலுள்ள ஆஸ்பத்திரியில் ஆரம்பிக்கின்றது.*

*01*

***மார்ச் 2010***

சூரியன் மிக அருகில் இருக்கின்றது என்ற நம்பிக்கையுடைய மக்கள் இன்னும் பூமியில் இருக்கின்றார்கள் என்பதை ஏற்றுக்கொள்ளுமளவு அந்தப் பங்குனிமாதம் தொடங்கியிருந்தது. வெம்மை மிக்கப் பொஸ்பரஸ் குண்டுகளிலிருந்து தப்பிவந்து நாங்கள் நீற்றறையைப்போல் கொதிக்கும் தறப்பாள் கூடாரங்களுக்குள் சிக்கிக்கொண்டோம். புழுதிபடிந்து வெட்ட வெளியில் அடிக்கப்பட்ட அத்தனை கூடாரங்களினுள்ளும் காலை ஒன்பது மணிக்கு மேல்யாரும் இருக்க முடியாது. எல்லோரும் எங்காவது ஒரு மூலையில் இருக்கும் மரத்தடியை நோக்கி ஓடிவிடுவோம். வெம்மை இறங்க மாலை ஏழு மணிக்குமேல் ஆகும். மாலை வேளைகளில் கொஞ்சம் கொஞ்சமாய் கஞ்சப்பட்டு நீரைக் கக்கும் குழாய்கிணறுகளில் நீரை நிரப்பி வந்து தறப்பாள்களிலும் நிலத்திலும் வாரி இறைப்போம். அப்போதுதான் சூடு மெல்ல அடங்கும். தேகம் கொதித்து இரத்த வெப்பம் சமநிலை தவற மனநோயோடு இருந்த எங்களுடைய சனத்திற்கு வெப்பியாரம் தோல்களில் பொங்கியது.

எது வரவே கூடாதென்று நேர்ந்திருந்தேனோ அது எனக்கும் வந்துவிட்டது. எல்லோரும் அதன் பெயரைச்சொல்வதைக்கூடத் தவிர்த்துவந்தார்கள். தெய்வ நம்பிக்கை மீது எழுதப்பட்ட நோய் அது. கடும் குளிரில் உறைந்தும் உறையாமலும் இருக்குமொரு ஆற்றினுள் தலைகீழாகக் குதித்து அமிழ்ந்து போக வேண்டும் என்பதுபோல் வெப்பமும் எரிச்சலும் உடலில் பரவி வாட்டின. என்னிடம் இருந்த இரண்டொரு சேட்டுகளும் காற்சட்டைகளும்

தறப்பாள் கூடாரங்களுக்குள் கிடந்து முறுகிப்போய் உடலை உரசின. கறள் துண்டுகளில் உரசுவது போல என்னுடைய உடலில் புடைத்த கொப்புளங்களை உடைத்து நீரைக் கசிய விட்டன. புண்களில் உரசும் போதெல்லாம் வலி உயிர் போனது. சேட்டைக் கழற்றி விடச்சொன்னார்கள்.

எனக்கு உடலில் அவ்வளவாகக் கொப்புளங்கள் போடவில்லை. ஆனால் போட்டவையெல்லாம் உடைந்து காய்ந்து கிடந்தன. முதற்கொப்புளம் போட்ட போதே அம்மா உடைக்கக்கூடாது என்று சொல்லியும் ஊசி ஒன்றை எடுத்துக் கண்ணை இறுக்கி மூடிக்கொண்டு பலூனுடைத்திருந்தேன். உடலில் பத்துப் பதினைந்து கொப்புளங்கள் பெரிய அளவில் போட்டு உடைந்து காய்ந்து போயிருந்தன. கைகளில் ஒன்றிரண்டு சிறிய கொப்புளங்கள் அவ்வளவு தான். முகத்தில் கொப்புளம் போட்டு விடுமோ என்று பயந்தபடியே பூவரசங்குளம் வைத்தியசாலை நோயாளர்காவு வண்டியில் ஏறியமர்ந்தேன். கோடை வெயிலின் வெம்மை முகாம்களின் தறப்பாள் கூடாரங்கள் மீது தொடர்ந்தும் காய்ந்தது. வெய்யில் வலுக்க வலுக்க ஒவ்வொரு நாளும் பலர் பூவரசங்குளம் வைத்தியசாலைக்கு ஏற்றப்பட்டனர்.

பூவரசங்குளம் வைத்தியசாலை நலன்புரி முகாம்களில் பெரியம்மை வந்தவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது.எல்லா நலன்புரி முகாம்களில் இருந்தும்தினமும் ஏராளமானவர்கள் அங்கே வந்து கொண்டிருந்தனர். உடல் முழுவதும் கொப்புளங்களும் எரிச்சலும் வேதனையும் அங்கே இயல்பான ஒன்றாய் மாறிக்கிடந்தது. சுற்றிவர முட்கம்பிச்சுருள்கள் அடுக்கப்பட்டுக் காவலரண்கள் போடப்பட்டு நலன்புரி முகாம்களைப்போலவே ஒரு சிறை வைத்தியசாலையாக அது மாற்றப்பட்டிருந்தது. வாசற்கதவில் எப்போதும் காவலுக்கு நான்கைந்து துப்பாக்கியேந்திய இராணுவத்தினர் நிற்க வைக்கப்பட்டிருந்தனர். எனினும் வெளியில் இருக்கும் கடைகளில் ஏதும் பொருட்கள் வாங்குவதற்குச் சனங்களை அனுமதித்தனர். அவர்களுடைய கண்பார்வையிலிருந்து விலகாமல் போய் வர முடியும்.

பூவரசங்குளம் வைத்தியசாலை சிறு பிரதேச வைத்தியசாலையென்பதால் கட்டடங்கள் அதிகமில்லை. எல்லா நலன்புரி முகாம்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான கொப்புளக்காரர்கள் கொண்டு வரப்பட்டதாலும், குளிர்ச்சியின் பொருட்டும் ஏழெட்டு நீண்ட ஓலை வேய்ந்த கொட்டில்கள் போடப்பட்டு ஓலைப்பாய்கள் விரிக்கப்பட்டு நோயாளர்கள் வேப்பங்குழை படுக்கையில் சுருண்டு கிடந்தனர். ஒவ்வொருத்தர் உடலிலும் வலி தோலெங்கும் பூசப்பட்டுக் கொப்புளங்களாய் மேலெழுந்து நின்றது. அவர்களுடன் ஒப்பிடுகையில் நான் எவ்வளவோ பரவாயில்லை என்றேபட்டது. அவர்களால் உடலை அசைக்க முடியவில்லை.

அசைத்தால் கொப்புளம் வெடித்து எரியும். வேப்பங்குழைப் படுக்கையும் வேப்பங்குழை வருடலும் நூறில் ஒரு பங்கே பயன்தந்தது சிலருக்கு அதுவுமில்லை. என்னால் அந்த இடத்தில் இருக்கவே முடியவில்லை. ஒவ்வொருத்தரின் கொப்புளங்களையும் அவர்கள் அலறும் முனகும் வலியோசைகளையும் என்னால் ஜீரணிக்கவே முடியவில்லை. அந்தக் கூடாரங்களில் தெரியும் அத்தனை முகங்களிலும் வெம்மையின் சாயலும் எரிச்சலும் தசை மடிப்புகளில் இருந்து கசிந்து உடல் முழுவதும் பரவியிருக்கக் கண்டேன். அவற்றைக் காண்பது மிகத் துன்பமாகியதால் வெளியே அலைந்து திரிவேன்.

நான்கைந்து நாட்களில் எனக்குக் காயங்கள் ஆறத்தொடங்கின. புதுக் கொப்புளங்கள் போடுவது நின்று போனது. ஊசி போடவும், மருந்து தரவும் அழைக்கப்பட்ட போது தவறாமற் சென்று வருவேன். என்னுடைய கொட்டகைக்குள் இருந்த கிழவியொருத்தி "அம்மாளாச்சின்ர வருத்தத்துக்கு மருந்து போடக்கூடாது என்ன செய்ய எங்கட நிலைமை இப்பிடியாகி போச்சு" என்பாள்.

இன்னும் ஒரு சில நாட்களில் என்னை முகாமிற்கு அனுப்பி விடுவார்கள் என்று எனக்குத் தெரியும்.அன்றும் அப்படித்தான் வைத்தியசாலைக்குப் பக்கத்தில் இருந்த பாடசாலை மைதானத்தில் இளைஞர்கள் கிரிக்கெட் விளையாடிக்கொண்டிருந்தார்கள். நாங்கள் எப்போது முட்கம்பிக்கு வெளியே இப்படிக் கிரிக்கட் விளையாடுவது என்று நினைத்துக்கொண்டேன். அவர்கள் கைகளில் அழகான போன்களை வைத்திருந்தார்கள். பார்க்க ஆசையா இருந்தது. எங்கள் முகாமில் ஒவ்வொரு குடும்பமும் இரகசியமாக ஒரு சிறிய ரகக் கைபேசியை வைத்திருந்தது. நாங்களும் வைத்திருந்தோம். ஆனால் எங்களுடைய கைபேசியில் அதிகப் பட்சம் பாம்பொன்று இரையைப் பிடிக்கும் கேமை விளையாட இயலுமாக இருந்ததே அதன் உச்ச பட்ச தொழிநுட்பச் சாத்தியமாக இருந்தது. இயல்பாகவே பெருமூச்செறிந்தது. வேலியோரம் காவலுக்கு நின்றிருந்த இராணுவவீரன் என்னைப் பார்த்து லேசாக புன்னகைத்தான். அவனிடமிருந்த ஏ.கே.47 ஐ ஒரு முறை உறைந்து பார்த்து விட்டு அவனுக்கு உணர்ச்சியற்ற புன்னகையை வீசி முள்கம்பி வேலியில் இருந்து கைகளை எடுத்து விட்டுச் சற்றுத் தள்ளியிருந்த வேப்ப மரத்தடிக்கு வந்தேன். வேப்ப மரத்தில் ஏறி வேப்பம் குழைகளை முறித்துக் கொண்டேன். என் படுக்கைக்குப் பக்கத்தில் இருக்கும் பெரியவர் ஒருவருக்காக அந்தக் குழைகளை முறித்தேன். பெரும்பாலும் அந்த வைத்தியசாலையைச் சுற்றி உள்ள அனைத்து வேப்ப மரங்களும் மொட்டையடிக்கப்பட்டு விட்டன. கொப்புளங்களின் வலியையும் எரிச்சலையும் வேப்பங்குழை இல்லாவிட்டால் சமாளிப்பது பிரம்ம பிரயத்தனம்.

குழையை முறித்துக் கொண்டு வைத்திய சாலையின் கழிப்பிடத் தொகுதிகள் இருந்த பக்கமாய் நடந்து வந்து கொண்டிருந்தேன். அப்போது ஒரு வயதான பெண்மணி பெரிய குரலில் யாரையோ திட்டி கொண்டிருந்தார். "உந்த குமரியளுக்கு வேற வேலையில்லை எல்லாதையும் கழட்டி ரொய்லட் பிற்றுக்கப் போடுறாளவை. எல்லாம் அடைச்சுப் போய்க் கிடக்கு" என்று அந்தம்மா திட்டி கொண்டே போனார். எனக்கு ஓரளவு விடயம் புரிந்தது. கழிப்பிடத்தைச் சுற்றி நீலம், றோஸ் நிறங்களில் உறைகளும் வெள்ளை டிசு பேப்பர்களும் முட்புதர்களில் சிக்கிக்கிடந்தன. நான் லேசான சிரிப்புடன் அங்கிருந்து நகர்ந்தேன்.

பெரும்பாலும் அம்மை போட்டவர்கள் வெளியில் உலாவ மாட்டார்கள். அவர்களைக் கவனிக்க வந்தவர்கள் என்னைப்போல வேப்பங்குழை பறிக்கவும் நிழலில் இளைப்பாறவும் கொட்டகைகளை விட்டு வெளியே வருவார்கள். அவர்கள் ஏற்கனவே அம்மை வந்து குணமானவர்களாக இருப்பர். அம்மை போடாதவர்கள் அங்கே வரமாட்டார்கள். முகாம்களில் அம்மை பொதுப்பொருளாக இருந்தது. பெரும்பாலும் எல்லோருக்கும் அம்மை போடும். எனவே ஒருவர் மாற்றி ஒருவர் நோயாளியாகவும் அவர்களுக்குத் துணையாகவும் வந்திருப்பர்.

வவுனியா முகாம்களிலிருந்தவர்கள் அம்மைநோய்ச் சிகிச்சைக்குப் பூவரசங்குளத்திற்கே வரவேண்டி இருந்தது. நான் அவர்களில் தெரிந்த முகங்கள் இருக்குமோ என்று தேடினேன். அங்கே பள்ளித் தோழி பிரியங்காவைக் கண்டேன். அவளைக் கண்டு இரண்டு வருடங்களாகி விட்டன. அப்போது நாங்கள் பத்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தோம். நான் 'சி' வகுப்பு பிரியங்கா 'ஏ' வகுப்பு. நன்றாகச் சதுரங்கம் ஆடுவாள். கிளிநொச்சியில் நடக்கும் 'செப்டெம்பர் செஸ்' போட்டிக்குப் பாடசாலை அணியில் இருவரும் செல்வோம். வகுப்பில் பாடம் இல்லா விட்டால் அவளுடன் சதுரங்கம் ஆடியபடி பேசிக்கொண்டிருப்பேன். எப்போதும் எண்ணெய் வைத்துத் தலைவாரியிருப்பாள். முகம் எண்ணெய் இறங்கிப் பளபளப்பாக இருக்கும். மெல்லிய மஞ்சள் ஏறிய சீருடையைச் சுத்தமாக அணிந்திருப்பாள். ஒவ்வொரு நாளும் கையில் ரோஜாப் பூவுடன் பள்ளிக்கு வருவாள். பாடசாலை முன்றலில் தமிழீழத் தேசிய கொடியேற்றப்படும் கம்பத்தின் அருகில் இருக்கும் மாவீரர் நினைவுத்தூபியின் முன் வைத்து விட்டு வகுப்பிற்குப்போவாள். "கஸ்ரபட்ட பிள்ளையெண்டாலும் படிப்பில வறுமையில்லை" என்று அவளைப் பற்றி யசோதினி மிஸ் சிலாகிப்பார். அவளிடம் சைக்கிள் கிடையாது. நான் வீட்டுக்கு போகும் வழியில் தான் அவளுடைய வீடு இருந்தது. நான் தான் ஏற்றிக்கொண்டு சென்றுவிடுவேன். அவளிடம் ஒரு பழக்கம் இருந்தது எதையும் இரவல்

வாங்க மாட்டாள். அவளிடம் சைக்கிள் இல்லை அதனால் அவளுக்குச் சைக்கிள் ஓடத் தெரியாது.

"ஏனடி என்ர லேடிஸ் சைக்கிள்தானே ஓடிப் பழகன்" "நான் வாங்கித்தான் ஓடுவன். உனக்கு ஏத்திக் கொண்டுபோகக் கஸ்ரம் எண்டா சொல்லு நான் நடந்து போறன். நான் ஒண்டும் உன்னட்ட ஏத்தெண்டு கேக்கேல"
"அம்மா தாயே நான் உன்னட்ட ஒண்டும் கேக்கேல, மூக்கில ஏறின மொளகாவ புடுங்கி எறிஞ்சிட்டு ஏறு" கோபத்தை முகத்திலிருந்து அகற்றிவிட்டு முகம் முழுக்கப் புன்னகைத்தவாறே ஏறிக்கொள்வாள். அவளிற்கு அம்மா இல்லை. அவளுடைய அப்பா எஸ்.டி. எப் எனப்படும் புலிகளின் துணைப்படையில் சம்பளத்திற்கு வேலை செய்வதாகக் கூறியிருந்தாள். நான் அவரை ஓரிரண்டு தடவை பார்த்திருக்கிறேன். பிரியங்காவிற்கு ஒரு அக்கா இருந்தாள். பெயர் பிரணவி. அப்போது அவள் க.பொ.த. உயர்தரம் படித்துக்கொண்டிருந்தாள். ஒரு நாள் அவள் ஒரு பொடியனுடன் ஓடிப் போய்விட்டதாகச் சொன்னாள். அவள் அதனை இயல்பாகவே கூறினாள். அவள், தமக்கை ஓடி போகப்போவது முதலே தெரியும் என்றாள். இப்படியாக அவள் நட்பு வளர்ந்து கொண்டிருந்தது.

எனக்குப் பிரியமானவளாகவும் அன்பானவளாகவும் பிரியங்கா மாறிப்போனாள். நான் ஏதும் சீண்டினால் "போடா சிறுவா" என்று செல்லமாகக் கடிந்துகொள்வாள். அவள் அப்படிச்சொல்வதற்கே அவளுடன் ஏதும் வம்பிழுத்தபடியிருப்பேன். தானொரு டொக்டராக வரவேண்டுமென்று எல்லாப் படிக்கின்ற பிள்ளைகளையும் போல அவளும் சொல்லிவந்தாள். ஆனால் விதி வேறு ஒரு திரும்பல் புள்ளியை அவள் மீது இறக்கியது. பத்தாம் வகுப்பு இரண்டாவது தவணை ஆரம்பித்த போது கொஞ்சநாட்களாகப் பிரியங்கா பள்ளி கூடம் வருவதில்லை. அவள் தோழிகளிடம் விசாரித்துப்பார்த்தேன். அவர்களுக்கும் தெரியவில்லை. அவள் வீட்டுப்பக்கம் போய்ப்பார்த்தேன் வீடு பூட்டியிருந்தது. நான்கைந்து முறை சென்று பார்த்தேன். ஒரு நாள் அவளுடைய அப்பா வீட்டைக் கூட்டி துப்பரவு செய்து கொண்டிருந்தார். அவரிடம் கேட்க மனம் ஒப்பவில்லை பேசாமல் வந்து விட்டேன். ஒரு நாள் அவளுடைய தோழியான பிரபாவை கண்டு கேட்டேன்.
"பிரியங்கா கலியாணம் செய்திட்டாள்"
"ஏன்?"
"பிடிப்பிரச்சனையாம்"
"யாரைக் கட்டினவா?"
"கபிலனை"
"எந்தக் கபிலன்?"
"அவளின்ர மச்சானாம் யாரோ?"

"கனிஸ்ராவில ஓ.எல் படிச்ச கபிலனோ?"
"ஓம் அவன் தான். அந்தக் கறுவல்"
அப்போது வன்னிச் சனங்களை உலுக்கிய பிரச்சினைகள் இரண்டு; ஒன்று கிபீரடி. இன்னொன்று பிள்ளைபிடி. புலிகள் அப்போது கட்டாய ஆட்சேர்ப்பில் ஈடுபட்டு இருந்தனர். வீட்டுக்கு ஒருவர் போராட்டத்திற்கு வரவேண்டும் என்று கட்டாயமாக இயக்கத்தில் பிள்ளைகளை இணைத்தனர். இதனால் பல இளைஞர்களும் யுவதிகளும் காடுகளிலும் உறவினர் வீடுகளிலும் ஒளித்து வாழ்ந்தனர். எனினும் புலிகள், பிள்ளை பிடியை நிறுத்துவதாயில்லை. புலிகளின் அரசியற்துறை கடைசிக் காலத்தில் "பிள்ளைபிடிகாறர்" என்ற பெயருடனேயே வழக்கொழிந்து போனது தனிக்கதை.

ஆட்சேர்ப்பில் இருந்து தங்கள் பிள்ளைகளைப் பாதுகாக்கப் பெற்றோர் அவர்களுக்கு அவசரமாகத் திருமணம் செய்து வைத்து அவர்களைப் புதுக் குடும்பமாக்கினர். பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்த பிள்ளைகள் தாலியையும் குழந்தையையும் சுமக்கத் தொடங்கினர். இந்த அவலம் தான் அவளையும் திருமணத்தில் தள்ளியது. எனக்குக் கபிலனைத் தெரியும் எங்களை விட இரண்டு வயது அதிகம். அப்போது அவர் ஏ.எல். படித்துகொண்டிருந்தார். பிரணவி அக்காவின் வயது.நன்றாகப் புட் போல் விளையாடுவார். பிரியங்காவின் முறை மச்சான் என்று அடிக்கடி அவள் சொல்லியிருக்கிறாள்.

திருவிழாக் காலங்களில் யூட்டுடன் சேர்ச்சிற்குச் செல்வேன். அப்படித்தான் ஒரு நாள் சேர்ச்சில் பிரியங்காவைக் கண்டேன். தலை வகிடு ஆரம்பிக்கும் இடத்தில் குங்குமம் வைத்திருந்தாள். முகம் சற்றுப் பிரகாசமாய் இருந்தது. கொஞ்சம் குண்டாகியிருந்தாள். அவளைக் கண்டதும் யூட் நைசாகக் காதுக்குள். "டேய் கலியாணமான புதுசில பெட்டையளுக்கு முகம் பிறைட்டாகுது" நான் முறைக்க, அருகிலிருந்த இன்னொரு நண்பன் "பூரிப்புடா"

நான் பிரியங்காவைப் பார்த்தபடியிருந்தேன். அவள் கண்ணில் நான் படுவதற்குக் கொஞ்ச நேரமாகியது. என்னைக் கண்டதும் அதே வெள்ளைப் புன்னகையுடன் முகத்தால் சிரித்தாள். கபிலனின் கையைப் பிடித்தபடி அவளுயர மெழுகுதிரியுடன் சொரூபத்தின் பக்கம் சென்றாள். மெழுகு வெளிச்சம் மஞ்சளாக அவளுடைய முகத்திலிருந்து மார்புவரை படிந்து கிடந்தது. அவளைப் பார்த்துக்கொண்டிருக்கும் போதே பின்னால் சுபிஷேசம் ஒலித்தது. சொரூபத்தின் அந்தப் பக்கமாய் மஞ்சள் ஒளியில் மறைந்து போனாள்.

அன்றுதான் அவளைக் கடைசியாய் கண்டது. அதன் பிறகு வீழ்ந்த ஷெல்கள் எங்களைத் திசைகளுக்கொன்றாய் சிதறிப்போகச் செய்து விட்டன. அதன் பிறகு இன்று தான் பிரியங்காவைக் காண்கிறேன். வைத்தியசாலை நுழைவாயில் அருகே உள்ள மர நிழலில் நின்றிந்தாள். கறுப்பு நிறத்தில் சட்டை போட்டிருந்தாள். முகத்தில் இரண்டு மூன்று இடங்களில் அம்மை வடுக்கள் கறுத்துகிடந்தன. மிகவும் மெலிந்து போயிருந்தாள். கண்களைச் சுற்றிக் கருவளையம் காதில் தோடுகளில்லை. அதற்குப் பதிலாக ஒரு வேப்பங்குச்சியைச் செருகியிருந்தாள். சிரிப்பு மட்டும் அப்படியே இருந்தது. நெற்றியில் பொட்டில்லை. எனக்குள் ஏதோ தோன்ற, அப்பிடிக் கேட்டுவிடக்கூடாது என்று தீர்மானித்துக்கொண்டேன்.

அவளே பேச்சை தொடக்கினாள். பழைய கதையெல்லாம் கதைத்தோம். யார்ரெல்லாம் உயிருடன் இருக்கிறார்கள், யார் இல்லை என்பது முதற்கொண்டு கதைத்தோம். நான் கபிலன் பெயரைத் தவிர எல்லோரையும் கேட்டேன். எனக்கு அவளுடைய வெறுங்கழுத்தும் நெற்றியும் நெருடியபடியே இருந்தன. கேட்கவில்லை.
அவளே, "அவருக்குச் சரியான கூட"
"கபிலனுக்கோ?"
"ஓமடா இன்னும் காயேல்ல. ரெண்டு பேரும் ஒண்டா தான் வந்தனாங்கள்"
"மாறிடுமடி, எரிவாய் இருக்கும், பொல்லாத வருத்தமிது? இந்தா இதைப் பிடி"
வேப்பங்குழையைக் கொடுத்தேன். வாங்கிக்கொண்டே.
"அப்ப உனக்கெடா?"
"எனக்கு மாறிட்டு, இது பக்கத்தில இருக்கிற ஐயா ஒராளுக்கு, நீ இதைக் கொண்டுபோ நான் வேற முறிக்கிறன்"
"சரி தாங்ஸ்டா"
"அப்பா எங்கயடி?"
"அப்பா, அக்கா, அத்தான், இருந்த பங்கருக்கு மேல ஷெல் விழுந்தது விசுவமடுவில" லேசாய் கண்கள் பனிக்க மூக்கை உறிஞ்சிக்கொண்டு கண்ணைத் துடைத்து விட்டு, வில்லங்கமாய்ச் சிரித்தாள்.
"சரி நான் குழை முறிச்சு அந்த ஐயாக்கு குடுத்திட்டு கபிலன பாக்க வாறன். எவடத்த விட்டிருக்கினம்?" "மருந்து குடுக்கிற இடத்துக்கு நேர உள்ள கொட்டில்"
"சரி நீ போ நான் வாறன்"
"சரிடா"
நான் புறப்படும் வேளையில் தான் ஏதோ சொல்ல வாயெடுத்தவள் சட்டென அடங்கினாள்.
"என்னடி?"
"ஒண்டுமில்லைடா நீ போ"

"இல்லை சொல்லு?"
"இல்லை வேண்டாம் நீ போடா"
தயங்கினாள். வாய் "போ" வையும் கண்கள் "போகாதே" யும் வைத்திருந்தன.
"இல்ல பரவாயில்லை சொல்லடி"
"ஒரு கெல்ப்படா குறை நினைக்காதே"
நான் காற்சட்டை பையில் இருந்த பேசை ஒருமுறை தொட்டுப் பார்த்துக்கொண்டேன். அம்மா பூவரங்குளத்திற்கு அம்புலன்ஸ் ஏறும் முன் தந்த மூவாயிரத்தில் இரண்டாயிரம் இருந்தது.
"காசு ஏதும்?"
"இல்லையடா காசெல்லாம் இருக்கு"
"அப்ப என்ன?"
"ஒருக்கா வெளிக்கடைக்குப் போகோணும்"
"இதுக்குத் தான் மசுந்தின்னியே லூசு. என்ன வாங்கோணும்?"
"அதுடா குறை நினைக்காதை பிளீஸ்"
"கேற்றில ஆமிக்காறர் நான் போகேலா"
"அவங்கள் ஒண்டும் சொல்ல மாட்டாங்கள். என்ன வாங்கோணும் எண்டு சொல்லிட்டு போய் வரலாம்"
"இல்லையடா அதுதான் பிரச்சினை. கடேலையும் ஒரே பெடியள்"
"என்ன வாங்கோணும்?" குழம்பியிருந்தேன்.
அவள் தயக்கத்திற்குக் கொஞ்ச செக்கன்களைக் கொடுத்து விட்டு சொன்னாள்
"ஒரு விஸ்பர் வாங்கோணும் டா"
கொஞ்சம் அதிகப்பிரசங்கி என்றாலும் என்னால், அவள் கேட்டதை வாங்கிவரும் தீரச்செயலை செய்ய முடியும் என்று தோன்றவில்லை. பெண்பிள்ளை கேட்கின்றாள். அவள் நிலமை புரிந்தது. அவளிற்கு அது உடனடியாகத் தேவைப்பட்டு இருக்கக் கூடும். வேறு வழியில்லை போய்த்தான் ஆக வேண்டும்.
"டேய் ஏலாட்டி சொல்லடா யாரும் பெரியாக்கள கேட்டுப்பாக்கிறன்"
அவள் குரலில் பரிதாபம் வழிந்தது அவள் அதுவரை கையில் வைத்து பிசைந்து கொண்டிருந்த காசை வாங்கிக்கொண்டு நடந்தேன். வாசல் சென்ரியிலிருந்த இராணுவவீரன் முகம், இரண்டு மூன்று நாட்களாக நான் கடைக்குப் போய்ப் போய்ப் பரிச்சயமாகி விட்டது. அவனும் என்னைக் கண்டதும் புன்னகைத்துக்கொண்டே நின்றான்.
"மல்லி கடைக்குப் போறது?"
என்றான் சிரித்து விட்டு "ஓம் சேர்" நல்ல வேளை "மல்லி என்ன வாங்க போறது?" என்றவன் கேட்கவில்லை. கடையில் நான்கைந்து இளைஞர்கள் கைகளில் சோடா போத்தல்களுடன் நின்றிருந்தனர். கடைக்கார அம்மா இரண்டு நாள் சினேகத்தில் புன்னகைத்தார்.
"என்னப்பன் வேணும்?"

"அன்றி ஏதோ விஸ்பறாம்?" தெரியாதது போல் இழுத்தேன்.
உடலெல்லாம் விறைத்து. வியர்வை கரை புரண்டு ஓடியது. வலது கை நடுங்கத்தொடங்கியது கடைக்கார அம்மா அதனை அப்படியே என் கையில் தந்து விடுவாரோ என்று பயந்தேன். நல்ல வேளை அவர் அதைப் பேப்பர் ஒன்றில் சுற்றி பையில் போட்டுத் தந்தார். வாங்கிக் கொண்டு திரும்ப அந்த இளைஞர் கூட்டத்தில் ஒருத்தன்,
"தம்பி அது பிஸ்கற் இல்லையாடா"
கண்டுகொள்ளாமல் வேகமானேன். இராணுவ வீரன் அதைப் பரிசோதிப்பான் என்று நினைத்தேன். நல்ல வேளை அவன் சிரித்தபடி கேற்றைத் திறந்து விட்டான். அவனை ஏமாற்றிவிட்டு ஒரு வெடிகுண்டைக் கொண்டுவந்திருந்தால் கூட அப்படிப் பயந்திருக்க மாட்டேன். பிரியங்கா நின்றிருந்த மரத்தடிக்கு வந்தேன். அவளைக் காணவில்லை. கண்கள் அவளைத் தேடின. முகமெல்லாம் அம்மை வடு போட்டிருந்த பையன் என்னை அழைத்தான். "அந்த அக்கா இருக்கிற கொட்டில்காறர ஊசி போட வரச்சொல்லி அறிவிச்சவங்கள் உங்களிட்ட சொல்லிவிடச்சொன்னவா"
அவள் சொன்ன கொட்டிலை நோக்கி நடந்தேன். கைகளில் இருக்கும் அந்தப் பொட்டலம் பேப்பர் சுற்றப்பட்டுப் பையில் மறைக்கப்பட்டிருந்ததால் அது பற்றிய வெட்கமும் அச்சமும் என்னிடமிருக்கவில்லை.

கொட்டிலின் முன்பு அம்மை நோயாளிகள் வரிசையில் நின்றிருந்தனர். வேப்பமிலைக் கட்டுகளால் மொய்க்கும் இலையான்களைத் துரத்தியபடியும், எரிச்சலெடுக்கும் அம்மைப்புண்களை வருடியபடியுமிருந்தனர். லைன் முடியும் இடத்தில் பிரியங்காவின் முகம் தெரிந்தது. அருகில் கபிலன். அவள் தோளில் அவனுடைய மணிக்கட்டுடன் துண்டாடப்பட்ட கை ஊன்றப்பட்டிருந்தது. முழங்கால்வரை ஏற்றிக்கட்டியிருந்த நீலநிறசாறத்தின் கீழே அவனுடைய வலதுகால் ரப்பராக மாறியிருந்தது. ரப்பர்காலின் பாதங்கள் வெள்ளை மணலில் புதைந்து இடது தசைக்காலுக்கு உதவியாக அவனுடலைத் தாங்கியபடியிருந்தது. மேற்சட்டை போடாத அவனுடைய கரிய தேகத்தில் மாபிள் குண்டுகளைப் புதைத்து வைத்தது போல் பெரிய பெரிய அம்மைக் கொப்பளங்கள் தெரிந்தன. பிரியங்கா கையிலிருந்த வேப்பங்குழையால் அவற்றைத் தடவிக்கொடுத்தபடியிருந்தாள். லைன் மெல்ல மெல்ல நகர்ந்த படியிருந்தது.

நான் அப்படியே நின்று அவர்களைப் பார்த்தபடியிருந்தேன். பிரியங்கா மெல்லிதாய்ப் புன்னகைத்தாள். கொஞ்சம் பொறு என்று சைகை செய்தவள், என்னுடைய கையில் இருந்த பொட்டலத்தை ஒருதடவை பார்த்துக்கொண்டவள் கபிலனுக்கு என்னைக்காட்டினாள். அவன் அம்மை எரிச்சல் மாறாத முகத்தில் வலிந்து புன்னகைத்தான். அதே பூவரசங்குளம் கிராமத்தில் துணியின் உப கதை இவ்வாறு காத்திருக்கக் கிளிநொச்சியின்

மேற்கே உள்ள கிராமமொன்றில் துணியின் கதை ஆரம்பிக்கின்றது.

துணியின் கதை
*பெப்ரவரி 2013*
மீண்டும் பிரியங்கா பற்றிய ஞாபகம் வந்தது. தற்செயலாக நடந்தது. அத்தைமகள் கவினாவிற்குப் பாஸ் பேப்பர் புத்தகங்களைக் கொடுத்துவிட்டு யாழ்ப்பாணம் போக நினைத்த போது அத்தை, "உன்னை என்னெண்டு அந்தப் பிரியங்காக்குத் தெரியும்?" அத்தை கேட்டதும் உடனே அவள் எனக்கு ஞாபகம் வரவில்லை. "உன்னோட பரந்தன்ல படிச்சதாம் எண்டு சொன்னது" சட்டென அடி மனதிலிருந்து எழுந்து வந்தாள். சொரூபத்தின் பின் மஞ்சள் ஒளியில் சுவிசேசத்துடன் நகர்ந்து சென்றாள். லைனில் உடலெங்கும் கொப்புளங்கள் உடைந்த கபிலனைத் தாங்கியபடி நின்றிருந்தாள். வருடங்கள் உருண்ட பின்னர் மீண்டும் அவள் பெயர் காதிலொலித்து மனதிலெழுகிறது.
"இஞ்சதான் இருக்கிறாள். எங்கட முகாமில தான் இருந்தவள், கவினாட்ட உன்னை விசாரிச்சவளாம்" நான் அவளுடைய வீட்டைக் கேட்டதும் அத்தையின் முகம் சட்டென்று மாறியது. "அவள் என்ர பிரண்ட்" என்றேன். அத்தை மகள் சிரித்தாள்.
"அம்மா மச்சி சைவே வீட்ட போகப்போறானாம்"
"சைவேயோ அப்பிடியெண்டா?"
கவினா சிரித்தாள்
"இஞ்ச எல்லாரும் அவளை அப்பிடித்தான் கூப்பிடுவினம்"
"விளங்கேலையடி" அவள் குரலைத் தாழ்த்திக் கொண்டு.
"அட ஓசு மச்சி சை-வே யை மாத்தி பார்"
"வேசை"
என் வாய் கொஞ்சம் பெரிதாகவே சொல்லிவிட்டது. வெளியே வந்த அத்தை, "அந்தப் பெடியன் முகாமில வருத்தம் வந்து செத்துப்போச்சு தெரியாதோ?" கடைசியாய் பூவரசங்குளம் வைத்தியசாலையில் அவளிற்கு விஸ்பர் வாங்கிக் கொடுத்ததிலிருந்து, இரண்டு நாட்களில் கபிலனுக்குக் காய்ச்சல் அதிகமாகி அவன் மயக்கம் போட்டதும் அவனை அம்புலன்சில் ஏற்றிய போது அம்புலன்சினுள் அவனை மடியில் தாங்கிக்கொண்டு கண்கள் கலங்க என்னைப் பரிதாபமாய்ப் பார்த்த பிரியங்காவின் முகம் ஞாபகம் வந்தது. நான்கைந்து நாட்களில் கபிலனுக்குச் சரியானதும், அம்மை ஊசிகள் போட மீண்டும் அவர்கள் பூவரசங்குளம் வந்ததும் ஞாபகம் வந்தது. எனக்குக் குணமாகி விட்டதால், என் முகாமிற்குத் திரும்பியது வரை உடைந்து உடைந்து மனத்தில் ஓடியது. அதன் பிறகு அவளிற்கு நடந்தது ஒன்றும் எனக்குத் தெரிந்திருக்கவில்லை.
"ஏன் கபிலன் செத்தவர்?"
"ஏற்பாக்கினதாம்"

பிரியங்காவின் முகம் எழுந்தது. கபிலனின் அம்மை வேதனை ஊறிய சிரிப்பு எழுந்தது. அங்கே அவர்களைக்கண்ட நாளிலிருந்து விடைபெறும் வரை அவர்களுடன் பழகியதெல்லாம் நினைவுக்கு வந்து தொண்டையை இறுக்கியது போலுணர்ந்தேன்.

"அப்ப பாக்க எங்களுக்கும் பரிதாபம இருந்தது ஆனா இப்ப அவான்ர சீவிச்சிங்காரிப்புகளும் ஆட்டமும் பாத்தாயெண்டா"

"இந்த ஊரிலையோ இருக்கிறாள்?"

"ஓம் இஞ்சதான் நிண்டு பெடியளோட கிளிக்கோடு மறிக்கிறாள் " சட்டென்று குரலை தாழ்த்திக்கொண்டு "இப்ப ஒரு வேலை செய்திருக்கிறாள் பார் கேவலம்"

தூரத்தே பஸ் ஒன்றின் கோர்ண் சத்தம் கேட்க, கவினா "மச்சி பஸ் வருது"

"சரி... சரி வெளிக்கிடு இனி ரவுனுக்கு வேற பஸ் இல்லை"

நான் பையைத் தூக்கியபடி கேற்றைத் திறந்து வீதிக்கு ஏறினேன். சாலையில் செங்கிரவல் புழுதியைக் கிளப்பிக்கொண்டு பஸ்வந்து நின்றது. அத்தையும் கவினாவும் என்னைப்பார்த்துக் கையை அசைத்துப் புன்னகைத்தார்கள். பஸ்சில் ஏறி, ரிக்கெற் எடுத்து, யன்னலில் முகத்தைச்சாய்த்துக் கொண்டேன்.

மனதைப் பிரியங்கா ஆக்கிரமித்திருந்தாள். அவள் சிரித்த முகம் எழுந்து வந்து ஜேசு சொரூபத்தின் பின்னால் மறைந்தது. அத்தோடு கவினா சொன்ன "சைவே" என்ற வார்த்தையும் அத்தை கடைசியாய் பிரியங்கா ஏதோ வேலை செய்துவிட்டாள் என்றாள் என்னவாக இருக்கும் என்றும் யோசித்தேன். இந்த ஊரில் அவளுக்குச் சைவே, ஆட்டக்காரி என்றெல்லாம் அழைப்பார்கள் என்று தோன்றியது. அப்பா, அக்கா, அத்தான், இப்போது கபிலன் என்று அவள் குடும்பம் அழிந்து விட்டது. அவளை ஒரு சைவே என்று ஓ.எல். படிக்குமொரு பெண் சொல்லுமளவிற்கு வந்துவிட்டதா அவளுடைய வாழ்க்கை. சனம் எப்பவும் இப்பிடித்தான் எல்லாரைப் பற்றியும் கதைக்கும், என்று எனக்குள் சொல்லிக்கொண்டேன்.

பஸ் சந்தியொன்றைக் கடந்துகொண்டிருந்தது. சந்தியில் நான்கைந்து கடைகளைக்கொண்ட கடைத்தொகுதி தெரிந்தது. அப்போதுதான் கண்கள் கடையருகே நின்ற மோட்டார் சைக்கிளை கண்டன அதன் அருகில் பிரியங்கா. கையில் பொலித்தீன் பையுடன் கடையிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தாள். நான் சட்டென்று எழுந்து பஸ் பெல்லை அடித்தேன். "தம்பி கிளிநொச்சிக்கெல்லோ டிக்கட் எடுத்தனீர்" நான் வேகமாய இறங்கி நடந்தேன்.

என் பக்கமாகத் தான் அவள் வந்து கொண்டிருந்தாள். வெள்ளை நிற ரொப்பும் நீல டெனிம் ஜீன்ஸும் அணிந்திருந்தாள். குண்டாகியிருந்தாள். கருவளையங்கள் ஏறிய கண்களுடன் இருந்த அவளுடைய முகம்

இப்போது பளிச்சென்று தெரிந்தது. நெற்றியில் ஒரு கறுப்பு ஸ்ரிக்கர் பொட்டு வைத்திருந்தாள். அவளுடைய கழுத்தில் சிலுவையில் ஜேசு தொங்கிக்கொண்டிருந்தார். அவள் அருகில் வரும் போதே சந்தேகத்துடன் புன்னகைத்தாள், சட்டென்று

"டேய் சிறுவா"

குரலில் சந்தோசம் பொங்கியது.

"டேய் ஆளே மாறிட்டாய், என்னடா தாடி எல்லாம்"

"எப்பிடி இருக்கிறாயடா?"

"எனக்கென்ன சூப்பரா இருக்கிறன். எங்க அத்தை வீட்டயோ வந்தனி?"

"ஓமடி ஏன் இங்க இருக்கிற?"

"இது அம்மான்ர இடமெடா என்ர பேர்ல காணி இங்கதான் இருந்தது. இங்க வீட்டுத்திட்டம் கிடைச்சுது அதுதான் வந்திட்டன்"

"ஓ"

"கம்பஸ் கிடைச்சதெண்டு கவினா சொன்னாள்?"

"ஓம் யாழ்ப்பாணம்"

"சூப்பர், நல்லா படி, வா ஐஸ் கிறீம் ஏதாவது குடிப்பம்"

அருகில் இருந்த கூல்பார் ஒன்றினுள் நுழைந்தோம்.

"ம்.. எங்க போற?"

"கடைக்கு வந்தனான். நீ ஏன் இவடத்த வந்தனி?"

"பஸ்ல கிளிநொச்சிக்குப் போய்க் கொண்டு இருந்தனான், உன்னைக் கண்டிட்டன் உடன இறங்கீட்டன்"

"அட லூசு, இனி பஸ் இல்லையடா"

"பரவாயில்லை"

"சரி வா நான் கொண்டு போய் விடுறன் ரவுனுக்க"

"சைக்கிள் ஓடப்பழகிட்டியோ?"

"இல்லையடா இன்னும் பழகேல்ல" சிரித்தாள் தொடர்ந்தும்.

"அப்ப என்னத்தில கொண்டுபோய் விடப்போற?"

அப்போது ஐஸ்கிறீம் பரிமாறப்பட்டது.

"ஐஸ்கீறீம குடி முதல்"

"சரி"

நான்கைந்து கரண்டி ஐஸ்கீறிம் வாய்குள் குளிர்ந்து இறங்கியவுடன்

"அத்தையாக்கள் ஏதும் சொன்னவையா?" உணர்ச்சியற்ற குரலில் கேட்டாள்.

"ஓம் கபிலனுக்கு நடந்தது பற்றி, சொறியடி எனக்குச் சத்தியமாக இவ்வளவு நாளும் தெரியாது"

"அது மட்டும் தான் சொன்னவாவோ?"

"ஓமடி ஏன் கேக்கிற?"

"பொய் சொல்லாத கவினா என்னோட இப்ப பெரிசா கதைக்கிறதே இல்லை. உன்ர அத்தை சிரிச்சாக்கூட முகத்தைத் திருப்பிக்கொண்டு போறா"

"ம்"

"எனக்கு இங்க என்ன பேர் தெரியுமோ?"

"பிரியங்கா. அது மட்டும் தான் உனக்குப் பெயர்"

நான் அவளை நிமிர்ந்து பார்த்தேன், தலை குனிந்திருந்தது ஐஸ்கிறீமைக் கிளறிக்கொண்டிருந்தாள்.

"ம்...ம்"

இருவரும் பேசவில்லை. ஐஸ்கிறீம் முடிந்தது. நான் பேர்ஸை எடுக்க "ஷேர் பேர்ஸை உள்ளுக்கு வையுங்கோ. நாங்கள் குடுக்கிறம்"

"இல்லையடி பரவாயில்ல"

"வையடா சிறுவா" உறுக்கினாள்.

"மொளகா" என்றேன்.

"எப்பவும் நான் கோவக்காரி தெரியும்தானே"

"சரி என்னத்தில போறது?"

"பைக்ல"

"ஓ பைக் வச்சிருக்கிறியா?"

நடந்தாள். சட்டென்று ஏதோ நினைவுவரப்பெற்றவளாய் கையில் இருந்த பைகளை என்னிடம் தந்துவிட்டு அருகில் இருந்த பார்மசி ஒன்றினுள் நுழைந்தாள். இரண்டு நிமிடங்களில் வெளிப்பட்டாள்.கையில் நீல நிற விஸ்பர். பேப்பரோ உறையோ ஒன்றும் சுற்றப்பட்டு இருக்கவில்லை. ஒரு விளையாட்டுப் பொருளைக் குழந்தை எடுத்துவருவது போல அதனைக் கொண்டுவந்தாள். என்னிடம் தந்த பை ஒன்றில் அதனைத்திணித்து விட்டு "சரி வா போவம்" நான் சூட்டி பப் அல்லது பிளசர் என்று ஏதும் ஸ்கூட்டர் ரக மோட்டார் சைக்கிளை எதிர் பார்த்தேன். அவள் ஹீரோ ஹொண்டா மோட்டார்சைக்கிளின் அருகில் போய், திறப்பைச் சொருகி அதனை அநாயசமாக நிமிர்த்தி ஹிக்கரை அடித்து உயிர்ப்பித்தாள். ஏறிக்கொண்டேன். பெரிய வயல் நிலங்களைக் கடந்தோம். வாய்க்கால் கரையாக ஓடும் அந்தச்சாலையின் புழுதியை மெல்லக் கிளப்பியவாறு வண்டியைச் செலுத்திக்கொண்டிருந்தாள்.

"அவர் செத்த பிறகு உடைஞ்சு போய்டண்டா. உன்ர அத்தையாக்கள் தான் முகாமில ஆறுதலா இருந்தவை. ஆனா உன்ர அத்தையெண்டு அப்ப தெரியா"

"ஓ"

"முகாமால இங்க வந்தா பிறகு கவினா ஒருநாள் அல்பம் காட்டினாள் அதில உன்னைக் கண்டிட்டுக் கேட்டனான்"

"ம்"

"ஊர்ல ஆர் என்னைப் பற்றிக் கதைச்சிருந்தாலும் நான் கவலைப்பட்டிருக்க மாட்டன் ஆனா கவினாவும் அத்தையும் கூட என்னைப் பற்றிப் பிழையாக் கதைச்சிருக்கினம்"

"ம்...ம்"

"உந்த ஊர்ல இருக்கிற என்னைப் பற்றிக் கதைக்கிற பொம்புளையள் சில

பேரின்ர புருசன்மாரப் பற்றியெல்லாம் எனக்குத் தெரியும் நல்லா"
"ம்...ம்"
"ஒரு பெட்டை தனியா இருக்கேலாதடா, முகாமில இருக்கேக்க தெரியேல்ல. இங்க வந்தா பிறகு சீ சொல்லவே வெக்கமா கிடக்கு"
"என்ன நடந்தது?"
"பகல் இரவு எண்டு பாராம ஏதாவது காரணம் சொல்லி கொண்டு வருவாங்கள்"
"தனியாவோ இருக்கிற?"
"இல்ல அப்பம்மா கிழவி இருக்கு. அதுக்குக் காதும் கேளா கண்ணும் மங்கல்"
"ம்...ம்"
"ஆம்பிளையள் இப்பிடியெண்டா, ஊர்ல இருக்கிறவளவை, என்னை நாக்காலப் படுத்தினாளவை"
"என்னவாம்?"
"முகாமால வந்து ஸ்கூல் ஒண்டில கன்ரீன் வச்சு நடத்தினான், அங்க படிப்பிக்கிற மாஸ்ரர் ஒராளோட நான் தொடர்பாம் எண்டு அங்க டீச்சர் எண்டு சொல்லிக்கொண்டு திரியிறவளவை சிலபேர் கதை கட்டி விட்டுட்டாளவை"
"சீ"
"நான் கன்ரின விட்டிட்டனடா"
"ஏன் அப்பிடிக் கதை கட்டினம்?"
"மனுசன் செத்தா, பூ பொட்டு ஒண்டும் வைக்கக் கூடாதோ?
"ம்"
"கோயில்குளத்துக்குப் போகேலாது நான் ஆறுதலுக்குத் தான் சேர்ச்சுக்குப் போறனான், ஆனா சிவிச் சிங்காரிச்சு போறாள் ஆம்பிளையளோட கதைக்கிறாள் எண்டு கதைக்கினம்"
"ம்...ம்"
"கொஞ்சநாள் அழுது கொண்டுதாண்டா இருந்தன், பிறகு மரத்துப்போச்சு"
"சிலதுகள் அப்பிடித்தானடி நீ கவலை படாத"
"அதெல்லாம் கூடப் பரவாயில்லையடா, நான் வேசையாடுறனாம், சின்னப் பெடியள் எல்லாம் ஐட்டம், சைவே எண்டு கத்திட்டு ஓடும். கர்த்தர நினைச்சுக்கொள்ளுவன் வேற ஆர் எனக்குத் துணை"
விம்மினாள்
"ம்... நாயள்"
பிரதான கார்பெட் வீதிக்கு ஏறி, அருகிலிருந்த பஸ்ராண்டில் மோட்டார் சைக்கிளை நிறுத்தினாள். அருகில் ஒரு சேர்ச் இருந்து அன்று குருத்தோலை ஞாயிறு என்று காலைப்பேப்பரில் படித்தது ஞாபகம் வந்தது, பூசை தொடங்க ஆயத்தம் தெரிந்தது நிறையச்சனம் சேர்ச்சினுள் நுழைந்துகொண்டிருந்தது. மோட்டார் சைக்கிளை நிறுத்தி ஸ்ராண்டில் சாய்த்து விட்டாள். பஸ்

வர நேரமிருக்குப் போலிருந்தது வேலைக்கும் போகாம இருந்தன் கொஞ்சநாள். அப்பம்பா கிழவியின்ர பிச்சைக்காசிலயும் என்ர நகையள வச்சதுல வந்த காசிலயும் தான் சீவியம் ஓடிக்கொண்டிருந்தது"
"பிறகு?"
"வேற வழி இல்லாமத்தான் அந்த முடிவு எடுத்தனான். ஆனா அதுவே இப்ப என்ர வேசை எண்ட பேர நிரந்தரமாக்கி போட்டுது"
"எந்த முடிவு?"
"ஏன் அத்தை சொல்லேலையோ?"
"இல்லையடி என்ன செய்தனி?"
கொஞ்ச நாளைக்கு முதல் பெட்டையளை ஆமில சேரச்சொல்லி கேட்டாங்கள் சேர்ந்திட்டன். நல்ல சம்பளம் இப்ப லீவில வந்து நிக்கிறன்"
சொல்லும் போது அவளுடைய குரல் வெடித்து வெளிவந்தது. ஒவ்வொரு நாட்காலையிலும் மாவீரர்துபிக்குப் பூ வைத்துவிட்டு வகுப்புக்கு போகும் அவளுடைய உருவம் நிழலாடிற்று. "ஆனா இப்ப உயிரோட நடமாடுறன் அவ்வளவுதான் உண்மை" நான் அதற்கு ஒன்றும் சொல்லவில்லை.
"டேய் இப்ப பஸ் வந்திடும். பூசை தொடங்கப் போகுது நான் சேர்ச்சுக்கப் போகட்டே?"
"ஓமடி நீ போ நான் ஏறிப்போயிடுவன்"
சட்டென்று ஒருமுறை அணைத்துக்கொண்டாள்.
"நல்லாப் படியடா. அடிக்கடி வா இஞ்சால"
அவள் விலகியபோது அவளுடைய கண்கள் பனித்திருந்தன.
"கவனமா போ சிறுவா. இது என்ர போன் நம்பர்"
பேப்பர் துண்டை என்னிடம் தந்து விட்டு வீதியில் இருந்து இறக்கி சேர்ச்சினுள் நுழைந்தாள். வாசலில் பெரிதாக வைக்கப்பட்டிருந்த ஜேசு சொரூபத்தைக் கடந்து கூட்டத்தினுள்ளவள் மறைவது தெரிந்துஅப்போது ஃபாதர் பைபிள் சுவிசேசங்களைச் சொல்லத் தொடங்கினார்.

> யேசு மரணத்தில் இருந்து வாரத்தின் முதல் நாளே உயிர்த்தெழுந்து விட்டார். முதன் முதலாக யேசு மக்தலேனா மரியாளுக்குத் தரிசனமானார். ஒரு முறை. ஏழு பேய்களை மரியாளைவிட்டு யேசு விரட்டினார்.
>
> *-மாற்கு 16:9*

## கோலியாத்

*உப கதா 01.*

*செட்டிகுளம், வலயம் 4 முகாமிலிருந்து வள்ளிபுனத்தில் குடியேற்றப்பட்ட நூற்றி ஐந்தாவது நாளில் வக்சலாவின் மண்வெட்டியின் இரண்டாவது கொத்துதலில் அந்த உரப்பை கிழிந்து, உள்ளே பேப்பர்க் கட்டுகள் தெரிந்தன. உரைப்பையைத் தோண்டி எடுத்துச் சோதித்த போது, புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட ஆவணங்கள் நீரில் ஊறி, மை கரைந்து, நைந்து போய் ஈரத்துடன் கிடந்தன. புலிச்சின்னத்தைப் பார்த்தவுடன் வக்சலாவின் தாய் மீனா பதறியடிச்சு "எல்லாத்தையும் போட்டுக்கொழுத்து பிள்ளை" என்று சொல்லி விட்டாள். குப்பை மேட்டில் காகிதங்களைப் போட்டு ஒரு பக்கத்தில் நெருப்பு வைத்தாள். ஈரம் இருந்ததால் பேப்பர் மெல்ல மெல்ல எரியத் தொடங்கியது. இவள் குந்தியிருந்து கொண்டு காற்றில் பறக்கும் பேப்பர்களை எடுத்து நெருப்பின் நாக்கில் வைத்தாள். ஒரு கட்டுப் பேப்பர் சணல் நூலால் கட்டப்பட்டு, பின்புறம் நீல மை கரைந்து, சிவப்பு மண்ணுமாகக் கறை படிந்து போயிருந்தது. அதைக் கையால் எடுத்து நூலை அறுத்தாள். பேப்பர் சுருள் விராய்ந்து வாயைத் திறந்தது. ஒவ்வொரு அடுக்காகப் பார்த்தாள். முதல் அடுக்கில் ஈழநாதம் பேப்பரின் இரண்டு பக்கங்கள் இருந்தன. அதில் சில செய்திகள் மட்டும் வெட்டி ஒரு வெள்ளைத் தாளில் ஒட்டப்பட்டிருந்தன. அடுத்த அடுக்கில் கைப்பட எழுதிய நான்கைந்து பேப்பர்கள் கிளிப் அடித்துச் சுருட்டப்பட்டிருந்தன. அவை 2004 ஆம் ஆண்டு டயரி ஒன்றிலிருந்து கிழிக்கப்பட்ட பக்கங்கள். அவற்றில் பந்தி பந்தியாகக் கொட்டை எழுத்தில் ஏதோ எழுதப்பட்டு அதுவும் கிளிப் அடிக்கப்பட்டிருந்தது.*

*மூன்றாவதாக, ஒரு பேப்பரில் புலிச்சின்னம் பொறிக்கப்பட்டு இருந்தது*

அது ஒரு கடிதம். திகதி இடப்பட்டுத் தொடங்கியது. ஆனால் ஈரம் ஊறி நடுவில் இருந்த இரண்டு பெரிய பந்திகளும் மை குழைந்து எழுத்துக் கூட்டம் அர்த்தம் சிதைந்து போயிருந்தது. ஆனால் அந்தக் கடிதத்தின் அடியில் இருந்த கையெழுத்து சட்டென்று இவளை ஈர்த்தது. கண்களை நம்பாமல் இமை வெட்டி முழித்துப் பார்த்தாள். வே. பிரபாகரன். அப்படியே சுருட்டிக் கொண்டு மாமரத்தடி வாங்கிற்கு ஓடியவள் பேப்பர்கள் ஒவ்வொன்றையும் பரபரப்பாக ஆராயத் தொடங்கினாள்.

சிறுகதை
(ஈழநாதம் பத்திரிகையின் ஞாயிறு மலரில் வெளியான கதை)
தாவீது - தமிழீழப் போராளியின் உண்மைக் கதை.

*1*

*1989* ஆகஸ்ட் பதினெட்டாம் திகதி மாலை ஐந்து முப்பதளவில் சைக்கிளில் வேகமாக வந்து இறங்கிய சக்கடத்தானுக்கு அரை வெறி. ஃபாதர் செபஸ்ரியாம்பிள்ளையிடம், வில்வரத்தினத்தின் மகள், மேரி அனுசியாவை இந்திய அமைதிப் படைச் சிப்பாய்கள் சப்பாத்தால் வயிற்றில் உதைந்து கொன்றதை அழுதழுது சொன்னான். மேரி அனுசியா கர்ப்பமாக இருந்தது ஃபாதருக்குத் தெரியும். காலையில் தொடங்கிய சுற்றி வளைப்பு. விசாரணைச் சங்கடங்கள் முடிந்து சனங்கள் வீடுகளுக்குள் அடங்கும் வேளை. ஃபாதர் தேவாலய வளவுக்குள் அப்போது தான் நுழைந்து, முன் பக்கக் கதவில் சாவியை நுழைத்துக் கொண்டிருந்தார். சக்கடத்தான் சைக்கிளில் வந்து குழறும் குரலில் விடயத்தைச் சொன்ன போது, "என்ர யேசுவே" என்று ஃபாதர் சில நிமிடங்கள் திடுக்கிட்டு நின்றிருந்தார். சக்கடத்தானிடம் மிகுதி விடயங்களை விசாரித்துக் கொண்டு அவனிடம் சைக்கிளை வாங்கிக் கொண்டு பிரதான வீதியில் இறங்காமல் ஒழுங்கைகளைப் பிடித்துப் பெடலை வலித்தார். பிரதான வீதியில் இன்னும் இராணுவ வாகனங்களின் சத்தம் கேட்டபடியிருந்தது. எதற்கும் கடற்கரைப் பக்கமாகச் செல்வதே நல்லதென்று நினைத்தவர் கடற்கரை வீதிக்குச் சைக்கிளை விட்டார். ஒரு கர்ப்பிணிப் பெண்ணை உதைந்து கொல்லும் மிருகங்கள் தேவாலயப் பாதிரியான தன்னை எதுவும் செய்ய யோசிக்காது என்று அவருக்குத் தோன்றியிருக்கக் கூடும்.

கடற்பக்கம் மெல்ல மெல்ல இருட்டு கவிழ்ந்து கொண்டிருந்தது. ஜோசப் வாஸ் வீதியில் இறங்கி, கடற்கரையோரம் கிடுகு வேலிகளுக்கு அருகாக ஓடும் மண் பாதையில் சைக்கிளை வலித்தார். சக்கடத்தானின் கிறீஸ் காணாத சைக்கிள் க்ரீச்... க்ரீச்... என்று சத்தமெழுப்பிக் கொண்டிருந்தது. அந்தச் சத்தம் தன்னுடைய நெஞ்சுக்குள் இருந்து தான் வருகின்றதோ என்ற நினைப்பு வேறு அவருக்கு ஓடிக் கொண்டிருந்தது. வில்வரத்தினம்.

பாக்கியதேவி, டேவிட் இவர்களின் முகத்தை எப்படி எதிர் கொள்ளப் போகின்றோம் என்று நினைத்து, நினைத்து ஜேசுவின் முகத்தை ஞாபகத்தில் இருத்த முனைந்தார் ஃபாதர். ஆனால் "ஸ்தோத்திரம் பாதர்" என்று முகமெல்லாம் சிரிக்கும் மேரி அனுசியாவின் முகமே எழுந்து வந்தது. செபங்களைச் சொல்லும் அவளுடைய கணீர் குரல் உள்ளூர எழுந்தது. அருள் நிறைந்த மரியே வாழ்க! கர்த்தர் உம்முடனே. பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவர் நீரே. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசீர்வதிக்கப்பட்டவரே.

வில்வரத்தினத்தின் வீடு சனத்தினால் நிரம்பியிருந்தது. வெளியில் கிடுகு வேலிக்கு அருகாக ஒன்றிரண்டு இயக்க வாகனங்களும் நின்றிருந்தன. பெண்களின் அழுகை ஓலமும் ஒப்பாரி வார்த்தைகளும் நெஞ்சை உலுக்கிக் கொண்டிருந்தன. கூட்டமாக நின்றவர்கள், ஃபாதரைக் கண்டதும் கடலொன்று பிரிந்து வழி விடுவதைப் போல ஃபாதரின் பாதையை முற்றத்தை நோக்கி விரித்துச் சென்றனர். ஃபாதர் முற்றத்தில் போடப்பட்ட வாங்கில் வளர்த்தப்பட்டிருந்த மேரி அனுசியாவின் உடலின் முன்னால் போய் நின்றார். நான்கைந்து பேர் பெற்றோல் மாக்ஸ் விளக்குகளைத் தூக்கிப் பிடித்தபடி நின்றிருந்தனர். வில்வரத்தினம் அவளுடைய காலைப் பிடித்துக் கதறிக் கொண்டிருந்தான். "அம்மாச்சி... அம்மாச்சி" என்று விம்மலின் ஊடே அவனுடைய குரல் தேய்ந்து கொண்டிருந்தது. தலைமாட்டில், அனுசியாவின் கணவன் கரன் முகமெல்லாம் இறுகிப் போய் மனைவியின் முகத்தில் பார்வையை நிறுத்தியிருந்தான். அவளுடைய முகத்தில் சிதறியிருக்கும் பூக்களின் துகள்களை அவன் கைகள் அகற்றியபடியிருந்தன. இடது பக்கத்தில் அனுசியாவின் தாய் தலையை விரித்துக் கொண்டு தலையிலடித்து ஒப்பாரி சொல்லிக் கொண்டிருந்தாள். ஃபாதரைக் கண்டதும் "பாதர் பாருங்கோ... என்ர குஞ்சப் பாருங்கோ" என்று சொல்லி மீண்டும் தலையிலடிக்கத் தொடங்கினாள். அவளின் அருகில் தமக்கையின் இடுப்புப் பகுதிக்குச் சமீபமாக அமர்ந்திருந்தான் டேவிட். அனுசியாவின் இடுப்போடு ஒட்டியபடி சுற்றப்பட்டிருந்த ஒரு துணித் திண்மத்தை அவனுடைய கண்கள் சலனமற்றுப் பார்த்தபடியிருந்தன. ஏறக்குறைய அதற்கு மிக அருகில் அவனுடைய முகம் வாங்கில் நாடியை ஊன்றி நிறுத்தப்பட்டிருந்தது.

ஃபாதரின் காதில் வந்து யாரோ, "வயித்தில உதைஞ்சிருக்கிறான், எட்டு மாதப் பிள்ளை வெளியில வந்து செத்துப்போச்சுது" அடிவயிற்றிலிருந்து நெருப்புப் பரவி நெஞ்சுக்குள் எழுந்து வந்தது. ஃபாதர் டேவிட்டின் முகத்துக்கு அருகில் இருந்த அந்தச் சிறு திண்மத் துணியைப் பார்த்தார். உள்ளங்காலில் இருந்து ஒரு நடுக்கம் தோன்றி அவரைச் சாய்த்து விடும் பிரமையை உண்டு பண்ணியது. டேவிட்டின் முகத்தை அவரால் பார்க்கவே முடியவில்லை.

"தம்பிக்காரன் மட்டும் தான், தமக்கையோட நிண்டிருக்கிறான். தேப்பன், தாய், அத்தான்காறன் எல்லாரும் தமக்கையையும், இவனையும் வீட்டில விட்டிட்டு இந்தியனாமிக்காரர் ரவுண்டப்பில சாய்ச்சுக்கொண்டு போகேக்க போயிட்டுதுகள். பெடியன், சின்னப் பெடியன் எண்டு தமக்கையோட நிக்கச் சொல்லிட்டுப் போயிருக்கினம். பாவியள் வீடு வீடா செக் பண்ணிக் கொண்டு வந்தவங்கள் வீட்டுக்க உள்ளிட்டிருக்கிறாங்கள். தம்பிக்காறனைக் கட்டிலுக்கடியில பதுங்கச் சொல்லிப் போட்டாள் தமக்கை. எதோ விசாரிச்சுக் கதைவழிப்பட்டவங்கள் பெட்டையை உதைஞ்சிருக்கிறாங்கள். ஓவசியர் சின்னப்பு, ஃபாதருக்குச் சொல்லிக்கொண்டிருக்கும் போதே, ஃபாதர் டேவிட்டைப் பார்த்தார். அவன் தமக்கையின் சிசுவை விட்டுப் பார்வையை எடுக்கவில்லை. "அவங்கள் தமக்கையை உதைஞ்சதும் பெடியன் திடுக்கிட்டுப் போனான். காலமையில் இருந்து இப்பிடியே தான் இருக்கிறான். ஒரு சொட்டு அழக்கூட இல்லை". இருள் இன்னும் இறுகத் தொடங்கியது.

*2*

டேவிட் இயக்கத்திற்குப் போய் விட்டான் என்று வில்வரத்தினம் வந்து ஃபாதரிடம் முறையிட்ட போது பாதர் பிரதான சொரூபத்தின் கீழே இருந்த ஜோசப்வாசின் திருச்சொரூபம் இருந்த கண்ணாடிக் கூட்டைப் பார்த்தார். அங்கேயிருந்த டேவிட்டின் கெற்றப்போல் காணாமல் போயிருந்தது. முதல் முதலில் ஃபாதருக்கு டேவிட் அறிமுகமாகும் போது அந்தக் கெற்றப்போலும் கையுமாகத் தான் அறிமுகமானான். கிட்டத்தட்ட மூன்று வருடங்கள் இருக்கும். அப்போது டேவிட் ஒன்பதாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தான். சேர்ச் வளவினுள் நின்றிருந்த முள் முருங்கின் பூக்களில் தேன் குடித்துக் கொண்டிருந்த மெல்லியதும், நீண்டு வளைந்ததுமான சொண்டுகளைக் கொண்ட தேன் சிட்டுக்களில் ஒன்றினை மரமொன்றின் பின்னால் நின்று கெற்றப்போலின் விசையை நாண் ஏற்றிக் கொண்டு ஒற்றைக் கண்ணை மூடி இலக்குப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் பின்னால் நான்கைந்து கூட்டாளிமார் கைகளில் கூழாங்கற்களும், கெற்றப்போல்களுமாக நின்றிருந்தனர். ஃபாதர் அவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவன் கல்லை விடுவித்தான். கல் "விசுக்" என்ற சத்தத்துடன் காற்றைக் கிழித்துச் சென்றது. "க்விக்" என்ற மெல்லிய கீச்சிடுகையுடன் கருஞ்சிட்டு ஒன்று தலை குப்புற விழுந்தது. மறைந்திருந்த நால்வரும் ஓடிச் சென்று பார்த்தனர். அனைவரின் முகத்திலும் வெற்றிப் பிரகாசம். டேவிட் ஓடிப்போய் மண்ணில் விழுந்து துடித்துக் கொண்டிருந்த கருஞ் சிட்டை எடுத்தான். தன் கெற்றப்போலை அருகில் நின்றவனிடம் கொடுத்தான். பின்னர், சோர்ந்து அடங்கிக் கொண்டிருந்த கருஞ்சிட்டின் உடலைத் தலைகீழாகத் திருப்பி அதனுடைய கால்களை இரண்டு கைகளின் விரல்களாலும் ஒவ்வொன்றாகப் பிடித்து மெதுவாக இழுத்தான்.

எங்கோ பார்த்த பாரதக் கதைக் கூத்தில், பீமன், ஜரசந்தனின் உடலை இரண்டாகக் கிழிப்பதை ஃபாதர் நினைவு படுத்திக் கொண்டார். சிட்டின் உடல் இரண்டாகக் கிழிபட, கெற்றப்போலை வைத்திருந்தவன் சிட்டின் உடலின் கீழே கெற்றப்போலைப் பிடித்தான். வழிந்து ஒழுகிய இரத்தம் கெற்றப்போலில்பட்டது. பிறகு டேவிட் சிட்டுக் குருவியின் உடலைக் கெற்றப்போலில் தடவினான். அவனின் முறை முடிய ஏனையவர்களும் கெற்றப்போலில் சிட்டின் இரத்தத்தைத் தடவிக் கொண்டனர். ஃபாதர். அவர்களின் செய்கைகளைப் பார்த்தபடியே நின்றிருந்தார். பிறகு அவர்களை அழைத்தார்.

விபரம் விசாரித்த போது, தனது இரத்தம் தோய்ந்த கெற்றப்போலைக் காட்டிக்கொண்டே "பாதர் கருங்குருவியை அடிச்சு, கெற்றப்போலில் தடவினா நாணம் போகும், கெற்றப்போல் குறித் தவறாமல் அடிக்கும்" என்றான். அவனுடைய குரலில் இருந்த துடிப்பும், கண்களில் இருந்த ஒளியும் ஃபாதருக்குப் புதிதாக இருந்தது. "யார் உமக்குச் சொன்னது அப்பிடியெண்டு?" ஃபாதர் புன்னகையுடன் கேட்டார்.
"உண்மையாத் தான் ஃபாதர். கருஞ் சிட்டு ரத்தம் பூசினால் மணிப் புறாவைக் கூட அடிக்கலாம்"
"அதென்ன மணிப் புறாவைக் கூட அடிக்கலாம்? மணிப் புறாவை அடிக்கிறது கஸ்ரமோ?"
பாதர் ஒரு குழந்தையைப் போல மாறிக் கேட்டார்.
"ஃபாதர் மணிப் புறா, கெற்றப்போல் கல்லுப் போற சத்தத்தைக் கேட்டே பறந்திடும், அதுக்குக் காது சரியானை கூர்மை" என்றான் டேவிட். ஏதோ ஒரு பெரிய அதிசயத்தை விளக்குபவனுக்குரிய தொனி அவனிடம்.

ஃபாதர் டேவிட்டுடன் பழகத் தொடங்கிக் கொஞ்ச நாட்களில் ஜோசப்வாசின் கூட்டுக்குள் கெற்றப்போலைப் போட்டு விட்டான் டேவிட் இயல்பிலேயே அவனிடம் நெஞ்சம் நிறைய அன்பிருந்ததை, ஃபாதர் கண்டு கொண்டார். அவனுக்கு ஃபாதர் நிறையக் கதைகளைச் சொன்னார். அவன் கதை கேட்கும் போது, ஃபாதரை முந்திக் கொண்டு சம்பவங்களை ஊகித்துச் சொல்வான் அல்லது கதை முடிந்ததும் "பாதர் இந்தக் கதையை இப்பிடி மாத்தினால் என்ன?" என்று கேட்டு விட்டு இன்னொரு விதமாகச் சம்பவங்களைக் கோர்த்து ஏறக்குறைய புதுக் கதையொன்றை உருவாக்கி விடுவான். சேர்ச் நூலகத்தில் இருந்த புத்தகங்களை ஃபாதர் அவன் பொறுப்பிலேயே விட்டு விட்டார். ஒரு நாள் சொரூபம் முன்னர் முழந்தாளிட்டுச் செபித்து விட்டு ஃபாதரின் கையாலேயே தன்னுடைய கெற்றப்போலை சொரூபக் கூட்டினுள் போட்டு விட்டான். "பாதர், நான் உங்களைப் போலச் சபைக்குச் சேரப் போறன்" என்றான்.

ஆனால், அவன் திடீரென்று இயக்கத்திற்குச் சென்றது ஃபாதரையும் லேசாக உலுக்கியது. அத்தோடு அவன் சொரூபத்தின் முன் ஒப்புக் கொடுத்த கெற்றப்போலை திரும்ப எடுத்துச் சென்றிருந்தான்.

அன்று வில்வரத்தினம்; மூத்த பெட்டையும் போட்டாள், என்ர பெடியனும் இயக்கத்துக்குப் போனால், பிறகு நானும் மனிசியும் மட்டும் இருந்து என்ன பிரியோசனம் பாதர் என்று அழுதான். ஃபாதர் அவனைத் தேற்றி அனுப்பப் படாத பாடுபட்டார். தமக்கையின் நல்லடக்கச் சடங்குகள் முடிந்த பிறகு அவனை அழைத்துக் கதைத்துப் பார்த்தார். நடந்ததை அப்படியே சொன்னவன், அந்த மிலேச்சனின் கால் தமக்கையை உதைந்த போது அவள் வீறிட்டு விழுவது வரை சொன்னான். அதைக் கடக்கும் போது சட்டென்று விம்மலெடுத்து "ஃபாதர், அக்கான்ர பிள்ளை..." என்று ஒரு குழந்தையைப் போல் விம்மி வெடித்தான். அதை அவனால் சொல்ல முடியவில்லை. இரவில் நித்திரை வருவதில்லை என்று புலம்பினான். படிக்க முடியவில்லை ஃபாதர் என்று அழுதான். ஃபாதர் அவனைத் தேற்ற நாதியின்றி "கர்த்தரே... கர்த்தரே" என்று சொல்லிக் கொண்டார். அவன் அந்த மிலேச்சர்கள் மீது கோபமாக இருந்தான். ஃபாதரின் முன்னால் அவன் எப்போதும் தூசணம் பேசியதில்லை. ஆனால், அவர்களைப் பற்றிச் சொல்லும் போது தூசணங்களும், எரியும் வார்த்தைகளும் அவனுக்குள்ளிருந்து வந்தபடியிருந்தன.

அவன் கெற்றப்போலை எப்போது வந்து எடுத்துச் சென்றிருப்பான் என்று ஃபாதர் யோசித்தார்.

"மணிப் புறாவைக் கூட அடிக்கலாம்" அவனது ஒளி மிக்க முகம் அவர் முன் எழுந்தது. "அக்கான்ர பிள்ளை" ஒளி மங்கி, திரி கரி கொட்டி, இறுகிய மெழுகைப்போல் வாடி அணைந்தது அதே முகம்.

(தொடரும்)

**கடிதம் (படி எடுக்கப்பட்ட நகல்)**
**தாவீது**
**உளவுப்பிரிவு**
***02.03.2005***

அன்புள்ள அண்ணைக்கு,

வணக்கம் அண்ணை, நான் நலமாக இருக்கிறேன். என்னுடைய கதையைப் படித்து விட்டு எனக்கு நீங்கள் எழுதிய பாராட்டு மடல் என்னை மகிழ்ச்சியில் திக்குமுக்காட வைத்து விட்டது. இத்தனை பணிகளுக்கு மத்தியிலும் ஒரு போராளியின் கதையைப் படித்து விட்டு அவனைப் பாராட்டிக் கடிதமொன்றைத் தன் கைப்பட எழுதும் தலைவர் ஒருவரைப்

பெற்ற நாங்களும், எங்கள் மக்களும் பாக்கியசாலிகள் தான். நீங்கள் பாராட்டிய கதையின் மீதிப் பகுதியை எழுதி முடித்து, ஈழநாதம் பத்திரிகைக்கு அனுப்பியிருந்தேன். ஆனால், அவர்கள் என்னுடைய கதை தமிழீழப் போராட்டத்தின் நோக்கத்தை இழிவு படுத்துவதாக உள்ளதென்று, பிரசுரிக்க மறுத்து விட்டார்கள். நான் என்னுடைய கைப்பட எழுதிய கதையின் மிகுதிப் பகுதியை இத்துடன் இணைத்திருக்கிறேன். தங்களுடைய பார்வையில் என்னுடைய கதையை ஒப்புக் கொடுக்கிறேன். ஒரு போராளியாக, ஒரு எழுத்தாளனாக நான் என்னுடைய நேர்மையான பக்கத்தில் நிற்கின்றேன் என்றே நம்புகின்றேன். தங்களிடம் இருந்து இதற்கு ஒரு காத்திரமான பதில் வருமென்று நம்புகின்றேன்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.
அன்புள்ள தம்பி
டேவிட்.

*(பிரசுரிக்கப்படாத டயரிப் பக்கங்கள்)*

மணலாறு எல்லைப் பகுதியின் அடர் காட்டுக்குள், அப்போது தான் துப்பாக்கி உறுமல்கள் ஓய்ந்திருந்தன. பின்னேரம் பெய்த மழையில் காடே நனைந்து குளிர்ந்து போயிருந்தது. கரை புரண்டோடி இராணுவ எல்லைப்பக்கமுள்ள குளத்தில் விழும் வாய்க்காலின் அருகில் சற்று மேடான பற்றைப் பகுதியில், ஈரலித்து விறைத்த உடலை வெள்ளை பிரட்டும் ஒரு பாம்பைப் போல் நெளித்து ஊர்ந்து வந்தான். உள்ளாடைக்குள் சொருகிய குழைகளின் தடி ஒன்று குறி நுனியில் பட்டு, குறுகுறுப்பைத் தந்தது. கையை நகர்த்தி, அந்தத் தடியின் உராய்வைச் சரி செய்தான். தண்ணீரில் விறைத்துப் போன வலது கால் தொடையில் பட்ட சன்னத்தின் வலி இப்போது அறவே தெரியவில்லை. இரத்தப்போக்கு நின்றாலும், உள்ளே தங்கி விட்ட தோட்டாவை அகற்றும் போது இரத்தம் குபுகுபுவெனப் பாயப் போவதை அவன் அறிந்தேயிருந்தான். நல்ல வேளையாக எலும்பு எதுவும் முறிந்து போகவில்லை. வாய்க்காலைத் தாண்டினால் எழுந்து நடந்து மிதிவெடிகள் இல்லாத பக்கமாய் ஊர்ந்து... ஊர்ந்து போகலாம். தண்ணீரில் ஊறிய "வோக்கி" வேலை செய்தால் பரவாயில்லையென்றிருந்தது. அறிவித்தால், கண்டிப்பாக ஒரு "டீம்" காட்டுக்குள் இறங்கி, இவனை மீட்டுச் செல்லும் என்பதை நம்பினான். மரலையில் நடந்த சண்டையில் முன்னேறி வந்த ஆமியைத் திருப்பி நிலைகளுக்கே பெடியள் அனுப்பி விட்டாங்கள் என்ற நினைப்பு, கொஞ்சம் நிம்மதியாக இருந்தது. வாய்க்காலைக் கடந்து ஏதாவது ஒரு மரக்குற்றியில் ஏறிப் படுத்து விட வேண்டும். நிலத்தில் இருந்தால் இன்னும் விறைத்துச் செத்துப் போவேன் என்று அவனுக்குத்

தெரியும். ஒரு வேவுப்புலியாக மாறிய பின்னர், நாட்கணக்கில் தண்ணீரில் ஊறியிருக்கிறான். நன்கு பழக்கப்பட்ட உடலாயினும் பச்சைக்காயத்துடன், இரத்த இழப்புடன் ஈர மண்ணில் பற்றைக்குள் கிடக்க முடியாது. காலையில் இருள் நீங்கிய பிறகு தான் அடுத்து என்ன செய்யலாம் என்பதைப் பார்க்க வேண்டும். அதற்கு இரவைக் கழிக்க ஒரு மரக்குற்றியோ, கற்பாறையோ கண்டு பிடிக்க வேண்டும். அத்தோடு வாயைத் திறந்து கொண்டு, கெட்ட நாற்றத்துடன் நெளிந்து வரும் புடையனோ, விரியனோ கொத்திச் செத்துப் போவதை நாளைக்கு வீரச்சாவென்று அறிவிக்கும் போது அவனுடைய ஆத்மா தாழ்வுணரக் கூடும்.

இடது காலாலும், உடலாலும் உன்னி.... உன்னி நகர்ந்தான். இருட்டு ஒரு கரிய தூசுப் படலத்தைப் போலக் கண்களுக்குள் அடர்ந்து இறங்கியது. வாய்க்காலின் சலசலப்புச் சத்தத்தைப் பிடித்துக் கொண்டு முன்னேறினான். ஈரச் சருகுகளின் வாடை. தடிகளின் முட்களின் கூர்மை உடலைக் கீறி இரத்தக் கசிவை ஏற்படுத்தின. அவை கொடுக்கக் கூடிய எரிச்சலைத் தவிர்க்க, மழை நீரின் குளிர்ச்சி நன்கு உதவியது. வாய்க்கால் நெருங்கி வருவதைச் சலசலத்தல் உணர்த்தியது. வாய்க்கால் கண்களுக்குத் தெரிந்தது. கருமேகம் இறங்கி நின்றிருந்த அந்தக் கும்மிருட்டில் இவனுடைய கண்கள் வாய்க்காலின் நீர்மையை இனங்கண்டு கொண்டன. இருட்டில் ஓடும் நீர், மெல்லிய ஒளி இயல்பைக் கொண்டு இருப்பதைப் பலமுறை உணர்ந்திருக்கிறான். மெல்லத் தவழ்ந்து, வாய்க்காலின் சரிவில் உருண்டு இறங்கினான். பலமான தடியோ, கல்லோ உடலை இடறிச் சதையைப் பிய்த்து விடும் அபாயம் ஏற்படலாம். ஆனால், வேறு வழியில்லை. உடல் வழுக்கி, பக்கவாட்டில் இறங்கி நீருக்குள் அமிழ்ந்து வெளிப்பட்டது. வாய்க்கால் நீருக்கு, ஆளை அடித்துச் செல்லும் வேகமில்லாவிட்டாலும் மழை காரணமாக மிதமான வேகமிருந்தது. கைகளை உந்தி,உடலை மீனுக்குரிய இலாவகத்துக்கு மாற்றி நீந்தினான். மறு கரையில் முட்டி, தவழ்ந்து ஏறினான். ஏதோ ஒரு மரத்தின் வேரின் அடி மண்ணை வாய்க்கால் நீர் அரித்து, தனித்து விட்டிருந்தது. அதைப் பற்றி மேலேறினான். மெல்லத் தலையைத் தூக்கிப் பார்த்தான். எதிரே ஒரு சிறிய மரம் சரிந்து துவண்டு கிடப்பது போல் தோன்றியது. ஏறி, உடலை வளர்த்திக் கொள்ளக் கூடிய மரமாக இருக்க வேண்டுமென்று நேர்ந்து கொண்டே நகர்ந்தான். அந்த மரக் கட்டையை நெருங்கி, கையை மரக்கட்டையின் மேல் வைத்து ஊன்றினான்.

"அம்மே" மரக்கட்டை திடீரெனக் குரலெடுத்தது. ஒரு உடும்பைப் போலத் தெறித்தது. இவன் அதிர்ச்சியாகி, மீள முதல் இவனது கழுத்தை ஒரு கை பற்றியது. பலமான கை. சுதாகரித்துக் கொண்டவன் அந்தக் கையைத் தன் இரு கைகளாலும் பற்றி விடுவிக்க முயற்சி செய்தான். அந்தக் கையின் பிடி இறுகித் தொண்டை விக்கியது. சட்டென்று இவன் கையை மடக்கி

அடுக்கி, கழுத்தைப் பிடித்த கையின் புஜத்தில் ஒரு குத்து விட்டான். அந்த உருவத்திடம் முனகல்கள், பெருமூச்சுச் சத்தம் வெளிப்பட்டது. இவன் அந்த உருவத்தின் கழுத்தைப் பிடித்தான். இரண்டு உடல்களும் பின்னின. அந்த உடலில் இருந்து சூடான இரத்தம் இவன் உடலில் பட்டது. உடலை நிமிர்த்தி அந்த உருவத்தின் முகத்தில் "சத்" என்று ஒரு குத்து விட்டான். ஒரு முனகலுடன் கைகள் தளர்ந்து உடல் அடங்கிப் போனது. இவனது கண்கள் சோர்ந்து அடங்குவது போல் இருந்தது. அந்தக் குளிரில், சூடான அந்த உடலின் மீது அப்படியே இவன் படர்ந்தான். உணர்வு நெற்றிக்குள் சுருங்கி அடங்கி எதுவுமற்றுப் போனது.

*4*

காலையில் சூரிய வெளிச்சம் பரவி, காடு மெல்லச் சூட்டை உள் வாங்கத் தொடங்கும் போது, அவன் கண் திறந்தான். இடுப்பில் பட்ட சன்னம் நல்லவேளையாக அவனுடைய நன்கு மடிப்பு விட்ட தசையைக் குதறி விட்டுப் போனதால், இரத்தப் போக்கைத் தவிர அவனுக்குப் பெரிதாக ஒன்றுமாகவில்லை. ஆனால் இந்தக் காயத்துக்கா இரவு பிணத்தைப் போல அடி பட்டு வீழ்ந்து கிடந்தான் என்று நினைக்க இவனுக்குச் சிரிப்பு வந்தது. பார்க்க மிகவும் சிறிய வயது போலத் தோன்றியது. எப்படியும் ஒரு பத்தொன்பது அல்லது இருபது இருக்கும். பொக்கற்றில் பர்ஸைத் தேடினான். பர்ஸ் இல்லை. குண்டடி பட்டவுடன் பயத்தில் மயங்கியிருக்க வேண்டும். தன்னுடைய சீருடைத் துணியைக் கிழித்து, அவனுடைய இடுப்பை நன்கு கட்டி விட்டிருந்தான். அவனுடைய பெனியனைக் கழற்றிக் கைகளைப் பின்னால் கட்டியிருந்தான். கால்களையும் கட்டியிருந்தான். ஒரு ஆமிக்காரனின் இடுப்பில் வரிச் சீருடை சுற்றி ஓடியதை நண்பர்களிடம் சொல்லிச் சிரிக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டான். அவன் கண் விழிப்பதற்குள், வோக்கியில், எப்படியாவது ஒரு ஆமிக்காரனை உயிரோடு பிடித்து விட்டதை லைனுக்கு அறிவிக்க வேண்டும் என்று நினைத்தவன், வோக்கியைச் சுத்தம் செய்து பற்றிகளைக் கழற்றி வெயில் படும்படி ஒரு குற்றியில் அடுக்கியிருந்தான். அச்சிப்பாயின் துவக்கு, தொப்பி, சீருடை, பை எல்லாவற்றையும் சோதித்த பின்னர் மடுக்கி அடுக்கியிருந்தான். அவன் கண் விழிக்கும் போது சிப்பாயின் குடுவையில் இருந்த தண்ணீரைக் குடித்துக் கொண்டே அவனைப் பார்த்தான்.

கண்களைத் திறந்தவன், மிரட்சியாக இவனைப் பார்த்தான். இவனுக்குச் சுத்தமாகச் சிங்களம் வராது. மெல்ல மெல்ல பூஞ்சிப்பூஞ்சிக் கண்களைத் திறந்தவனுக்கு நேரே, பிஸ்ரலை உயர்த்தி, லோட் செய்து கொண்டே முறைத்தான். அவன், இவனை மிரட்சியுடன் பார்த்தான். இவன், வாயில் விரலை வைத்துச் சத்தம் போடக்கூடாது என்று மிரட்டினான். அவன் தலையை அசைத்தான். கண்களில் பயமும் சோர்வும் ஊறிக் கிடந்தன.

இவனுடைய குரலில் அதிகாரத்தொனியேறி,
"கோமத?" என்றான். அவன் தலையாட்டினான். ஒன்றுமில்லை என்று.
"வட் இஸ் யுவ நேம்?"
"லெப்டினண்ட் கோலியாத் பெர்னாண்டோ"
"ரெஜிமெண்ட் ?"
"53"
"டோண்ட் சவுண்ட்"
இவனுள்ளே சந்தோசம் பொங்கிக் கிடந்தது. காயப் போட்ட வோக்கியை எடுத்து, பற்றிகளைப் போட்டுக் கட்டையைத் திருப்பினான். லைட் எரிந்தது. ஆனால், கரகரப்புச் சத்தம் வரவில்லை. தட்டித்தட்டிப் பார்த்தான். வேலையில்லை. பிறகும் பற்றிகளைக் கழற்றிக் காய வைத்தான். பிறகு அவன் பக்கம் திரும்பி, தனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் கேள்விகளைக் கேட்கத் தொடங்கினான். இவன் ஏதோ கேட்க உன்ன; அவன்,

"எனக்குத் தமிழ் தெரியும்" என்றான். இவனுக்குத் திக்கென்று இருந்தது.
"எங்க படிச்சனி?"
"என்ர வைப் ஹாப் தமிழ், ஹாப் சிங்கள" என்றான். இவன் எப்படியென்று கேட்க, மனைவியின் அப்பா ஒரு தமிழ்ப் பொலீஸ்காரர் என்று சொன்னான். அவன் ஒரு கிறிஸ்தவன். அவன் பௌத்தனாக இல்லாதது இவனுக்கு ஏனோ பிடித்திருந்தது. காட்டிக் கொள்ளவில்லை. மனைவியின் மூலம் தமிழ் பழகியதாகச் சொன்னான். எட்டு வருடங்கள் காதலித்து, கடந்த இரண்டு வருடங்களுக்கு முதல் தான், திருமணம் செய்து கொண்டதாகச் சொன்னான். மனைவி இறந்து விட்டதையும் சொன்னான். அவள் இறந்த பின்னரே ஆமியில் சேர்ந்ததாகச் சொன்னான். அவனுக்கு எத்தனை வயது என்று விசாரித்தான்; இருபத்தி மூன்று என்று சொன்னான். அவன் இராணுவத்தில் சேர்ந்து இரண்டு வருடங்கள் என்று சொன்னான். இவனைப் பற்றி விசாரிக்கப் பார்த்தான்.

"வாயை மூடடா" என்று அதட்டினான். பெயரை மட்டும் சொல்ல இசைந்தான் தாவீது என்றவன் கொஞ்சம் இடைவெளி விட்டு, மேஜர் தாவீது என்றான். தான் வீரச்சாவென்றால் மேஜர் தருவாங்கள் என்று ஒருமுறை இசையரசனிடம் சொன்னதை ஞாபகப்படுத்திக் கொண்டான். இயக்கப் பெயரோ என்று அவன் கேட்டான். ஓம் என்றவன் ஆங்கிலத்தில் சொன்னால் சொந்தப் பெயரும் அதுதானே என்று நினைத்துக் கொண்டான்.

மதிய வேளை தூரத்தில் இரண்டு பக்கமும் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டன. ஆமி முன்னேறி வந்தாலோ, இயக்கம் முன்னேறி வந்தாலோ இருவருக்கும் அபாயம் இருந்தது. இரண்டு பக்கங்களிலிருந்தும் சீறி வரும் ஷெல்லுக்கும் துப்பாக்கிச் சன்னங்களுக்கும் உடலைக் கொடுக்க வேண்டியிருக்கும்.

இவனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.காலில் காயத்தோடு. இந்த ஆமிக்காரனை லைனுக்குள் கொண்டு போக முடியாது. அவனைச் சுட்டு விட்டு வேண்டுமானால் தப்பிச் செல்லலாம். ஆனால் உயிருடன் பிடித்த அந்த ஆமியைக் கொல்வதற்கு மனம் ஒப்பவில்லை. இருவருக்கும் சரியான பசி. உடல் உலர்ந்ததால், உடற்காயங்கள் வலியெடுக்கத் தொடங்கிவிட்டன. தொடையில் பாய்ந்த சன்னத்தைச் சோதித்துப் பார்த்தான். ஆபத்தில்லாத சதைப் பகுதிக்குள் புதைந்து போய் இரத்தம் உறைந்து கிடந்தது. துணியால் இறுக்கிக் கட்டிக் கொண்டான். தண்ணீரை எடுத்து, அவனுக்கும் புகட்டித் தானும் குடித்துக் கொண்டான். ஆனால், இரண்டு நாள் பசியை, அந்தத் தண்ணீர் சமாளிக்காது என்பது இவனுக்குத் தெரியும். இடுப்புக் காயத்தால் பெர்னாண்டஸுக்கு இரத்தம் நிறையப் போயிருந்தது. உடல் சோர்ந்து போய்க் கொண்டிருந்ததை அவனுடைய கண்களில் கண்டான். அவனுடைய பையைச் சோதித்ததில் உணவு எதுவும் தட்டுப்படவில்லை. வோக்கியை எடுத்து, பற்றியைப் போட்டுப் பார்த்தான். அதோடு நான்காவது முறை. கட்டையைத் திருப்பிப் பார்த்தான். லைட் மட்டும் எரிந்தது. கோபமாக மரக்குற்றியில் ஒரு தட்டுத் தட்டினான்.சட்டென்று இரைந்தது. உற்சாகமானவன், கட்டைகளில் நம்பர்களைச் சுழற்றி,அலைவரிசையைப் பிடித்தான்.

"ஓவர் ஓவர்"

தொடர்பு கிடைத்தது. தொடர்பில் வந்தவனிடம் ஆமி உயிரோடு பிடிக்கப்பட்டதைச் சங்கேத மொழியில் சொன்னான்.வாய்க்காலின் தெற்குப் பக்கமாக வரச் சொன்னான். அதற்கு மறுமுனை, இராணுவம் சரமாரியாகச் சினைப்பர் அடிப்பதாகவும், நள்ளிரவின் பின்னர் தான் டீமை அனுப்ப முடியுமென்றும், காத்திருக்கும் படியும் சொல்லியது.

இவனுக்கும் நிலைமை விளங்கியது. வானத்தை நிமிர்ந்து பார்த்தான். பின்னேர ஒளியில் மெல்லிய சிவப்பாகியிருந்தது. காடு மெல்ல மெல்ல இருட்டுவது தெரிந்தது. வோக்கியை அணைத்துவிட்டு, அவனிடம் போனான். அவன் பார்வைக்கு எதிரில் கண்களை நிறுத்தினான். தன்னை விட்டு விடும்படி அவன் கெஞ்சுவது போல இருந்தது. சட்டென அவன் இவனைக் கொல்ல வேண்டும் என்று நினைப்பது போல இருந்தது.

அவனிடம் பேச்சுக் கொடுக்க எண்ணி "எவடத்த காயப்பட்டாய்?" என்று கேட்டான். அவன் வாய்க்காலின் தெற்கு பக்கமாய்க் காட்டினான்.பிறகு எப்படி வாய்க்காலுக்குக் கிட்ட வந்தாய்? என்று கேட்டான். அதற்கு, வாய்க்காலில் விழுந்தால் மயங்கினாலும் குளத்தடிக்குக் கொண்டு போகும். அங்க எங்கட ஆக்கள் சென்றியில நின்று கண்டுபிடிப்பாங்கள்.

உங்கட உளவுக்காறர் வரக்கூடும் என்று வாய்காலடி சென்ரி போட்டு காவல் காக்கப்படுகின்றது என்று சொன்னான். அதற்கு இவன் "எங்களுக்கு என்ன விசரோ அதுக்கால வாறதுக்கு" என்று சிரித்தான். இருள் கௌவ, அவனுடைய கட்டுகளைச் சரி பார்த்து விட்டு, அவன் எதிரில் இருந்த குற்றியில் சாய்ந்து இருந்து கொண்டான். இடுப்பில் இருந்த பிஸ்ரலை ஒரு முறை சரி செய்தும் பார்த்துக் கொண்டான். கொஞ்ச நேரம் ஓடியது. இருவருக்கும் இடையில் மௌனம் இரவுடன் சேர்ந்து இறுக ஆரம்பிக்க வலது பக்கமாய்ப் பற்றைக்குள் ஏதோ சலசலப்பு. இவன் பொக்கற்றில் இருந்த டோர்ச்சை எடுத்து அடித்தான். இரண்டு மாபிள்கள் அந்தரத்தில் நிற்பதைப் போல ஒரு பிரமை. டோச் வெளிச்சம் பட்டவுடன் அந்த முயலின் கண்கள் இருட்டில் திடுக்கிட்டு மிதந்தன. இவன் சட்டென்று "முயல்" என்றான் இரைந்து. டோச்சை அப்படியே பெர்னாண்டஸின் பக்கம் கொண்டு போய் அவனுடைய வாய்க்குள் திணித்தான். "அப்படியே அசையாமல் பிடி" என்று கிசு கிசுத்தான். சட சடவெனக் காட்சிகள் நடந்தன. முயலின் திடுக்கிட்ட விழிகள் சுதாகரிக்க முன்னர், இவனுடைய கை, சீருடையின் கீழ் பைக்குள் போய், கெற்றப்போலையும் கல்லையும் எடுத்தது. கைகள் வேகமாக இயங்கி நாணேற்றின. முயலின் கண்களைப் போல, லேசான டோச் வெளிச்சத்தில் ஒரு முறை இவனின் கண்கள் ஒளியுடன் மினுமினுத்ததைப் பெர்னாண்டஸ் கண்டான். கல் இரவைக் கிழித்துக் கொண்டு விசுக்கென்று போனது. "கீச்ச்... கீச்ச்" என்று இரண்டடி பாய்ந்த முயல் சுருண்டு வீழ்ந்தது. இருட்டில் டோர்ச் வெளிச்சத்தில் மினுங்கிய கண்கள் மகிழ்ச்சியிலும் வெற்றியிலும் பார்வையில் செருக்கைக் காட்டின. டோர்ச்சை அவன் வாயிலிருந்து பிடிங்கியவன், முயலை நெருங்கினான். தோளில் டோர்ச்சைப் பதித்துத் தலையைச் சாய்த்து, அதைப் பிடித்துக்கொண்டு, பெல்டில் இருந்த சிறு கத்தியை விரித்து முயலின் தோலைக் கிழித்து உருட்டி... உருட்டி உரிக்கத் தொடங்கினான். கிட்டத்தட்ட பதினைந்து நிமிடங்களில் தோலை அகற்றி விட்டு இரு கைகளிலும் இறைச்சியை ஏந்திக்கொண்டு, டோர்ச்சைக் கழுத்தில் வைத்துக்கொண்டு, பெர்னாண்டஸின் அருகில் வந்து அமர்ந்தான். கைகளில் முயலின் இறைச்சி. அதன் உடற்சூடு இறங்காமல் கொழகொழத்தது.

"நெருப்பு மூட்ட ஏலாது, பச்சை இறைச்சி தான் தின்னோணும்" இவன் சொல்லிக் கொண்டே இறைச்சி மீது டோர்ச் வெளிச்சம் படச் செய்தான். இவனது கைகளில் இருந்த இறைச்சி மீது, கோலியாத் பெர்னாண்டஸின் கண்கள் பதிந்தன. சட்டென்று அவன் முகம் சுற்றி இருந்த இருட்டை விடவும் அதிகச் செறிவாய் இருண்டு மாறியது. உடல் ஒரு வித நடுக்கத்தைக் கொண்டது. வாய் கோணிக்கொள்ள, பயத்தில் கண்கள் சொருக, ஒரு கை இழுத்துக்கொண்டு உடல் வலிக்கத் தொடங்கியது. கட்டியிருந்த கால்கள் அந்தரத்தில் எழுந்து இவன் கையில் இருந்த இறைச்சியைத் தட்டி விட்டன.

உடல் அவனுக்குப் பயங்கரமாக வலித்தது. இவன் திகைத்து போய், சட்டென்று யோசிக்காமல் பிஸ்ரலை உருவி, பின்னால் கட்டப்பட்ட அவனுடைய கையில் வைத்தான். பிஸ்ரலைப் பிடித்துக்கொள்ள மெல்ல... மெல்ல அவன் உடல் விதிர் விதிர்ப்பு அடங்கத் தொடங்கியது. டோர்ச் பக்கத்தில் விழுந்து கிடந்து இருவரையும் ஒளிக்குள் இருத்தியது. இவன் பிஸ்ரலை எடுத்து இடுப்பில் சொருகிக் கொண்டு அவனை நிமிர்த்தி உட்கார வைத்தான். அவனுடல் பயங்கரச் சூடாக இருந்தது. கைகளையும், கால்களையும் தேய்த்து விட்டான். தண்ணீர் புகட்டினான். அவன் இரைத்த மூச்சை, மெல்ல ஆசுவாசமாக்கினான்.

"தயவு செய்து அந்த இறைச்சியைத் தூரமாய் எறிந்துவிடு தாவீது" என்றான் கெஞ்சலாக.

"உனக்கு இறைச்சியெண்டா அலர்ஜியோ?" என்றான். அதற்கு அவன், பதில் ஏதும் சொல்லாமல், கொஞ்ச நேரம் டோர்ச் வெளிச்சத்தை வெறித்தான். பிறகு, "என்ர மனிசி சாகேக்க பிரசவ வார்ட்டில் நானும் கூட இருந்தன். எட்டுமாசத்திலை வலி வந்தது. என்ர கண்ணுக்கு முன்னாலை என்ர குழந்தை பிறந்தது. குறைமாசத்தில அப்பிடியே அவளும் மெல்ல அடங்கிப் போனாள். குழந்தையும் இறந்து பிறந்தது"

கொஞ்சம் இடைவெளி விட்டான்.

"அதுக்கும் இதுக்குமென்ன சம்பந்தம்?" இவன் கேட்டான்.

"நீ அந்த முயலை கையில வச்சிருக்கேக்க, எனக்கு என்ர குழந்தை தான் ஞாபகம் வருகுது. குறைமாதத்தில பிறந்த என்ர குழந்தை. ரத்தமும் வீணியுமாய், திரவமாய் ஒழுக ஒழுக அச்சு அசலா நீ உரிச்சுக்கொண்டு வந்த முயலைப் போல..."

பெர்னாண்டஸ் வார்த்தைகள் குழறின. இவனுக்குக் கைகளில் ஒட்டியிருந்த முயலின் ஈரம் சட்டென்று பற்றியெரியத் தொடங்கியது. தலை கிறுகிறுத்தது. ஒரு பெரிய சப்பாத்துக் கால் நெற்றிக்கு நேரே எழுந்து வந்து மறைந்தது. "அம்மா...!" அக்காவின் குரல் எழுந்து பாதியில் அடங்கியது. பாவாடை இரத்தமாக அக்கா கட்டிலில் மோதிக் கீழே சரிய, தொடைகளில் நழுவி வரும் சிவந்த திண்மம்.உடல் ஒரு முறை தூக்கிப் போட்டது இவனுக்கு. தொண்டை வெடித்து விடும் அளவிற்கு நெஞ்சுக்குள் இருந்து ஏதோ வந்து மோதியது. சட்டென எழுந்தவன், பெர்னாண்டசின் கை, கால் கட்டுகளை மூர்க்கமாக அறுத்தெறிந்தான். அவன் எதிர்பார்க்கா வண்ணம், அவனை ஏறக்குறையத் தூக்கி, வாய்க்காலுக்குள் தள்ளி விட்டான். சற்றும் எதிர்பாராதவாறு வாய்க்கால் நீரில் வீழ்த்தப்பட்டான். முதல் முறை நீரில் அமிழ்ந்து எழுந்தான். நீர் அவனை உருட்டிச் சென்றது. இரண்டாம் முறை சுதாகரித்து நீரின் மேல் மட்டத்திற்கு மிதந்து வந்தான். உடலை வாய்க்கால் நீர் மிதத்திச் செல்ல சற்றுத் தூரத்தில் கரையில், டோர்ச் லைட் வெளிச்சத்தில்

தலையைப் பிடித்துக் கொண்டு, அரைவட்டமாகச் சுற்றி விழும் தாவீதைக் கோலியாத் பெர்னாண்டஸ் இறுதியாக ஒருமுறை கண்டான்.

### உப கதா - 02

இவள் பரபரவென முதலில் எடுத்துப்பார்த்த தலைவரின் கடிதத்தை மீண்டும் கையில் எடுத்து மையூறிக் கலைந்து கிடந்த எழுத்துகளை எப்படியாவது ஆராய்ந்து முடிக்க முயற்சியில் இறங்கினாள். இரண்டு பெரிய பந்திகளில் அவளால் இவ்வளவு சொற்களையும் தான்.

*அன்புள்ள*
*சிங்கள மக்கள்*
*பிறப்பு*
*கண்ணீர்*
*பலவீனம்*
*போராட்டம்*
*படைப்பு*
*மனிதர்கள்.*
*புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.*

○

# லெப்ரினன்ட் கேணல் இயற்கை

சிவலைக்கண்டு காணாமல் போனதை லேசா எடுத்துக்கொள்ளேலாது. காலையில் பட்டியை விட்டு மாடுகளை விரட்டி ரோட்டுக்கு இறக்கும் போதே ஆச்சி சிவலைக்கண்டு நேற்றும் வாய்க்காலைத்தாண்டி வயலுக்குள் இறங்கினதை ஞாபகப்படுத்தினவா. மேற்கால வானம் செக்க சிவந்து போயிருந்தது. மிச்ச மாடுகளைப்பட்டியில் அடைத்துவிட்டுக் கிழவியிடம் சொல்லிவிட்டு வந்துதான் கன்றைத்தேட வேணும். கிழவி தூசணத்தாலை திட்டத்தான் போகுது. எண்டாலும் வேற வழியில்லை. இண்டைக்கு வெள்ளிக்கிழமை எண்டுறதால பின்னேரம் வைரவர் மடைக்கு கிழவி போயிருக்கும். அந்த ஒரு விசயம் மட்டும் கொஞ்சம் ஆறுதலா இருந்தது.

மாடுகளை வேகமாக் கலைச்சு வயற்கரைப் பட்டியில் அடைத்தேன். கிழக்காலை ஒடுற ஐஞ்சாம் வாய்க்கால் பக்கமா நடந்து ஊருக்க வந்தேன். மைதானத்துக்குப் பக்கத்தில நாலஞ்சு சின்னப்பெடியள் கிட்டிப்புள் விளையாடினார்கள். இண்டைக்குத்தானே வைரவர் மடையெண்டு ஆச்சிக்கிழவி சொன்னது. பெடி பெட்டையெல்லாம் மைதானத்தில நிக்கிறது அதிசயமா இருந்தது.

"டேய் மடைக்குப் போகேல்லையோ?" பெடி பெட்டையளைக் கேட்டன்.

"ஆறுமணியாகும் அண்ணை"

"ஆச்சீன்ர சிவலக்கண்டு இந்தபக்கம் போனதோ?"

"கோழிக்கால் குறியோ?"

"ஓம் ஓம் .... கண்டனியோ?"

"இண்டைக்கு துலஞ்சியள், பேஸ்க்க பூக்கண்ட மேஞ்சுதெண்டு பிடிச்சு கட்டி வைச்சிருக்கினம்"

எனக்குச் சுளீர் எண்டு இருந்தது. சோலி முடிஞ்சுது. கிழவிட்ட நான் துலைஞ்சன்.

ஊருக்கு நடுவிலிருந்த மாலதி படையணி பெட்டையளின்ர பேஸ் அது. அறுபது எழுபது பெட்டையள் தங்கியிருந்தவை. பேஸ் இருந்தது மாஞ்சோலைக் காணி. பெரிய தொலைத்தொடர்பு கோபுரம் பேஸ்க்கு நடுவில இருந்தது. ஊரில எங்க நிண்டு பாத்தாலும் மரங்களுக்கு இடையில கோபுரம் தெரியும். நாங்கள் அதை வோக்கி பேஸ் எண்டு சொல்லுவம். அந்த பேஸுக்கு வடக்குப் பக்கம் எங்கட பள்ளிக்கூடத்தின்ர மைதானம் இருந்தது. மைதானத்தின்ர தெற்குப்பக்கம் பள்ளிக்கூடம். மைதானத்தில நிண்டு விளையாடேக்க பேஸில வோக்கி இரையிற சத்தம், வோக்கில கதைக்கிற சத்தம் கேக்கும். முல்லைத்தீவுக்கே அதுதான் தொலைத்தொடர்பு மையம் எண்டு ஏ.எல். படிக்கிற அண்ணை சொன்னவர். ஆச்சிக்கும் அந்த பேசில இருக்கிற பெட்டையளுக்கும் ஆகாது. கொஞ்ச நாளைக்கு முதல் ஆச்சின்ர வளவுக்க இயக்கப்பெட்டையள் நாலைஞ்சு பேர் களவா மாங்காய் ஆஞ்சு இருக்கினம். கணக்கா அந்த நேரம் ஆச்சியும் போக, ஜி.பி.ஸ் சிக்னல் பாக்கிறம் எண்டு வோக்கியைத் தூக்கிக்காட்டி கதை விட்டிருக்கினம். ஆச்சிக்குப் பத்திட்டுது. "எடி குமரியள் வோக்கியை காட்டி எனக்குப் பொய் சொல்லுறியளோடி? நான் என்ன மொக்கு கிழவி எண்டு நினைச்சியளோடி? ஆஞ்ச மாங்காயெல்லாம் வச்சிட்டு ஓடுங்கோடி" எண்டு ஆச்சி ரண்டு தூசணத்தாலையும் பேசி இருக்கு. பெட்டையள் பயந்து போய், சைக்கிளை எடுத்துக்கொண்டு ஓடிட்டினம். அண்டேல இருந்து ஆச்சிக்கும் இயக்கப்பெட்டையளுக்கும் சண்டைதான். ஆச்சிக்கு வைரவர் கோயில்ல கலை வாறது, குறி சொல்லுறதெல்லாம் பொய் எண்டு வான்மதி அக்கா ஆருக்கோ சொன்னவா எண்டு கேள்விப்பட்டு பேஸ் வாசலில போய் நிண்டு சண்டைபிடிச்சிசுது கிழவி. அதுக்குப்பிறகு கிழவியோடை அடிக்கடி வம்பிழுக்கிறதுதான் அங்கை இருக்கிற இயக்கப் பெட்டையளுக்குப் பொழுதுபோக்கு.

அண்டைக்கு வெள்ளிக்கிழமை கோயில்ல சரியான சனம். கோயிலைச் சுத்தித்தீபமும், தீப்பந்தமும் ஏத்தி வச்சிருந்தவை. ஆச்சிக்கு முன்னால பெரிய திப்பந்தம் நட்டு இருந்தது. ஆச்சி புதுச் சாறி கட்டி நெத்தி நிறைய திருநீறு, சந்தனம், குங்குமம் எல்லாம் வைச்சு இருந்தா. அவான்ர கையில இரண்டு பெரிய வேப்பம் குழைக் கட்டு இருந்தது. ஆச்சிக்கு பக்கத்தில நிறைய வேப்பம் கொப்புகளை உடைச்சு போட்டுப் பொம்பிளையள் கட்டிக்கொண்டு நிண்டிச்சினம். ஆச்சிக்கு முன்னால இருந்த தட்டில தேசிக்காய் நிறைய குவிச்சு இருந்தினம். நெருப்பின்ர மஞ்சள் ஒளி மஞ்சள் தேசிக்காயள்ள பட, தங்க உருண்டைகள் போல பள பளவெண்டு இருந்தன. கோயில் முழுக்கத் திருநீற்று மணமும் சந்தன மணமும் பரவி இருந்தது. அண்டைக்கு பெரிய மடை. ஆச்சி தன்ர கையால வைரவருக்கு மடை பரவிப் பூசை முடிச்சிட்டு வந்து தான் குறி சொல்லுற இடத்தில இருந்தா. ஆச்சிக்கு கலை வந்துது. தலையை மெல்லமாய் தொடங்கி

வேகமாச் சுத்தினா. ஆச்சின்ர தலை பஞ்சு மாதிரி நரைச்சாலும் கொஞ்சம் கூட கொட்டுணாத தலைமயிர் சுழண்டு ஆச்சின்ர தலையோட சேர்ந்து சுத்தியது. பூனைக்குட்டியின்ர முனகல் போல தொடங்கின ஆச்சின்ர கலை. பெரிசா சத்தம் போட்டு உச்சத்துக்குப் போனது. நாலஞ்சு தேசிக்காய்களை வெட்டித்தரச்சொல்ல, ஆச்சிக்கு பக்கத்தில பக்தியோட வேட்டியும் வெறும் மேலுமா நிண்ட விதானையார் தேசிக்காய் வெட்டிக் குடுக்க நாக்கில் தேய்த்து விட்டு எறிஞ்சா. கலை அடங்கி ஆச்சி கண்ணை இறுக்கி மூடியிருந்தா. தலையும் உடம்பும் லேசான அதிர்வோட இருந்தன. விதானையார் குறி கேக்க வரச்சொன்னார். ஆச்சிக்குக் கொஞ்சம் தள்ளி வச்சிருந்த வாளிக்க தண்ணி அள்ளி, காலைக் கழுவிட்டு ஆச்சிக்கு முன்னால பக்தியோட வந்து குறி கேட்டிச்சினம். நான் ஆச்சின்ர வலப்பக்கமா தள்ளியிருந்து ஆச்சின்ர திருநீற்றுத் தட்டில எரியிற கற்பூரம் நூந்து போகாமல் இருக்க கற்பூரப் பெட்டியொண்டை உடைச்சு போட்டுக்கொண்டு இருந்தன். பன்னீர்ச் செம்புக்க வேப்பம் இலையை முக்கி எடுத்து ஆச்சி குறிகேக்க இருக்கிறவேன்ர முகத்தில அடிக்கும் போது சில துளிகள் என்னுடைய முகத்திலும் அடித்துச் சில்லிட்டது. நெருப்பு வெளிச்சத்தில ஆச்சின்ர முகத்தப் பாக்க எனக்கு பயமா இருக்கும்.

நாலஞ்சு இயக்க பெட்டையள் சைக்கிள்ள வந்து இறங்கிச்சினம். செருப்பக் கழட்டிப்போட்டு, கோயிலுக்க போய் கும்பிட்டிச்சினம். குறி சொல்லுற இடத்துக்கு வந்து கொஞ்ச நேரம் ஆச்சி குறி சொல்லுறத அமைதியாப் பாத்துக்கொண்டு நிண்டவை. ஒரு இயக்கப் பெட்டை ஆச்சிக்கு முன்னால பயபக்தியோட போய் இருந்தா. ஆச்சி தண்ணில தோய்ச்சு வேப்பிலையால இயக்கப்பெட்டையின்ர முகத்தில அடிச்சிட்டு தலைக்கு மேல திருநீற்றை எறிஞ்சு போட்டு அவளின்ர நெத்தில ஒரு குறியைப்போட்டா. ஆச்சிக்கு பக்கத்தில இருந்த விதானையார் "அம்மாட்ட என்ன கேக்க போற பிள்ளை?" அவள் பக்தியோட குனிஞ்சு "ஆச்சி தமிழீழம் எப்ப கிடைக்கும்?" என்றாள் பௌவ்வியமாக. உடனே ஆச்சி கத்தி, விபூதித் தட்டை தூக்கி எறிஞ்சிட்டு மயங்கிப் போனா. ஊரே அந்த பெட்டையளைப் பேசத்தொடங்கீட்டுது. சனம் குழம்புறதைப் பார்த்தவை, சைக்கிளை எடுத்துக்கொண்டு வேகமா இருட்டுக்க கரைஞ்சு போட்டினம். அடுத்தநாள் ஆச்சியை பேஸுக்கு கூப்பிட்டா பேஸுக்கு பொறுப்பா இருந்த தாமரை அக்கா. ஆச்சி என்னையும் கூட்டிக்கொண்டு போனா. அங்க ஊராக்களும் விதானையாரும், கோயிலுக்கு வந்த இயக்கப் பெட்டையள் தலையை குனிஞ்ச படியும் நிண்டவை. அவைக்குத் தாமரையக்கா கண்டபாட்டுக்குப் பேசிக்கொண்டிருந்தவா. "சனங்களின்ர நம்பிக்கையளை இப்பிடி பகிடி பண்ணவோ நாங்கள் போராட வந்தனாங்கள், மேலிடத்துக்கு அறிக்கை அனுப்பப் போறன், உங்களுக்கு பணிஸ்மண்ட் மட்டும் காணாது" ஆச்சியும் நானும் அங்கே போகும் போது அவா பேசிக்கொண்டு இருந்தது காதில

விழுந்துது. "அம்மா எங்கட பிள்ளையள் செஞ்சதுக்கு மன்னிப்பு கேக்கிறம், ஆக்களுக்கு பணிஸ்மெண்ட் குடுத்திட்டன், உங்களிட்ட மன்னிப்பும் கேப்பினம்" எண்டு சொன்னாள். ஆச்சி சன்னதம் ஆடுவாள் எண்டுதான் நான் நினைச்சன் ஆனா ஆச்சி "வைரவரரோட விளையாடக்கூடாது பிள்ளையள்" எண்டு மிக நிதானமாகச் சொன்னார்.

பேஸ்ல பூக்கண்டை மேஞ்ச சிவலைக்கண்டு ஆச்சின்ர கண்டு எண்டு தெரிஞ்சா, இதுதான் சாக்கெண்டு கண்டைத்தராம ஏதாவது சொல்லுவினம் எண்டு எனக்குப் பயமா இருந்தது. நான் ஆச்சின்ர பேரப்பெடியன் எண்டு எல்லாருக்கும் தெரியும். வேற வழியில்லை போய்த்தான் ஆகோணும். பேஸ் வாசல் திறந்து கிடந்தது. ஆரையும் காணேல்ல. உள்ளுக்கு நிக்கினமோ தெரியாது. கூப்பிட்டன். பதிலில்லை. திரும்பவும் கூப்பிட்டன். பதில் இல்லை. இருட்டத் தொடங்கிட்டுது. ஆச்சி மடை முடிய வீட்ட வந்திடுவா. மடை வைக்கிற நாளில குறி சொல்லுறதும் இல்லை. கத்திக் கூப்பிட்டேன். பதிலில்லை. மெல்ல, சிவலைக்கண்டு கட்டியிருந்த மாமரத்துக்குப் பக்கத்தில போனன். சிவலை என்னை அடையாளம் கண்டவனாய் தலை உலுப்பி மணிகளையும் சங்கையும் கிலுக்கியபடி என்னை நெருங்கி வந்தான். அவனுடைய கயிற்றை கழுத்தில் இருந்து கழற்றி அவனை வெளியே துரத்தினேன். மாவில் கட்டியிருந்த கயிற்றை அப்படியே விட்டேன். சிவலை கயிற்றைக் கழற்றி கொண்டு போய் விட்டது என்று நினைத்துக்கொள்வார்கள். மெல்ல நழுவி வெளியே வந்தேன். சிவலை காத்திருந்தான். அவனை ரண்டு திட்டுத் திட்டிவிட்டு வேகமாகப் பட்டியை நோக்கிக் கலைத்தேன். சிவலையைப் பட்டியில் அடைத்த பின்னர்தான் நிம்மதியாக இருந்தது. கைகால்களை அலம்பி, சேட்டை மாற்றிக் கொண்டு மடைக்குப் புறப்பட்டேன்.

வைரவர் கோயில் ஜெனரெற்றர் சத்தம் கேட்டது. நான்கைந்து டியூப்லைட் கட்டி இருந்தவை. வெளியில இருந்த தகரக் கொட்டகைக்குள்ள ஊர் சனம் கூடி நிண்டுது. அங்கால கொஞ்சம் தள்ளி கொஞ்ச 'த' நம்பர் மோட்டச் சைக்கிள்களும் சைக்கிள்களும் நிண்டன. மோட்டச் சைக்கிள்களையும் சைக்கிளையும் எனக்கு நல்லாத் தெரியும். இயக்கப் பெட்டையளின்ர தான். ஊர்ச் சனத்துக்க புகுந்து அங்க என்ன நடக்கெண்டு பாக்கப் போனன். நாலு பிளாஸ்ரிக் கதிரையில விதானையார், ஆச்சி, பள்ளிக்கூட அதிபர், தாமரை அக்கா எல்லாரும் இருந்தினம். ஊர்ப் பொம்பிளையளும், பெடி பெட்டையளும் முன்னால விரிச்சிருந்த தறப்பாளில இருந்தினம். ஆம்பிளையள் சுத்தி நிண்டினம். கூட்டம் நடக்குதெண்டு எனக்கு விளங்கிச்சு. கூட்டத்தை விலக்கி முன்னாலை போய் நிண்டன். அதிபர் எழும்பிப் பேசத்தொடங்கினார். வழமை போல தன்ர தொப்பைக்கு கீழ வழுக்கிய பெல்ட்டை பிடிச்சு மேல இழுத்து விட்டுட்டுக் கதைக்கத்தொடங்கினார்.

"உங்கள் எல்லாரோடையும் கதைச்ச பிறகுதான் இண்டைக்கு நான் கோயில்ல இந்தக் கூட்டத்தை கூட்ட முடிவெடுத்தனான். பொறுப்பாளார் தாமரை என்ர பிள்ளை மாதிரி அவாவும் மேலிடமும் எங்கட கோரிக்கையை ஏற்றுக்கொள்ளுவினம் எண்டு நம்புறன். உங்கள் எல்லாருக்கும் தெரியும் இப்ப கிபீரடி கூடிட்டு போன மாசம் செஞ்சோலையில கிபிர் அடிச்சு எங்கட பிள்ளையள் 60 பேர் படுகொலை செய்யப்பட்டது உங்கள் எல்லாருக்கும் தெரியும். அதில இரண்டு பிள்ளையள் எங்கட பக்கத்து ஊரில இருக்கிற பள்ளிகூடப் பிள்ளையள் எண்டும் உங்களுக்கு தெரியும். துயரச் சம்பவத்துக்கு பிறகு பள்ளிக்கூடப் பிள்ளையளுக்கும் பாதுகாப்பு இல்லை எண்டு விளங்கீட்டு. பள்ளிகூடங்களுக்கு மேல 'ஒலிம்பிக் டோச்' படத்தைக் கீறச்சொல்லி வலயக்கல்வி அலுவலகம் அறிவிச்சிருக்கு. ஆனா அதெல்லாம் நம்பேலாது. கிபீர் எப்பவும் அடிக்கலாம். நாலஞ்சு நாளுக்கு முதல் கொஞ்சப் பெற்றோர் என்னொட வந்து கதைச்சவ. பிள்ளையள பள்ளிக்கூடம் அனுப்பப் பயமா இருக்கெண்டு சொன்னவை. பள்ளிக்கூடத்துக்கு பக்கத்தில பெரிய அன்ரனாவோட பேஸ் இருக்கிறதெண்டு அவை பயப்படினம். அவேன்ர பயமும் நியாயமானதெண்டுதான் எனக்குப் பட்டது. அதால இந்த பேஸை எடுக்கவோ மாத்தவோ சொல்லி கேக்கத்தான் நானும் விதானையாரும் இந்த கூட்டத்தை இப்ப கூட்டினனாங்கள்".

அதிபர்விசயத்தைச்சொல்லீட்டு இருக்கவிதானையாரும்தாமரைஅக்காட்ட பேஸை எடுக்கச் சொல்லிக் கேட்டார். தாமரை அக்கா எல்லாத்தையும் கேட்டிட்டு "நீங்கள் சொல்லுறது, பயப்படுறதும் எனக்கு விளங்குது. இந்த ஊரில பேஸ் இருக்கிறது முக்கியமானது. அந்த அன்ரனாவையும் அகற்ற ஏலாது. ஆனா பேஸை வேற இடத்துக்கு மாத்திறதுக்கு வேணும் எண்டா நான் மேலிடத்தில கதைச்சுப்பாக்கிறன். ஆனா டவர் ரேஞ்ச் கிடைக்கிற இடமா இருக்கோணும் மேலிடம் அனுமதிச்சா மட்டும் தான் நான் இதைச் செய்யலாம்" என்றார். சனம் சலசலத்தது. "நீங்கள் மாத்த முதல் கிபிரடிச்சு எங்கட பிள்ளையளுக்கு ஒண்டு நடந்தா என்ன செய்யிறது? மேலிடம் எப்ப முடிவு சொல்லும்?" குழப்பம் தொடங்கியது. அப்போது ஆச்சி சட்டென்று எழுந்தாள். "நிப்பாட்டுங்கோடா எல்லாரும்" ஆச்சி கத்தினாள். எல்லாரும் ஆச்சியின் குரலினால் உறைந்து போய் நின்றார்கள்.

"என்னடா கதைக்கிறியள் எல்லாரும், எங்கட பிள்ளையள் எங்கட பிள்ளையள் எண்டு சொல்லுறியள், அப்ப இதுகள் ஆற்ற பிள்ளையள்?" ஒரு பக்கமாய் கையைக்கட்டிக்கொண்டு நின்றிருந்த இயக்கப்பெட்டையளைக் காட்டி கேட்டாள். "இதுகளும் எங்கட பிள்ளையள்தானடா. அதுகள் கிபீரடிச்சு செத்தா உங்களுக்குப் பிரச்சினை இல்லை. உங்களுக்கு உங்கட

சாமான் பத்திரமாக் கிடந்தச் சரிதானே, எளிய நாயளே, வாழ வேண்டிய வயசில அதுகள் ஏன் தேப்பன் தாயை விட்டிட்டுவந்து துவக்கோட கிடக்குதுகள்?" ஆச்சி ஆவேசமானாள்.

கலை வந்தால் ஆச்சி எப்படி மூர்க்கமாய் உறுமுவாவோ அப்பிடி ஒரு காட்சியைதான் கண்டன். சிலபேர் ஆச்சியோட சண்டைக்கு வந்தினம். பேஸை மாத்தத்தான் வேணும் எண்டு சொன்னார்கள். தாமரை அக்கா "இந்த ஊர்தான் 'டவர்' ரேஞ்சுக்க வருகுது கட்டாயம் ஊருக்க தான் பேஸ் இருக்கோணும்" எண்டு சொன்னா. "என்ர வீட்டத் தாறன் என்ர பிள்ளையளுக்கு. என்ர வீட்டச் சுத்தி வெட்டையும் பத்தைக் காணியும் தான் கிடக்கு என்ர நல்ல பெரியவீடு என்னோட வந்திருங்கோடி குமரியள்" எண்டு ஆச்சி சொன்னார். என்ர அம்மா, "எணை உனக்கென்ன விசரோ" எண்டு ஆச்சிக்குச் சொல்ல வெளிக்கிட்டா. அண்டைக்கு இயக்கப்பெட்டையள் மோட்டச்சைக்கிள்ள ஏத்திகொண்டு வந்து வீட்டில இறக்கிச்சினம். ஏத்திக்கொண்டுவந்தது வேற ஆரும் இல்லை, ஆச்சிட்ட தமிழீழம் எப்ப கிடைக்கும் எண்டு கேட்ட குறிஞ்சி அக்கா தான். ஆச்சியை இறக்கீட்டு அவாவை ஒருக்காக் கட்டிப் பிடிச்சிட்டு போச்சினம் எல்லாரும். ஆச்சிக்குக் கண்கலங்கீட்டுது. அவையளுக்கும்தான்.

கிபிரெண்டா எனக்கும் சரியான பயம் கொஞ்ச நாளைக்கு முதல் காட்டுப்பக்கம் இரவு நேரத்தில 'பரா லைட்' அடிச்சு, கிபீர் காட்டுகக்க இருக்கிற பேஸுக்கு அடிச்சுது. கிபீர் இரைச்சல்ல ஊரே அதிர்ந்தது. கிளிநொச்சிப் பக்கம் கிபீர் அடிக்கேக்க, மேலால போகேக்க அவ்வளவு இரைச்சலைக் கேட்டதில்லை. அண்டைக்குக் கேட்டாப்பிறகு சரியான பயம். செஞ்சோலையில செத்த அக்காக்களுக்கு அஞ்சலி செலுத்த அவேன்ர வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போனவை எங்கட பத்தாம் வகுப்புப் பெடியளும் ஏ.எல். அண்ணாக்களோட போனம். அவை செத்த வீட்டில கிபீர் பற்றி கதைச்சதக் கேட்டனான்.

கிபீர் இஸ்ரேல் தயாரிப்பாம், ஆளுயரத்துக்குக் குண்டு வச்சிருக்குமாம். 'டிலே' குண்டு அடிச்சா பெரிய பங்கரக் கூடத் தூக்கி வெளியில போட்டுடுமாம். திருநகர்ல கிபீர் அடிச்சு தண்ணி வந்திட்டாம். 'எயர் சொட்' அடிச்சா வானத்திலையே குண்டு வெடிச்சு பீஸ் தலைக்கு வருமாம். கிபீர் ஆமி ஓடுறேல்லையாம் மேரி, சூட்டி எண்டு ரெண்டு வெளிநாட்டு பெட்டையள்தான் ஓடுறாளவையாம். குறிதப்பாமல் குண்டு போடுறதிலை அவளவை கெட்டிக்காறியளாம். எண்டெல்லாம் பேசிக்கொண்டனர்.

அடுத்த கிழமை ஆச்சின்ர வீட்டுக்கு பேஸ் மாறும்போது, அம்மாட்டப் போய் ஆச்சியை எங்களோட கூப்பிடச்சொன்னன். அம்மா ஆச்சிட்ட

ஏற்கனவே கேட்டும் ஆச்சி வரமாட்டன் எண்டு சொல்லிப்போட்டா. நான் ஆச்சிட்ட போய் கேட்டன். "என்ர வீட்ட விட்டிட்டு வரமாட்டன்" எண்டு சொன்னார். இயக்கப்பெட்டையளிட்ட ஆச்சிய அனுப்புங்கோ எண்டு கேட்டன். அவர்களும் சொல்லிப்பார்த்தார்கள் ஆச்சி அசையவில்லை. எனக்கு கோபம் வந்திட்டுது "நீ என்ன இயக்கமோ. இஞ்ச கிடந்து சாகவோ போறாய்?" எண்டு கேட்டன். நான் ஆச்சிட்ட அப்பிடி ஒருநாளும் கதைச்சதில்லை. ஒரு வேகத்தில குரல் உயர்த்திக் கதைச்சிட்டன். ஆச்சி என்னில கோவப்படுவா எண்டு நினைச்சன் ஆனா ஆச்சி. "ஓமடா நான் இயக்கத்தில சேந்திட்டன் எடி குமரியள் என்னையும் சண்டைக்குக் கூட்டிக்கொண்டு போங்கோ" எண்டு பெரிசா சிரிச்சா.

"வாணை ஆச்சி, வயசு கூடின பெண் போராளி நீங்கள்தான் இனி"

"அப்ப எனக்கு என்ன இயக்கப்பேர்?" ஆச்சி குழந்தை மாதிரி சிரித்துக்கொண்டு கேட்டாள். "நான் வைக்கிறன்" எண்டு சொன்ன மலையரசி அக்கா, யோசித்தவள். "இயற்கை" என்றாள். ஆச்சிக்கு அந்தப் பெயர் பிடிச்சிருந்துது. நல்லா இருக்கடி ராசாத்தி என்றபடி மலையரசியின் முகத்தைத் தடவி நெற்றியில் நெட்டி முறித்தார். "வீரச்சாவெண்டால் என்ன ராங் குடுப்பியள்?" எனக்கு ஆச்சரியமா இருந்தது. ஆச்சிக்கு இதெல்லாம் எப்பிடித்தெரியும் எண்டு விளங்கேல. கோயிலும் வீடுமாத்தானே கிடக்கிறா. எண்டு நினைச்சுக்கொண்டன். ஆச்சிக்கு எல்லாம் தெரியும். ஆச்சில சாமி வாறதெண்டு சின்னன்ல இருந்து அம்மா சொல்லி வெருட்டுவாள். ஆச்சின்ர பேச்சுக்கு எங்கட வீட்டில மறு பேச்சுக் கிடையாது. அண்டைக்கும் அப்பிடித்தான் பலவருசம் பழகின மாதிரி அந்த இயக்கப்பெட்டையளோட கதைச்சுக்கொண்டிருந்த ஆச்சியைப் பாக்க எனக்கு வியப்பாத்தான் இருந்தது அப்ப ஒரு அக்கா "ஆச்சிக்கு லெப்ரினன்ட் கேணல்தான்" என்று சொல்லி சிரித்தாள்.

பேஸ் இடம்மாற்றப்பட்டு நான்கு நாட்களின் பின்னர் ஆச்சி வீட்டுக்குப்பின்னாலை அந்த பெரிய அன்ரனா கோபுரத்தைப் பொருத்தி நிறுத்திச்சினம். பங்கர் வெட்டி. பெரிய மரக்குத்தியள் போட்டு பங்கர் அடிச்சினம். பழைய பேஸில பெரிய இஞ்சின் ஒண்டு இருந்தது. அது அண்டைக்கு பெரிய டிப்பர்ல ஏத்த. எல்லாரும் பேஸுக்குப் போனவை. நானும் பேஸுல பெரிய எஞ்சினை ஏத்துறதைப் பாத்துக்கொண்டு நிண்டன். ஊரே இஞ்சினை ஏத்துறதப் பாத்துக்கொண்டு நிண்டது. ஆச்சியும் வெண்ணிலா, கலைமதி, தமிழழகி நாலுபேரும் ஆச்சி வீட்டில நிண்டவை அவைக்கு அண்டைக்குச் சாப்பாடு செய்யிற வேலை ஆச்சிக்கும் இப்ப பேசில சாப்பாடு. ஆச்சிக்கெண்டு பிறிம்பா சைவம் காய்ச்சச்சொல்லி தாமரையக்கா ஓடர் போட்டிருந்தா. மதியம் தாண்டி இஞ்சின் ஏத்தியாச்சு. மிச்சம் இருந்த இரும்புச்சாமான்களையும். பலகையளையும் வாகனத்தில ஏத்தச்சொல்லி தாமரையக்கா சொன்னா பெட்டையள் வெயில்

ஏறக்கிடையில் ஏத்தி முடிக்கோணும் எண்டு வேலை செய்திச்சினம். ஏத்தாம கிடந்த பூக்கண்டுச்சாடியளை வீட்ட தூக்கி கொண்டு போவமோ எண்டு யோசிக்கேக்கதான், சத்தம் கேட்டுது. பூமி குலுங்கிச்சுது. ஆரோ கத்திற சத்தம். ஆச்சி வீட்டுப்பக்கம் பாத்தம். கிபீர் சத்தம் கேட்க தொடங்கிச்சு. இரண்டாவது சத்தம் இன்னும் அதிகமாய் குலுக்கியது. விழுந்து படுத்தோம் சிலர் பங்கருக்குள் உருண்டு போய்க் குதித்தனர். நிமிர்ந்து பார்த்தேன். முதல் குண்டு விழும் போது ஆச்சி வீட்ட இருந்த கோபுரம் ரெண்டாவது குண்டுக்கு சரிஞ்சு விழ பெரிய கறுப்புப் புகை மூட்டம் வானத்துக்கு எழும்பினதப் பாத்தன். அப்பிடியே நினைவு மங்கிப்போக நான் மயங்கிப்போனன்.

முகத்தில தண்ணியை அடிச்சினம். என்ர உள்ளங்காலத் தேய்க்கிற மாதிரி இருந்தது. முகமும் நெஞ்சும் குளிருற மாதிரி இருந்தது. காதுக்குக் கிட்ட ஒப்பாரி வைக்கிற சத்தம் கேட்டுது. நான் செத்துப்போனனோ எண்டு நினைச்சன். கண் திறபட்டுது. என்ர கால் மாட்டில இருந்து, அக்கா காலைத் தேய்ச்சுக்கொண்டு இருந்தாள். அம்மா என்ர தலைமாட்டில ஒப்பாரி வைச்சுக்கொண்டு இருந்தார். என்னைச் சுற்றி உருவங்கள் தெரிஞ்சுது. நான் செத்துத்தான் போனன் எண்டு நினைச்சன். அம்மா என்னிடம் சொல்லி கதறினாள். "அப்பு ஆச்சி செத்து போனாடா ... ஐய்யோ" எனக்கு மூச்சடைத்தது. என்னை எழுப்பி உட்கார வைத்தார்கள். கபிலன் எனக்குப் பக்கத்தில வந்து "ஆச்சியும் வெண்ணிலாக்காவும் செத்திட்டினம். கலைமதிக்கு கால் இல்லை. தமிழக்காக்குக் கையில காயம்" என்று சொன்னான். "பங்கருக்க ஆச்சி மூண்டு பேரையும் கட்டி பிடிச்சிட்டாவாம். வந்த பீஸ் ஆச்சியையும் வெண்ணிலாக்காவையும் வெட்டிட்டு, அடியில கிடந்ததால மற்ற ரண்டு பேரும் உயிர் தப்பிட்டினம்" எண்டு, ராகுலன் எனக்கு பக்கத்தில வந்து சொன்னான். ஊர் கூடியிருந்தது.

இரவு பத்து மணிக்கு இரண்டு பொடிகளும் மண்டபத்துக்கு வந்தன. வெண்ணிலாக்கான்ர வித்துடல் வரி உடுப்புப் போட்டு போட்டோவும் மாலையுமா வந்தது. அவான்ர நெஞ்சில புலிக்கொடி போர்த்தி இருந்தினம். ஆச்சின்ர நெஞ்சில நிறையப் பூ. ஆச்சி சீலை கட்டி திருநீறு படையா இழுத்திருந்தா. வெண்ணிலாக்கா மாதிரி ஆச்சிக்கு முகம் கறுக்கேல. ஏதோ ஆச்சில குறையிற மாதிரி இருந்தது. குறிஞ்சியக்கா சின்னப் புலிக்கொடிய எடுத்து வந்து ஆச்சிக்கு மேல போத்தி விட்டா. ஆச்சின்ர நெஞ்சில அந்தப் பாயிற புலி படிஞ்சுது. குறிஞ்சியக்கா குனிஞ்சபடி நின்றிருந்தா. அவான்ர கண்ணில இருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் லெப்ரினன்ட் கேணல் இயற்கையின் வித்துடலில் விழுந்தது.

# மிளகாய்ச்செடி

வியர்வை வழிந்தது. அடிக்கடி 'செயின்' கழன்றுவிடும் இலாவகமாக ஓட்ட வேண்டும். குறைவாக மிதித்தாலும், அதிகமாக மிதித்தாலும் கழன்றுவிடும். மிதமான வேகத்தில் அதனை மிதித்தபடி குளக்கட்டின் அருகில் வந்தவன், சந்தடி செய்யாமல் அருகில் இருந்த வீட்டைப்பார்த்தான். வாசலில் கேற்றுக்கு நேர்மேலே தொங்கும் மின்குமிழ் மட்டும் மஞ்சள் வெளிச்சத்தில் ஒளிர்ந்தது. குமிழைச்சுற்றி ஈசல்கள் பறந்து கொண்டிருப்பதும் தெரிந்தது. சந்தடி எழாமல் சைக்கிளை, குளக்கட்டோரம் மெல்லக் கிடத்தினான். வியர்வையை வழித்து எறிந்தான். வீடுகள் எட்ட, எட்ட இருந்ததால் அடுத்த வீடு முழுதாய் இருளில் மறைந்தே கிடந்தது. குளக்கட்டில் மின் மினிகள் புற்களில் ஒளிப்பொட்டுக்களாய் உறைந்திருந்தன. திருநீற்று மணமும், கரிய உருவமும் தோன்ற பரியாரியாரின் குரல் காதுக்குள் எழுந்தது. "குஞ்சு, மிளகாய்க் கண்டு ஒண்ட களவா புடுங்கோணும், களவாப் புடுங்கோணும்"

வானத்தைப் பார்த்தான், நட்சத்திரங்கள் மண்டிப்போயிருந்தது. அமாவாசைக் கும்மிருட்டில் எதிரில் விரிந்த வயல் இருளில் ஊறிக்கிடந்தது. சில் வண்டுகளின் இரைச்சலும் காது மடல்களில் மோதும் காற்றின் ஓசையும், அருகிலிருந்த பனை வளவில் புகுந்த காற்று காவோலைகளை உரச, பனைகளுக்கிடையில் சல சலப்பு எழுந்து அடங்கியது. மேற்குத்திசையில் வந்த காற்றில் வயலுக்கு அடிக்கப்பட்ட கிருமி நாசினியின் மணம் நாசியைக் கரிக்கச்செய்யவே மூக்கை உறிஞ்சிக்கொண்டான்.

குளத்தின் வடக்குப் புறமாக விரியும் வயலோரமாக ஓடும்

ஒற்றையடிப்பாதையில் இறங்கி நடந்தான். நாயுருவிச்செடிகள் அவனுடலில் உரசின. சறத்தைத் தொடையளவில் நன்றாக ஏற்றி இறுக்கமான சண்டிக்கட்டைக் கட்டியிருந்ததால் தொடைகளிலும் நாயுருவி பட்டுச் சுணைத்தது. வலது காலைக் கௌவி நின்ற இறப்பர் காலுக்கு அந்தக் கவலையில்லை. நாயுருவிகள் அந்த இறப்பர்காலில் பலம் கொண்ட மட்டும் உருவிப்பார்த்து. ஓரிரண்டு நாயுருவி விதைகள் இறப்பர் காலுக்கு நடுவில் காற்றோட்டத்திற்கு விட்டிருந்த துளைக்குள்ளால் நுழைந்து உள்ளே விழுந்தன.

இருட்டு எதிரிற் பயமுறுத்தினாலும் அவனுக்கு அது பொருட்டல்ல. "வேவுக்காறன்ட கண் இருட்ட பிடிச்சி நடக்கோணும்" விஸ்வம் மாஸ்ரர் அடிக்கடி கூறுவது அவனுக்கு நினைவில் வந்தது. நாயுருவிகளும், தயிர் வளைகளும், புதைந்து கிடக்கும் மிதி வெடிகளும், பொறிவெடிகளும் உடலில் தட்டுப்படாமல் ஊர்ந்து முட்கம்பிகளை வெட்டிக்கடந்து, செடிகளோடு செடிகளாக, மரங்களோடு மரங்களாக, ஓணானும், உடும்புகளும், பாம்பின் எதிரிலும் ஊர்ந்து மூச்சைதவிர எதையும் அசைவுறச் செய்யாமல் நகரவேண்டும். இராணுவ நிலைகளுக்கு அண்மையில் போய் "ரெக்கி" எடுத்துவருபவன். செறிந்த தகவல்களுடன் மீளும் அவனைப் பொறுப்பாளர் புகழும் போதும், நண்பர்கள் அவனைக்கொண்டாடும் போதும், அவன் பொறுப்பில் நான்கைந்து வேவுக்காரர்கள் கொடுக்கப்படும் போது அவனிடம் இருந்த முகத்தோரணை, முழுவதுமாக வற்றிப்போயிருந்தது.

ஏப்ரல் மாத இறுதியில், வட்டுவாகல் கரையில் துவக்கு, கோல்சர், குப்பி, தகட்டைக் கழற்றி கொடுத்த போது அவனுடைய சிதைந்து போன காலில் வழிந்த குருதியின் சூடு அடிக்கடி நினைவில் வந்தது. இரத்தம் போகக் கண்கள் சொருகி மயக்கத்திற்குள் சென்றான். கப்பலில் திருகோணமலைக்கு எடுத்து வரப்பட்டு, அவனுடைய கால் அகற்றப்படும் வரை மயக்கத்தில் இருந்தான். மயக்கம் தெளிந்தபோது கால் நீக்கப்பட்ட வலியோடு, எல்லாம் முடிந்த விட்ட செய்தியும் சொல்லப்பட்டது. தான் இயக்கத்தில் இருந்ததைச் சொல்லிச் சரணடைந்தான்.

விசாரணையின் பின்னர் அம்மாவிடம் ஒப்படைக்கப்பட்டான். மாதா மாதம் அருகில் இருந்த இராணுவ முகாமிற்குப் போய் வரவேண்டும். ஏற்கனவே விசாரணையில் எல்லாவற்றையும் அவன் சொல்லிவிட்டான். அவன் சொன்ன எதுவுமே மிச்சம் மீதியின்றி அழிந்து போய்விட்டன. அவர்கள் இறந்து போனவர்களையும் அழிந்து போனவையையும் பற்றியே அவனிடம் கேட்டனர். அவர்களுக்கு ஏற்கனவே எல்லாம் தெரிந்திருந்தன. எனினும் அவன் மூலமாக எல்லாவற்றையும் உறுதிப்படுத்திக் கொண்டனர்

என்பதை அந்த மூன்று வருடங்களில் கண்டு பிடித்தான். புனர்வாழ்வு இடத்தில் அவனுக்கு விவசாயம் கற்பிக்கப்பட்டது. கோழியும் ஆடும் எப்படி வளர்ப்பது என்று சொல்லித்தந்தார்கள். புனர்வாழ்வு முடிய சிறிய கோழிப்பண்ணை நிறுவுவதற்கு அரசாங்கம் பணவுதவி செய்யும் என்றார்கள். புனர்வாழ்வு முகாமில் உளவியல் ரீதியாக போராளிகளின் மனதைத் திசை திருப்ப வகுப்புகள் நடக்கும். "நாங்கள் என்ன விசரோ மச்சான்" அவனுடைய நண்பன் பிரசாத் அடிக்கடி கேட்பான். மதிய உணவு முடிய ஒரு மணிநேரம் மரத்தடியில், ஓய்வுக் குடில்களில் உரையாட அனுமதியிருந்தது. உரையாடல்களை நினைவில் வந்தன.

"துவக்கு வச்சிருக்கிற எல்லாருக்கும் விசர் எண்டுதான் மச்சான் நினைக்கிறன்"

"ஆமியும் ஆயுதம் வைச்சிருக்கு"

"அவங்கள் தோத்து போகேல்லையே" இன்னொருத்தன் சொல்வான்

"உங்க பார் பிள்ளையாரை கையில் அங்குசம் வச்சிருக்கிறார் அவருக்கும் விசரோ?" மதிமாறன் சுவரில் கட்டியிருந்த பிள்ளையார் உருவத்தைக் காட்டிச்சிரிப்பான்.

"வெளிய போய் என்ன செய்யிறதடா?"

"காசு தருவாங்களாம் ஏதும் தொழில் செய்வம்"

"உவங்கள் மசிரத் தந்தாங்கள், பிச்சை தான் எடுக்கோணும்"

"எங்களை ஆர் இனி வச்சிருப்பினம், பயத்திலஒருத்தரும் கதைக்கக் கூட மாட்டாங்கள்"

"அப்பிடிசொல்லாத எங்கட சனம் அப்பிடி இல்லை"

"நீதான் மெச்சோணும்"

அவன் வெளியே வந்ததும் தாய் வீட்டில் தங்கினான். மதிமாறன் சொன்னது போல யாரும் அவனைப்பார்க்க வரவில்லை. நாள் போகப்போகச் சகஜமாகிவிட்டான். வீட்டுக்குள் அடைந்து கிடப்பது அவனை மிகவும் வருத்தியது. அரசாங்கமும் காசு தருவதாகவும் இல்லை. மாதா மாதம் இராணுவமுகாமிற்குக்கையெழுத்து போட்டு நடைபெறும் விசாரணையில் பங்கேற்குமாறு பணிக்கப்பட்டிருந்தான். அங்கே போகும் போதெல்லாம் "காசு எப்ப தருவினம்" என்று கேட்பான்.

புனர்வாழ்வு அமைச்சுக்குக் கடிதத்தின் மேல் கடிதம் எழுதி களைத்துப்போனான். வெளிநாட்டில் இருக்கும் தம்பி அனுப்பும் காசு அவனுடைய குடும்பச்செலவுக்கே போதவில்லை "அரபுநாட்டிலை இப்ப உழைக்கேலாது அண்ணை" என்று அவனிடம் போனில் புலம்புவான் தம்பி. பஸ்சில் போவதற்கும், கடிதம் அனுப்பவும் கூட அம்மாவிடம் போய் நிற்க வேண்டிருந்தது. 30 வயது இளந்தாரிப் பிள்ளை அப்படிப் போய் நிற்கிறேனே என்று கூசியது. அப்பா இருந்த காலத்தில் இருக்கும் போது பெரிய வயல்களைக் குத்தகைக்கு எடுத்து அப்பா மூட்டை

மூட்டையாக நெல்லை வண்டிலில் கொண்டு வருவது ஞாபகம் வந்தது. அப்பாவைப்போலத் தான் இருப்பதாக எல்லோரும் சொல்லும் போது அவனுள் ஏதோ கனக்கும். அப்பா எப்போதும் கட்டிலில் முடங்கிக் கிடப்பவரல்ல சும்மா என்றாலும் வயல் வெளிகள், காடுகளுக்குள் நடந்தான். விவசாயம் செய்யலாம் தான் ஒற்றைக் காலூன்றி அவனால் நிறைய நேரம் மண்வெட்டி பிடிக்க முடியாமல் இருந்தது. கூலிக்கு ஆள் வைத்து செய்யுமளவிற்கு அவனிடம் வசதி இருக்கவில்லை. ஒரு லட்சமளவில் பணமிருந்தால் சிறிய கோழிப்பண்ணையாவது போட்டு விடலாம். வங்கி வாசல் ஏறியவனிடம் "லோன் தரலாம் தம்பி கரண்டர் ரெண்டு பேர் வேணும். அரசாங்க உத்தியோகத்தர் ரெண்டு பேர் ஒராள் எங்கட பாங்கில சம்பளம் எடுக்கிறவரா இருக்கோணும்" என்றார்கள்.

"இயக்கத்தில இருந்த பெடியனுக்கு ஒருத்தரும் கையெழுத்துப் போட மாட்டாங்களப்பு" அலைவின் முடிவில் அம்மா சொன்னாள். அம்மா தான் அவனுக்கு ஒரே ஆறுதல் இயக்கத்திற்குப் போக முதல் அம்மா இவ்வளவு நெருக்கமானவராக இருந்தாரா என்று கூட இப்போது தோன்றியது. இயக்கத்துக்குப் போக முதல் அவனுக்குக் குடும்பத்தோடு எவ்வளவு பிணைப்பு இருந்தது என்பதை அவனால் நினைவுபடுத்த முடியவில்லை. மிஞ்சிப்போனால் காற்சட்டை போட்ட வயதில் அப்பாவோடு உலாத்தியது நினைவில் இருந்தது. அவன் தன்னைத்தானே கேட்டுக்கொள்வான். அம்மா, தம்பி அப்போது தன்னுடன் எப்படியிருந்தார்கள் என்று அவனுக்குச் சரியாகப் பிடிபடவில்லை. இயக்கத்தில் இருந்த காலத்தில் வீட்டுக்கு கடிதம் எழுதுவார்கள் இவனும் எழுதியிருக்கிறான். இரண்டு பக்கங்களைத் தாண்டியதில்லை. பத்தாம் வகுப்புப் படிக்கும் போது பிரசாரக் கூட்டத்தில் பங்கேற்கப் போனவன் அப்படியே அவர்களுடன் போய்விட்டான். பின்னர் நடந்த எல்லாம் இன்னும் நன்றாக நினைவிலிருக்கிறது. சிலர் மரணங்களும், கால் துண்டிக்கப்பட்டதும் குருதியின் சூட்டோடு நினைவில் இருக்கிறது.

அம்மாவை இப்போது புதிதாக உணரத் தொடங்கியிருக்கிறான். அம்மாவிற்கு ஏதும் செய்ய வேண்டும் என்று நினைத்தான். அப்பா போன பின்னர் குடும்பத்தைத் தனியனாய் தாங்கியவர் அவர் தான். இப்ப அவனுக்கு பெண் பார்க்க தொடங்கி இருந்தார். அவனை விடுதலை செய்யும் நாளில் திருமணம் செய்து குடும்ப வாழ்வில் மனதைச் செலுத்தும்படி முகாம் அதிகாரி அறிவுரை சொல்லியிருந்தார். பெரிய இடங்களைத் திருமணம் செய்தால்தான் வெளியில் விடுவோம் என்று சொன்னதால் அவர்கள் முகாமிலேயே திருமணம் செய்தனர். அவனுக்கு அதைப் பற்றிக் கவலை இருக்கவில்லை. அவனுக்கு இருந்த விருப்பம் எல்லாம் வேலை ஒன்று வேண்டும் எனபதுதான். முகாமில் இருந்த போது வெளியில் போய் என்ன செய்யலாம் என்று யோசிப்பான். சில வேளைகளில் பல்லிடுக்கில் மறைத்து

வைத்திருந்த குப்பியைக் கழற்றிக் கொடுக்காமல் இருந்திருக்கலாம் என்றும் நினைத்துப் பார்ப்பான்.

"உத்தியோகம் தானே புருசலட்ணம்" என்று அவனுடைய கட்டிலுக்கு நேரே தொங்கும் பிள்ளையார் படத்தைப் பார்த்துச் சொல்லிக்கொள்வான். வங்கிகளின் நடைமுறைகளால் சலித்துப்போனான். அவனுடைய கடந்த காலம் அவனுக்கு இடறும் கட்டையாக இருந்தது. முடிவில் வங்கிகளைக் கைகழுவி விட்டு வேறு வழியில்லாமல் வட்டிக்குக் காசு வாங்கலாம் என்று முடிவு செய்தான்.

விதானையாரின் மனைவி பத்து வட்டிக்குக் காசு கொடுப்பதை அறிந்தான். அவளுடைய பிள்ளைகள் எட்டுப் பேரும் வெளிநாட்டில் இருந்தனர். விதானையாரின் பென்சன் பணத்தையும் எடுத்து வட்டிக்கு விட்டிருந்தாள். அவளிடம் போய் நின்றான். "தம்பி மாசா மாசம் முதலாந்தேதி எண்டா பத்தாயிரத்தை எண்ணிவைச்சிடணும்" என்றவள், முதல் மாதா வட்டியைப் பிடித்துக் கொண்டு *90 000* ரூபாவைத் தான் கொடுத்தாள். அதை வாங்கி கோழிக்கொட்டில் போட்டான். வீட்டில் இருந்த பலகைகள், பழைய தீராந்திகளை வைத்துத் தானே கோழிக் கொட்டிலைச் சரிக்கட்டினான். சீமெந்து, கம்பி வலை வாங்கியது போக மிஞ்சியதில், விவசாயத் திணைக்களத்தில் பதிந்து கோழிகளை வாங்கி விட்டான். கோழித் தீவனங்களையும் வாங்கி மிகுதியிருந்த பணத்தில் பசுமாடு ஒன்றையும் வாங்கினான்.

முதல் நான்கு மாதங்களுக்குக் கோழிகள் முட்டையிடவில்லை. வட்டிக்காசைத் தம்பியிடம் வாங்கி கட்டினான். இரண்டு மாதங்கள் தவணை தப்பியதால் வீட்டுக்கு வந்து சத்தம் போட்டுவிட்டுப் போனாள் விதானையாரின் மனைவி. அவளுடைய குரல் வாசலில் கேட்கும் போது அம்மாவிற்குப் பகீர் என்று இருக்கும். இவனுக்கு எரிச்சலாக இருக்கும். கைது செய்து வைத்திருந்த போது விசாரிப்பவனின் முகத்தை நிமிர்ந்து பார்த்தால் இரண்டு குத்து அதிகமாக விழும். வட்டித் தவனை கட்டத் தப்பிவிட்லால் வீட்டு வாசலிற்கே வந்து பெருங் குரலெடுத்துக் கத்தும் போது முகத்தினைப்பார்த்துக் கதைத்தால் அவளுடைய குரல் இன்னும் பெரிதாகிப் பக்கத்து வீட்டுக்காரர்களின் காதுகளை வேலிக்கு வர வைத்து விடும். அவள் என்ன பேசினாலும் அவனும் அம்மாவும் கேட்க வேண்டியிருந்தது.

இதற்கிடையில் அம்மா ஒரு கல்யாணத்தை முற்றாக்கி விட்டார், தயாமதி. அவள் அவனுடைய வாழ்க்கையில் வந்ததும்தான், அவனுடைய வாழ்கைக்கு இன்னொரு பக்கம் இருக்கின்றது என்பதை உணர்ந்தான்.

கால் துண்டிக்கப்பட்ட போது தொடங்கிய வெறுப்பு. விசாரணையில் அடி தாடையில் விழுந்த போது அவனுடைய வாழ்க்கை முழுவதுமாக முடிந்த ஒன்றாக நினைத்தான். வெளியே வந்து கட்டிலில் சுருண்டு கிடந்த போதும் அந்த நினைப்பே மனதின் அடியாழத்தில் கிடந்து அந்தரித்தது. தாயமதி அந்தரிப்பைத் தூக்கி வெளியே வைத்து விட்டு உள்ளே வந்தாள். தயாமதி "கறுப்பெண்டாலும் களையான பெட்டையடா" என்று அம்மா அவனைப்பற்றிச் சொன்னதுபோலவே அழகாக இருப்பவள். 'நேசறியில்' டீச்சராக இருந்தாள். அவளிடம் சீதனம் கொடுப்பதற்கு எதுவுமிருக்கவில்லை. அடிக்கடி "நான் ஒண்டும் இல்லாமல் தானேப்பா வந்தனான்" என்பாள். திருமணம் முடிக்கும் போதே அவனைப்பற்றி எல்லாம் அம்மா சொல்லியிருந்தாளர். "இனி ஒரு பிரச்சினையும் இல்லைத்தானே" என்று விட்டு தன் சம்மதத்தை அவள் சொன்னாள் என்றார் அம்மா.

சண்டையில் நிற்கும் போது நடந்த பகிடிகளைச் சொல்வான். இராணுவ நிலைகளுக்குள் ஊர்ந்து போய் 'ரெக்கி' எடுத்ததை சாகசத்தைப்போலச் சொல்லிச் சிரிப்பான். அவன் காயப்பட்டதையும், விசாரணையின் கடுங் கொடுமைகளைச் சொல்லும் போது அவள் அழுது விடுவாள். அழும்போது "குழந்தைப்பிள்ளையப்பா நீ" என்றபடி அவளை அணைத்துக்கொள்வான். தயாமதி சமையலில் கெட்டிக்காரியாக இருந்தாள். எப்போதாவது வீட்டில் நிற்கும் போது "இஞ்ச கொண்டாப்பா எனக்கும் பேசில சமைக்கப் பழக்கினவங்கள் பெடியள்" என்றபடி அவளுடன் சமையலைப் பகிர்ந்து கொள்வான். "அப்ப இயக்கத்தில ரொட்டிதான் சுட்டனியளோ" என்று சிரிப்பாள்.

தயாமதியோடு இடைக்கிடை வரும் சின்னப் பிரச்சினைகளோடே ஓடிக்கொண்டிருந்தது. சின்னச் சின்னப் பிரச்சினைகள் என்பவற்றில் பத்தில் எட்டு விதானையாரின் மனைவியால் வந்திருக்கும். நான்கு வருடமாகியும் அவனால் விதானையின் மனைவியின் முதலைச் செலுத்த முடியவில்லை. மாதா மாதம் வட்டி வேறு கட்டிக்கொண்டிருந்தான். தவணை தப்பினால் அவள் வந்து சத்தம் போடுவாள். அவனில்லாத நேரங்களில் பாவம் தயாமதியும் தாயும் அவளுடன் மல்லுக்கட்ட வேண்டியிருக்கும்.
"இஞ்ச பார் பிள்ளை இந்த மாசம் முடியப்போகுது ரெண்டு நாளில அடுத்தமாசக் காசும் சேர்ந்திடும். தம்பி வந்தாச் சொல்லு இல்லையெண்டா என்ர மனுசன் தான் வருவார் சொல்லிட்டன்"
"அவர் வந்ததும் சொல்லுறன் அன்ரி"
"அவனை முதல்ல போனை எடுக்கச் சொல்லு நான் வரேக்க மட்டும் ஆள் விட்டீல நிக்கிறேல்ல" அவன் உள்ளே மறைந்திருப்பான். வெளியே தயாமதியும் அம்மாவும் அவளுடன் மல்லுக்கட்டும் போது தான் உள்ளே

பதுங்கியிருப்பதை நினைத்தால் அவனுக்கு உடம்பெல்லாம் கூசும். ஒருநாள் "என்ர சம்பளக்காசை எடுத்து சீட்டு ஒண்டு கட்டுவமோ உந்தப் பேயின்ர முதலைக் கட்டி முடிப்பம்" அவனும் சம்மதித்தாள்.
அவனுக்கு நன்றாக நினைவிருக்கிறது அவள் அந்தச் சீட்டுக் கட்டும் யோசனையைச் சொன்ன நாளின் மாலையில் தான் ராகுலன் அவளுடைய வயிற்றில் உருவானதை அவள் அவனுக்கு வெட்கத்துடன் சொன்னாள்.

ராகுலன் பிறந்த சில நாட்களுள் கட்டிய சீட்டை எடுத்து விதானையின் மனைவியின் கடனை நான்கு வருடத்தின் பின் அடைத்தான். ராகுலனை தன்னுடைய வாழ்வின் அர்த்தமாகப் பார்த்தான். எப்போதும் குழந்தையை விட்டுப் பிரியாமல் இருந்தான். சமயங்களில் தயாமதி கேட்டால் கூட அவனிடமிருந்து இறங்கிப்போகமாட்டான். "பப்பா வேணுமெண்டு வாவன் இருக்கு" என்று தயாமதி கடிந்துக்கொள்ளும் போது அவன் குலுங்கிக்குலுங்கிச் சிரிப்பான். கண்ணீர் வருமளவிற்கு அவனைச் சிரிக்க வைப்பது ராகுலனும் தயாமதியும் தான். அவனுக்கு நன்றாக நினைவிருக்கிறது. ராகுலனின் இரண்டாவது பிறந்த நாள் கொண்டாட்டத்தில் அவனுடைய கோழிக்கூடு தீப்பிடித்து எரிந்தது. இரவிரவாக எரிந்த நெருப்பில் ஒரு கோழி கூட மிஞ்சவில்லை. அன்று அணைக்கப்பட்ட நெருப்பு இன்னொரு வடிவத்தில் எரியத்தொடங்கியதை அப்போது அவன் அறியவில்லை. மீண்டும் விதானையின் மனைவியின் வாசலில் போய் நின்றான்.
"இப்ப 12 வீதம் வட்டி தம்பி"
"பரவாயில்லை அன்ரி தந்திடுவன்"
ஆனால், நெருப்பு வேறு விதமாகத் திட்டமிட்டிருந்தது. மீண்டும் கோழி வாங்கி விட்டான். நோய் வந்து அனேகம் இறந்து போக, மிகுதியைக் காப்பாற்ற மருந்து வாங்கவும், வைத்தியருக்குக் கட்டணம் செலுத்தவும் சின்னக் கடன் வாங்கினான். அவனுடைய முகத்திற்காகச் சிலர் கொடுத்தார்கள்.

இராணுவமுகாமிற்குச் சென்று கையெழுத்து போட்டுவிட்டு, விசாரணை முடிந்து வரும் போது ராகுலன் மயங்கி வீழ்ந்தான். பரிசோதித்த டாக்டர் "ஹாட்டில் ஓட்டை" இருக்கு ஒப்ரேசன் செய்யவேண்டும் என்றார்கள். தயாமதியும் அம்மாவும் ஊரில் உள்ள கோயில் ஒன்றும் விடாமல் நேர்த்தி வைத்தனர். பிள்ளையார் படத்தின் முன்னால் அவனும் மகனுக்காக அழுதது யாருக்கும் தெரியாது. இராகுலனை நெஞ்சில் போட்டபடி அலைந்தான். "சிம்பிள் ஒப்ரேசன் தான் நாலு லட்சம் முடியும்" என்றார். ராகுலனுக்குக் குணமாக வேண்டும் என்பது மட்டுமே அவனதும் தயாமதியினதும் நோக்கமாக இருந்தது. ராகுலனுக்குத் தனக்கு ஏதோ என்று புரிந்தது. அடிக்கடி கிளினிக் என்று யாழ்ப்பாணம் போவது பிடித்திருந்தது.

அம்மா பெண்டென் சீடிக்களை வாங்கித்தருவாள் என்ற சந்தோசம் அவனுக்கு. வைத்தியர்கள் அவனைப் பரிசோதிப்பதும், நெஞ்சில் பசை பூசி வயர்கள் ஒட்டப்படுவதையும் வைத்து தனக்கு ஏதோ பெரிய நோய் என்று அவனுக்குப் புரிந்திருக்க வேண்டும். தயாமதியிடம் கேட்பான். அவள் ஏதோ சாதாரணக் காய்ச்சல் என்பது போல் சொல்லி மறைத்தாள்.

ராகுலன் அவனைக் கட்டிப்பிடித்துக் கொண்டு தனக்கென்ன வருத்தம் என்று கேட்பான். எப்படியோ அதைச் சொல்லாமல் சமாளித்துவிடுவான். தயாமதியும் அவனும் பணத்திற்கு ஓடித்திரிந்தனர். அவனுடைய தம்பி மூன்று லட்சம் அனுப்புவேன் என்றான். மிகுதியை விதானையாரின் மனைவியிடம் வாங்கினான். தயாமதி கோயில் குளமென்று கிடந்தாள். அம்மா சாத்திரம் கேட்கவும் பரிகாரம் செய்யவும் அலைந்தாள். இவனும் பரியாரியாரிடம் சென்று பார்த்தான். காளி சிலைக்கு முன்னால் அமர்ந்து கிழவர் ராகுலனின் தலையில் கைவைத்துத் தலையில் வைத்து தேசிக்காய்கள் மூன்றை வெட்டினார். மூன்றும் நிமிர்ந்து வீழ்ந்தது. ஏதோ தாயம் விளையாடுவதைப்போல ராகுலன் வேடிக்கையாகச் சிரித்துக்கொண்டிருந்தான். "ஒண்டும் பயப்படத்தேவையில்லை குஞ்சுகள். சின்னக் குஞ்சுக்கு ஒரு பிரச்சினையும் இல்லை எல்லாம் சுகமா முடியும்" அந்தக் கிழவர் உண்மையோ பொய்யோ அவனுக்கு அவருடைய சொல் நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் அளித்தது. இராணுவமுகாமிற்குக் கையூத்திடப்போனவன் வழமையாக அவனை விசாரிக்கும் இளம் அதிகாரியிடம் மகனின் நிலையைச் சொன்னான். "இப்ப ஹாட் ஒப்ரேசன் எல்லாம் சின்ன விடயம்" என்று அவன் குறிப்பிட்டான். ராகுலனைப் பார்க்க வருவதாகக்கூறினான். தம்பி அனுப்பிய காசிலும் விதானையாரின் மனைவி வட்டிக்கு தந்த காசிலும் ராகுலனுக்குச் சத்திர சிகிச்சை முடிந்தது. தயாமதியும் அம்மாவும் கோயில் கோயிலாகப் போய் வரத்தொடங்கினர். நேர்த்தியெல்லாம் பலித்ததற்கு அவள் கடவுளிடம் பட்ட கடனை முதலில் அடைக்க வேண்டும் என்றாள்.

ராகுலனின் சத்திர சிகிச்சை முடிந்து மூன்று மாதம் கழித்து முதல் ஆளாக வந்து நின்றாள் விதானையாரின் மனைவி "பெடியனுக்கு ஏலாது எண்டு தான் வரேல்ல. தம்பி வீட்ட சரியான இறுக்கம் வட்டிக்காசு வேணும்"
"ஓம் அன்ரி தந்திடுறன்"
அவளுக்குப் பின்னால் ஏனைய சின்னச் சின்னக் கடன்காரர்கள் வந்து வாசலில் நின்றார்கள். தயாமதியின் சம்பளமும், அவனுடைய கோழிகளாலும் அந்த நெருக்கடிகளைச் சமாளிக்க முடியவில்லை. கடன்காரர்கள் ஆரம்பத்தில் தன்மையாகத் தான் கேட்டார்கள். பின்னர் அவர்களின் குரல் தடிக்கத் தொடங்கியது. தயாமதி இரவிரவாக அழுதாள். அம்மாவும் அழுதாள். இருவரையும் பார்த்து ராகுலனும் அழுதான். "ஏனடி

இப்பிடி ஒப்பாரி வைக்கிறாய் பார் பெடியனும் அழுகிறான், வருத்தக்காற பெடியனை இன்னும் வருத்தக்காறன் ஆக்க போறியோ" என்று கத்துவான்.

தயாமதியும் கண்ணைத் துடைத்துக்கொண்டு ராகுலனை அள்ளி தேற்றத்தொடங்குவாள். ஒரே நேரத்தில் பத்துப் பேருக்குக் குறையாமல் கதவைத் தட்டினார்கள். அவனுடைய நாய் "ஜிம்மி" குரைத்துக் குரைத்துக் கொஞ்சநாளில் அவர்களை நிமிர்ந்து பார்த்து விட்டுப் படுத்தது.
அன்று காலையில் அம்மா, "தம்பி வெத்திலை பரியாரியாரிட்ட ஒருக்கா போய்வருவம்" என்றாள். சரியென்று கிளம்பினான்.
"குஞ்சு இஞ்சபார், நான் சொல்லுறமாதிரி செய்தாயெண்டால் கடன்காரர் ஒருத்தரும் வீட்டுப் பக்கம் வராங்கள், போனதேல்லாம் திரும்பி வரும்" என்று ஆரம்பித்தார்.
"சொல்லுங்கோ கனக்க சிலவாகுமோ? "
"சிச்சி நான் மற்றவை மாதிரிக் காச வாங்கி உன்னை ஏமாத்த மாட்டன் குஞ்சு. நீ ஒண்டும் பெரிசாச் செய்யத்தேவையில்லை, அமாவாசை யண்டு இரவு பன்ரெண்டு மணிக்குப் பிறகு ஆருக்கும் தெரியாம குளத்தில் மூண்டு தரம் முழுகீட்டு அப்பிடியே ஈரத்தோட போய்க் களவா ஒரு மிளகாய் கண்டு ஒண்டு பிடுங்கி கொண்டு வந்து உன்ர வாசல்ல நட வேணும்"
"நட்டா சரியோ"
"பொறு குஞ்சு சொல்லுறத கேள், ஒவ்வொரு நாளும் காலமை அதுக்குத் தண்ணி ஊத்திட்டு உனக்கு என்ன வேணுமோ அதச் சொல்லி அந்த மிளாகாய் கண்ட பிள்ளைய தடவுற மாதிரி தடவித்தடவி ஆர் உனக்குத் தொல்லை குடுக்கினமோ, என்ன வேணுமோ அத அந்தக் கண்டிட்ட சொல்லி சொல்லி கேள் உன்ர பிரச்சினை முடிஞ்சிடும்"
காசு செலவழித்து ஏதும் செய்யச்சொல்லியிருந்தால் அவன் அதனைச் செய்திருக்க மாட்டான். அவனுக்கு அதில் நம்பிக்கை அவ்வளவாக இல்லையெனினும் அம்மாவும் தயாமதியும் தாங்கள் செய்வதாகச் சொன்னார்கள். அமவாசை இருட்டில் மிளகாய்க் கண்டு திருடக் கிளம்பி விட்டான்.

பரியாரியின் கரகரத்த குரல் எழுந்தது. ஒற்றையடி பாதை குளத்தின் குளிக்கும் படிக்கட்டு இருந்த இடத்தினைக் கடந்து ஓடியது. வேகமாகச் சந்தடி செய்யாமல் குளத்தில் இறங்கினான். ஒரு முறை வேவுக்குச் சென்ற போது மார்கழி குளிரில் குளமொன்றின் அருகில் இருந்த இராணுவ நிலையை வேவு பார்க்க குளத்தில் கழுத்தளவு தண்ணீரில் மணித்தியால கணக்காக அவனும் சக வேவுப் போராளி ஒருவனும் இருந்தது ஞாபகம் வந்தது. குளத்தில் இறங்கி மூன்று முறை மூழ்கினான்.

கரையேறி மிளகாய் தோட்டப் பக்கமாகப் போனான். தோட்டங்களுக்கு

நடுவில் பெரிய பரணில் காவல் கொட்டில் ஒன்று தெரிந்தது கொட்டிலில் ஒரு லாந்தர் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. இரண்டு மனிதத்தலைகள் தெரிந்தன. அவன் சட்டென்று கீழே படுத்துக்கொண்டான். படுத்ததும் அவன் உடும்போ அல்லது பாம்போ என்று சந்தேகப்படத்தக்கதாய் வளைந்து ஊரத்தொடங்கினான். தொட்டால் சுருங்கி முட்கள் உடலில் தைப்பதைக் கூடப் பொருட்படுத்தாமல் வெற்றுடலை மிக வேகமாகவும் லாவகமாகவும் பழைய வேவுக்காரனாக மிளகாய்த் தோட்டத்தை நோக்கி நகர்ந்தான்.

அவனிருக்கும் வயலில் இருந்து நான்காவது வயலுக்கு நடுவில் காவல் பரணும் அதன் மேல் கொட்டிலும் தெரிந்தது. அவர்களில் ஒருவன் இடியன் துவக்கோ, கட்டுத்துவக்கோ வைத்திருப்பான் என்று அவனுக்குத் தெரியும். வயலுக்குள் அரவம் கேட்டு, பன்றியென்று நினைத்துச் சுட்டால் , நன்கு உருண்டையாகக் காய்ச்சியுருட்டிய ஈயம் அவனுடலை பிய்த்துக்கொண்டு வெளியேறும். சில வருடங்கள் கடந்தாலும், பழைய வேவுக்காரனின் உடல் சின்னச் சத்தமும் ஏற்படுத்தாமல் லாவகமாக ஈரச்சுனைதைக்குள் தவழ்ந்து சென்று, ஒரு சாண் அளவில் வளர்ந்திருந்த மிளகாய்க்கன்றை இருட்டினுள் கைகளால் தடவிப் பிடுங்கினான். காலையிலேயே தயாமதி அந்தச் செடியைத் தடவிக்கொடுத்தபடி பிரச்சனைகளைக் சொல்லத்தொடங்கினாள். ராகுலன் ஓடிச்சென்று அம்மாவின் அருகில் அமர்ந்து, அவள் செய்வதை உன்னிப்பாகக் கவனிப்பதை டீவிக்கு முன்னால் இருக்கும் ஈசி செயரில் இருந்தபடி பார்த்தான். ராகுலனும் பரியாரியாரிடம் வந்திருந்ததால் அவனுக்கு அம்மா என்ன செய்கின்றாள் என்பது விளங்கியிருக்கும். தயாமதியைத் தொந்தரவு செய்யாமல் அவளருகில் அமர்ந்து அவள் அச்செடியைத் தடவிக்கொடுப்பதைக் கவனித்தான்.

ரி.வி. யில் அவனுடைய கிராமத்திற்கு அருகில் புலிகளின் வெடிப் பொருட்கள் மீட்கப்பட்டிருப்பதாகச் செய்தியில் சொன்னார்கள்.
"என்ன தம்பி இது?" என்றாள் அம்மா.
"ஆராவது பாதாள உலகக்காரர்ட ஆயுதங்களா இருக்கும். இவங்களுக்கு எதையெடுத்தாலும் புலிதான்"
அவன் சொல்லி முடிக்க வாசலில் வெள்ளைநிற வான் வந்து நின்றது.

இராணுவ உடையிலும், சிவில் உடையிலுமாக ஏழெட்டுப் பேர் மிக வேகமாக ஹோலிற்குள் நுழைந்தனர். இவன் ஈஸிச் செயாரிலிருந்து எழுவதற்குள், முன்னால் ஓடிவந்த தடித்த ஆமி அவனை எட்டி நெஞ்சில் உதைத்துத் தள்ள மற்ற இருவர் அவனை மடக்கி நிலத்தில் படுத்தி கையில் விலங்கைக் கொழுவினர். தயாமதியும் அம்மாவும் அவனைக் கட்டிப்

பிடித்து அழுதனர்.

"சேர் என்ன பிரச்சினை" என்றான். அவர்களில் வயதானவன் "விசாரணை செய்ய வேண்டி இருக்கு" என்ற படி கைகளால் சைகை செய்தான். அவன் தர தரவென்று இழுத்து செல்லப்பட்டான். தயாமதியும் அம்மாவும் வானின் பின்னால் ஓடினர். சற்று நேரத்தினுள் பத்திரிகையாளர்கள் வந்தனர். தயாமதியும் பொலிசில் வழக்கு போடச் சொல்லி ஆலோசனை சொலிக் கேள்விகளும் கேட்டனர்.

"ஏன் உங்கட கணவர பிடிச்சவ?"

"உங்கட மகன் எந்தப் படையணில இருந்தவர்?"

"ஒரு பிள்ளை தானோ? எப்ப கலியாணம் செய்தனியள்?"

"அவருக்கு எத்தினை வயசு?"

இத்தனை கேள்விகளுக்கும் அழுதழுது பதில் சொல்லிய தயாமதி ராகுலன் நினைவில் வர அவனைத் தேடினாள். அவன் அந்த மிளகாய்ச்செடி அருகில் அமர்ந்திருந்தான். "அம்மாவை அழ வேண்டாம் எண்டு சொல்லு. அம்மாவை அழ வேண்டாம் எண்டு சொல்லு. அப்பா திரும்பி வரோணும் அப்பா திரும்பி வரோணும்" என்று மிளகாய்ச் செடியைத் தடவிக் கொடுத்தான்.

# மக்ரலினின் அறுபதாயிரம் புறாக்கள்.

*1*

அந்தக்கதையை எபிரேபிய விவிலியத்தில் இருந்து பெற்ற தகவல்களைக்கொண்டு புனைந்திருந்தான். அவளுக்கு இவன் சொன்ன முதல் கதையும் அதுதான். இத்தோடு அதை ஏழாவது முறை கேட்கின்றாள். அவள் கேட்கும் போதெல்லாம் இவன் மறுக்காமல் சொல்லுவான். சில சமயங்களில் வர்ணனைகளையோ சம்பவங்களையோ மாற்றிச்சொல்லுவான். இவன் கைகளை அசைத்து முகத்தின் பாவங்களை மாற்றிக் கதை சொல்லும் அழகை உதட்டில் சிறிய புன்னகையுடன் பார்த்தபடியிருப்பாள். கதை சொல்லும் போது அவளுடைய கண்கள் அசைவதையும் புருவங்கள் உயர்வதையும், சிரிப்பதையும் அழுவதையும் இவன் இரசித்து இரசித்துக்கதை சொல்வான்.

அன்றைக்கொரு மாலை. வெளியில் மழை கொட்டிக்கொண்டிருந்தது. வியர்வையும் பெருமூச்சும் உடல்களைப் பின்னி ஓடிக்களைத்த பின்னர் தலையணைக்குள் புதைந்தவாறு திரும்பவும் ஒருமுறை மக்ரலினின் கதையைச் சொல் என்றாள். கதையைச்சொல்லச் சொல்லி அவள் கேட்கும் போது இருக்கும் குழந்தைத்தனத்தின் குழைவு இவனுக்குப் பிடித்தமான வொன்றாகிவிட்டது. இவனுடைய பார்வையையும் கதையையும் குழப்பும் என்று நினைத்தாளோ என்னவோ வியர்த்துக்கிடந்த மார்புகளை ஸ்கினிக்குள் நுழைந்து மறைத்துக்கொண்டாள். எனினும் மேற்பக்கமாய்

விம்மிய மார்புவிளிம்புகள் வெற்றுடைலை விட இவனுக்கு அதிக உன்மத்தத்தைத் தரக்கூடிய அழகைப்பெற்றுக்கொண்டன. இவன் அவள் மார்பை விட அதிகக் கிலேசத்தை உண்டுபண்ணும் கண்களுக்குள் தன் பார்வையை நுழைத்துக்கொண்டே தொடர்ந்து மிச்சக்கதையைச் சொல்லத்தொடங்கினான்.

மக்ரலின் அவரைக் காதலிக்கிறாள் என்று அவருக்குத் தெரிந்தேயிருந்தது. பேரன்பின் எந்தக்கூறையேனும் அவரிடமிருந்து மறைக்க முடியுமா என்ன? அவர் அவள் மீது எல்லையற்ற கருணையும் அன்பும் கொண்டிருந்தார். அவள் அடிக்கடி அவரைச் சந்தித்த நாளை நினைவுபடுத்திக்கொண்டிருந்தாள். சாத்தான்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட மிகக் கொடூரமான நாள் அதுவாகத்தானிருக்கும். அவர் அவளுக்காக அந்தப் பெருங்கூட்டத்தின் எதிரே தன் குட்டியை கழுகுகளிடமிருந்து காக்கும் பழுப்பு நிறக்கண்களைக்கொண்ட கழுதைப்புலியைப்போல நின்றிருந்தார். அவளை அவர்களின் கொடும் வார்த்தைகளில் இருந்தும் கற்களில் இருந்தும் காப்பாற்றிய அந்தக் கணங்களை எப்போதும் மறத்தல் அவளுக்குச் சாத்தியமேயில்லை.

அன்று மாலையில் நகரத்தின் வெளியே இருக்கும் கருங்குன்றின் அடிவாரத்தில் இருக்கும் தஸ்தோயின் வெம்மைக்காற்று வீசும் ஈச்சங்காடுகளின் மேற்கு விளிம்பில் அவர் அப்போது தங்கியிருந்த தன்னுடைய தகப்பனின் பழைய தச்சுப்பட்டறைக்கு அவளை அழைத்து வந்தார். அவர் அங்கே வருவதற்கு முதல் அவளை நோக்கி வீசப்பட்ட கற்கள் அவளுடைய செந்நிற வலது புருவத்தில் பட்டுத் தசை பிளந்து இரத்தம் இறங்கி ஓடிக் கன்னத்தையும் தாடையையும் நன்கு நனைத்திருந்தது. அவளுடைய மார்புகளை இலக்கு வைத்து மிலேச்சன் ஒருவனின் கை பாய்ந்து வந்து மார்புக் கச்சையினைப்பற்றிக் கிழித்திருந்தது. மணலில் விழுந்து புரண்டு உடலெல்லாம் வெக்கை மிகுந்த புழுதி ஏறியிருந்தது. புறங்கைகளிலும் முழங்காலிலும் இருந்த சிராய்ப்புக்களில் புழுதி அடைந்து கருஞ்சிவப்பு நிறத்தில் மணற்ருதி கெட்டித்திருந்தது. அவள் அப்பொழுதும் விம்மிக்கொண்டேயிருந்தாள். விம்மல் மட்டுமே வந்தது. கண்ணீர் வற்றி நிரம்பக்காலம் கடந்து விட்டது. தாகத்தில் தொண்டை அடர்ந்து குரல்வளைக்குள் பாலைவனத்துக் கருந்தேளொன்று தனதுடலைச் சுற்றிக்கொண்டு படுத்திருப்பது போல உணர்ந்தாள்.

அவளைப் பட்டறைக்கு வெளியே இருக்கும் பாறையொன்றில் இருக்கச்செய்தார். மரவாளியில் கொஞ்சம் தண்ணீரை மொண்டு அவளுக்குக் கொடுத்து மூச்சை நிதானமாக்கிக் கொண்டு பருகுவாய் என்று விட்டு பட்டறைக்குள் நுழைந்தார். இவள் தண்ணீர் வாளியை வாயில்

கவிழ்த்து தண்ணீரைத் தொண்டைக்குள் வார்த்தாள். அவளுக்கு இருந்த தாகத்திற்கும் உடல்வலிக்கும் அது ருசிமிக்கத் திராட்சை இரசத்தைப் போலத் தொண்டையைக் குளிர்த்தியபடி இறங்கிற்று. மெல்ல மெல்ல நெஞ்சுப் படபடப்பு அடங்கத்தொடங்கியது.

அவர் கைகளில் துணியுடனும் ஔடதத்துடனும் வெளிப்பட்டார். காயம்பட்ட இடங்களில் அவளுக்குத் தன் கையால் மருந்திட்டார். தன்னுடைய வஸ்திரங்களில் ஒன்றை அவளுக்குக் கொடுத்துக் குளித்துவிட்டு வரச்சொன்னார். அதற்குள் அவருடைய சீடப்பிள்ளைகள் விடயம் கேள்விப்பட்டு அங்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களிடம் நகரின் மறுகோடிக்குச்சென்று அவளது இல்லத்தை விசாரித்து அவளுடைய உடமைகளைச் சென்று எடுத்து வரச்சொன்னார். அவள் குளித்து முடித்துவிட்டு அவருடைய ஆடையைச் சுற்றிக்கொண்டு வந்தாள். பின்னர், அவளை அங்கு ஆசுவாசமாக அமர்த்திவிட்டு அவளுக்குக் கருணையும் ஆறுதலும் மிக்க வார்த்தைகளைக் கொடுத்தார். அவளைப்பற்றிச் சீடர்கள் அவரிடம் கேட்டனர் அவள் சொன்னால் மட்டும் அவளைப்பற்றிக் கேட்டுக்கொள்ளுங்கள். அவளைக் காயப்படுத்தும் எந்த வார்த்தைகளையும் பகிராது இருக்கும் படி தன்னுடைய சீடர்களுக்குக் கட்டளையிட்டார். அவர் இதைச் சிடர்களுக்குச் சொல்லிக்கொண்டிருக்கும் போது அவள் பட்டறையின் தெற்கு மூலையில் இருக்கும் பாலைக்களி மண்ணால் செய்யப்பட்ட அந்தப் பிரமாண்டமான புறாக்கூண்டினை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள். மிகப்பெரிய புறாக்கூண்டு அறுபதாயிரம் புறாக்கள் இருக்கும் கூடு. அந்தப் பட்டறைக்கு அருகில் இருக்கும் பெரிய குன்றின் பக்கவாட்டை மண் அப்பி மெழுகி ஆயிரக்கணக்கில் பொந்துகளை உண்டு பண்ணி அவருடைய சீடர்கள் அவற்றிற்கு வாழ்விடமளித்திருந்தனர். புறாக்கூட்டின் முன்னால் இருக்கும் நீண்ட தடிகளில் இருந்து உடலைச்சுற்றிச் சுற்றி நடந்து திரிந்தும் குறுகுறுத்துக் கொண்டிருக்கும் புறாக்களைப் பார்த்துக்கொண்டும் அவளின் கைகளிலும் தோளிலும் இறங்கி நிரம்ப நாட்கள் பழக்கப்பட்டவை போல் விளையாடும் புறாக்களின் அன்பிலவள் இலயித்துப் போய் விளையாடிக்கொண்டிருந்தாள். அந்தக் காட்சியைப் பார்த்த அவரின் முகத்தில் புன்னகையும் பேரன்பும் படர்ந்தன. புறாக்களைக் கைகளில் ஏந்தியபடி அவர் இருந்த பக்கம் பார்த்துப் புன்னகைத்தாள். அவளுடைய கண்களில் இருந்து வழியும் நன்றியையும் அன்பையும் ஓர் ஆழ்ந்த பெருமூச்சைக்கொண்டு அவர் சுவீகரித்துக்கொண்டார்.

அது நடந்து சரியாகப் பதினேழாம் நாள் மக்ரலின் அவரிடம் தன்னுடைய கதையைச்சொன்னாள். அவளுடைய புதுக்கணவன் அவளை நடத்தை கெட்டவள் என்று ஊர்ப் பெரிய மனிதர்கள் முன் சொன்ன போது அவள் வெடித்து அழுதாள். அவர்கள் அவனிடம் ருசுவைக்கேட்ட போது

புணரும் போது அவள் வெளிப்படுத்தும் ஒலிகள் பலநாள் பழக்கப்பட்ட சந்தத்தைக் கொண்டிருந்ததாய் சொன்னான். போதாதற்கு மன்னனின் மிலேச்சப்படைவீரர்களில் ஒருவனைப் பணம் கொடுத்து இரண்டு இராத்திரிகள் அவள் அவனுடன் படுத்தாள், என்று பொய்ச்சாட்சி சொல்லச்செய்தான். அவள் கல்லால் அடிக்கப்பட்டும், அவளுடைய ஆன்மா நரகத்திற்கு விரட்ட ப்பட வேண்டும் என்றும் தீர்ப்பானது. இவளின் பேரழகை தெருக்களைக் கிழித்து போட்டது கணவனும் ஊரின் மிச்ச ஆண்களும் அவளை நோக்கிக் கற்களை வீசினார்கள். அப்போதுதான் அந்தத் தெய்வச்செயல் நிகழ்ந்தது. ஆம். அப்போதுதான் அவர் அவளை இரட்சிக்க அங்கே வந்திருந்தார் என்றாள். இதைச்சொல்லும் போது அவளுடைய கண்கள் முட்டி முகம் முழுவதும் கருணை நீர்மை கொண்டது.

அவரை அணைத்துக்கொண்டு அழுது அழுது தீர்த்தாள். தன்னுடைய ஸ்பரிசத்தாலும் கனிவொழுகும் குரலாலும் அவளுக்கு ஆறுதலளித்தார். அவரிடம் தன்னை அவள் முழுவதுமாக ஒப்புக்கொடுக்க இறைஞ்சினாள். அன்பின் பொருட்டு வரும் எல்லாப் புறாக்களுக்கும் அவர் நிலத்தில் கூடு இருக்குமென்றார். அவர் அந்த வார்த்தைகளை அவளிடம் கொடுக்கும் போது கூடுகளில் இருந்து செறிவான குறுகுறுப்புச் சத்தம் பின்னணியில் எழுந்தது. நாட்கள் உருண்டன. எல்லாச்சீடர்களை விடவும் மிகவேகமாக அவரின் வாழ்வையும் அன்பையும் அவள் பற்றிப் பிடித்துக்கொண்டாள். நன்கு உலர்ந்த துணியில் பற்றிக்கொண்ட தீயைப்போல் அவள் அவரைப் பற்றிச்சென்றாள். அவளிடம் இருக்கும் கருணையில் நன்றியுணர்வினை எடுக்க இவரால் முடியவில்லை.

அவள் நன்றியுணர்வுடன் இருக்கும் போது அவளுடைய காதலை ஏற்றுக்கொள்வதில் அவருக்குச் சங்கடமிருந்திருக்கவேண்டும். எனினும், அவளுடைய அன்பெனும் பெரும் நீர்நிலை நீரைத் தாகமெடுத்து பாலைநிலமெங்கும் அலைந்த வழிப்போக்கனைப்போல அவர் பருகினார். அவளுக்கு இறவாத வரத்தை அவர் நல்கினார். அவளுடைய பேரன்பு பூசிய உயிரினொரு பகுதியை அவள் தேகத்திலிருந்து எடுத்து அவளுடைய பிரியம் மிக்க தோகைப்புறாவில் வைத்தார். அந்த அறுபதாயிரம் புறாக்களின் காவலில் அந்தத் தோகைப்புறாவையமர்த்தினார். தன்னுடைய முடிவின் பின் இப்பிரபஞ்சமெங்கும் தனதன்பை எடுத்துச்செல்ல அவளுக்கொரு நித்தியவாழ்வை வழங்க நினைத்தார். அவளுடைய புறாக்கள் அவளைப்பார்த்துக்கொள்ளும் என்றார். அதை அவளிடம் சொன்ன போது அவள் நம்பாமல் சிரித்தாள், உங்களுக்குப் ப்ரியம் முற்றி விட்டது என்று சிரித்தாள். அவர் வேறொன்றும் சொல்லாமல் அவளுடைய சிரிப்பிற்குள் அமிழ்ந்து போனார்.

அவளுக்கு. அவரும் புறாக்களுமே உலகமாக இருந்தனர். அவள் அவற்றை மிகக் கனிவுடன் பார்த்துக்கொண்டாள். சவண்டு சொருகியிருக்கும் அவற்றின் இறக்கைகளை அழகாகச் சரி செய்து விடுவாள். அவற்றுக்கு அடிக்கடி தண்ணீர் ஊற்றிவிடுவாள். மேய்ச்சலுக்கு மூத்த புறாக்கள் போனால் கீச்சுக் குரலில் இவளைக்கூப்பிடும் குஞ்சுகளுக்கு அவள் உணவூட்டும் அழகு அலாதியானவொன்று. கூட்டுக்குள் இருக்கும் மண்பொந்தினுள் தன்னுடைய கையை அழகாக நுழைத்து, மிருதுவான ரோமம் அவ்வளவாக முளைக்காத புறாக்குஞ்சின் லேசான வெப்பம் பரவிய உடலை அவ்வெப்பத்தின் குறுகுறுப்புடன் வெளியே எடுப்பாள். அதன் தலையில் முத்தமிட்டு ஏதோ செல்லம் கொஞ்சுவாள். அதனிடம் பசிக்கிறதா என்று கேட்பாள். பின்னர் கொஞ்சம் தானியத்தை எடுத்துத் தன்னுடைய வாய்க்குள் போட்டு மெல்லுவாள் அப்படியே வாயைத்திறந்து புறாக்குஞ்சினை உயர்த்தி அண்ணார்ந்து கொண்டு குஞ்சின் சொண்டை வாயருகில் கொண்டு வருவாள். நன்கு மெல்லப்பட்டுச் சிறுதுகள்களாக்கப்பட்ட தானியங்களைப் புறாக்குஞ்சு கொத்திக் கொத்தி உண்ணும். அவளுடைய நாக்கிலோ உதட்டிலோ சொண்டு நோகும்படி பட்டுவிடக்கூடாதென்ற என்ற கரிசனையும் நிதானமும் புறாக்குஞ்சிடமிருக்கும். இவர் அடிக்கடி அவள் புறாக்குஞ்சுகளுக்கு உணவூட்டுவதைப் பார்த்துக் கொண்டிருப்பார். அவளுடைய அன்பில் உருகி அவருடைய கண்களில் இருந்து கண்ணீர் வழியும். பிறகு அந்தக் கொடுமை மிக்க நாட்கள் தோன்றின. யாத்திரீகம் முடிந்தது.

எல்லாம் முடிந்து போனது.

அவர் உயிர்த்த செய்தி நாடெங்கும் உண்மையும் வதந்தியுமாக நம்பப்பட்டது. அவளுக்கு மட்டுமே வழங்கப்பட்ட அந்த உயிர்த்தலின் காட்சியை அவள் நிரந்தரமாக மனதுக்குள் இருத்திக்கொண்டாள். தேவகுமாரனின் பொருட்டுத் தவவாழ்வினுள் நுழைந்தாள். உயிர்த்தலின் செய்தி பரவத்தொடங்கிய பத்தொன்பதாவது நாள் தேவி மரியாள் குமாரனின் பேருயிரை பரலோகத்திற்கு எடுத்துச்செல்ல புறாக்களில் ஒன்றை பலியிடவேண்டும் என்று இவளிடம் சொன்னாள். அவரைப் பரலோகத்திற்கு எடுத்துச்செல்ல அந்தப் புனித பலியினால் முடியுமென்றாள். இவள் மரியாளிடம் எதுவும் சொல்லவில்லை. தனது பிரியம் மிக்கத் தோகைப்புறாவை எடுத்துக்கொண்டு மரியாளுடனும் ஜோசேப்புடனும் பெரிய மலைக்குச்சென்றாள். இவளைப் பிரார்த்தனைக்கு அமர்த்தி விட்டு, மரியாளும் கணவனும் புறாவைக் கல்லின் மீது இருத்தி அதன் இதயத்தைப் பிளந்தனர். பிரார்த்தனையில் மூடியிருந்த இவளுடைய கண்களுக்குள் ஒரு முழு ஒளி தோன்றியது தோகைப்புறாவின் இறகுகளைத் தன் மார்புகள் மீது இவள் உணர்ந்தாள். காற்றில் மிதப்பது போல உடல்

எடை இழந்தது. எதோ ஒன்று முதுகில் ஏறி இவளை அணைத்துக்கொள்வது போலும் இவளுடலில் தோன்றிய இறக்கைகள் அசைவதைப்போலவும் உணர்வெழுந்தது. அவருடைய வியர்வை வாசனை நாசிக்குள் எழுந்தது. புறாக்களின் குறுகுறுப்பு ஒலியின் பின்னணியில் அவரின் குரல். தேகம் காற்றையுணர்ந்தது. புன்னகையரும்பிய முகமெழுந்தது. அன்புமிக்க மக்ரலின் உடல் பிரார்த்தனை கலையாத சொரூபமாக நிலத்தில் சாய்ந்தது.

இவன் கதையை இவ்வாறு முடிக்க, அவளுடைய கண்களில் இருந்து கண்ணீர் பிரவாகமாகக்கொட்டியது. ஒவ்வொரு தடவையும் அவன் அதைச்சொல்லும் போதும் அவள் அவ்வாறுதான் அழுவாள். அவளுடைய மார்பு விம்மிவிம்மித்தாழ்ந்தது. வெளியே அவள்வீட்டு புறாக்கூட்டிலிருந்து குறுகுறுப்புச் சத்தமும் இறக்கைகள் காற்றில் உதைபடும் சத்தமும் கேட்டபடியிருந்தது. கண்ணீராலும் உடலில் அயர்ந்த வியர்வையாலும் குளிர்ந்து போன அவளுடலை அணைத்துக்கொண்டான்.

*2*

காலைப் பிரார்த்தனை முடிந்ததும் பிரார்த்தனைக்கூடத்தை விட்டு இறங்கி நேராக வகுப்பை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். வகுப்பில் இவன் மட்டும் கிறிஸ்வதப் பையன். எனவே கிறிஸ்வக் கூட்டுப்பிரார்த்தனை முடிந்ததும் இவன் தனியாகவே வகுப்பிற்குச்செல்வான். இந்துக் கூட்டுப் பிரார்த்தனை கொஞ்சம் வேளைக்கே முடிந்து விட்டதால் எல்லா மாணவர்களும் வகுப்புகளுக்குத் திரும்பியிருந்தனர். காலை நேர மித வெயிலின் சூட்டைத் தவிர்க்க நினைத்து, பிரதான பெரிய கட்டிடத்தின் கொரிடோரில் ஏறி நடந்தான். இவன் படிக்கும் உயர்தர வகுப்புகள் பள்ளிக்கூட வளாகத்தின் வடக்குப் பக்கம் நூலகத்திற்கு அருகில் இருந்தன. அப்போது பின்னால் வந்த மற்ஸ் படிக்கும் மிதிலன் காதுக்குக் கிட்ட வந்து. "மச்சி புறா எப்ப வரும்?"

"டேய் கத்தாதடா பின்னேரம் வா போட்டோ கொப்பி அடிக்கோணும் ஐ.சி.ரி. பாடத்துக்குத் தான் லாப்புக்கப் போகலாம்" என்றான் மெல்லிய குரலில். தொடர்ந்து "இந்தமுறை பக்கம் கூட விலை இருநூறு" என்றான். அதற்கு மிதிலன், "காசு பிரச்சினையில்லை மச்சான் புறா எப்ப வரும் எண்டு இருக்கு" என்று சொல்லி சிரித்து விட்டு நகர்ந்து சென்றான். பத்து 'பி' வகுப்பைக்கடக்கும் போது அவளுடைய குரல் கேட்டது. அப்போதுதான் வகுப்புக்குள் நுழைந்திருப்பாள். பிள்ளையள் சொன்ன குட்மோனிங்கிற்குப் பதில் குட்மோனிங் சொல்லிக்கொண்டிருந்தாள். அவன் வகுப்புப் பக்கம் திரும்பிப் பார்த்தபடி நடந்தான். அவள் இவனைப்பார்த்தாள். "குட்மோனிங்" என்றான். "வெரி குட்மோனிங்" என்று புன்னகைத்தாள். இரவும் அழுதிருக்கிறாள். கண்கள் வீங்கியிருந்தன. வகுப்பைக்கடந்து நடந்தான்.

அவள் வீட்டுப் புறாக்களின் குறு குறுப்புச்சத்தம் காதுக்குள் கேட்டது. முதன் முதலில் அவள் அந்தப் பள்ளிக்கூடத்திற்கு மாற்றலாகி வந்த போது இவனுக்கு அவள் அறிமுகமாவதற்கு வாய்ப்புக்கிடைக்கவில்லை. இரண்டாயிரம் பிள்ளைகளும், நூற்றுப் பன்னிரண்டு ஆசிரியர்களும் உலவும் பள்ளிக்கூடத்தில் புதிதாக வந்திருக்கும் அவள் இவனுக்கு அறிமுகமாக வாய்ப்பு ஏற்படவில்லை. அப்போது இவன் பதினொராம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்தான். மாணவர் மன்றம் நடத்திய கதைசொல்லும் போட்டியில் இவன் கதை சொல்வதற்குப் போயிருந்தான். கொடுக்கப்படும் தலைப்புகளுக்கு உடனே தயார் செய்து ஒரு கதை சொல்ல வேண்டும். மூன்று நடுவர்களில், இவள் நடுவில் அமர்ந்திருந்தாள். இவன் கொஞ்சம் பதட்டத்துடன் போய் நின்றான். அவள் சட்டென்று "புறா" என்றாள். இவன் மக்ரலினின் அறுபதாயிரம் புறாக்களின் கதையைச் சொல்லத்தொடங்கினான்.

போட்டி முடிந்து அரங்கை விட்டுவெளியே வந்த பிறகு இவனைக் கூப்பிட்டுக் கதை நன்றாக இருந்தது எனக்குப் பிடித்திருந்தது என்றாள். இவனைப்பற்றி விபரம் விசாரித்தாள். அவளுக்கு நல்ல வாசிப்புப் பழக்கமிருந்தது. தன்னிடம் புத்தகங்கள் இருப்பதாக சொன்னாள் வேண்டுமென்றால் தருவதாகச்சொன்னாள். அவளுடைய பாராட்டும் அழகும் இவனுக்குப்பிடித்துப்போனது. அன்று தொடங்கி நட்பு கொஞ்சம் கொஞ்சமாய் வளர்ந்தது. இவனுடைய வாசிப்பும் எழுத்தும் இவளுக்கு மிகப்பிடித்திருந்தது. பத்திரிகைகளில் வந்த தன்னுடைய கதைகளை எடுத்துவந்து இவளுக்குக் காட்டினான். நான்கைந்து கொப்பிகள் நிறைய எழுதி வைத்திருந்த கதைகளைக் கொண்டுவந்து கொடுத்தான். அவள் ஆர்வமாகப் படித்து விட்டுப்பாராட்டினாள். அவனுடைய கதைகளை யாரும் அவள் அளவிற்குப் பாராட்டியதேயில்லை. அவளுடைய ஃபோன் நம்பரை வாங்கிக்கொண்டான். முதலில் மேசேஜ்கள் மட்டும் பரிமாறிக்கொண்டனர். கொஞ்ச நாட்களில் இரவில் பேசிக்கொள்ளவும் ஆரம்பித்தனர். உடலையோ மனதையோ வார்த்தைகளையோ கட்டுப்படுத்த முடியாத இரவுகள் இருவரையும் ஆக்கிரமிக்கத்தொடங்கின.

இவனை வீடு வரை கூட்டிச்சென்றாள். வீட்டில் இவளும் பக்கவாதம் தாக்கிய இவளுடைய தகப்பனும் தான் இருந்தனர். ஏறக்குறைய கோமாவில் இருந்தார் அவர். ஒவ்வொருநாளும் ஒரு தனியார் வைத்தியசாலை தாதி வந்து செலைனை ஏற்றிவிட்டு இதர செக்கப்களைச் செய்து விட்டு ரிப்போட் எழுதிக்கொண்டு போவாள். அதைத்தவிர ஊரில் ஒரு வயதான அம்மாவை, தகப்பனைப் பராமரிக்கச் சம்பளத்திற்கு அமர்த்தியிருந்தாள். அவள் வீட்டில் ஒரு பெரிய புறாக்கூடு இருந்தது. அழகாகச் சட்டங்களாலும்

நெற்றாலும் அடிக்கப்பட்டுத் தென்னம்பொச்சுகளைக் குடைந்து கூடுகள் அடுக்கப்பட்டுப் புறாக்களுக்குத் தீவனமும் தண்ணீரும் வைக்க ஒரு சின்ன மேடை கட்டப்பட்டுமிருந்தது. அவளிடம் நிறையப் புறாக்கள் இருந்தன. புறாக்கள் தனக்கு மிகவும் பிடிக்கும் என்றாள். அதுதான் அண்டைக்குப் புறா என்று தலைப்புத்தந்ததோ? என்று கேட்டான். கையில் இருந்த தேனீர் கோப்பையின் விளிம்பைத்தடவிக்கொண்டு உணர்ச்சியற்ற புன்னகையைக் கசியவிட்டாள்.

"புறா எல்லாம் அவரின்ரை" என்றாள். இவன் விளங்காமல் அவளை நிமிர்ந்து பார்த்தான்.

"யாற்ர?"

எங்களுக்கு டிவோஸ் ஆகீட்டுது. கீழ்ச்சொண்டைப் பற்களால் கடித்துக்கொண்டு விம்மலை அடக்கிக்கொண்டே நிமிர்ந்தாள். அப்போதுதான் அவளுக்கு மணமாகிவிட்டது அவனுக்குத்தெரியும். இத்தனை இரவுகளிலும் பகல்களிலும் ஒருநாள் கூடச்சொன்னதில்லை. உடலிலும் அதற்கான எந்த ஆபரணத்தையோ சிவப்புப் பொட்டையோ அவன் கண்டதில்லை. யோசித்தவாறே பார்வையை நிமிர்த்தினான். அவள் கண்கள் நீர்நிறைந்த குமிழியைப்போல் நீர் திரண்டிருந்தன. இவன் பார்வை அவள் கண்களைச்சந்திக்க அந்தக் குமிழி உடைந்து கண்ணீர் வழிந்து இறங்கியது.

"கலியாணமாகியதில் இருந்து அவருக்கு என்னிலை சந்தேகம். எனக்குப் பின்னால திரிஞ்ச நாயொண்டு தன்னை நான் ஏமாத்தீட்டன் எண்டு அவரிட்டச் சொல்லியிருக்கு அவர் என்னட்ட அதைப் பற்றிக் கலியாணம் ஆகி நாலஞ்சு மாசம் கழிச்சு ஒரு நாள் சண்டை வரேக்க தான் சொன்னவர். நான் அழுது குழறிப்பாத்தன். நம்பேல்ல இப்பிடிச் சண்டை முத்திச்சுது ஒவ்வொருநாளும் சண்டைதான். நான் சின்னல்ல இருந்து நல்லா விளையாடுவன். குண்டு, தட்டு, ஈட்டியெண்டு சம்பியன் எல்லாம் வாங்கியிருக்கிறன். எங்கட பள்ளிக்கூடத்தில் கம்பசில எல்லாம் நான் தான் நெட்போல் டீம் கப்டன். அதால வயித்துப்பக்கத்தில தோல் ஈஞ்சு மூண்டு அடையாளம் இருந்தது. அதோட அப்ப நான் கொஞ்சம் குண்டு கலியாணம் பேச தொடங்கினால் பிறகு கொஞ்சம் மெலிஞ்சனான் அதோட இந்தத் தழும்புகள் பெருத்திட்டுது. அதைக் காட்டி ஒரு நாள் "இது பிள்ளை பெத்தவளவைக்குத் தான் இருக்கும் பிள்ளையைப் பெத்து எங்கையடி எறிஞ்சனி" எண்டு கேட்டார். அதுக்கு மேல என்னால அவரோட வாழ ஏலாது எண்டு சொல்லிட்டன். அண்டைக்குப் பெரிய சண்டை, இது எங்கட சீதனவீடு "உன்ர வீட்டில நான் இருக்கமாட்டனடி" எண்டு வெளிக்கிட்டுப் போட்டார். அவர் மிச்சம் விட்டிட்டுப் போனது புறாக் கூடும் புறாவும் மட்டும் தான். இண்டைக்கு டிவோஸ் ஆகி நாலு வருசமாச்சு" என்றாள். கண்களை லேஞ்சியால் ஒற்றியெடுத்தாள். இமைகளில் எல்லாம் சிறு

சிறு குழல்களாய் மாறிக் கண்ணீரை கொட்டுகின்றதோ எனுமளவிற்குக் கன்னத்தை ஈரம் நனைத்துக்கொண்டேயிருந்தது.

இவன் அவளருகில் போய் அவளுடைய கைகளை ஆதரவாகப்பற்றிக்கொண்டான். அப்படியே அவளைத் தோள்களில் சாய்த்தான். அவள் கைகள் வெடவெடத்தன. வெளியே புறாக்கள் அரண்டு பறக்கும் சத்தமும் குறுகுறுப்பு சத்தமும் கேட்கத்தொடங்கியது. மழை இன்னும் வலுத்தது.

அவள் பற்றிய யோசனையோடு நடந்தவனைப் பெடியளின் குரல் மறித்தது. அவர்களும் "புறா எப்ப வரும்" என்று கேட்டார்கள். அவர்களிடம் பின்னேரம் தாறன் ஆள்காட்டாதேங்கோடா" என்று கடிந்துகொண்டே நகர்ந்தான். இவன் நடந்து போவதை வகுப்பறைக்குள் இருந்து அவளுடைய கண்கள் கவனித்தபடியிருந்தன. முகம் முழுக்கப் புன்னகையிழைகளுடன் பிள்ளைகளுக்குப் பாரதியார் பாடல்களைப் பாடிக்காட்டிக்கொண்டிருந்தாள்.

*3*

ஏழாம் பாட 'பெல்' அடிக்கும் போது இவள் பாடத்தை முடித்துக்கொண்டு அதிபர் அறையை நோக்கிப் போனாள். எட்டாம் பாடம் அவளுக்குப் பாடமில்லை. நாளைக்கு விடுமுறை வேண்டும் என்று எழுதிக்கொடுக்க அதிபர் அறையை நோக்கி நடந்துகொண்டிருந்தாள். அதிபர் அறைக்குள் நுழைய வாசலில் நான்கைந்து வெள்ளைக் காற்சட்டை அணிந்த ஏ.எல். மாணவர்கள் லைனில் முட்டுக்காலில் இருந்தனர். இவள், அவர்களை ஏதேச்சையாகக் கடந்து உள்ளே நுழையும் போதுதான் இவனும் முட்டுக்காலில் தலையைக்குனிந்தபடி நின்றிருப்பது தெரிந்தது. இவள் சட்டென்று அதிர்ச்சியாக அவனை ஏதோ கேட்கப்போனாள். அப்போது அதிபர் வேதநாயகனின் கனத்த குரல் ஒலித்தது.

"மிஸ் பெடிபிள்ளையள் என்ன செய்திருக்கினம் தெரியுமோ?"

"என்ன நடந்தது சேர்?" தலையை நிமிராமல் இருக்கும் இவனைப் பார்த்தபடியே கேட்டாள்.

"எல்லாம் பிஞ்சில முத்திட்டுதுகள்"

"என்ன சேர் நடந்தது" குரலில் பதட்டம் ஏறியிருந்தது.

"செக்ஸ் கதை எழுதி எங்கட கொம்பியூட்டர் லாப்பிலையே போட்டோ கொப்பி அடிச்சு வித்திருக்கினம்" இவள் அதிர்ச்சியை ஜீரணிக்கத் தொடங்க அதிபர் தொடர்ந்தார்.

"அதுவும் ஐயாதன் கதை எழுதி இருக்கிறார் மற்றவை அவரிட்டக் காசு குடுத்து வாங்கியிருக்கினம். வகுப்பில வச்சுப்படிக்கேக்க சிவசீலன் சேர்தான் பிடிச்சிட்டார் ஆக்களை" என்று இவனைக்காட்டி ஏளனமாகத்தொடங்கி

இவனுடைய தலைமுடியைக் கொத்தாகப்பற்றி ஒரு சுழற்றுச் சுழற்றிக்கொண்டே கோபமாக வார்த்தைகளை முடித்தார். இவளுக்கு நெஞ்சுக்குள் ஏதோ ஒரு நரம்பை யாரோ பிடித்து இழுப்பதைப்போல் இருந்தது குப்பென்று வேர்த்தது.

அதிபர் மேசையில் இருந்த ஒரு கட்டு ஏ4 பேப்பரைக்காட்டினார். இவள் அதில் ஒன்றை எடுத்து பார்த்தாள் இவனுடைய கையெழுத்துதான். இவனைப்பார்த்தாள், இவன் தலை நிமிரவேயில்லை. பார்வையை மீண்டும் பேப்பருக்கு நகர்த்தினாள், எழுத்துக்கள் மேல் கண்கள் இறங்கி ஓடத்தொடங்கின.

புறா
இதழ் -13
விலை –ரூபா 200
பிரதம ஆசிரியர் – வந்திய தேவன்
என்று இருந்த பெரிய தடித்த எழுத்துகளின் கீழ் கதை தொடங்கியது
மாலதி டீச்சர் – (சென்றவாரத் தொடர்ச்சி)
அவளுடைய புருசன் இடைச்சேலையை விலக்கினான். அவளுடைய தொப்புளுக்கு கீழாக மூன்று கோடுகள். கறள் கத்தியால் வெட்டிய காயங்கள் ஆறியதனைப்போலத் தசை ஈஞ்ச காயங்கள். அவனுக்குக் கோபம் தலைக்கேறியது. "எவனுக்கடி பெத்தனி வேசை?" என்று கேட்டான்.

எழுத்துக்கள் இறங்கி நெஞ்சுக்குள் ஓடி இதயத்தை நெருங்கின. ஒரு பெரிய பாம்பு, புறா ஒன்றை தன் உடலால் சுற்றி நெரித்துத்தன் அகலவாயைத்திறந்து அதை முழுங்குவதைப்போல இதயத்தைச் சுற்றியிறங்கிய வார்த்தைகள் அதனை நெரித்து விழுங்கத்தொடங்கின.

○

# மரநாய்

செல்லக்கிளியனின் சிரேஷ்ட புத்திரன் பிரசாந்தனை ஊர்ப்பெடியள் கூப்பிடும் 'அம்பத்திப்பத்து' என்ற பட்டப்பெயரால் அழைப்பதுதான் அவனைப்பற்றிய மேலதிக தகவல்களை எங்களுக்குத் தரும் எண்டுறதால நாங்களும் அவனை அம்பத்திப்பத்து எண்டே கூப்பிடுவம். இவனுக்கு அம்பத்திப்பத்துப் எண்ட பேர் ஏன் வந்தது என்பது பற்றின சரியான விபரம் இன்னும் தெரியவராட்டியும் ரண்டு வருசத்துக்கு முதல் பெரிய குளத்தின்ர தெற்குப்பக்கம் பெட்டையள் குளிக்கிற இடத்திலை நடந்த ஒரு சம்பவத்துக்கும் அம்பத்திப்பத்து என்ற திருநாமம் ஏற்படுவதற்கும் ஏதோ சம்பந்தமிருப்பதாக அந்த ஊர் இளந்தாரிப்பெடியள் சொல்லுவாங்கள். அவங்கள்ள அம்பத்திபத்துவின் கூட்டாளிமார் சிலருக்கு விபரம் தெரிஞ்சாலும் அண்டையான் சம்பவத்திலை அவையளும் சம்பந்தப் பட்டிருக்கிறதாலையும் விசயத்தை வெளியிலை விடுறதில்லை.

அம்பத்திப்பத்து ஊருக்க இருக்கிற ஒரு றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில்ஏ.எல்.படிச்சுக்கொண்டிருந்தான்.ஊரிலைவேட்டைக்காரன் செல்லக்கிளியனை எல்லாருக்கும் தெரியும். ஊருக்கு நாக்கு ருசிக்க, மான், மரை, முயல் இறைச்சியும் கொண்டு வாறது செல்லக்கிளியனும், அவன்ர நாலு நாயளும் தான். செல்லக்கிளியனிட்ட கேட்டால் சிங்கன், கறுத்தான், ரோபன், வால்வெட்டியோட சேர்த்து தன்னட்ட ஐஞ்சு நாய்கள் நிக்குது எண்டுவான். "நாலு நாயும் சீவியத்துக்காவது வேலை செய்யுது ஐஞ்சாவது நாய் வீட்டிலை சோத்துக்கோப்பையை நக்கீட்டு ஒழுங்காய் பள்ளிக்கூடம் கூடப் போகாம ஊரிலை இருக்கிற காவாலி கழிசடையளோட சேந்து மேஞ்சு கொண்டு திரியுது" எண்டு அம்பத்திப்பத்துவை நாலஞ்சு தூசணமும் சேத்துத் திட்டிக்கொண்டு போவான்.

செல்லக்கிளியன்ர மனிசி கீதா இடப்பெயர்வுக்க வலிப்பு வந்து செத்துப்போனாள். செல்லக்கிளியன் காட்டுக்கரை முனீஸ்வரன்

கோயிலடி பவளத்தோட தொடுப்பில இருக்கிறான் எண்டு ஊரில கதை. அதைபற்றி ஆரும் விசாரிச்சா "வேசை மக்களே அவளென்ர தங்கச்சி" முறை எண்டு சொல்லீட்டு முகத்துக்கு நேர பாய்ஞ்சு வருவான். எந்த முறையிலை தங்கச்சியெண்டு ஆரும் கேட்டதாய் தகவல் இல்லை. அம்பத்திப்பத்துவுக்குப் பிறகு செல்லக்கிளியனுக்குப் பிறந்ததுகள் ரெண்டு கூப்பன். ஒண்டு சயன்சிகா அம்பத்திப்பத்துவை விட ஒரு வயசு இளையவள். மற்றது கடையன் நிசாந்தன். நிசாந்தன் அப்ப ஆறாம் வகுப்புப் படிச்சுக்கொண்டிருந்தான். பிள்ளையளைப் பற்றிக்கேட்டால் "இளையதுகள் ரண்டும்தான் எனக்குப் பிறந்ததுகள். உந்த வேசமோனுக்கும் என்ர குஞ்சாமணிக்கும் சம்பந்தமில்லை" எண்டு புழுத்தபாட்டுக்குத் திட்டுவான். மாசத்திலை ஒருக்கா எண்டாலும் பள்ளிகூடத்தில அதிபர் செல்லக்கிளியனை கூப்பிட்டு அந்த மாசத்துக்குரிய அவனுடைய புத்திரன் பாடசாலை, பாடசாலைக்குவெளியேசெய்தலீலைகளைப்பட்டியலிடுவார். பள்ளிக்கூட வாசல்ல நிக்கிற பூவரசிலை கம்ப முறிச்சு அம்பத்திப்பத்துவின் குண்டிலை விளாசத்தொடங்கினான் எண்டால் அம்பத்திப்பத்து கதறுவதை ஊரே பிராக்குப்பாக்கும். டீச்சர்மாரிட்ட இவன்ர படிப்பின்ர லச்சணத்த கேட்டா, தலையிலை கைவச்சுக்கொண்டுதான் ஒப்பிப்பினம். அதுவும் இந்து நாகரிகம் படிப்பிக்கிற வள்ளிநாயகி டீச்சரிட்ட அம்பத்திப்பத்துவின் பேரைச் சொன்னாலே கண்ணெல்லாம் சிவந்து அழத்தொடங்கீடுவா.

அம்பத்திப்பத்து ஏ.எல். முதலாம் தவணையில படிச்சுக்கொண்டிருந்தான். கத்தோலிக்கப் பள்ளிக்கூடம் எண்டாலும் சைவப்பிள்ளையள்தான் கனக்க படிக்குதெண்டு அதிபர் வலத்திட்ட சைவசமயமும் இந்து நாகரிகமும் படிப்பிக்கக டீச்சர் வேணுமெண்டு கேட்டிருந்தார். ஒரு விஜயதசமி நாளிலை பள்ளிக்கூடத்துக்கு ஏ.எல்.க்கு இந்துநாகரிக மும். சின்ன வகுப்புகளுக்குச் சைவ சமயம் படிப்பிக்க எண்டு வள்ளிநாயகி சுப்ரமணியம் அப்போய்மெண்ட் ஓடரோட வந்து சேர்ந்தா. தன்ர 'சுப்பர் கப்' மோட்டச்சைக்கிள்ள வந்து இறங்கின அவாவைப் பார்த்ததும், வடிவான டீச்சர் எண்ட பதவியை ஆங்கிலம் படிப்பிக்கிற மலர் டீச்சரிட்ட இருந்து பறிச்சு வள்ளிநாயகிக்குக் கொடுப்பதாகச் சினேகிதர் கூட்டத்துக்கு அறிவிச்சான் அம்பத்திப்பத்து. அதோட அண்டக்குக் காலமை சகலகலாவல்லி மாலை பாடிக்கொண்டிருந்த நேரம், சரஸ்வதிப் படத்தைப் பக்தியோடு பார்த்துக்கொண்டிருந்த வள்ளிநாயகியின் இடப்பக்கமாய்த் தூணிலை சாஞ்சு இருந்தான் அம்பத்திப்பத்து. எல்லாரும் சகலகலாவல்லி பாட, இவன் பக்கவாட்டில் தெரியும் அவளின் நெஞ்சையே கனநேரமாய்ப் பார்த்தவன், சசிக்குமாரின் காதுக்க "நல்ல வடிவான கோழியடா" என்றான்.

வள்ளிநாயகிக்கு 'டைம்டேபிள்' போட்டு குடுத்தார்கள். முதல் வகுப்பே ஏ.எல்.க்கு. வகுப்பில எல்லாரிடமும் கனிவாகப்பேசினா. தான் முதல்

வவுனியா டவுனுக்க இருக்கிற பள்ளிக்கூடத்தில படிப்பிச்சதாய் சொன்னா. சேவை நோக்கத்திலை சின்னப் பள்ளிகூடத்துக்குப் படிப்பிக்க வந்ததாய் பெருமிதமாக முகத்தை வச்சுக்கொண்டா. அவான்ர அப்பாவும் அம்மாவும் வவுனியாவில இருந்தினம். இஞ்ச வாசிகசாலைக்குப் பக்கத்தில இருக்கிற உடையாற்ற தென்னை வளவு வீட்டிலை வாடகைக்கு இருக்கிறதா சொன்னா. அதிலைதான் முதல் ஈ.பி.காரரின்ர காம்ப் இருந்ததெண்டும் தலைவர், ரணிலோட ஒப்பந்தம் போட்ட பிறகு வவுனியாக்கு இயக்கம் வரத்தொடங்கினதும் காம்ப்பை எடுத்திட்டாங்கள் எண்டு பிரகலாதன் அம்பத்திப்பத்துவின் காதைக்கடித்தான்.

பிள்ளையள் எல்லாருக்கும் அவளை நல்லாய் பிடிச்சுப்போச்சு. ஒவ்வொருத்தராக எழுப்பிப் பெயர் ஊர், ஒழுங்கை எண்டு எல்லாம் கேட்டாள். அம்பத்திப்பத்தின்ர முறை வந்தது. அது வரைக்கும் 'மிஸ்சை' மண்டைக்கண்ணால பாத்த அம்பத்திப்பத்து கையைக் கட்டிக்கொண்டு பௌவியமா எழும்பி நிண்டான்.
"உம்மட பேர் என்ன? எங்க இருக்கிறனீர்?"
இவன் பதில் சொல்ல வாயெடுக்க, முன் பக்கம் இருந்த தனஞ்சயன், "அம்பத்திப்பத்து டீச்சர்"
வகுப்பே சிரிச்சது. இவனின் முகம் டக்கெண்டு மாறிட்டுது. வள்ளிநாயகிக்கும் சிரிப்பு வந்துவிட உதட்டுக்குள் சிரிப்பை அடக்கினத அம்பத்திப்பத்து கண்டிட்டான். வகுப்பைப் பாத்து முறைச்சிட்டு பேரைச் சொல்லிவிட்டு இருந்தான். பெல் அடிச்சுது வள்ளிநாயகி வெளிக்கிட்டுப் போக மேசைக்கு மேலால பாஞ்சு ஏறிப்போய்த் தனஞ்சயன் மூக்கிலை கையை மடைக்கி ஒரே குத்து. தனஞ்சயனுக்குப் பொய் மூக்கு உடைஞ்சு மேசையெல்லாம் ரத்தம்.

அடுத்தநாள் தனஞ்சயன்ர தாய் தேப்பனும், செல்லக்கிளியனும் அதிபற்ர ஒபிஸ் வாசல்ல சண்டை பிடிச்சுக்கொண்டு நிண்டினம். தனஞ்சயன்ர தேப்பன் அம்பத்திப்பத்துவைப் பள்ளிக்கூடத்தால 'சேட்டிபிக்கற்றிலை' சிவப்புப் பேனையால கீறிக் கலைக்க வேணும் எண்டு நிண்டார். செல்லக்கிளியன் தூசணத்தால திட்டிக்கொண்டு நிண்டான். தன்னைபட்டம் தெளிச்சதாலை தான் மூக்கை உடச்சனான் எண்டு செல்லக்கிளியனிடம் சொல்லித்தான் அம்பத்திப்பத்துத் தேப்பனைக் கூட்டிக்கொண்டு வந்திருந்தான். ஆனா, தனஞ்சையன்ர தேப்பனும் இன்னும் சில டீச்சர்மாரும் "உந்த போயை இஞ்ச வச்சிருந்தா மற்றவையையும் படிக்க விடமாட்டான்" எண்டு சொல்லிச்சினம். அதிபருக்கு அம்பத்திப்பத்துவைப் பள்ளிக் கூடத்தால கலைக்க முடியாத நிலமை. வலயத்தில தவணைக்கு ஒருக்கா அதிபர்கள் கூட்டம் நடக்கும். உங்கட பள்ளிக்கூடம் இந்த வருசம் என்ன செய்தது எண்டு கூட்டத்தில் கேட்கும்

போது "பிரசாந்தன் உயரம் பாயிறதிலை தேசியமட்டம் போயிருக்கிறார்" என்று ஆரம்பித்தே அதிபர் தன் பவுசைக்காட்ட வேண்டியிருந்ததால் அம்பத்திப்பத்துவின் குழப்படிகளைச் தாங்க வேண்டியிருந்தது. உயரம் பாயுறதிலை மட்டுமில்லை. மாகாணமட்டத்தில பள்ளிகூட உதைபந்து 'ரீம்' தொடர்ந்து இடங்களை அடிச்சுக்கொண்டு வர அம்பத்திப்பத்துவின் விளையாட்டுத் தேவையாக இருந்தது. படிப்பு அறவே வராமலவன் குழப்படிக்காரனாய் இருந்தாலும் கிறவுண்டுக்க இறங்கினால் சுழியன். அந்தப் பள்ளிக்கூடத்துக்கு அவன் தேவையாய் இருந்தான். தனஞ்சையனின் தேப்பனிடம் சமாளிச்சு அனுப்பினார் அதிபர். ஸ்ருடண்ட் உங்கட வகுப்பிலைதான் சண்டைபிடிபட்டு இருக்கினம் மிஸ் நீங்கள் கொஞ்சம் கவனமாய் இருந்திருக்க வேணும் எண்டு கடிந்துகொண்டார். இவள் முதல் நாளே பேச்சு வாங்கி விட்டோம் என்று ஸ்ராப் ரூமுக்க இருந்து கைலேஞ்சியை ஈரமாக்கினாள்.

அதுக்குப்பிறகு இவன் வள்ளிநாயகியோட ஏதாவது வாய் காட்டிக்கொண்டும், கேள்வி கேட்டுக்கொண்டும் இருப்பான். கொப்பி காட்டுற சாக்கில் அவளுக்கு நெருக்கமாக நின்று கண்களை அலைய விடுவான். இவன்ர சகாக்கள் இவன் கொப்பிகாட்ட தன்ரை மேசைக்கு வந்தால் ஏதோ சொல்லிச் சிரிப்பதை வள்ளிநாயகி கண்டிருக்கிறாள். சில நேரங்களில் அவனுடைய பார்வையின்ர விசமத்தை உணர்ந்திருக்கிறாள். "தள்ளி நில்லும்" எண்டாலும் ஏதாவது சாக்குச் சொல்லிக் கிட்ட வருவான். மலர் டீச்சருடன் கதைக்கும் போது அம்பத்திப்பத்து பற்றிச்சொல்ல, "அது உவடத்துக் கிழடுகளோடை சேந்து பிஞ்சிலை வெம்பினது" எண்டு சொல்லி தன்னெட்டையும் அப்படித்தான் அவன் நடந்துகொள்ளுறவன் எண்டு அம்பத்திப்பத்தின்ர சாதிப்பேரையும் சொல்லித்திட்டினா.

நாலாம் பாடம், வள்ளிநாயகி பல்லவப்பெருமன்னர் காலத்திலை தோன்றின சமய இயக்கங்கள்ள இயங்கின சமயக்குரவர்கள் பற்றி பாடமெடுக்கத் தொடங்கினா. ஞானசம்பந்தனின் முதல் தேவாரம் எதுவென்று கேட்க வகுப்பே "தோடுடைய செவியன்" எண்டு கத்திச்சுது. அது பாடப்பட்ட சந்தர்ப்பம் கேக்க, முன் வாங்கில இருந்த டிலோஜி, சம்பந்தனை அப்பா குளக்கரைல விட்டிட்டுப் போனதிலை குழந்தை அழ, சிவனும் உமையும் வந்து குழந்தைக்குப் ஞானப்பாலை பருக்கியதைச் சொல்லி முடித்தாள். டீச்சர் அவளுக்கு ஒரு 'வெரிகுட்' சொலீட்டுப் பல்லவர்காலத் தேவாரங்களைப்பற்றிச் சொல்ல வாயெடுத்தாள். அப்ப அம்பத்திப்பத்து எழும்பி "மிஸ் எனக்கொரு சந்தேகம்" எண்டான். டீச்சரும் வகுப்பும் அவனை ஆச்சரியமாய் பார்த்தது. வள்ளிநாயகி "கேளுமப்பன்" என்றாள்.

"மிஸ் ஞானசம்பந்தருக்கு உமாதேவியார் ஞானப்பால் குடுத்தவா எண்டு

சொல்லினம் எல்லோ அவா என்ன பால் குடுத்தவா?" இவளுக்கு இவன் ஏன் இப்பிடிக்கேக்கிறான் எண்டு விளங்காமல், "சிவன்ர வாகனம் மாடுதானே அதிலை கறந்து குடுத்தவா" என்றாள் எரிச்சலாக. இவன் விசமமாகச் சிரித்துக்கொண்டு "மிஸ் அது எருத்தன் மாடு எல்லோ" எண்டான். அப்பத்தான் வள்ளிநாயகிக்கு அவன்ர விசமம் விளங்கிச்சு. வகுப்பில பின் வாங்கில இருக்கிற இவன்ர கூட்டாளிமார், பெரிசாச் சிரிச்சாங்கள். சில பிள்ளையளுக்கு விளங்கேல்ல. வள்ளிநாயகிக்குக் கோவம் தலைக்கேறி கண்ணீர் முட்டீட்டு.

"பிரசாந்தன் வெளியிலை போம்" என்றாள் கோவமாக. இவன் அதை எதிர்பார்க்கவில்லை. இவன் வள்ளிநாயகியிடம் ஏன் நான் என்ன அப்பிடிப் பிழையா கேட்டனான் எண்டு யாரிக்கு நிண்டான். வள்ளிநாயகி அழுதுகொண்டே 'ஸ்ராப் ரூமு'க்கு ஓடினா. அண்டைக்கு அதிபர் வரேல்ல, வைஸ் பிரின்சிப்பல் ரீமல்டாவிடம் மலர் டீச்சர், வள்ளிநாயகியைக் கூட்டிக்கொண்டு போனா. வள்ளிநாயகி அழுதழுது சொன்னவை இவைதான்.

"மிஸ் அந்தப் பெடியன் சரியான குழப்படி டபிள் மீனிங்கிலை கதைக்கிறான், வயசுக்கு மீறின கதையள், படிப்பிக்கும் போது அங்க இஞ்சையெண்டு பாக்கிறது. பக்கத்தில் இருக்கிற சினேகிதன்களோட என்னைக் காட்டி ஏதோ சொல்லுறதெண்டு சரியான மோசமாக் கிடக்கு" எண்டு அண்டைக்கு வகுப்பிலை நடந்ததையும் சொல்லி முடிச்சா. தயவுசெய்து எதாவது செய்யுங்கோ என்று அவளிடம் கெஞ்சினாள். அவவோட சேர்ந்து மலர் டீச்சரும் தன் பங்குக்கு ஒத்துப்பாடினா.

"அதிபர் நாளைக்கு வந்து விசாரிப்பார் அதுவரைக்கும் அந்தப் போய ஒபிஸ் வாசல்ல முட்டுக்கால்ல இருத்தப்போறன்" எண்டு சொல்லி, தமிழ் படிப்பிக்கிற ஞானசம்பந்தமூர்த்தி வாத்தியாரிட்ட அம்பத்திப்பத்துவை விசாரிக்கச்சொன்னா. ஞானசம்பந்தமூர்த்தி வாத்தியார் படு கோவக்காறர். நடந்த கதையைக் கேட்டதும் பெரிய மர அடிமட்டத்தால, அது முறியும் மட்டும் நெவிள் பறந்த அடி "உதோடா எங்கட தமிழ்பண்பாடு" கண்கள் சிவக்க அடிமட்டத்தை விளாசினார். பிறகு இவனைப் பள்ளிக்கூடம் முடியும் மட்டும் முட்டுக்கால்ல நிக்கச் சொன்னார். குனிஞ்சதலை நிமிராமல் மூக்கால் வழிந்த மூக்குச்சழியைச் சேட் கொலரை இழுத்து துடைத்துக் கொண்டு அண்டைக்கு ரெண்டரை மட்டும் அவன் ஒபிஸ் வாசல்லையே முழங்காலல நிண்டான். பள்ளிக்கூடமே வந்து இவனை வேடிக்கை பாத்திட்டுப் போனது.

அடுத்தநாள் காலமை பள்ளிக்கூடப் 'பாத்ரூம்' போன பொம்பிளைப்பிள்ளையள் ஸ்ராப் ரூமுக்கு ஓடிவந்து டீச்சர்மாரிட்ட ஏதோ சொல்ல டீச்சர்மார் ஓடிப்போச்சினம். பள்ளிக்கூடமே பாத்ரூம் சுவரை

வேடிக்கை பாத்தது. சுவரில் மலசல கூடம் என்ற பெயிண்ட் எழுத்துக்கும் "டொனேட்டட் பை ஜி.ரி.சட்." என்ற பெயருக்கும் இடையில் தேவாரம் எழுதப்பட்டிருந்தது.

பண் – காந்தார பஞ்சமம்
தாளம் - ஆதி
பாடப்பட்ட தலம் – றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்.
பாடியவர் – ரீமல்டா டீச்சர்

திருச்சிற்றம்பலம்
திருஞானச் சம்பந்த மூர்த்தி
திருவள்ளி டீச்சரை சுவரோடை சாத்தி
பண்ணாதை வேலையெல்லாம் அவவுக்குப் பண்ணி
பிடிச்சாரம் பெருங்கோழி
அவரொரு வாத்தி...

செல்லக்கிளியன் பள்ளிக்கூடம் அழைக்கப்பட்டு, பிரின்சிப்பல் அவனிடம் அம்பத்திப்பத்துவின் சேட்டிபிக்கட்டை குடுத்தார். செல்லக்கிளியன் வீட்ட வரும் மட்டும் ஒண்டும் கதைக்கேல்ல. வீட்ட சொம்பு தண்ணியை எடுத்துக் குடிச்சிட்டு, இவன்ர சேட்டிபிக்கற்றை கிழிச்சுப்போட்டான். "நாளேல இருந்து வேட்டைக்கு வெளிக்கிடு" சொல்லிட்டு சைக்கிளை எடுத்து கள்ளுத்தவறணைப் பக்கமா மிதிச்சான்.

*2*

அம்பத்திப்பத்துவுக்குப் பள்ளிக்கூடத்தால நிண்டது கவலை இல்லை. அடுத்தமுறை புட்போலிலை தேசிய மட்டம் போயிருக்கலாம் எண்ட அங்கலாய்ப்பும், பள்ளிக்கூடப் பெட்டையள் கண்டால் தலையைக் குனிஞ்சுகொண்டு போகவேணும் எண்டதும் தான் அவனுக்குக் மனவருத்தத்தைத் தந்தது. பள்ளிக்கூடத்தை விட்டாப் பிறகு காட்டுப்பக்கம் வேட்டைக்குப்போறதோட புதிசாத் திறந்த இயக்கத்தின்ர அரசியல் துறையிலை நிக்கிற பெடியளோட சேர்ந்து பரப்புரைவேலையளும், எடுபிடி வேலையளும் செய்தான். ஊர்ப் பெடியளிட்ட தான் மாணவப் புலனாய்வு எண்டு சொல்லி, வெருட்டி வச்சிருந்தான். பள்ளிக்கூடம் போகாமலே தானொரு மாணவப் புலனாய்வு எண்டு சொல்லுறதை பெடியளும் நம்பினதுதான் பெரிய பகிடி. போதாத குறைக்குப் பேஸில நிக்கிற பெடியன் குளிக்கேக்க கழட்டி வச்ச தகட்டையும் குப்பியையும் எடுத்துவந்து சிநேகிதர்மாருக்குத் தன்ரையெண்டு காட்டிட்டு, கீழ கிடந்ததெண்டு சொல்லிப் பேஸில குடுத்து நல்லபேரும் வாங்கினான். வள்ளிநாயகி, இவனை ரோட்டிலை கண்டால் முறைச்சுக்கொண்டு போவாள்.

மோட்டச்சைக்கிள் பள்ளத்துக்க இறங்கும் போது குலுங்குமவளின்ர தனங்களை வேணுமெண்டு உத்துப் பார்த்துச் சிரிச்சுக்கொண்டு போவான்.

வவுனியா டவுனுக்க இருக்கிற ஐஸ்கிறீம் கடை வாசல்ல மஞ்சள் பஞ்சாபி போட்டு வள்ளிநாயகி நிண்டதைக் கண்டான். கட்டுமஸ்தான நெடுவல், தாடிக்காரன் 'ஸ்பிலண்டர்' மோட்டச்சைக்கிள்ள வந்து இறங்கி, வள்ளிநாயகியைக் கூட்டிக் கொண்டு ஐஸ்கிறீம் கடைக்குள்ள போனான். இவனுக்கு நெடுவலின்ர முகத்தைக் கண்ட ஞாபகம். சரியா மட்டுப்படலை பேசாமல் விட்டிட்டு பஸ்சேறிட்டான். அடுத்தநாள் அன்னைபூபதியின்ர நினைவு தினமெண்டுறதாலை சந்தில கம்பு நட்டு கொடிகட்டி, கொட்டகை நிமித்தி, சோடிச்சுப்போட்டு சினேகிதப் பெடியளோட கதைச்சுக்கொண்டு நிக்கும் போது "எடேய் உன்ர ஆள் ஈபிக்காரனோட சுத்துறாளாம்" என்றான். இவனுக்குச் சட்டெண்டு விளங்கேலை. "ஆரடா?" எண்டு கேக்க. "உவள் தான் வள்ளி டீச்சர்" இவனுக்கு அப்பத்தான் பொறிதட்டினது. அந்தத் நெடுவல் தாடிக்காறன், ஈபிக்காரரின்ர காம்ப்புக்கு பொறுப்பா இருந்தவன். டீச்சருக்கு எப்பிடி அந்தக் காம்ப் இருந்த வீடு வாடகைக்குக் கிடைச்சதெண்டு அவனுக்கு அப்பத்தான் விளங்கிச்சு. விசயத்தைப் பொறுப்பாளர் தீரனட்டை போட்டுவச்சான். "இவனை ஒருக்கா வடிவா விசாரி என்னெண்டு பாப்பம்" எண்டு தீரன் சொன்னான். இவன் ஊருக்கப் பெடியளிட்ட இயக்கம் விசயத்தை விசாரிக்கச் சொல்லியிருக்கு, நான் தான் பொறுப்பு எண்டும் அவளையும், ஈபிக்காறனையும் கண்டா தனக்குச் சொல்ல வேணும் எண்டும் சொல்லி வச்சான். இரவு, சாந்தன்ர கோஸ்ரிக்குப் போட்டு வந்து களைப்பிலை படுத்தவனைக் காலமை ஏழு மணிபோலை செல்லக்கிளியன் உசுப்பினான்.

"வள்ளிடீச்சர் வீட்டு கோழிக்கூட்டுக்க மரநாய் பூந்திட்டாம் என்னெண்டு பாத்திட்டுவா எனக்குத் தோட்டப்பக்கம் வேலை கிடக்கு" என்று விட்டு செல்லக்கிளியன் சறத்தை மாத்தத்தொடங்கினான்.

வள்ளிச் ரீச்சர் எண்ட பேரைக்கேட்டதும் எழும்பி அரைக்காற்சட்டையைக் கொழுவிக்கொண்டான். தடத்தடியையும் கிறிஸ் கத்தியையை இடுப்புப் பெல்ட்டில் சொருகினான். உரப்பையையும் எடுத்துச் சைக்கிளில் வைத்தான். வெளியிலை செத்தைக்குப் பக்கத்தில மண்ணைப் பிறாண்டிப் படுத்துக்கிடந்த கறுத்தானைக் கூட்டிக்கொண்டு, வள்ளிநாயகின்ர வீட்டு வாசல்ல நிண்டு படலைக்கு மேலாலை எட்டிப்பாத்து பெல்லை அடித்தான். முன் பக்க யன்னலுக்கால அவளின் குரல்.

"நான் தான் டீச்சர் பிரசாந்தன்"

"உம்மடை அப்பா இல்லையோ?"

"அப்பாக்கு வேற அலுவல் இருக்காம்"

"உள்ளுக்கு வாரும்" இவன் படலையைத் திறந்து உள்ளுக்குப் போனான்.

போட்டிக்கோவில் சைக்கிளை ஸ்ராண்டை நிமித்தி நிப்பாடிவிட்டு, உரைப்பையையும் தடத்தடியையும் எடுத்தான்.

இவன் முகத்தை சாட்டை செய்யாமல், "பின்னாலை வாரும் அங்கதான் கோழிக்கூடு இருக்கு" எண்டாள். அவள் வீட்டில் வேலை செய்யும் நிர்மாலாக்கான்ர மேள் அங்க வர அவளிடம் கோழிக்கூட்டைக்காட்டச் சொல்லி விட்டு உள்ளுக்குப்போனாள். இவன் கதவுப்பக்கமாகம் பார்க்க, உள்ளுக்கு ஹோலில் சறம் கட்டினபடி வெறும் மேலோட ஈபிக்காரன் உதயன் பேப்பர் படிச்சதைக் கண்டான். அந்த ஈபிக்காரனைக் கண்டதும் இவனுக்குப் பதட்டம் ஏறினமாதிரி இருந்தது. அவன் பாத்திடுவானோ எண்டு நினைச்சுக்கொண்டு கோழிக்கூட்டுப்பக்கம் போனான். கோழிக்கூட்டுக்குப் பின் பக்கமாய் பாதை போச்சுது. பாதைக்குக் குறுக்காலை கொடி கட்டி உடுப்புகள் காயப்போட்டு இருந்தினம். கொடியில் வள்ளிநாயகியின் சீலையள், பஞ்சாபி, பாவாடை எண்டு காஞ்ச உடுப்புகள் கிடந்தன. அவளின்ர உள்சட்டையளும், பிறாக்களும் தொங்கின. அப்பத்தான் தோய்ச்சுப் போட்டிருக்க வேணும், ஈரமாயிருந்தன. அதுக்குப் பக்கத்தில சறமும் ஜட்டியும் காய்ந்தன. கொடியைத்தாண்டி கோழிக்கூட்டுப்பக்கம் போனான்.

நிலத்தில் இருந்து மண்ணால் அரைச்சுவர் கட்டியெழுப்பி இரண்டாய் பிரிச்சு அறையாக்கி நெற் அடிச்ச பெரிய கூடு அது. வலதுபக்கத்திலை கொஞ்ச கோழியள் நிண்டு வெருண்டு கொண்டிருந்தன. இடது பக்க கூட்டின்ர முன் பக்கக் கதவு கட்டைவைத்து முண்டுகுடுக்கப்பட்டிருந்தது. கதவுக்குப்பக்கத்தில இருந்த விரிசலுக்கும் கட்டைவச்சு அடைச்சிருந்தது. அதாலை தான் ஆள் உள்ளுக்குப்போனவர் எண்டு நிர்மாலாக்காவின் மேள் சொன்னாள். கூட்டின் மூலையில் பதுங்கி இருந்தது கறுப்பு மரநாய். தன் பிடரி மயிரைச் சிலிர்த்து, பல்லைக் காட்டி இவர்களை வெறிச்சுப் பார்த்து வெருட்டியது. கோழியளுக்கு மேல பாஞ்சிருக்க வேணும், கூடெல்லாம் கனக்கச் செட்டையள் சிதறிக்கிடந்திச்சுது. அதின்ர சிவப்புக் கண் இவனையே பார்த்தது.

"இரடி குஞ்சு வாறன்" எண்டு அதைப்பார்த்துச் சொன்னான் அம்பத்திப்பத்து. இவன்ர பார்வையும் அந்த மரநாயின்ர பார்வையும் கிட்டத்தட்ட ஒரே மாதிரி மாறினத நிர்மாலக்கான்ர மேள் கண்டாள். இவன் அவளிடம் கையில் கிடந்த தடத்தடியையும் உரப்பையையும் குடுத்திட்டு, தான் உள்ளுக்குபோனதும் தரச்சொன்னான். பிறகு காலை ஒட்டி, கோழிக்கூட்டுகுள்ள உமி அடர்ந்து கிடந்த நிலத்தில் காலை வைச்சு உடம்பை வளைச்சு உள்ளுக்குப்போனான். பேந்து, நிர்மலாக்கான்ர மேளிட்ட வாசலாலை தடியையும் உரைப்பையையும் வாங்கினான்.

இவன் உள்ளுக்கு வாறதைக் கண்டோண்ணை அந்த மரநாய் மூலைக்குள் இன்னும் ஒடுங்கிப்போய் உடலை இன்னும் நல்லாய்ச் சிலிர்த்து, தன் சிறிய கோரைப்பற்களைக்காட்டி உறுமியது. அதுன்ர வால் கால் பக்கம் சுருண்டு வந்து சிலோவா அங்கையும் இஞ்சையும் அலைஞ்சுது.

இவன் தடத்தடியை சரி செய்து, தடக்கயிறை ஒரு கையில் பிடித்துக்கொண்டு தட வளையத்தை மரநாயை நோக்கி நீட்டினான். அது தடத்தைப் பாய்ந்து கடிக்க, சட்டென்று தடத்தடியை விலக்கி, சுத்து சுத்திக் கழுத்தில் தடவளையத்தைப் போட்டான். தடவளையம் சரியாக விழுந்ததும் சுருக்குக் கயிறை இழுக்க அது நழுவிச்சென்று மரநாயின் வயித்திலை இறங்கி இறுக்கிச்சுது. மரநாய் தன்ர காலுகளை வீராஞ்சு துடித்துத் தப்ப பாத்தது. இவன் அப்படியே தடியைக் குத்தி நிறுத்தி சுருக்கை இன்னும் வலிமையாக்கினான். தடியின் முனைக்குச் குனிஞ்சு இடுப்பில செருகி இருந்த மான்கொம்பு பிடிபோட்ட 'கிறிஸ்' கத்தியை உருவி மரநாயின் கழுத்தைக்கீறினான், துடித்து அடங்கியது. அப்படியே அதைத் தூக்கிக் கழுத்தாலை பீறிட்ட ரத்தத்தைக் கோழிக்கூட்டின் கூரைப்பக்கமும் பக்கவாட்டில் அடிக்கப்பட்ட நெற்றிலும் கதவிலும் பூசினான். நிர்மாலாக்காவின் மேள் ஏன் அப்பிடிச் செய்யிறீங்கள் எண்டு கேட்டாள். "கூட்டின்ர நாணம் போய்டும் மரநாய், பாம்பு ஒண்டும் வராது" எண்டு சொன்னான்.

இவன் மரநாயின் சடலத்தை உரப்பையில் போட்டுச் சுத்திக் கட்டினான். நிர்மலாவின் மேள் முன்னால நடந்து போனாள். கொடியை விலக்கிக் கடக்கும் போது கொடியிலை காஞ்சு கொண்டிருந்த கறுப்புக்கலர் பிறாவை எடுத்து தன்ர பொக்கற்றுக்க அடைஞ்சு கொண்டான். வள்ளிநாயகி இவனிடம் எவ்வளவு எண்டு கேட்டாள். அவள் அணிந்திருந்த சிவப்பு சட்டையின் நெஞ்சுப் புடைப்பும், முகமும், பொக்கற்றுக்குள் ஈரமாக ஊறிக் குளிரும் பிறாவின் குளிர்ச்சியும், அவனை ஏதோ செய்தது. உள்ளுக்கு எந்த அசுமாத்தமும் இல்லை. அந்த ஈபிக்காரன் போயிட்டான் எண்டு நினைச்சான். அவள் காசக் குடுத்திட்டு முழுகின தலையைத் துவாயாலை தட்டி உலர்த்திக்கொண்டே உள்ளுக்குப் போனாள். பின்னேரம் முதல் வேலையாய் அரசியல் துறை பேஸுக்குப்போய்த் தீரனின் காதில் காலமை கண்டதைப்போட்டு வைத்தான். "பெடியளோட கதைக்கும் போது கலியாணம் கட்டாமல் தேசத்துரோகியோட படுத்து எழும்புறாளடா உவளைச் சும்மா விடக்கூடாது" எண்டான்.

கொஞ்ச நாளைக்குப் பிறகு தீரன், அவளைப் பெடியளை விட்டு ரண்டுதரம் 'வோன்' பண்ணி இருக்கிறம், அவா லவ் பண்ணுறா எண்டு சொன்னதாகவும், அவரைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாகவும்

சொன்னதாகத் தீரன் இவனிடம் சொன்னான். அவா அந்தத் துரோகியோட தொடுப்பை விடாட்டி வேற வழி இல்லை எண்டும் சொன்னான். இவன் தன்ர சிநேகிதப் பெடியளிடம், தாங்கள் வள்ளிநாயகியை ரண்டு தரம் வோன் பண்ணி இருக்கிறம், உவள் திருந்தாட்டி மண்டேலைதான்னடா போடவேணும் எண்டு சொன்னான். தனக்கு வெகு விரைவில் பிஸ்ரலும் வோக்கியும் தருவாங்கள் எண்டும் புழுகிவைச்சான்.

அண்டைக்கு ஒருநாள் சயன்சிகா தமையன்ர கட்டிலுக்குக் கீழ ஒரு பிறாவை எடுத்தாள் எடுத்தோண்ணையே அது தன்ர இல்லையெண்டு அவளுக்கு விளங்கீட்டுது. நாய்களில் ஒண்டுதான் எங்கையோ இருந்து எடுத்துக்கொண்டு வந்திருக்குமெண்டும் நாயின்ர வீணீர் வெள்ளை வெள்ளையா அதிலை காஞ்சு கிடக்கெண்டும் நினைச்சாள். நாயளைத் திட்டிப்போட்டு குப்பேக்க போட்டாள். அண்டைக்கு இரவு எட்டு மணிபோலக் கட்டிலை, தலாணியை, மெத்தையை எல்லாம் தூக்கிப் பிரட்டிப்போட்டு அம்பத்திப்பத்து தேடுவதைப் பார்த்த சயன்சிகா, "என்ன தேடுறாய் எண்டு கேக்க, "ஒண்டுமில்லை என்ர கிறிஸ்கத்தியைக் காணேல்ல" மழுப்பினான். கேற்றடில இவனை ஆரோ கூப்பிடினம் எண்டு தம்பிக்காரன் வந்து சொன்னான். சேட்டை எடுத்துப் போட்டுக்கொண்டு வாசலுக்குப்போனான். கேற்றடில சைக்கிள்ள தெரிஞ்ச இயக்கப்பெடியள் நிண்டாங்கள்

"தம்பி உந்த வள்ளிநாயகியை வோன் பண்ணப் போகோணும் அவா அவனோடதொடுப்ப விடுறா இல்லை, எங்களோட வந்து ஒருக்கா வீட்ட காட்டும்"

இவனும் சைக்கிளை எடுத்துக்கொண்டு அவர்களுடன் போனான். வேர்க்க விறுவிறுக்க அவடத்த அவங்களைக் கூட்டிக்கொண்டு போனான். "உதுதான் அவளின்ர வீடு, அவன் சிலநேரம் நிப்பான் கவனம்" எண்டான். மாறன் இடுப்பிலை கிடந்த 'சைலென்சர்' பூட்டின பிஸ்ரலை எடுத்துச் சரிபாத்திட்டு, திரும்பச் சொருகிக்கொண்டு உள்ளுக்க போனான். அவங்கள் ரண்டு பேரும் உள்ளுக்குப்போக இவன் கொஞ்ச நேரம் நிண்டுபாத்தான். உள்ளுக்கு எந்த அசுமாத்தமும் இல்லை. மதிலேறிப்பாஞ்சு உள்ளுக்குப்போய் யன்னல் கிறிலுக்கால எட்டிப்பார்த்தான், ஹோலுக்கு அடுத்ததா இருந்த அறைக்குள்ள இருந்து ரண்டு இயக்கப்பெடியளும் ஓடி வந்து ரோட்டுக்கு இறங்கி சைக்கிளை எடுத்துக்கொண்டு இவனைபற்றின சிந்தனையே இல்லாமல் இருட்டுக்க மறஞ்சாங்கள். கண நேரத்தில நடந்து முடிஞ்ச அந்தக் காட்சியைக் கண்டதும் இவனுக்கு ஒண்டும் விளங்கேலை. அருக்கூட்டப்பட்டவன் மாதிரி அறைக்கப் பாஞ்சான். கட்டில்ல வயித்தை பொத்தி வள்ளிநாயகி துடிச்சுக்கொண்டு இருந்தாள். தொண்டையில் குரல் வராமல் விக்கித்துக்கொண்டிருந்தது. இவன் திகைச்சுப்போய் அவள் துடிக்கிறதப் பார்த்தான். வயித்த பொத்தின இடத்தால ரத்தம் கொட்டியது.

இவனைக்கண்டதும் கையை நீட்டிக் கேட்கத் தொண்டையால் விக்கினாள். அவளின்ர மேல்சட்டை தெறி கழண்டு மார்புகளின் மேல் பக்கமும், பிளவும் தெரிஞ்சுது. அவளுக்குக் கிட்டப்போய் மார்பில் விரல்களை அமத்தினான். கல்லைப்போலக் கெட்டிச்சுக்கிடந்தது. அவள் இவனைப் பிடிச்சு தள்ளினாள். சேட்டில் அவளின் ரத்தம் புரள வெளியில ஓடி வந்து சைக்கிளை எடுத்துக்கொண்டு இருட்டுக்குள்ளை மறைஞ்சு போனான்.

அம்பத்திப்பத்துவின் சகாக்கள் டீச்சரை அம்பத்திப்பத்துதான் மண்டேலை போட்டது எண்டும், அவன் இயக்கம் தான் எண்டும் கதைச்சார்கள். அம்பத்திப்பத்து இப்பெல்லாம் இயக்க வேலை எண்டுறதாலை தங்களோடை கதைக்க வாறேல்ல எண்டும் கதைச்சாங்கள். ஊருக்க செல்லக்கிளியன்ர பெடியன் இயக்கத்திலை பொறுப்பிலை இருக்கிறதாய் கதை பரவிச்சு. கொஞ்சநாளிலை சமாதான ஒப்பந்தம் முறிஞ்சு பாதை பூட்டப்பட்டது. இயக்கம் வன்னிக்க போய்ட்டுது. யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு எண்டு எல்லா இடமும் சூட்டுச்சம்பவங்களும் கடத்தல்களும் அதிகரிச்சுது. புதன்கிழமை தேப்பனோட வேட்டைக்குப் போட்டு வந்து கொண்டிருந்த அம்பத்திப்பத்துவை மோட்டச்சைக்கிள்ள வந்தவர்கள் மறித்துச் சுட்டனர். தேப்பனுக்கு முன்னாலை அம்பத்திப்பத்து சுருண்டு விழுந்து செத்துப்போனான்.

அம்பத்திப்பத்தின் செத்தவீடு முடிஞ்சாப்பிறகு, அவன்ர சினேகிதங்கள் கதைச்சினம், அம்பத்திப்பத்துவிற்கு இயக்கம் நல்ல ராங் குடுத்து இருக்கும், அவன்ர இயக்கப்பேர் என்ன எண்டு கூடச் சொல்லேல்ல அவன். அது சொல்லக்கூடாதெண்டு சொன்னவன். எண்டு கதைத்துக்கொண்டனர். ஈழநாதம் பேப்பரிலை செல்லக்கிளி நிசாந்தன் என்ற பாடசாலை மாணவன் வவுனியாவில் இராணுவ ஒட்டுக்குழுவினரால் சுடப்பட்டார் என்று செய்தி பிரசுரமாகியிருந்தது. அம்பத்திப்பத்து இயக்கம் எண்டுறதும், இயக்கத்துக்க மாணவப்புலனாய்வு எண்டுற பிரிவு இருக்கிறதும், அதிலை இவன் 'பிஸ்ரல்' வச்சிருந்த இரகசியமான மாணவப்புலனாய்வுப் போராளி எண்டுறதும், இயக்கத்துக்கே கடைசிவரைக்கும் தெரியாமல் போனது.

○

# மெடூசாவின் கண்களின் முன் நிறுத்தப்பட்ட காலம்

*(ஆண்பதிப்பு)*

*பேராசிரியை மெடூசா ஸ்பாரோ பியாந்தலா என்ற பெயரை அவளுடைய மாணவர்கள் மெடூசா என்றே அழைத்தனர். மெடூசா நாற்பதாவது வயதில் தன்னுடைய P.H.D.க்காக origin of Messianic Judaism என்ற ஆய்வை முடித்திருந்தாள். சிறுவயது முதலே தொன்மவியல் மீது தீராத காதல் கொண்ட மெடூசா பேராசிரியையாக அறியப்பட்டதனை விட ஒரு புனைவு எழுத்தாளராக அதிகம் நேசிக்கப்பட்டாள். அவளுடைய புனைவுகள் ஐரோப்பா முழுவதும் பல லட்சம் பிரதிகள் விற்றுத் தீர்வதற்கு அவளுடைய தொன்மவியல் ஆய்வும், அதுசார்ந்து எழுதும் அற்புதமான புனைவுகளுமே காரணம் என்று இதழ்கள் குறிப்பிட்டன.*

*மெடூசா தீவிரமான கடவுள் மறுப்பைப் பின்பற்றுபவள் என்பதால் மத நிறுவனங்கள் இவளுடைய புனைவுகளும் ஆய்வுகளும் மத நிந்தனை மிக்க கருத்துக்களைக் கொண்டு இருப்பதாகக் குற்றம் சுமத்துகின்றன. இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்பு இவளுடைய தலைக்கு விலை நிர்ணயம் செய்துள்ளது. தன்னுடைய முப்பத்தைந்தாவது வயதில் தென்னிந்திய வம்சாவளியைச் சேர்ந்த மாணவன் ஒருவனைக் காதலிக்கத் தொடங்கிய பின்னர் கீழைத்தேசத் தொன்மங்களைப் பற்றிய அவனுடைய பரந்த வாசிப்பை உள்வாங்கிக் கொண்டாள். அனுமோனை விட மெடூசாவிற்கு எட்டு வயது அதிகமெண்டாலும் மெடூசா தன்னுடைய உடலைப் பராமரித்துக்கொள்ளும் விதத்தால் தோற்றத்தில் பத்து வருடங்களை மறைப்பெறுமானமாக்கி வைத்திருந்தாள். அனுமோன் "சாபம் வாங்க முதலிருந்த மேடூசாவைப்போல் இருக்கிறாய்" என்று*

எப்போதும் சொல்வான்.

பி.எச்.டி ஆய்வு முடிந்ததும், தன்னுடைய அடுத்த புனைவை கீழைத்தேசத் தொன்மங்களைக் கொண்டே எழுதப் போவதாக அவனிடம் சொன்னாள். அவனுடைய தாய் மொழியான மலையாளத்தை அவன் மூலமாகக் கற்றுக்கொண்டாள். அத்துடன் கீழைத்தேசத்தின் முக்கியமான மொழிகளைப் பேசவும், எழுதவும் கற்றுக்கொண்டாள். கிட்டத்தட்டப் பன்னிரண்டு மொழிகளை அவள் தன்னுடைய நாற்பது வயதுக்குள் அறிந்து கொண்டாள். போன வாரம், இரவு பத்து ஐம்பதளவில், நீச்சல் தடாகக் கரையில் ஒளிரும் நீல நியோன் விளக்கு ஒளியில் தடாகத்தின் மீது மிதக்கும் பரந்த பலூன் படுக்கையில் இருவரும் மைதுனத்தைத் தொடங்கினார்கள். காதலனின் மூச்சக்காற்று கழுத்துக்குள் உட்புகுந்து வெளிவந்தது. அவள் தன்னுடைய பூதத்தாயிடம் இருந்து பெற்ற நீண்ட கருங்கூந்தலை பிடரிப்பக்கமாகக் கோதுவான். ஹர்குலிசைக்கண்டவுடன் கறுத்த ஏரி நீருக்குள்ளிருந்து எழும் ஐந்து தலை நாகத்தைப்போலப் பிடரிப்பக்க மயிரின் ஆழத்துக்குள் இருந்து எழும் இவனுடைய தடித்த விரல்கள், அவளுக்கு எப்போதும் கிளர்ச்சியைத்தரும். கண்கள் சொருக அதை உடலுக்குள் உள்வாங்கும் போது அவன் சொன்னான். “சாபம் வாங்கிய மெடூசாவின் பாம்புகளாலான கூந்தலைப் போல உன்னுடைய தலைமயிர் கற்றைகள் என்னைத் தீண்டி மயக்கத்துக்குக் கொண்டு செல்கின்றன மெடூசா”.

அவனுடைய அந்த மதுர மொழிகளின் பின்னர்தான், கீழைத்தேசத்தில் தலை மயிர் பற்றிய தொன்ம கதைகளையும் நம்பிக்கைகளையும் ஆய்வு செய்யப் போவதாக அவனிடம் சொன்னாள். அவன் அவளுக்குச் செல்ல வேண்டிய நாடுகளின், ஊர்களின் பட்டியலைத் தயாரித்துக் கொடுத்தான். பின் வசந்த காலத்தில், இந்தியாவிற்கும் பிறகு இலங்கைக்கும், சீனாவிற்கும் இறுதியாகப் பாகிஸ்தானுக்கும் போய்ச் சேர்ந்தாள். பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகரில் இருந்து நூற்றைம்பது கிலோமீற்றர் பயணித்துத் தலை மயிரைக் கொண்டு பூசை செய்யும் பழங்குடிக் கோவிலைப் பார்க்க எண்ணினாள். இடையில் பேருந்துத் தரிப்பிடத்தில் ஏறிய இரண்டு தாடிக்காரர்கள் தாம் கொண்டு வந்த பையில் இருந்து இரு ஏ.கே.47 ரகத் துப்பாக்கிகளை உருவியெடுத்து, முழு மஹசின் குண்டுகளையும் இவளின் தலையில் இருந்து நெஞ்சு வரை இறக்கினர்.

மெடூசாவின் அகாலச்சாவின் பின்னர், அவளின் உடமைகள் பாகிஸ்தான் அரசாங்கத்தினால் நாட்டின் வெளிவிவகார அமைச்சின் ஊடாக அனுமோனுக்கு வந்து சேர்ந்தது. அதில் மெடூசா குறித்து வைத்த, எழுதி அரைவாசியில் இருந்த குறிப்புகள், புனைவுத் துண்டுகள் என ஏராளம்

கைப்பிரதிகள் இருந்தன.

**குறிப்பு: 01**
கன்யாகுமாரி
*2004.05.13 இரவு 11.35*

தென் திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த தமிழ் மொழியில் "கவரிமான்" எனும் மொழித்தொன்மம் வழக்கில் உள்ளது. ஒற்றை மயிரை இழந்தால் கூடத் தன்னை மாய்த்துக் கொள்ளும் இயல்புள்ளது என்ற நம்பிக்கையில் கற்பனை விலங்கை அடையாளம் செய்தோ அல்லது உருவகப்படுத்தியோ காலம் காலமாக நம்பிக்கையைத் தமிழர்கள் கொண்டிருக்கின்றார்கள். குறிப்பாக அவர்கள் "மானம்" என்பதனை உணர்த்திக் காட்டுவதற்குக் கவரிமான் என்ற பதத்தைப் பயன்படுத்துகின்றார்கள். அன்றில் பறவை, அன்னப்பறவை போன்று தமிழ் மொழியில் இப்படியான உயிரிகளைக் குறிப்பிடும் தொன்மங்களை நிறையவே காண முடிகின்றது.

மயிர் நீப்பின் வாழாக் கவரி மாவன்ன – உயிர் நீப்பர்
மானம் வரின்.
- வள்ளுவர் ( கிபி 400)

**குறிப்பு: 02 (கடித வடிவில் இருந்தது)**
தஞ்சாவூர் பல்கலைக்கழக நூலகம்
*2004.11.06 பகல் 2.00*

அன்புள்ள அனுமோன்.
பொதுவாக இந்திய இலக்கியங்கள் பெண்களின் தலைமயிரை அரசியலாக்குவதற்கும், அழகியலாக்குவதற்குமாகக் கையாண்டு இருக்கின்றன. நீ அடிக்கடி என்னுடைய கேசத்தைக் கைகளால் வருடி விட்டு, உனக்கு இந்தியப் பெண்களின் கூந்தல் வாய்த்திருக்கின்றது. உன்னுடைய வம்சாவழியில் யாரோ ஒரு இந்தியத் தாய் இருக்கிறாள் என்று நினைக்கின்றேன் என்பாய். இன்று தமிழ்ப் பேராசிரியர் ஒருவருடன் உரையாடும் போது ஒரு இஸ்ரவேல்காரிக்குரிய கண்களும், கூந்தலும் உங்களுக்கு வாய்க்கவில்லை, நீங்கள் இந்தியப் பெண்ணின் சாயலைப் பெற்றிருக்கின்றீர்கள் என்றார். அவர் இந்திய இலக்கியங்களில் இருந்து பெண்களின் கூந்தல் பற்றிய நிறையச் சான்றுகளை எடுத்துக் காட்டினார். மகாபாரதம் எனும் இதிகாசத்தில் ஒருத்தி கூந்தலை இழுத்து மானபங்கம் செய்தவனின் இரத்தத்தை எடுத்துப் பூசும் மட்டும் கூந்தலை

முடியாமல் இருந்தாளென்று பெரும் பீடிகையுடன் நிறையக் கதைகளைச் சொன்னார். கம்பராமாயணத்தில் ஒரு தாய் மகனுக்கு ஆட்சியைப் பிடித்துக் கொடுக்கத் தலைவிரி கோலமாகத் தரையில் கிடந்து அழுது சாதித்ததை எனக்குச் சொன்னார். குறித்த பாடலின் மொழிபெயர்ப்பையும் தந்தார்.

*கள் அவிழ் கோதை கருத்துணரா மன்னனன்*
*வெள்ள நெடுஞ்சுடர் மின்னின் மின்ன நக்கான்*
*உள்ளம் உவந்துள செய்வேன் ஒன்றும் உலோபேன்*
*வள்ளல் இராமன் உன் மைந்தன் ஆணை என்றான்.*
*(கம்பராமாயணம் – கைகேயி சூழ்வினைப் படலம்)*

*(இந்தக் கடிதத்தின் அடுத்த பக்கம் அவளுடைய குருதியில் நனைந்திருந்ததால் தடவியல் நிபுணர்களால் அகற்றப்பட்டிருந்தது)*

## உப குறிப்புகள்

*03. இந்து மதத்தில் முனிவர்கள், சாதுக்கள் உடலில் இருந்து முடிகளை அகற்றுவதில்லை. முடி சூழலில் உள்ள நல்ல அலைகளைக் கிரகித்துக் கொள்ளும் என்பது இந்து நம்பிக்கை என்று சமூகச் சேவகி ஒருத்தி மகராஸ்டிராவில் வைத்துச் சொன்னாள். மாறாகப் பௌத்தர்களும், சமணர்களும் துறவில் முடியை இழத்தலை முக்கிய கடமையாகக் கொண்டனர்.*

*04. உரோமானிய நாகரிகத்தில் பெண்கள் தங்களுடைய தலைக்கு வர்ணம் பூசுவதற்குப் புறாக்களின் எச்சத்தில் இருந்து எடுத்த ஒருவிதக் களிம்பைப் பூசினார்கள்.*

*05. மலையாளத்தில் மயிர் என்ற சொல் வசைச் சொல்லாகும். சமூகம் பேசக்கூடாத பொருளாகக் கொள்ளும் அந்தரங்க உறுப்புக்களைச் சூழ உள்ள முடியைக் குறிக்கும் சொல்லாகவே அது இருக்கின்றது. தற்பொழுது தமிழ்நாட்டிலும் அது வசைச்சொல்லாகவே பயன்படுத்தப்படுகிறது.*

### புனைவு நறுக்கு - *01*
### நீர்க்கூந்தல்.

பார்பரா அந்தச் சுவையான மங்கோலிய நாடோடிக் கதையை மசிலிஞாவிற்குத் தொடர்ந்து சொல்லத்தொடங்கினாள். வேட்டைக்காகக் காட்டுக்குள் நுழைந்த இளவரசனும், குதிரையும் தாகத்தால் அலைந்தனர்.

திசையின்றிப் பயணித்து அடர்காட்டுக்கு வந்து சேர்ந்தனர். சுனையின் நீர்மைச் சத்தம் அவர்களின் தாகத்திற்குக் கேட்டது. புரவி அவனுடைய கட்டளையை எதிர்பார்க்காமலேயே சத்தம் வந்த திசையை நோக்கித் தழைகளையும், பற்றைகளையும் தாண்டி விரைந்தது. ஏறக்குறைய இளவரசன் மயங்கும் நிலைக்கு வந்து விட்டான். நல்ல வேளையாக விரைவாகச் சுனையின் கரைக்கு வந்து சேர்ந்த புரவி இவனைக் கருஞ்சேற்றினுள் வீழ்த்தியது. தவழ்ந்து சென்று நீர் அருந்தினான். மெல்ல எழுந்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டவன், நகர்ந்து பாறையொன்றின் மீது தன்னுடலை வளர்த்தினான். நீண்ட பெருமூச்சொன்று அவனிடமிருந்து வெளிப்பட்டது. பாறைக்குச் சற்றுத் தொலைவில் நின்றிருந்த புரவி கனைத்தது. நிமிர்ந்து பார்த்தான். சாய்ந்திருந்த பாறைக்குச் சற்றுத் தொலைவில் நீருக்குளிருந்து பெண்ணுருவம் நீரோடு நீராக எழுந்தது. அவள் எழவும், புரவி கனைக்கவும் சரியாக இருந்தது. அவள் புரவியின் குரலைக் கேட்டதும் வெடுக்கெனத் திரும்பினாள். முழுவதும் வடியாத நீர் அவள் திரும்பிய வேகத்தில் நிர்வாண உடலிலிருந்து சுற்றி விசிறப்பட்டது. பாறையில் இருந்த இவனுடைய கண்களுக்கு அவள் எதிர்ப்பட்டாள். அவளின் பார்வையில் புரவியும் பின்பு பாறையில் இருந்த இவனுடைய உருவமும் எதிர்ப்பட்டன. சட்டென்று அதிர்ச்சியில் உறைந்தவள், வெற்று மார்பைத் தன்னிரு கைகளாலும் மறைத்துக்கொண்டாள். அவளுடைய மெல்லிய கைகளுக்குள் அடங்க மாட்டாத பொருண்மையைக் கொண்டிருந்த தனங்களை ஒற்றைக்கை மறைக்க, மற்றக்கை, பின்னால் வளர்ந்து நீண்டு இறங்கி நீரில் நனைந்து கருநிறத்தில் தலையில் தொடங்கி நிலத்தை நோக்கி வீழ்ந்த ஈரக் கூந்தலை முன்னால் எடுத்து மார்புகளை மூடிக் கொண்டாள். வெட்கத்தில் நாணி, அப்படியே உடலை நீருக்குள் சாய்த்து மறைந்தாள்.

***

திருமணம் முடிந்து, முதல் நாளிரவு படுக்கையில் அவளிடம் கேட்டான். "உன்னுடைய அல்குல் பட்டவர்த்தனமாகத் தெரிய ஏன் மார்புகளை மட்டும் மறைத்துக்கொண்டாய்?" "நான் பிறந்தது முதல் காட்டில் வளர்ந்தவள், சிறுவயது முதலே எனக்குப் பழக்கமான இயல்பான ஒன்றாக என்னுடைய அல்குல் இருந்தது. ஆனால், மார்புகள் என்னுடைய யௌவ்வனத்தில் தோன்றியவை. அதன் மீதான உறுத்துணர்வு எனக்கு இயற்கையில் மிகச்சமீபமாகக் கிடைத்த ஒன்று, என்னைப் பலகாலம் அதிர்ச்சிக்கு உள்ளாக்கிய ஒன்று. ஆதலால் தான் என் இச்சையின்றிக் கைகள் அதனை மறைத்தன" என்றாள். "கைகள் என்று சொல்லாதே, அவற்றால் அது முடியவில்லை, உன்னுடைய ஈரமேறிய நீர்க்கூந்தல் என்று சொல்" என்று சொல்லிப் புன்னகைத்தான் இளவரசன்.

## புனைவு நறுக்கு - 02

### புத்தனின் மயிர் 01 மயிர் - 02

யாழ்ப்பாணத்தில் இருக்கும் மிகப்பழைய துறைமுகமான யம்புகோள ப்பட்டினத்தில் மாதகல் என்ற ஊரில் ஒரு சிங்களத் தொல்லியல் பேராசிரியர் தன்னுடைய வேலையாட்களுடன் அகழ்வுப்பணிகளைத் தொடங்கினார். கொழுத்தும் வெய்யிலில் அவர்கள் வேலை செய்து கொண்டிருந்தனர். வேலை செய்யும் காணி சுற்றிவர இராணுவக் காவல் அரண்கள் அமைக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வந்தது. இராணுவத்தினர் பலரும் அந்தத் தோண்டுதல் வேலைக்கு அமர்த்தப்பட்டு இருந்தனர். அருகில் ஒரு பெரிய அரசமரத்தின் கீழே புதிதாக ஒரு புத்தர் அமர்த்தப்பட்டிருந்தார். சித்தார்த்தன் இலங்கைக்கு வந்த பிறகு யாழ்ப்பாணத்தில் முதலில் காணும் புத்தனுடைய படிமம் அதுதான். கொஞ்ச நேரம் அந்தச் சிலையின் பாதி மூடிய கண்களையே பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய முகத்தில் மெல்லிய புன்னகை அரும்பியது. அப்போது ஒரு இராணுவ வீரன் அவனருகில் வந்து விபரம் விசாரித்தான். சித்தார்த்தன் தானொரு சிங்களப் பத்திரிகையின் ஊடகவியலாளர் என்றும், தான் பேராசிரியரைப் பேட்டி எடுக்க வந்திருப்பதாகச் சிங்களத்தில் சொன்னார். இராணுவ வீரன் இவனை நேராகப் பேராசிரியரிடம் அழைத்துச் சென்றான். பேராசிரியர் தோண்டும் இடத்துக்குச் சமீபமாக இருந்த பூவரசு மரத்தின் நிழலில் ஒரு பௌத்த பிக்குவுடன் பிளாஸ்ரிக் கதிரையொன்றில் இருந்து உரையாடிக்கொண்டிருந்தார். அந்தப் பௌத்த பிக்குவின் பின் அவருடைய சீடப்பிள்ளைகள் நின்றிருந்தனர். சித்தார்த்தனுக்கு அந்தப் பிக்குவின் முகம் மிகவும் பரீட்சயமான ஒன்று. சிங்கள இனவாதக்கட்சியொன்றின் முக்கியத் தலைவர்களுள் ஒருவர்.

சித்தார்த்தன் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும் போது அந்தத் தேரர் விடைபெற்றுத் தன்னுடைய பரிவாரங்களுடன் சொகுசுக்காரில் ஏறிப் புறப்பட்டு விட்டார்.

சித்தார்த்தன் இங்கே அகழ்வு நடப்பதற்கான காரணத்தைக் கேட்டான். வெள்ளரசுக்கிளையுடன் இங்கே வந்து இறங்கிய அசோகனின் மகள் சங்கமித்தா தன்னுடன் இரகசியமாகப் புத்தனின் கேச தாதுவையும் எடுத்து வந்தாள் என்றும் அதை இந்த நகரத்தில் புதைத்தாள் என்றும் ஆரூடங்களில் இருந்து அவர் அறிந்து கொண்டார். அந்தக் கேசதாதுப் புதையலைப் பெறுவதற்குத் தான் முயற்சிப்பதாகவும், யாழ்ப்பாணமும் சிங்கள பௌத்தத்தின் இடம் தான் என்று உலகிற்கு நிறுவியே தீருவேன் என்றும் கண்ணில் பெருமை பொங்கச் சொன்னார். அதற்குச் சித்தார்த்தன்,

கண்டுபிடிக்கும் கேசதாதுவை எப்படிப் புத்தருடையது என்று நிறுவுவீர்கள் என்று கேட்டான். அதற்கு அவர் தலதா மாளிகையில் இருக்கும் புத்தரின் தந்ததாதுவில் (பல்) எடுக்கும் *DNA* மூலக்கூறுகளை எடுத்து, கண்டுபிடிக்கும் கேசதாதுவோடு ஒப்பிட்டு உலகிற்கு நிரூபிப்பேன் என்றார். அவரின் குரலில் பெருமிதம் மண்டிக் கிடந்தது.

அதற்குச் சித்தார்த்தன், "தலைமயிரைக் கொண்டு அது ஆண்முடியா பெண்முடியா என்று கூட நிறுவ முடியாது என்று விஞ்ஞானம் சொல்கிறதே" என்று கேட்டான். இவன் இதைக் கேட்டதும் பேராசிரியரின் கண்கள் சிவந்தன. முகத்தில் கடுமையேறியது. இவனைக் கண்டபடி திட்டத் தொடங்கினார். இராணுவத்தினர் இவனை வலுக்கட்டாயமாக அந்தப் பகுதியை விட்டு வெளியேற்றினர்.

அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை சிறப்பிதழ்களில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் சித்தார்த்தனின் "நிலம் தின்னும் புத்தர்" என்ற கட்டுரை வெளியானது. அந்தக் கட்டுரை வெளியாகி சரியாக இரண்டு மாதங்களின் பின்னர் சித்தார்த்தன் இனம் தெரியாத ஆயுததாரிகளால் கடத்தப்பட்ட செய்தி வெளியானது.

### *மயிர் 01*

பௌர்ணமி பொழியும் அந்த இரவில், தன்னுடைய வாழ்வின் பெரு விடுதலையை அடைவதற்காகத் தேரோட்டி சன்னாவின் உதவியுடன் துன்பத்தின் தளைகளில் இருந்து விடுபடும் பயணத்தைப் பட்டத்துக்குதிரையான காந்தகாவின் மேல் ஆரோகணித்துத் தென் திசையை நோக்கித் தொடங்கினான் இளவரசன். சாக்கிய இராசதானியின் எல்லையை அடைந்தவன் காந்தகாவை கொண்டு அங்கிருந்த நீரோடையைத் தாண்டினான். தாண்டியவன், ஒரு மரத்தடியில் போய் நின்று நிலவின் வெண்ணிறக் கிரகணங்களின் ஸ்பரிசத்தைக் கூடப் பொருட்படுத்தாமல், அரச உடைகளையும், ஆபரணங்களையும், சின்னங்களையும் களைந்து சன்னாவிடம் கொடுத்தார். பின்னர், தன்னுடைய கேசத்தைத் தலையில் தொடங்கிக் கால் வரை மழித்தார். சன்னாவையும் பிரியம் வைத்திருந்த காந்தகாவையும் சென்றுவிடும்படி கட்டளையிட்டார். பின்னர் தன்னுடைய விடுதலையைத் தேடி நடக்கத் தொடங்கினார். காற்றினால் அலைக்கப்பட்ட அவருடைய கேசத்திரள்கள் நீரோடையில் இறங்கி உருளத் தொடங்கின.

### *மயிர் 02*

வேர்கள், மூலிகைகள் மற்றும் மிருகங்கள் தின்று போட்ட மிச்சங்களையே

அவர் உண்டு வாழ்ந்தார். மெய் வருத்தும் தவத்தின் பொருட்டுக் குளிப்பதனை அறவே விட்டு விட்டார். உடல் முழுவதும் அழுக்குகள் அடர்ந்து செதில்கள் உதிர்ந்து விழத் தொடங்கின. மயானத்தில் எரியும் பிணங்களின் மத்தியில் தூங்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தார். நீண்ட முடிக்கற்றைகளையே அவர் ஆடையாக உடுத்திக்கொண்டார். உடல் கொஞ்சம் கொஞ்சமாகச் சுருங்கி என்பாயிற்று.

மேற்கண்டவை சித்தார்த்தனின் கட்டுரையில் மேற்கோள் காட்டப்பட்ட குறிப்புக்கள்.
(ஓ. ரா. ந. கிருஷ்ணன் "பௌத்த வாழ்க்கை முறையும் சடங்குகளும்" என்ற நூலில் இருந்து தழுவி எடுத்தவை)

## *புனைவு நறுக்கு -3*
## *கிப்பி*

அன்று காணாமல் போனவர்களின் உறவினர்கள் யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தின் முன்னால் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தில் தர்மினியின் பாவாடை சட்டை போட்ட புகைப்படத்தைக் கைகளில் தூக்கிப் பிடித்துக்கொண்டு நின்றிருந்த கிளியக்காவுக்கு ஒரு சொட்டுக் கண்ணீர் வரவில்லை.

அவளுடைய குரல் இப்போதெல்லாம் தொண்டைக்குழிக்குள் இறுகிப் போய் விட்டது. எல்லோரும் இங்கிலாந்துப் பிரதமர் கெமரூனைக் கண்டதும் அழுது அரற்றி "எங்கட பிள்ளையள மீட்டுத் தாங்கோ" என்று அரற்றினர். தாய்மாரினதும், மனைவிகளினதும், குழந்தைகளினதும் சகோதரர்களினதும் குரல் சன்னமாகக் கேட்டுக் கொண்டிருந்தது. கிளியக்காவிற்கு எல்லாவற்றிலிருந்த பிடிப்பும் போய் விட்டது. வெத்திலைச் சாத்திரியை அவள் பூரணமாய் நம்பினாள். ஆர்ப்பாட்டம் முடிந்ததும், நேராக அவரிடம் தான் போகப் போகின்றாள். முன்பெல்லாம் உதெல்லாம் ஏதோ கண்கட்டி வித்தை என்று பரிகசித்தவள், இருட்டு மடுவில் வைத்து தர்மினியை அவர்கள் இவளிடமிருந்து பிரித்துத் தனியாக ஏத்திய போது மகள் அழுத அழுகையும் இவள் அழுத அழுகையும் இன்னும் ஈரமாக இருந்தது. லெமினேற் செய்யப்பட்டு உள்ளே அடைக்கப்பட்ட தர்மினியை பாதுகாப்பாகக் கான்ட்பாக்கினுள் வைத்துக் கொண்டாள். வெத்திலைச் சாத்திரியைப் பற்றி அங்கே வந்திருந்த உறவினர்கள் அனைவருக்கும் சொன்னாள். சித்தார்த்தனின் தாய் கமலம், அன்று இவளுடன் வருவதாகச் சொல்லி இருந்தாள். நம்பி வாங்கோ அக்கா என்ர பிள்ளைய எப்பிடி பிடிச்சவங்கள் எண்டு என்ர முகத்தப் பாத்து அச்சொட்டா சொன்னவர் சாத்திரியார். அவர் சொன்ன அந்த வார்த்தையோட தான் அவரை நம்பத் தொடங்கினார்.

"என்ன சொன்னவர்?"
நான் விபரம் ஒண்டும் சொல்லாமலே "உன்ர குஞ்ச கிப்பி வெட்டி இருந்ததால தானே இயக்கத்திலை இருந்தவள் எண்டு ஆமி பிடிச்சுக்கொண்டு போனவன்?" எண்டார்.

திருச்சிற்றம்பலம் அசரீரி.

மெடூசா அம்மையாரின் குறிப்புகளில் ஆண் பதிப்புக்குரிய சில குறிப்புகளையும் அடிக்கோடிட்ட புனைவுத் துண்டுகளையும் மட்டும் இங்கே பகிர்ந்திருக்கிறோம். காலத்தின் தேவை கருதி அதை யாம் செய்தோம்.

## கடைசி அத்தியாயம்.

தன்னுடைய காதலி விட்டுச் சென்ற முடிக்கப்படாத குறிப்புகள் புனைவுகளைக் கொண்டு ஆண் பதிப்புக்குரிய நாவல் ஒன்றை அனுமோன் எழுதி முடித்தான் நாவலின் கடைசி அத்தியாயம் இவ்வாறு முடிந்தது

பெர்சியஸின் கையில் இருந்து வீழ்ந்த மெடூசாவின் தலையைக் கடல் மீண்டும் உருட்டி வந்தது. கடல் பார்த்திருக்க அங்கே நிலத்தினது உரித்து மக்கள் உத்தரித்து மாண்டனர். இவன் கடலை வெறித்துப் பார்த்தான். மழை வலுத்தது. உடலைக் குத்தி இறங்கும் கந்தக நாற்றமுள்ள துளிகள். கடல் பரப்புக்கு மேல் அலைகளுக்கு எட்டும் தூரத்தில் சுழன்று எழுந்தது தலை. இன்னும் இறக்காத அவளுடைய சர்ப்பக்கேசம் ஒவ்வொன்றும் தரையைப் பார்த்துச் சீறின. உருண்டு. திரண்டு விழும் மழைத்துளிகளின் நடுவே பளபளவென அவளுடைய கண்கள் கறுத்த மீனின் காதுச்சவ்வுகளைப் போலத் திறந்தன. இவனும், இதர எல்லோரும், எல்லாமும் அதனைக் கண்டனர். இவன் கண்களை மூடிக்கொண்டான். உடல் ஒருதரம் உதறி அடங்கியது. கடலின் மேலே வானத்தின் கீழே மழையின் நீர்மை உருண்டைகளின் நடுவே அவளின் கண்கள். கடல் ஆர்ப்பரிக்க மறுகணம் எல்லாம்,
கல்.

# இறைச்சி

செட்டிகுளம், ஓமந்தையில் செக்கிங் முடிந்து, பஸ்ஸில் ஏறிய போது யன்னலில் புதைத்த முகத்தை இவள் எடுக்கவேயில்லை. உடல் இறுக்கத்தோடு இருந்தது. வியர்வைக் கசகசப்பை எதிர்க்காற்று உலர்த்தியது. சாய்ந்திருந்த முதுகுப்புறம் வியர்த்துச் சட்டை முதுகில் ஒட்டியது. உடலை நிமிர்த்திக் காற்றை முதுகுப்புறம் ஓட விட்டாள். குளிர்ந்தது. மடியில் இருந்து மார்பில் சாய்ந்து உறங்கிய தம்பியின் எடை கால்களை விறைக்கச் செய்திருந்தது. உடலை அசைக்கும் போது, அவனின் உறக்கம் கலைந்து விடக்கூடாதென்ற கவனம் தெரிந்தது. பஸ் செட்டிகுளத்தை அடைந்த போது சூரியன் உச்சியில் எரிந்தது. கண்கள் யன்னலுக்கு வெளியே ஓடும் தெருக்களை வேடிக்கை பார்த்தபடியிருந்தன. 'செட்டிகுளம் - மெனிக்பாம்' எழுத்துகள் எழுதப்பட்ட கால்கள் நெளிந்த தகரக் குறிகாட்டியைக் கடக்க இராணுவக் காவலரண்கள், கம்பிவேலிகள் எதிர்ப்பட்டன. ஒலிபெருக்கியின் சத்தம் வெப்பக்காற்றில் கேட்டது.

கம்பி வேலிகளுக்கு இடையில் வெள்ளை நிறத்தில், நீலக் கயிறுகளால் இழுத்து நிலத்தில் ஊன்றப்பட்ட கூடாரங்கள், சிவப்பு நிலம் முழுக்க அடிக்கப்பட்டிருந்தன. வெய்யிலில் கூடாரங்களின் வெள்ளை கண்களைக் கூசச்செய்தது. நீண்டிருந்த இரண்டு முகாம் தொகுதிகளைக் கடந்து, பஸ் மூன்றாவது முகாம் தொகுதிக்குள் நுழைந்தது. வழியில் பார்த்த முகாம்களை விட இது பெரிதாக இருக்க வேண்டும். மன்னார் வீதி நிலமட்டத்திலிருந்து உயரமென்பதால், பஸ்ஸிலிருந்து பார்க்கும் போது உயர்ந்து வளர்ந்த காட்டுப்பின்னணியில் முகாம் நீண்டு சென்றது. கூடாரங்களுக்கு இடையில் சனங்கள், வெய்யில் உடலிறப்பட்டு வியர்வை மினுமினுப்போடு அலைந்தனர். கைகளில் தண்ணீர்க் கான்கள் இருந்தன. எல்லாக் கான்களும் வெள்ளை நிறத்தில் சிவப்பு மூடி போட்டவை. தொண்டு நிறுவனம் அதை வழங்கியிருக்க வேண்டும். பஸ்ஸினுள் இருந்த அத்தனை முகங்களும் யன்னலுக்குள் நுழைந்து அந்தக்காட்சிகளை வேடிக்கை பார்ப்பதிலும்

அவற்றைக்காட்டி முணுமுணுப்பதுமாக இருந்தன. தாம் கதைப்பது பஸ்ஸின் முன், பின் வாசலில் துவக்கோடு நிற்கும் ஆமிக்காரர்களுக்கு கேட்டுவிடுமோவென்று மிக மெதுவான குரலிலேயே கதைத்தனர். முகாமிலிருந்து ஒலிபெருக்கியில் இயக்கத்தில் இருந்தவர்களைச் சரணடையுமாறு கொச்சைத் தமிழ்க்குரல் திரும்பத்திரும்பச் சொல்லியபடியிருந்தது.

முகாமின் வாசலில் பிரமாண்டமான வளைவுக்கொட்டகை போடப்பட்டிருந்தது. 'இராமநாதன் நலன்புரி நிலையம்' என்று சிங்களம், ஆங்கிலம், தமிழ் என்ற வரிசையில் எழுதப்பட்டிருந்த வெள்ளைத்துணியை இராணுவத்தினர், வளைவுக்கொட்டகையின் மேல் கட்டிக் கொண்டிருந்தனர். அதைச் சுற்றி இராணுவ நிலையங்கள் தொடர்ந்து வந்தன. மன்னார் வீதியின் இரு கரைகளிலும் முட்கம்பிச் சுருள்கள் அடுக்கடுக்காக நீண்டிருந்தன. மண்மூட்டைகள், பனங்குற்றிகளுக்கு மேலே இராணுவச்சீருடைகள் தெரிந்தன. கைகளில் துவக்குகள், முகத்தில் வேடிக்கை பார்க்கும் தோரணை பரவியிருந்தது. முகாமின் நிர்வாக அலுவலகமாக இருக்க வேண்டும். அருகில் பஸ்கள் தரித்து நின்றன. இவள் தம்பியை தோளில் கை வைத்து உசுப்பினாள். அவன் முனகினான். இவளின் மடியில் புரண்டு கண்களைத்திறந்து "வந்திட்ட மோக்கா?" என்றான்.
"ஓமப்பன், எழும்பி என்ர மடியில இருங்கோ, அக்காக்குக் கால் விறைச்சு இருக்கும்" அம்மா சொன்னார். தம்பி மடிமாறி இருந்து வெளியே வேடிக்கை பார்த்தான்.

ஓமந்தையிலிருந்து பஸ் வாசலில் துவக்குடன் நின்ற ஆமிகளில் ஒருவன் இறங்கிச்சென்று, சென்ரியில் நின்ற மில்ரிப் பொலீசிடம் ஃபைலைக்காட்டிக் கதைத்துவிட்டுப் பஸ்சில் ஏறினான். வாசலின் குறுக்கே மறித்து நின்ற துலாக்கம்பியின் நுனி அந்தத்திலிருந்த சென்ரியில் நின்ற இராணுவச்சிப்பாய் கயிற்றை நெகிழ்த்தி விட்டான். துலாக்கம்பி வால்பக்க அந்தத்தில் இருந்த இரும்புப்பாளங்களின் பாரத்தினால் நெம்பப்பட்டு வானத்தைப் பார்த்து வாயைப்பிளந்தது. சென்ரியைக் கடந்து, கிரவல் போடப்பட்ட புது வீதிகளில் பஸ் இறங்க எழுந்த தூசுத் திரட்சி பஸ்களை மூடியது. சனங்கள் புதிதாக வரும் பஸ்களை வெய்யில் தகிப்பை மீறி, கைகளை நெற்றியில் வைத்துக் கவனித்தனர். வெள்ளை உருளைகளைப் பாதியாய் வெட்டி அடுக்கியது போல ஒவ்வொரு கூடரங்களுள்ளும் இருந்து முகங்கள் எட்டிப்பார்த்தன. சில முகங்கள் மர நிழல்களுக்குக் கீழே தெரிந்தன. யு.என். எச்.சி.ஆர் பணியாளர்கள் கூடாரங்களை அடித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குச் சனங்கள் உதவி செய்தனர். சிறுவர்கள், உரப்பைகளில் வரும் சிறிய துணி மூட்டை எப்படிப் பெரிய கூடாரமாகிறது என்பதை வேடிக்கை பார்த்தார்கள். கூடாரங்களை நிமிர்த்திச் சுற்றிவர அடிக்கப்படும்

கம்பிகளில் இரும்பு மோதும் சத்தம் பஸ் இரைச்சலைத்தாண்டிக் கேட்டது. இவள் யன்னலில் இறுக்கி வைத்திருந்த முகத்தையும், பார்வையையும் மாற்றாமல் பார்த்தபடியிருந்தாள்.

வீரை மரத்தில் பஸ் நின்ற இடம் ஐம்பத்தியேழாவது பிளாக் என்று லெமினேற் செய்யப்பட்ட தாளில் எழுதப்பட்டு ஆணியால் தறையப்பட்டிருந்தது. நான்கு பஸ்களிலும் வந்தவர்கள் அந்தப் பிளாக்கில் இறக்கப்பட்டார்கள். பஸ் வாசலில் துவக்குடன் நின்றிருந்த ஆமி 'ஒக்கம பைண்ட... ஒக்கம பைண்ட' சிங்களத்தில் கத்தினான். இவளும் அம்மாவும் இரண்டு ட்ரவலிங் பைகளையும் எடுத்துக்கொண்டனர். மாத்தளனில் இடுப்பளவு நீரில் இறங்கிய போது நனைந்த ஈரம் இன்னும் பைகளில் கனத்துக்கிடந்தது. தம்பி தோளில் சின்னப் பையைக் கொழுவினான். பஸ்சிலிருந்து நிலத்தில் கால் வைக்க நிலச்சூடு கால்களில் குத்தியது. அம்மா ட்ரவலிங் பையை இவளிடமிருந்து வாங்கிக்கொண்டு 'தம்பியைத் தூக்கு பிள்ளை கால் சுடுகுது' என்றார். தம்பி இவளைப்பார்த்துச் சிரித்தான் இவளும் செல்லமாக அவன் நெற்றியில், நெற்றியை முட்டிச் சிரித்தாள்.

இவர்களுடன் பஸ்சில் வந்த ஆமிகள் இருவரும் சிங்களத்தில் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பிளாக் இதுதான் என்று சொல்லிவிட்டுப் போனார்கள். பிளாக் என்று சொல்லப்பட்ட இடம் காடாகவே இருந்தது. பிளாக் இலக்கம் தறையப்பட்டிருந்த வீரை மரத்தடி சுத்தமாக்கப்பட்டு இருந்தது. பஸ்சிலிருந்து இறங்கிய நாற்பத்து மூன்று குடும்பங்களும் பெரிய வீரை மரத்தின் நிழலில், பைகளைப் பரப்பிவிட்டு உடலை ஆசுவாசம் செய்துகொள்ள அமர்ந்தனர். யாரும் பேசிக்கொள்ளவில்லை. உடலிலும் முகத்திலும் களைப்பின், குழப்பத்தின் ரேகைகள் வியர்வையுடன் சேர்ந்து ஈரலித்து வழிந்தன. சிலர் ட்ரவலிங் பைகளைத் தலைக்குக் கொடுத்து உறங்கினர். வீரை மரத்தின் நிழலில் வந்த காற்று அவர்களை நித்திரைக்கு எடுத்துச்சென்றது. உறக்கம் வராதவர்கள் அருகிலிருந்த குடும்பங்களுடன் கதைத்தனர். சில ஆண்களும் சிறுவர்களும், அவர்களுக்கு எதிரே பெரிய இரும்புக் கையால் புல்டோசர் காட்டை அழித்து கூடாரம் அடிக்க பிளாக்கை உருவாக்கியதைப் பார்க்க முன்னால் சென்றனர்.

பிரமாண்ட இரும்புக்கைகளுக்குள் பெரிய மராமரங்கள், பற்றைகள், செடிகள், கொடிகள் என நிலத்தை மூடியிருந்தவை சிக்குப்பட்டு இழுத்துச்செல்லப்பட்டன. முயல்வேட்டைக்குப்பழக்கப்பட்ட நாயொன்று தன்னுடைய கோரைப்பற்களால் முயலைக் கௌவ்வி நிலத்தில் அடித்து இரத்தம் வழிய இழுத்துச் செல்வதைப் போல பின்னிக்கொண்டு நின்ற மரங்களும் பற்றைகளும் இயந்திரக்கரங்களால் சுருட்டி ஒதுக்கப்பட்டன. வேர்கள் அறுந்து, புதுக்கிடங்குகளினுள் புரண்டன. வேர்களோடு பாறிய

ஈரலிப்பான செம்மண் பாளங்கள் மரவேர்களின் இரத்தத்தைப் போலப் பிளந்து குழைந்து துவண்டன. முறிகின்ற சத்தம் வீறிட்டுக் கத்தி முடியும் தறுவாயில் கேட்கும் சத்தம் போலிருந்தது. புழுக்களும், பூச்சிகளும் தமக்கு மேல் நின்ற மரமழிந்து நிலம் பிளந்து புரண்ட அதிர்ச்சியில் உடலில் குத்திய வெய்யிலின் தகிப்புத் தாங்காது சருகுகளுக்குள் பதுங்கின. பூச்சி புழுக்கள் டயர்களுள் நசிந்து உயிர்விட்டன. பிடுங்கப்பட்ட வேர்களின் நொட்டி மண்ணின் நொடியுடன் சேர்ந்து மூக்கை அரித்தது. வேர்க் கிடங்குகளை இன்னொரு புல்டோசர் மூட, உழவு இயந்திரத்தில் பொருத்தப்பட்ட உருளை, கிடங்குகளை அழுத்திச் சமப்படுத்தியது.

அரச இலச்சினை பொறித்த வெள்ளை நிற பஜிரோ வீரை மரத்தருகில் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய டை கட்டிய அதிகாரி பற்றை அழிக்கும் வேலை முடியும் வரை காத்திருக்குமாறும், இரண்டு குடும்பத்திற்குப் பொதுவாக ஒரு கூடாரம் தருவோம் என்றார். தன்னுடன் வந்த ஊழியர்களிடம் பைல்களைக்காட்டி விளக்கினார். சிலர் ஏதோ அவரிடம் கேட்கப்போக, அவர்கள் கேட்பதைப் பொருட்படுத்தாமல் "ஓம் கொஞ்சம் பொறுங்கோ டெண்ட் கிடைக்கும்" என்று சொல்லிக்கொண்டே போனை எடுத்துக் காதில் வைத்துக்கொண்டு வாகனத்தில் ஏறிப்போய்விட்டார். எல்லோரும் வீரை மர நிழலுக்கு திரும்பியதை இவளும் அம்மாவும் பார்த்துக்கொண்டு இருந்தனர்.

தம்பி இவளுடைய மடியில் இருந்தபடி, நிலத்தில் குச்சிகளால் சிறிய வீட்டைக் கட்டினான். அவன் புல்டோசர்களை வேடிக்கை பார்க்க விரும்புவான் என்று இவள் நினைத்தாள். அவன் கொஞ்ச நேரம் மடியில் இருந்தே பார்த்து விட்டு சலித்துப்போனவனாகக் குச்சி வீட்டை கட்டினான். அதிலும் சலித்துப்போய் வீட்டைக் கலைத்து விட்டு, இவளுடைய மடிக்குள் முகம் புதைத்துச் சிணுங்கினான். அம்மா அவனைப்புரிந்து கொண்டவளாக, "என்ர அப்பனுக்குப் பசிக்குதோ?" என்றார். மடியில் கிடந்தவாறே மேலும் கீழும் தலையை அசைத்தான்.

அம்மா பையின் ஸிப்பைத் திறந்தார். நேற்று மாலையில் ஓமந்தையில் இறக்கியபோது, ரிசேட் அணிந்த இராணுவத்தினர் பிஸ்கற் பைகளை சனத்துக்கு வீசினர். சனம் அடிபட்டு எடுத்தது. இவள் இரண்டு பிஸ்கற் பைகளை எடுத்தாள். ஒன்றை உடைத்துத்துக் காலையில் பஸ் வெளிக்கிடும் போது தம்பிக்குக் கொடுத்திருந்தாள். கிறீம்கிறாக்கர் அவனுக்குப் பிடிக்காது, அதைக்குடுக்க, சிணுங்கி முகத்தைச்சுழித்தான். இவள் "என்ர செல்லம் இப்ப இதச் சாப்பிடு பிறகு சொக்கிலேட் கிறீம் வாங்கித்தாறன்" வேண்டா வெறுப்பாகச் சம்மதித்தான். அவன் சாப்பிட்டது போக ஏழெட்டுப் பிஸ்கற்றுக்கள் மிச்சம் இருந்தன. அம்மாவிடம் நீட்டினாள்.

"எனக்கு வேண்டாம் நீ சாப்பிடு பிள்ளை நேற்றேல்ல இருந்து நீ சாப்பிடாம இருக்கிறாய்" என்று விட்டுப் புல்டோசர்களை வேடிக்கை பார்த்தார். இவளுக்குப் பசியிருக்கவில்லை பிஸ்கற் பையைச் சுருட்டி ட்ரவலிங் பையின் பக்க ஸிப்புக்குள் அடைந்தாள். மதியம் நெருங்கியது. அருகிலிருந்த பிளாக்குகளிலிருந்து புதுச்சனத்தைப் பார்க்க நிறையப்பேர் வந்தார்கள். சண்டையப்பற்றிக் கேட்டார்கள். எந்த இடத்தால வந்தனீங்கள் என்றார்கள், இன்னும் சனம் வருதோ என்றார்கள். சாப்பாட்டைப் பற்றி யாரும் பேசவில்லை முகாமில் கடைகள் இருப்பதாயும் தெரியவில்லை.

அம்மாவிடம் கொஞ்சம் காசு இருந்தது. தம்பி சாப்பாடு வேணும் என்று அழுவான். கிறீம் கிறக்கரை வைத்துச் சமாளிக்க முடியாது. அடுத்து என்ன நடக்கப் போகின்றது என்பதை யோசிக்க முடியவில்லை. எங்கையாவது நிம்மதியாய் சாய்ந்து கண்ணயர வேண்டும். "நித்திரை கொண்டு எத்தனை மாசம்?". இவளுக்குப் பசியெண்டாலும் கூட நித்திரை வந்தால் நித்திரை பசியை வென்று விடும். தம்பியுடன் சாப்பாட்டு விடயத்தில் கஸ்ரம். பங்கருக்குள் இருந்து சாப்பாடு வேணும் என்று அவனழுதது இன்னும் ஞாபகமிருந்தது. சாப்பாட்டு விடயத்தில் அவனை அடக்க முடியாது. இவளுக்குப் பசி பழகிப்போன ஒன்றாகிவிட்டது. ஷெல் பயம் பசி தெரியாது. ஆமிக் கட்டுப்பாட்டுக்குள் வந்த பிறகு பிரமந்தனாறு பள்ளிக்கூடத்தில் சோதனை செய்த போது தம்பி பசியில் அழுதான். ஆமி ஒருத்தி பின்னால சாப்பாடு கொடுக்கிறார்கள் வாங்கிக் கொடுக்கச் சொல்லி அவளுக்குத் தெரிந்த தமிழில் சொன்னாள். பழைய பாணும், பருப்புக்கறியும் கிடைத்தது. மூன்று பேரும் சாப்பிட்டார்கள். வீட்டில் எப்பொழுதாவது பாண் வாங்குவதுண்டு. இவளுக்கும், தம்பிக்கும் சுடச்சுட ரோஸ்பாண் வேணும். அப்பா காலையில் பைந்தமிழ் பேக்கரியில் சுடச்சுட ரோஸ் பாண் வாங்கி வருவார். பால் தேத்தண்ணியில் தோய்ச்சு தம்பியுடன் சண்டை போட்டபடி பாண் சாப்பிட்டதை லைனில் பாண் வாங்க நிற்கும் போது நினைத்துப்பார்த்தாள். இன்னும் கொஞ்ச நேரம் போனால் பாணும், பருப்புக்கறியையும் சாப்பிட்டு இரண்டு நாள் ஆகிவிடும். அவளுக்குப் பசி தெரியவில்லை, களைப்புத்தான் அதிகமாயிருந்தது. உடல் அசதியில், கண்களுக்கடியில் நித்திரை உறைந்திருந்தது. பையிலிருந்து தண்ணீரை எடுத்து தொண்டையை நனைத்தாள். "தண்ணி முடிஞ்சுதோ பிள்ளை? முன்னுக்குத் தண்ணி ராங்குகள் வச்சிருக்கிறாங்கள் பஸ்சில இருக்கேக்க கண்டனான். நான் போய் எடுத்து வாறன்" என்றார் அம்மா.

அம்மாவைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது. அப்பா, முரசுமோட்டையில் ஷெல் விழுந்து செத்துப்போன அன்று பாதி உடைந்து போனாளர். அவளையும் தம்பியையும் கரைசேர்க்க பங்கறும் அடுப்படியுமாய் கிடந்தார். ஷெல் விழாத நேரத்திலையும் இவளையும்

தம்பியையும் பங்கர விட்டு வர விடமாட்டார். "அம்மா, நான் தேங்காயாவது திருவித்தாறன்" எண்டு இவள் வெளியே வந்தால், அழுது குழறி இவளைப் பங்கருக்க இருத்திடுவார். சண்டை தொடங்கும் போதே அப்பா, அம்மாவின் சீதன நகைகளை வைப்பகத்தில் அடகு வைத்தார். அதுதான் கடைசி வரைக்கும் சாப்பாட்டுக்குக் கை குடுத்தது. உடையார்கட்டில் சங்கக்கடையொன்றை இயக்கம் உடைச்சு சனத்துக்குத் திறந்து விட்டிருக்கு என்று கேள்விப்பட்டதும், அம்மா தனியாளாய் சைக்கிளில் போய் ஒரு மா மூட்டையை ஏற்றிக்கொண்டு வந்தார். மாத்தளன் வரைக்கும் அதையும் காவிக்கொண்டு போய்த்தான் மூன்று பேரின் வயிறுகளையும் பார்த்துக்கொண்டார் அம்மா. ஒரு மாசம் புட்டோ, ரொட்டியோ கறி இல்லாவிட்டாலும் சம்பல், சீனியோடு தொட்டுச் சாப்பிட முடிந்தது. தம்பி கறி வேணும், சம்பல் வேணும் என்று அழுவான்.

ஆமிக்கட்டுப்பாட்டுக்குள் வருவதற்கு மூன்று நாட்கள் முன்பு வரை சாப்பிட இருந்தது. பிறகு பங்கரை விட்டு நகரேலாத அளவுக்கு ஷெல் அடி. அந்தச் ஷெல் அடிக்குள் தம்பி சாப்பாடு ஏதுவும் கேட்காமல் அம்மாவின் மடிக்குள்ளும், இவளின் மடிக்குள்ளும் சுருண்டு அழுதான். இவளுக்கும் அழுகை வரும். இவள் அழுதால் அம்மாவும் அழுவாள் என்பதால், தம்பியைத் தேற்றி மூக்கை உறிஞ்சி அழுகையை நெஞ்சுக்குள் சமாதி செய்வாள். அம்மா ஒரு காயமும் இல்லாமல் இவளையும் தம்பியையும் கொண்டு வந்து சேர்க்க பட்ட பாட்டில் தான் உருக்குலைந்தே போனாள். ஓமந்தையில் இவளைச் சோதித்த பெண் ஆமி "காயம் ஏதும் இருக்கா நங்கி?" என்று கேட்கும் போதும், ஓமந்தையில் இராணுவச் சி.ஐ.டி குடும்பத்தோடு படம் எடுத்து, விசாரிச்ச போது நெஞ்சு அடிச்ச வேகம் ஷெல் விழும் போது கூட இவளுக்கு அடிச்சதில்லை. அம்மா பட்டபாடுதான் சொல்லி மாளாது. "பிள்ளையை எல்.ரி.ரி பிடிக்கேலையோ" என்று விசாரிச்சவர்கள் தமிழிலும், சிங்களத்திலையும் கேட்டார்கள். அது பொதுவான கேள்வியாக இருந்தது. "பிள்ளைக்கு இதய வருத்தம், அவளால ஏலாது, அதால பிடிக்கேல" என்று அழுது குழறினாள் அம்மா. எல்லோருக்கும் ஒரே பதிலும் வெவ்வேறு தொனி அழுகையும் கண்ணீரளவும் அம்மாவிடமிருந்தன. "கடைசிநேரம் வன்னியில் கேள்விப்பட்ட கதையள் குமர் பெட்டையள வச்சிருக்கிற எந்த அம்மாவைத்தான் பயப்படுத்தாது" என்று சொன்னார் அம்மா. "என்ர பிள்ளை இயக்கம் இல்லை, இயக்கம் பிடிக்கவுமில்லை, இந்த வருசம் ஓ.எல். எடுக்கோணும், விட்டியள் எண்டா வவுனியாவில இருக்கிற என்ர தங்கச்சி வீட்ட வச்சு ஓ.எல். எடுக்க விடுவன். பிள்ளைன்ர வருத்தத்துக்கும் கொழும்பிலதான் காட்டோணும்" ஒரே பதிலை அவர்களிடம் ஒப்பித்தார். அவர்களிடம் புலம்பிய அம்மாவை கண்ணில் நீர் வழிய பார்க்க மட்டும் தான் இவளால் ஏலுமாய் இருந்தது. அப்பா செத்த போது அம்மா இவ்வளவு அழுதாளா என்று நினைத்துப்பார்த்தாள். அப்பா காயம் பட்ட போது

அழுதாள். அப்பாவின் உடல் கொண்டு வரப்பட்ட போது தலை மாட்டில் போயிருந்து வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அம்மா அழவில்லை, இப்படி அழவேயில்லை.

இடம்பெயர்ந்து இருட்டுமடுவில் பங்கருக்குள் இருக்கும் போது இயக்கம் இவளைக் கட்டாய ஆட்சேர்ப்பில் பிடித்துக்கொண்டு போனதைப், பதினைந்து நாள் பயிற்சியில் நின்றதை, இவள் ஓடிவந்ததை அம்மா கண்ணீரால் அழித்தார். விசாரணை முடிந்து பஸ் ஏறும்போது "நல்ல வேளை அம்மாளாச்சி புண்ணியத்தில உனக்குக் கிப்பி வெட்டேல, உன்ர மெடிகல் காட்டுகள் கிடந்ததாலையும் விட்டுட்டாங்கள்" என்று வற்றாப்பளை அம்மன் இருக்கிற திசையப்பாத்து அம்மா கும்பிட்டார். உடம்பாலையும், மனசாலையும் களைச்சுப்போய், சோர்ந்து ட்ரவலிங் பையில சாஞ்சு இருக்கிற அம்மாவை வெயிலில் தண்ணீர் எடுக்க விட இவளுக்கு மனசு ஒப்பவில்லை. "நீ இரு நான் போட்டு வாறன், டெண்ட் தந்தா இடம் பிடிக்க வேணும்" என்றாள். "தண்ணி எடுக்கவோ போறீர் நானும் வாறன்" பக்கத்தில் இருந்த அன்ரியும் இவளுடன் வெளிக்கிட்டார். பஸ்ஸில் அன்ரியும், குடும்பத்தையும் கண்டது ஞாபகமிருந்தது.

அழுக்கேறிய துவாயை எடுத்துத் தலையைச் சுற்றிப் போர்த்தினாள். "ஷோல் துலஞ்சு போச்சோ பிள்ளை?" இவளுடைய கழுத்தை பார்த்துக் கேட்டாள் அன்ரி. ஷோல், அந்தப் பச்சை பஞ்சாபியின் ஷோல். அப்பான்ர காயத்துக்குக் கட்டி விசுவமடு ஆசுப்பத்திரிக்கு ஏற்றி விட்ட போது பஞ்சாபியின் ஷோலை கடைசியாகப் பார்த்தாள். ஓம் என்று தலையாட்டினாள். துவாயை மார்புக்கு இழுத்து விட்டாள். ஏனைய பிளாக்குகளில் வெள்ளை யு.என்.எச்.சி.ஆர் கூடாரங்கள் அடிக்கப்பட்டிருந்தன. கூடாரங்களுக்குள் முகங்கள் தெரிந்தன. வெப்பத் தகிப்பில் கானல் நீர் நெருங்கி வருவதைப் போலிருந்தது. புதிதாகப் போடப்பட்ட கிரவல் பாதைச் சூடு செருப்பில்லாக் காலை இம்சித்தது. ஐ.சி.ஆர்.சி. ரி-சேட் போட்டவர்கள் , மலசலகூடங்களை அடித்தனர். வாகனங்களை நிழலில் நிறுத்திவிட்டு அவற்றின் முகப்பில் சாய்ந்து ஓய்வெடுத்தனர். சில வெள்ளைக்கார முகங்களும் தெரிந்தன. தொண்டு நிறுவனங்களில் பொறுப்பாளர்களாக இருக்கவேண்டும். சனங்களின் இறுக்கமான கண்கள் சந்தேகமாய்ப் பார்ப்பது போல இருந்தது. தெரிந்த முகமேதும் தென்படுகிறதா எண்டு பார்த்தாள், பல முகங்களிலும் வெய்யில் கொதித்தது. இருவரும் வேகமாய் நடந்தனர்.

தண்ணீர் தாங்கிகளுக்குப் பக்கத்தில் நிறையச்சனம் லைனில் நின்றது. போத்தல்களும், கான்களும் கயிற்றால் கட்டப்பட்டிருந்தன. லைனில் துவாய்களைப் போர்த்தியபடி கறுத்து இறுகிய முகங்கள் நிறையத் தெரிந்தன. சிறுவர்களும், சிறுமிகளும் கைகளில் அதிக கனமிருக்கும்

தண்ணீர் போத்தல்களை அடுக்கி விட்டு நின்றிருந்தனர். அவர்களுக்குத் தம்பியின் வயதுதான் இருக்கும். அந்தச் சிறியவர்கள் போத்தல்களுக்குக் காவல்காரர்களாக நின்றார்கள். நிழல்களில் இராணுவச்சீருடைகள் உலாவித் திரிந்தன. ஆமியின் கண்கள் எல்லோரையும் கண்காணித்தபடி இருந்தன. அரைமணி நேரமாக லைன் மரையை விழுங்கிய மலைப்பாம்பு போல அசைந்து நகர்ந்தது. வயதான அம்மாவும், நடுத்தர வயதுப்பெண்ணும் குழாயருகில் சண்டை போட்டுத் திட்டியபடியிருந்தனர். அன்ரியும் இவளும் தண்ணீரை நிரப்பிக்கொண்டனர். இவள் கவளம் நீரைக்கோலி முகத்தில் அறைந்து கழுவிக்கொண்டாள். வியர்வையிலும், எரிவிலும் ஊறிக்கிடந்த முகத்திற்கு குளிர் நீர் இதமாயிருந்தது.

கிரவல் பாதையில் ஏறி நடக்கத்தொடங்கினார்கள். பெரிய கற்கள் கால்களில் அடித்து, கூர்க் கற்கள் கால்களைக் குத்தாமலும் பார்த்து நடக்க வேண்டியிருந்தது. இருந்தாலும் இவளுடைய கால் சின்னி விரலை, பெரிய கல் இடறியது வலித்தது. வலியில் முகம் சுளித்தவள், காலில் காயம் ஏற்பட்டதா என்று பார்த்தாள். வலி மட்டும் இருந்தது. தாங்கிக்கொண்டு நடந்தாள். முகம் காய்ந்து போக வியர்வை ஊறி, எரிந்தது. கழுத்தில் சுற்றியிருந்த துவாயில் ஊறிய வியர்வை கழுத்தை நனைத்து, மார்புக்குள் இறங்கி ஊர்வதை உணர முடிந்தது. அன்ரி போத்தலைத் திறந்து கொஞ்சம் தண்ணீரை அறைந்து முகத்தைக் கழுவிக்கொண்டாள். இவர்களுக்கு எதிர்ப் பக்கமாகச் சிலர் வந்தனர். அவர்களின் கைகளில் சாப்பாட்டுப் பாசல்கள். கருநீல பொலித்தீன் பைகளில், நீல நிறத் தூக்கணாங்குருவிக் கூடுகளைப்போல தொங்கிக்கொண்டிருந்தன.

சிறுமியொருத்தி பொலித்தீன் பையில் ஆறேழு சாப்பாட்டுப் பார்சல்களைத் தூக்க முடியாமல் தூக்கி வந்தாள். சாதித்துவிட்ட முகத்துடன் இவர்களைக் கடந்து போனாள். கொஞ்சத்தூரம் போக, சிலர் ஆல மர நிழளில் பாசல்களைப் பிரித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். இவளும், அன்ரியும் கண்களைச் சாய்த்து பார்சல்களை நோட்டம் விட்டனர். கிழவரொருவர் சாப்பாட்டுப் பார்சலைத் திறந்தார். லஞ்சீற்றினுள் வெள்ளைச் சோறு கட்டியாயிந்திருந்தது. நரம்பு புடைத்துச் சுருங்கிய கைகளைச் சோற்றுக்கட்டியின் நடுவில் வைத்து திண்ம நிலையை சிதைத்தார். சோற்றின் நடுவில் கறி உறைந்திருப்பது தெரிந்தது. குழம்பு நடுச்சோற்றில் சிவப்பாய் ஊறி இருந்தது. அன்ரி பெரிதாகவே சொல்லிவிட்டாள். "இறைச்சி பிள்ளை".

சோறும் இறைச்சிக்கறியும், பார்க்கவே நாக்கூறியது. வயிறு பசிக்கிறதென்று மூளைக்குச் சொல்வது போல இருந்தது. 'எத்தனை நாளாயிற்று சோறு சாப்பிட்டு?' கடைசியாக உடையார்கட்டில் அத்தை வீட்டில் சமைச்ச

சோறைச் சாப்பிட்டுக் கொண்டு இருக்கும் போது ஷெல் கூவியது. கோப்பையைப் போட்டிட்டுப் பங்கருக்கப் பாய்ந்ததுதான் சோறு பற்றிய கடைசி ஞாபகமாகவிருந்தது. இப்போது கண்ணுக்கு முன்னால் சோறும் இறைச்சிக்கறியும். தம்பிக்கு இறைச்சி எண்டால் உயிர். கிழமையில் ஆறுநாள் வீட்டில குத்தரிசிச் சோறுதான் அம்மா சமைப்பாளர். இறைச்சி எண்டா சம்பாவோ, முல்லைத்தீவுக்கு வந்த கப்பல்ல இருந்து இயக்கம் இறக்கின வெள்ளை அரிசியோதான் சமைப்பாளர். இரண்டு விதமான இறைச்சிக்கறி அம்மாவின் சமையலில் இருக்கும் பிரட்டல் மற்றது குழம்பு. ஈரல் வாங்கினால் தனியாகச் சொதி வைப்பாள். இறைச்சிக் குழம்பை வெள்ளை சோற்றுக்குள் ஊற்றும் போது, "அது தனி வடிவு" என்று அப்பா சொல்லுவார். ஞாயிற்றுக்கிழமை அப்பா வீட்ட நிப்பார். அப்பா நிண்டா எப்படியும் இறைச்சிதான். கடைசியாக அப்பா காயப்பட்ட அன்றும் ஞாயிறுதான். வீட்டில் நின்ற கோழிகளில் ஒன்றை அப்பா உரிச்சுத் தந்தார். அம்மாவும் இவளும் சேர்ந்து சமைச்சு முடியிற நேரம் காணிக்குள ஷெல் விழுந்தது. வாழையிலை வெட்டிக்கொண்டு நிண்ட அப்பான்ர இடுப்பில் பட்ட பீஸ் இடுப்பைச் சிதைச்சு, இறைச்சிக் கடையில் தொங்கிற போலக் குடலை தொங்க விட்டது. அம்மா கத்தினார். இவள் மயங்கியே போனாள். நினைவு வந்த போது எல்லாம் முடிந்து போயிருந்தது. அப்பாவை பொடியாகக் கொண்டு வந்து நடுவீட்டுக்குள் அழுகுரல்களுக்கு நடுவில் வளர்த்தியிருந்தனர்.

'பிறகு எப்ப இறைச்சி?' பிறகு தின்னுற சாப்பாடு பசி,ருசி இல்லாம தொண்டையினுள் இறங்கியது. எப்ப ஷெல் வருமோ என்ற பயத்தில் புட்டையோ கஞ்சியையோ பங்கர் வாசலில் இருந்து அள்ளி அடைந்து விட்டுப் பக்கரின் நெஞ்சுக்குள் சுருண்டு போவார்கள். அரிசி, சோறு கண்ணில காணக்கூடக் கிடைக்கவில்லை. தம்பி பங்கருக்குள ஒரு நாள் திடீரென்று "சோறும் இறைச்சியும் சாப்பிடோணும் போலக் கிடக்கு" என்றான். அம்மாக்கு கண்கலங்கியது. இவள் பிராக்குச்சொல்லி கதையை மாற்றினாள். இண்டைக்குச் சோறையும் இறைச்சியையும் பார்த்தவுடன் தம்பியின் ஞாபகமே வந்தது. அன்ரி அந்தக் கிழவரிடம்,
"அப்பூ எங்க சாப்பாடு வாங்கின்னீங்கள்?"
"தெற்காலை ஓடு பிள்ளை, முடியப்போகுது. மிசின் பெட்டி முட்ட கொண்டுவந்து குடுக்கிறாங்கள், சிங்களச்சனத்தின்ர சாப்பாடு கெலியில வந்ததாம்" என்றார்.
அவர் காட்டியபக்கமாகப் போனார்கள். ஒரு மரத்திற்குக் கீழே, உழவு இயந்திரம், பெட்டியுடன் நின்றது. சாரதி இருக்கையில் ஆமியொருவன் சாய்ந்திருந்து ஃபோன் பார்த்துக் கொண்டிருந்தான். பெட்டியைச் சூழ தொகை சனம் நின்றிருந்தது. மிசின் பெட்டியில் நின்றபடி இரண்டு ஆமி சோற்றுப் பார்சல்கள் இருந்த பெட்டிகளைப் பிரித்துக் கீழே நின்ற

இருவரிடமும் கொடுத்தார்கள். அவர்கள் நெரிபட்டு, அடிபட்டு கையை வானத்திற்கு நீட்டும் சனத்திடம் பாசல்களை "எத்தினை வேணும் எத்தினை வேணும்" என்று கேட்டபடி எண்ணிக் கைகளில் திணித்தபடியிருந்தனர். விசுவமடுவில் தொடங்கி மாத்தளன் வரை சங்கக்கடையில சாமான் வாங்க லைனில அடிபட்டு, இடிபட்டு நல்ல பழக்கம். தண்ணீர் போத்தல்களை மரத்தடியில் வைத்துவிட்டு, துவாயை இறுக்கி கட்டிக்கொண்டு சனத்தினுள் இறங்கினாள்.

வியர்வை மணம், நெரிசல். தம்பியும், அம்மாவும், இறைச்சிக்கறியும் கண்ணுக்குள் நிற்க நெரிபட்டாலும் பரவாயில்லை என்று நுழைந்தாள். பெண்கள் அதிகமிருந்தனர். 'சேர் சேர்' என்று எல்லோரும் கைகளை நீட்டி முண்டியடித்தனர். இவளுடைய கால்களில் நகங்கள் கீறின, குதிக்கால்கள் மிதித்தன. இவள் கால்கள் மிதித்தால், "என்ன பிள்ளை காலை மிதிக்காம வாங்கன்" என்று சினந்தனர். இவளுக்கு வியர்த்து ஒடியது. கழுத்தில் இருந்த துவாய் நழுவி விழுந்து விடும்போல் இருந்தது. கைகளால் கழுத்தைச் சுற்றி அதை விழாமல் செய்தாள்.

இவளுக்குப் பின்னால், இவள் வயதுப் பெண் நின்றாள், பெரிய உருவம் இவளின் முதுகில் படர்ந்து நெருக்கியது. சாப்பாடு கொடுப்பவர்களைக் கவனித்தாள். ஒருவன் ஆமி, இன்னொருவன் ஐ.சி.ஆர்.சி. பணியாள் என்பது அவர்கள் அணிந்திருந்த ரீசேட்களில் தெரிந்தது. ஐ.சி.ஆர். சி.க்காரன் தமிழ் பெடியன். எத்தனை பார்சல் என்று தமிழில் கேட்டு ஆமியிடம் சிங்களத்தில் சொல்லிக்கொண்டிருந்தான். ஆளுக்கு ஒன்றாக இரண்டு லைன்கள். இடைக்கிட இரண்டு லைன்களும் கலக்கும், பிரியும், தள்ளுப்பாடு நடக்கும். அன்ரி "சனம் இப்பிடி இருக்குதுகள்" என்று சலித்துக்கொண்டார். அன்ரியின் கையில் பார்சல்கள் திணிக்கப்பட்டு கூட்டத்திலிருந்து விலகிப்போனாள். இவள் சாப்பாடு கொடுக்கும் இருவரையும் நெருங்கினாள். லைன் குழம்பி, இவளை முன்னால் தள்ளியது. சுதாகரித்து நிமிர்ந்தாள், லைனை "முண்டியடிக்க வேண்டாம்" என்று உறுக்கினர். இவளிடம் "எத்தனை பார்சல்?" சிங்களத்திலும், தமிழிலும் கேட்டனர். இறுக்கம் தளர்ந்து அவர்களுடைய குரலில் குழைவு தெரிந்தது. பார்வையைத் தாழ்த்திகொண்டே கைகளை நீட்டினாள்.

"எத்தினைப் பார்சல்?"

"மூண்டு" பின்னால் யாரோ தள்ள வரிசை முன்னால் தடுமாறிச் சரிந்து, கூட்டத்தின் மொத்த பாரமும் இவள் முதுகில் பொறுக்க, இவள் பார்சல் பெட்டிகளில் தடுக்கி விழப்போனாள். வலிய கரம் இவளது இடப்பக்க நெஞ்சை இறுக்கி அழுத்தி விலகியது. ஐந்து கனமான விரல்கள். நெஞ்சுக்குள் நெருப்புக்கொள்ளி சொருகியது போல கணத்தில் உணர்ந்தாள். எதேட்சையானதில்லை என்று புரிந்துகொண்டது

அவளுடல் நெஞ்சிலிருந்து அதிர்ச்சி உடலெங்கும் பரவி விதிர்விதிர்க்கச் செய்தது. அந்தக் கணத்துக்குள்ளிருந்து மீள முதல் கையில் மூன்று பாசல்களும் திணிக்கப்பட்டன. அங்கே நடந்தது இரண்டு உடலுக்கே தெரிந்திருந்தது. கூட்டத்தை விட்டு வெளியேறியதும், மூச்சு வாங்கியது. சோற்றுப்பாசல்களை நெஞ்சோடு அணைத்துக்கொண்டாள். வெயிலோடு சேர்ந்து இன்னும் வியர்த்துக்கொட்டியது. குரல் எதும் வராமல் நாக்கு வறண்டது. மூளைக்குள் ஏதோ இரைச்சல். கனக்கும் நெஞ்சுத்தசையோடு இறைச்சிப்பார்சல் அழுத்தியது. கண்ணீர் முட்டியது. தலை சுற்றுவது போல் தடுமாறிப்போனாள்.

இவளுடைய தண்ணீர் போத்தல்களையும் அன்ரி எடுத்துக்கொண்டு முன்னால் நடந்தாள். அன்ரியின் கவனமெல்லாம் சோற்றுப்பார்சலின் பாரத்தில் பை கிழிந்து கொட்டி விடுமோ என்பதாகவே இருந்தது. அவளின் தடுமாற்றத்தையோ, கலங்கிய கண்களையோ கவனிக்கவில்லை. தொண்டைக்குள் அழுகை திரண்டது, ஓங்காளித்து எச்சிலைத் துப்பினாள். நெஞ்சில் இன்னும் கனம் ஏறி மூச்சிரைத்தது. இடது மார்பில் அருவருப்பாய் ஊர்வது போல உணர்ந்தாள். அங்கிருந்து நினைப்பை எடுக்கப்பார்த்தாள், முடியவில்லை. கிரவல் கற்களின் கூர்மையில் கால்கள் அழுத்திக் குத்தினாலும், கால்கள் பற்றிய உணர்வு அவளிடமில்லாது போயிருந்தது. குரலும் சொற்களும் தொண்டையோடு சேர்ந்து வறண்டு போயிருந்தன.
தொடர்ந்தும் அன்ரி சாப்பாட்டைப் பற்றித்தான் ஏதோ கதைத்துக் கொண்டுவந்தாள். இவளுக்கு எதுவும் ஏறவில்லை. கண்கள் சோர்ந்தன. இரண்டு பிளாக்குகள் தாண்டும் தூரம் பல நூறு கிலோமீற்றர் நடப்பது போல உணர்ந்தாள்.

ஐம்பத்தியேழாவது பிளாக்கில் கூடாரங்கள் அடிக்கத் தொடங்கியிருந்தனர். ஒரு கூடரத்துள்ளிருந்து தம்பி கைகாட்டினான். அவர்களுக்குக் கூடாரம் கொடுத்துவிட்டார்கள். அன்ரியும் இவளும் அங்கே போனார்கள். அம்மா வெளியில் வந்து அன்ரியிடம் தண்ணீர்ப் போத்தல்களை வாங்கினார். தம்பி அவளுடைய கைகளில் இருந்த பார்சல்களைக்கண்டதும் ஓடி வந்து வாங்கிக்கொண்டான். "சோறும் இறைச்சிக்கறியும், சிங்கள ஆக்களின்ர சாப்பாடு" அன்ரி வாயோரம் சிரிப்போடு தம்பியிடம் சொன்னாள். அவனுடைய முகம் பிரகாசித்தது. பார்சல்களோடு கூடாரத்துள் பாய்ந்து சென்றான். இவள் எதுவும் பேசாமல் கூடாரத்துள் புகுந்து பைகள் அடுக்கி வைக்கப் பட்டிருந்த பக்கமாய் ஒடுங்கினாள். இன்னும் நெஞ்சு அடிப்பது காதில் கேட்டது. வியர்த்து வழிந்தது.

தம்பி பார்சலைப்பிரித்தான், அன்ரி சொன்ன இறைச்சி உற்சாகம் அவன் முகமெங்கும் பரவிக் கிடந்தது. இவளுக்கு நெஞ்சுப்பாரம் குறையவில்லை.

அம்மாவைப் பார்த்ததும் விம்மல் அதிகரிப்பதை உணர்ந்தாள். அம்மாவிடம் சொல்வதா வேண்டாமா என்று யோசிக்கும் திராணியைக் கூட இன்னுமவள் அடையவில்லை. தம்பி பார்சலைப்பிரிப்பதையே பார்த்தபடியிருந்தாள். சோற்றுத்திண்மத்தை உடைத்து, ஊத்தை அடைந்த நக விரகள் ஐந்தும் சோற்றைப் பிரித்தன. இறைச்சிக்கட்டி செதில்களுடன் பிரிந்தது சோற்றோடு வாய்க்குள் அடைந்தான். அவன் முகம் சுருங்கியது. கொஞ்சத்தைத் துப்பினான்.

''அம்மா இது இறைச்சியில்லை'' என்றான்.

அம்மா சின்னத் துண்டை எடுத்துக்கடித்தாள்.

''பிள்ளை இது இறைச்சி இல்ல ஈரப்பிலாக்காய்''

''ஈரப்பிலாக்காயோ?''

''ஓமப்பன் சிங்களாக்கள் இதுதான் கூடச் சமைக்கிறவை'' அம்மா சிரித்துக்கொண்டே சொன்னாள்.

''அக்கா இதையோ இறைச்சியெண்டு வாங்கிக்கொண்டந்தனி?''

தம்பி சோற்றுப் பருக்கைகள் உதிரும் வாயோடு சிரித்தான்.

# வோண்டர் கோன்

சில நட்சத்திரங்கள்
துயர நிலவு
யாரோ மட்டும் வருகிறேன்.
கையில் பற்றியிருந்த கொண்டல்
மலர்களும்
காற்றில் அலைவுற்ற கூந்தலுமாய்
குரூர வெளியில்
உன்னையும் பறிகொடுத்தாயிற்று...
"எங்கே போகிறாய்"
கற்றில் யாரோ ஒலிக்கவும்
"தெரியாது"

-பா.அகிலன்

*01*

***2010 சனவரி***

**ம**திய வெயில் உக்கிரமாகிக் கொண்டிருந்தது. உடலில் வீழ்ந்த ஒவ்வொரு அடியும் சூடான சூரியக் கதிர்கள் பட்டு எரிந்தன. தாய்க்காரி அடித்த அடியை விட அவளுடைய அழுகை அவனை மிகவும் துன்பத்திற்குள் தள்ளியிருந்தது. நெஞ்சு வேகமாக அடித்துக்கொண்டது. நிமிர்ந்து பார்க்கத் திராணியற்று குனிந்து கண்களை இறுக்க மூடிக் கொண்டே அடி வாங்கினான். அடிக்கடி கண்கள் கண்ணீரைப் பிழிந்து வெளியே தள்ளின. 'சதோசா' வாசலில், அவனைத் தாய்க்காரி அடிக்கும் போதே வெடித்து அழுது கொண்டேதான் அடித்தாள். ஒப்பாரியொன்றிற்கு நெருக்கமான புலம்பலுடனும், கோபத்துடனும் அவளிடமிருந்து வார்த்தைகள் வந்தபடியிருந்தன.

அங்கே ஆயிரம் பேருக்குக் குறையாமல் கூடிவிட்டார்கள். இருபத்தையாயிரம் பேர் இருக்கும் முகாம். வெள்ளைப் பன்றியின் குட்டிகளைப் போல் நிரையாக அடிக்கப்பட்ட கூடாரங்களுக்குள் மூச்சு முட்ட காலத்தை ஓட்டிக்கொண்டிருந்தனர் மக்கள். அந்த முகாமில் அதிகம் பேர் கூடும் இடங்களில் "சதோசாவும்" ஒன்று. 'சதோசா', 'பூட்சிட்டி' காட்டை அழித்து, முகாம் அமைத்ததின் பின்னர் சரியாக ஒன்றரை மாதங்களில் அங்கே

கட்டியெழுப்பப்பட்டிருந்தது.

"சனத்திட்ட என்ன இருக்கு... உந்தப் பெரிய கடையில் சாமான் வாங்க?" என்று அவனுடைய தாய்க்காரி அலுத்துக்கொண்டதற்கு நேர்மாறாக அமோகமாக ஓடியது பூட்சிட்டி. வேலைக்குப் போகாமலேயே நடமாடும் வங்கிகளில் அரசாங்க வேலைக்காரர்களுக்குச் சம்பளம் வந்தது. வெளி நாட்டில் இருந்து காசு வருபவர்களும் காசைக் காசாகப் பார்க்காமல் செலவழித்தனர். வன்னியில் அரைவயிறும், கால்வயிறுமாக உண்டவர்கள் ஆசை தீர விதம் விதமாய் உண்டனர். காசு இருப்பவர்கள் எங்கேயும் பிழைத்துக்கொள்வர்; அவர்களுக்குக் கஸ்ரமில்லை. அம்மாவைப்போல் அந்த முகாமிற்குள் ரோள் சுட்டுக் கொடுத்துக்கொண்டே, ஆமி பிடித்துப்போன அப்பாவிற்கு என்ன ஆயிற்றென்று மகனுக்குத் தெரியாமல் அழுதுகொண்டே பிழைப்பு நடத்தும் குடும்பமொன்றிற்குச் 'சதோசா' உச்சிக்கிளையில் தொங்கும் திராட்சைப் பழங்கள் தானே.

அவனிடம் காசிருந்திருந்தால், இருந்திருந்தால் வன்னியில் வயலும், தோட்டமும் விதைக்கப்பட்டிருந்தால் அன்று 'சதோசா' வாசலில் அம்மா அவனை, மரத்தின் கிளப்பப்பட்ட வேரினால் அந்த அடி அடித்து இருக்கமாட்டாள். அத்தனை பேரின் முன்னால் பதினேழு வயதுப் பையன் 'வோண்டர் கோனிற்காகப்' பிடித்துக் கட்டி வைக்கப்பட்டிருக்கமாட்டான்.

"துலைவானே வீட்டுப் பக்கம் வராதையடா" அழுதவாறே அம்மா போனாள். அடித்த வேர் அவனருகில் பிய்ந்து கிடந்தது. ஆமி ஆட்களைக் கலைந்து போகச்சொன்னான். எல்லோரும் கலைந்து போயினர். உடலெங்கும் வலித்தது. மூக்குச்சளியும், கண்ணீரும் படர்ந்து, செம்மணல் ஒட்டி முகமெங்கும் காய்ந்து போயிருந்தது. கண்ணீர் வழியும் இடத்தில் ஈரக்கோடு இறங்கியது.

யாருடையதோ ஒரு கை அவனுடைய முழங்கையைப் பிடித்துத் தூக்கியது. "எழும்பப்பன்" கூனிக் குறுகிக் கிடந்தவன், நிமிர்ந்து பார்த்தான்.

தலையில் வெயிலுக்கு ஊதா நிற 'ஸ்கார்ப்' கட்டிய பெண்மணி நின்றிருந்தாள். அவளுக்கு அவனுடைய அம்மாவின் வயதுதானிருக்கும். கருப்பு நிறக் கவுண் அணிந்திருந்தாள். நெற்றியில் பொட்டில்லை. 'ஸ்கார்ப்பின்' நுனியின் உச்சியில், குங்குமம் வைத்த அடையாளம் தெரிந்தது. அவளுடைய வெள்ளை முகத்தில் பரிவு பூரணமாய்ப் படர்ந்து கிடந்தது. கண் அடியில் மட்டும் லேசான கருவளையமும், அதன் முடிவில் ஒரு கருத்த உண்ணி போல் சிறு புடைப்பான 'கருஞ்சதை' வளர்ந்திருந்தது. அவளுடைய கைகள் மட்டுமல்ல கண்களும் அவனை ஆதரவாகத்

தூக்குவது போல் தாழ்ந்து வந்தன. மதியவேளையாதலால் உச்சியில் எறிக்கும் சூரியனை அவளது தலை மறைத்தது. சுருண்டு கிடக்கும் அவன் மேல் அந்தப் பெண்ணின் நிழல் வீழ்ந்தது.

அவளிற்குப் பக்கத்தில் ஒரு பெண் பிள்ளை நின்றிருந்தாள். இரட்டைப் பின்னல், வட்டமுகம், சிவப்புச்சட்டை, கண்களில் நிறையக்கருணை, சற்று எடுப்பான மார்பும், உருண்ட தேகமுமாக அவனை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள். கைகளில் ஒரு 'சொப்பிங் பையில்' ஏதோ சில சாமான்கள் இருந்தன. ஒரு சொக்கிலேட் 'கிறீம் பிஸ்கட் பைகற்' ஒன்று மட்டும் வெளியே எட்டிப் பார்த்தபடியிருந்தது. அவள் அந்தப் பெண்மணியின் மகளாக இருக்கவேண்டும். அவனை விட ஓரிரண்டு வயது அவளுக்கு அதிகம் இருக்கலாம்.
"எழும்பப்பன்"
மீண்டும் அந்தப் பெண்மணியின் குரல். கையைப் பிடித்துத் தூக்கினாள். எழும்பினான். மூக்கை உறிஞ்சினான். 'சதோசாவில்' வேலை செய்யும் ஊழியன் ஒருவன் பிடித்து இழுத்ததில் அவனுடைய சேட் கிழிந்து விட்டிருந்தது. தோற்பட்டைப் பக்கம் சேட்டைத் தூக்கி மூக்கையும், முகத்தையும் துடைத்தான். மூக்குச்சளியும், கண்ணீரும் மீண்டும் குழைந்து அவற்றின் மேல் அப்பிக்கொண்ட செம்மண்ணைக் கொண்டு அவனுடைய முகத்தில் இன்னொரு விதமான மண்ணோவிய ரேகைகளை ஓடச் செய்தது.
"எங்களோட வாருமப்பன்"
அவளுடைய கனிவான குரல். எதுவும் பேசாமல் நடந்தான். அந்தப் பெண்மணி சீரான வேகத்தில் அவனுக்கு முன்னால் சென்றாள். இவன் தலை நிமிரவில்லை. "சரக் சரக்" என்று நடக்கும் அவளுடைய 'பாட்டா' செருப்பைக் குனிந்து பார்த்தபடி நடந்தான். அவன் பின்னால் கருணையை முகமாகக் கொண்ட அந்தப் பெண்பிள்ளை சற்று இடைவெளி விட்டு அவனைத் தொடர்ந்தாள்.
"என்ன பேரப்பன் உமக்கு?"
மந்திரத்தால் கட்டுண்டு நடந்தவனை அந்தக் குரல் உசுப்பியது. "ஜீவநேசன்" என்றான். வார்த்தையில் குரலும், பெயரும் மட்டுமிருந்தது. ஜீவனில்லை. பிறகு அவள் ஏதும் கேட்கவில்லை.

எண்பத்து மூன்றாவது 'பிளாக்கில்' பெரிய பாலை மரத்தின் கீழே இருந்தது அவர்களின் 'ரெண்ட்.' மற்ற ரெண்ட்களிலிருந்து சற்று ஒதுக்குப்புறமாகவும் பாலை மரநிழலின் குளிர்ச்சியிலும் அடிக்கப்பட்டிருந்தது. அவனை இருக்கச் சொல்லிவிட்டு பெண்மணி உள்ளே போனாள். அவளுடைய பெண்பிள்ளையும் அந்தப் பெண்மணியைப் பின்பற்றினாள். நான்கைந்து நிமிடங்களில் அந்தப் பெண் பிள்ளை மட்டும் வெளியே வந்தாள். "அம்மா முகத்தைக் கழுவச் சொன்னவா" அருகிலிருந்த சிவப்பு நிற றப்பர்

வாளியைக் காட்டினாள்.

ஒன்றும் சொல்லாமல் எழுந்து முகம், கை கால்களை அலம்பினான். நிறைய நீரைக் கோலி முகத்தில் வேகமாக அறைந்தான். நீரை முகத்தில் இருந்து வழித்தெறிய விரும்பவில்லை. லேசாய் வீசும் மாலைக்காற்று அவனை ஆதரவுடன் வருடுவதை அந்த நீரின் குளிர்ச்சியில் உணர்ந்தான். அந்தப் பெண்பிள்ளை துவாய் ஒன்றை நீட்டினாள். துவாயில் *UNHCR* என்று பொறித்த எழுத்துகள் தெரிந்தன. துவாய் புதிதாக இருந்தது. முகாமில் இருக்கும் எல்லோரிடமும் பயன்படுத்தாமல் இப்படி நான்கைந்து துவாய்கள் இருந்தன. ஜீவநேசனின் 'டெண்டில்' அதைப் போல் நான்கு துவாய்கள் இருந்தன. வாங்கி முகத்தைத் துடைத்தான்.

கைகளில் லேசான சிராய்ப்புகள், கன்னத்தில் விரல் தடங்கள், கழுத்தில் கடை ஊழியனின் நகக்கீறல், அவற்றில் நகக்கீறல் தவிர ஏனையவை அம்மா தந்தது. "துடைச்சிட்டு இந்தப் பிளேண்டீயை குடியுமப்பன்" கையில் தேனீர்க் கிளாசுடன் வெளிப்பட்டாள் அந்தப் பெண்மணி. கல்லில் அமர்ந்து சூடான தேனீரை உறிஞ்சினான். மெல்லப் பிரமமையில் இருந்து விடுபடுவதை உணர்ந்தான். சூழலை உணர்ந்தான். அம்மா நினைவில் வந்தாள். கடைக்காரன் நினைவில் வந்தான். "வொண்டர் கோன்" நினைவில் வந்தது. சுற்றிச் சனங்கள் நிற்பது போல் தோன்றித் தோன்றி மறைந்தது. நிமிர்ந்து அவனெதிரில் நிற்கும் அவ்விருவரையும் பார்த்தான். வெட்கமாக இருந்தது. கண்ணையும் தலையையும் தாழ்த்திக் கொண்டே தேநீரைக் குடித்தான்.

"யாரிவர்கள், யாரோடு எப்படி வந்தேன்? என்ன நடக்கிறது எனக்கு? என்று மனம் கொஞ்சம் கொஞ்சமாக நினைவினை மீட்டு ஒழுங்கு செய்யத் தொடங்கியது. கையில் ஏந்தியிருந்த "கிளாசின்" சூட்டை அப்போதுதான் கைகள் உணரத் தொடங்கின.

அந்தப் பெண்மணி அவனிடம்,

"என்னப்பன் நடந்த... ஆர் அது உம்மட அம்மாவோ?" குரலில் இரக்கம் மண்டிக் கிடந்தது. அவனை வெட்கம் பிய்த்துத் தின்றது. குரல்வளை உருகி ஒரு தசை உருண்டையாகத் தொண்டைக்குழியை அடைத்தது. வார்த்தைகள் எதும் எழவில்லை. கண்ணீர் விழி மடலைச் சிராய்த்துக்கொண்டு கோடிட்டு இறங்கியது. "அழக்கூடாது ஆம்பிளை பிள்ளையெல்லோ" அவர்கள் அவன் கண்ணீர் நிற்பதற்கு அவகாசம் கொடுத்தனர். கொஞ்ச நேரத்தின் பின்னர் அவன் சொல்லத் தொடங்கினான்.

அப்பாவை ஆமி விசாரணைக்கு அழைத்துச் சென்றதில் இருந்து

தொடங்கினான். அம்மா 'றோள்' சுடுவது. அதைக் காலையில் முகாம் முழுவதும் எடுத்துச் சென்று இவன் விற்பது. 'சதோசாவில்' ஒருநாள் அம்மாவிடம் எண்பது ரூபா களவெடுத்து 'வொண்டர் கோன்' வாங்கிச் சாப்பிட்டது. அதன் சுவை பிடித்துப் போனது. அம்மாவிடம் திருடிய பழக்கத்தைச் 'சதோசாவில்' காட்டியபோது 'சதோசாவின்' கமராக்கள் அம்மாவை விடக் கூர்மையான கண்களைக் கொண்டிருந்தது. பிடிபட்டு 'சதோசாக்காரர்' அடித்தது. அம்மா அங்கே வந்தது. அவமானம் தாங்காமல் இவனைப் போட்டு அடித்தது வரை சொல்லி முடித்தான். இடையிடையில் கண்ணீர், மூக்குச்சீறலோடு சொல்லி முடித்தான். தன்னைத் திருடன் என்று இரண்டு பெண் பாதிரியார்களிடமும் பாவ மன்னிப்புப் பாணியில் தன்னை ஒப்புக்கொடுத்தான். இனி "வோண்டர் கோனில்" ஆசைப்பட மாட்டேன் என்றும் சொன்னான்.

அவர்கள் இருவரும் அவனை எதுவும் கேட்கவில்லை. "கிளிநொச்சில எவடம் நீங்கள்?", "அப்பாக்கு என்ன பேர்?" "இயக்கத்தில என்னவா இருந்தவர்?" "எத்தினையாம் வகுப்புப் படிக்கோணும் இப்ப?" என்ற சில கேள்விகளை மட்டும் சினேகமாய்க் கேட்டாள் அந்தப் பெண்மணி. பள்ளிக்கூடக் கதை வரும் போது அந்தப் பெண்பிள்ளை, "நான் சென் திரேசா மகளிர் கல்லூரி. உம்மளை எனக்குத் தெரியும், நீர் வொலிபோல் விளையாடுறனீர்தானே? வலைய மட்டம் விளையாடேக்க கண்டிருக்கிறன். நான் உம்மள விட ரெண்டு வயசு கூட, என்னை அக்கா எண்டு கூப்பிடும்" 'அவளின் குரலில் ஒரு வித கிளித்தன்மையை உணர்ந்தான். அத்தனை கருணையால் நிறைக்கப்பட்ட கண்களும், முகமும் அவளிற்கு இருந்தன.

நன்றாகக் கதைத்தாள். அவளுடைய முகத்தைப் போலவே குரலும் கருணையிடம் அடிமையாய் இருந்தது. பெரும் குற்ற உணர்வுடன் பாவமன்னிப்புக் கேட்கும் தோரணையையும், குரலையும் மாற்றாமல் அவன் அவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தான். "வொண்டர்கோன்" திருடியது பற்றியோ இன்று நடந்த சம்பவம் பற்றியோ அவர்களிருவரும் ஒரு வார்த்தை கூடப் பேசாதது அவனுக்குள் வியப்பாக இருந்தது. தான் செய்தது ஏதோ மாபெரும் குற்றம் என்ற அவனுடைய நினைப்பை கொஞ்சம், கொஞ்சமாகத் தளர்த்தியது. எனினும் உள்ளே குறுகுறுப்புத் தொடர்ச்சியாக இருந்த வண்ணமே இருந்தது.
"இவர் வந்தோண்ணப் பின்னேரம் உம்மளை அம்மாட்ட கொண்டே விடுறன்" என்றாள் அந்தப் பெண்மணி. இவன் "உங்கட பேர் என்ன அம்மா?" என்றான். "புவனேஸ்வரி". இவர் "புவனா" எண்டு கூப்பிடுவார் என்றாள்.
"உமக்கென்ன பேர்?" மகளிடம்.
"மயூரதி"

அன்று மாலையில் அவளுடைய அப்பா வரவில்லை. எங்கே போய்விட்டார் என்று கேட்டதற்குப் புவனா அம்மா, "பக்கத்துக் காம்பில ஆமிக்காரரர் "டெண்டுகள்" அடிக்கிறாங்கள்; அங்க வேலை செய்யப் போட்டார். அவங்கள் நாங்கள் கதிர்காமர் முகாமுக்குப் போய் இருக்க அலுவல் பாத்துத் தாறன் எண்டவங்கள். அது தான் கதைக்கப் போட்டார்" என்றாள் மயூரதி அமைதியாக. "அம்மா நீங்கள் கொண்டு போய் விட்டிட்டு வாங்கோ; பிறகு ஜீவன்ர அம்மா பாவம் தேடுவா" என்றாள்.

புவனா அவனைக் கூட்டிக் கொண்டு போய் தாயிடம் சமாதானம் சொல்லி விட்டாள். அம்மா அவனைத் தடவி அழுதாள். அடித்த இடங்களைத் தடவிக் கொடுத்தாள். அம்மாவிடம் அவனை விட்டுவிட்டு விடைபெற்றுப் போன புவனா திரும்பி வந்தாள். அவள் கையில் இரண்டு 'வோண்டர்கோன்கள்' இருந்தன. அதைக் கண்டதும், ஏதோ 'கிரைனட்டை' வைத்திருப்பதைப் போல வெருண்டு பார்த்தான் ஜீவனேசன்.

அம்மாவிடம் அதைக் கொடுத்தாள். "வீட்ட வாங்கோ ஒருநாள்" என்று சொல்லி விட்டு, அம்மாவிடமும் அவனிடமும் விடைபெற்றுப் போனாள் புவனா. அம்மா இரண்டு 'வொண்டர்கோனையும்' அவனிடமே கொடுத்தாள். இருட்டில் நிலவைப் பார்த்தவாறு 'டெண்டின்' முன்னால் இருந்து இரண்டு 'வோண்டர்கோன்களையும்' ஒரு சேர உரித்துக், கடித்து மென்றான். குளிருடன் வழமையை விடச் சுவையாய் இறங்கின அந்த 'வோண்டர்கோன்கள்'.

*02*

அடிக்கடி புவனா அம்மாவின் 'ரெண்டிற்குப்' போவான் ஜீவனேசன். எப்போது அவன் அங்கே போனாலும் அவனுக்கும், மயூரதிக்கும் புவனா ஒரு 'வொண்டர்கோனை' வாங்கிக் கொடுப்பாள். இரண்டு பேரும் நல்ல நண்பர்களானார்கள். புவனா வட்டிக்குக் கொடுப்பவள் என்று தெரிந்து கொண்டான்.

ஆனால் குறைந்த வட்டிக்கு அவள் பணம் கொடுப்பதால் நிறையப் பேர் அவளிடம் காசு வாங்கிச் செல்வார்கள். அதனால் உணவிற்கு அவர்களுக்குப் பஞ்சமில்லை. ஜீவநேசன் அம்மாவிற்கும் அவ்வப்போது காசு வாங்கிக் கொண்டு போய்க் கொடுப்பான். சொன்ன திகதியில் கொண்டு வந்து கொடுத்து விடுவான். 'ரோள்' விற்கும் நேரம் போக, அம்மாவிற்கு ஏதும் உதவிகள் செய்வான். மற்ற நேரங்களில், புவனேஸ்வரி அம்மாவின் 'டெண்டில்' போய் இருப்பான். வன்னியில் வாழ்ந்த கதையைப் புவனேஸ்வரி உணர்ச்சியுடன் சொல்வாள். அவள் கதை சொல்லும் அழகே தனி. தேர்ந்த நாடகக்காரி போல் நடித்துக் காட்டி

கதை சொல்வாள். பெரும்பாலும் அவளும், சிவராசாவும் காதலித்ததும்; பெற்றோரை எதிர்த்துத் திருமணம் செய்ததும், யாழ்ப்பாணத்தில் இருந்து கிளாலியால் வன்னிக்கு வந்ததும்; கனகாலம் பிள்ளை இல்லாமல் இருந்து, வற்றாப்பளை கண்ணகிக்கு 'நேத்தி' வைத்து மயூரதி பிறந்ததை எல்லாம் சொன்னாள். சிவராசாவின் பெயரைச் சொல்லும் போது, அவளின் கண்களில், அத்தனை ஒளி வந்து போகும். கடைசியாக மாத்தளனில் 'ஷெல்' விழ, விழ சிவராசா, அவளையும், மயூரியையும் கழுத்தளவு தண்ணீரில் அழைத்து வந்ததைச் சொன்னாள். 'ஷெல்லும்', 'கிபீரும்' மாறிமாறி அடிச்சுச் சனம் வாற வழியெல்லாம் செத்துக் கிடந்த காட்சிகளைச் சொல்லுவாள். தேர்ந்த நாட்டிய மங்கைக்குரிய 'பாவங்கள்' அவளுடைய முகத்தில் வந்து போகும். சொல்லும் போதே அழுவாள். ஜீவனேசனுக்கும் அழுகை வரும். புவனா அம்மா அப்படி நடிக்கும் போது மயூரதியும் விம்முவாள். ஆனால் அழமாட்டாள். இவன் பார்க்கும்போது சமாளித்துக் கொள்வாள்.

கதிர்காமர் முகாமிற்கு உறவுப்பாலத்தில் எப்படியாவது போய்விட வேண்டும் என்று புவனேஸ்வரி அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பாள். அவளுடைய தங்கை ஒருத்தி அந்த முகாமில் இருக்கிறாள். கதிர்காமர் முகாம் சற்று வசதியான முகாமெனப் பரவலாக அறியப்பட்டிருந்ததால், அங்கே உறவுப் பாலத்திற்கு எழுதிக் கொடுத்து உறவைச் சாட்டி போய்விடப் பலர் முண்டியடித்தனர். அதற்காகத்தான் சிவராசாவும் மும்முரமாகப் பக்கத்து முகாம் ஆமிக்காரர்களைப் பிடித்து அலுவல் பார்ப்பதாகப் புவனேஸ்வரி சொல்வாள். அந்த இரண்டு மாதத்தில் ஒருமுறை கூடச் சிவராசாவை அவன் கண்டதில்லை. மயூரதியைக் கேட்டபோது, "அவர் வாறது குறைவு" என்றாள். குரலில் ஒருவித வெறுமை. புவனேஸ்வரி "அவர் பாவம் எங்களைக் கரை சேர்க்கப் பாடுபடுறார்" என்று பாவப்பட்டுக் கொள்வாள்.

சிவராசாவைப் பற்றிச் சொல்லிக்கொண்டே இருப்பாள். சிவராசா ஒரு தேர்ந்த விவசாயியாய் இருந்தான். அவனுடைய அப்பா, படித்த வாலிபர்களுக்கு வன்னியில் நிலம் வழங்கப்பட்ட போது, காட்டை வெட்டி சேனைப் பயிர்ச் செய்கையை ஆரம்பித்தார். யாழ்ப்பாணத்தில் இருந்து வந்ததில் இருந்து சிவராசா அப்பாவின் தொழிலை மேற்கொண்டான். புவனேஸ்வரி தந்தை, தாயற்றவள். யாழ்ப்பாணம் 'டவுனில்' சிவராசாவின் தாயிடம் தையல் படிக்க வந்தபோது சிவராசாவுடன் காதல். அப்பாவுடன் சண்டை போட்டுக்கொண்டு வன்னிக்கு வந்துவிட்டான் சிவராசா. வன்னியில் இருந்த வயற்காணி அவனுடைய பெயரில் இருந்தது. அப்பாவைக் கேட்காமல் அங்கே விவசாயம் செய்யத் தொடங்கினான். அப்பாவும் அவனை எதுவும் சொல்லவில்லை. புவனேஸ்வரிக்கு மயூரி பிறந்த பின்னர் வாழ்க்கை இன்னும் இனிமையாகக் கழிந்தது. பிறகு வன்னியின் எல்லா இனிமையான வாழ்வின் மீதும் 'ஷெல்லும்', 'கிபிரும்'

அடிக்கத் தொடங்கியது. செல்வராசா தன்னுடைய குடும்பத்தைக் கூட்டிக் கொண்டு முல்லைத்தீவு வந்துவிட்டான். இது புவனேஸ்வரி சொன்ன அவர்களுடைய வாழ்வின் சுருக்கம்.

ஆனால், புவனேஸ்வரி சொல்லும் போது அவளுடைய உணர்வுகள் கொந்தளிக்கும். கொஞ்சம் பெரிதாகச்சிரிப்பாள். சொல்லிக்கொண்டிருக்கும் போதே கண்கள் கலங்கும். ஆச்சரியப்படும் வகையில் கண்கள் கலங்கி, குளமான நீரைச் சட்டென உள்ளே உறிஞ்சிக் கொள்ளும். மயூரதியைப் பற்றிச் சொல்லும்போது அருகில் இருக்கும் மகளை அணைத்துக் கொண்டு கொஞ்சுவாள். அந்த நேரங்களில் ஜீவனேசன் இருக்கும் அசூசையால் மயூரதி நெளிவதைப் பார்க்க அவனுக்குச் சிரிப்பாக இருக்கும்.

அம்மாவிடம் போய் புவனேஸ்வரியைப் பற்றிக் கதை கதையாகச் சொல்வான். அம்மா ஏதோ நினைவு வந்தவளாய், "அப்பா என்ன செய்யிறாரோதெரியேல்லை?" என்றுகண்கள்பனிக்கப்பெருமூச்செறிவாள். ஜீவனேசன் அப்பாவை நினைத்துக் கொள்வான். அப்பாவை ஓமந்தைச் சோதனைச் சாவடியில் வைத்து ஏற்றிய போது, அம்மா கதறி அழுதது இன்னும் கண்ணுக்குள் நின்றது. "அம்மாவைப் பாத்துக் கொள்ளப்பன்" அப்பாவின் இறுதி வார்த்தைகள்.

புவனேஸ்வரிக்கு நேர்மாறாய் இருந்தாள் மயூரதி. பெரிதாகப் பேசமாட்டாள், வார்த்தைகளில் பதில் சொல்வாள். கண்களில் எப்போதும் ஒரு வெறுமை படர்ந்திருக்கும். உதட்டிற்குச் சிக்கனமாகச் சிரிக்கச் சொல்லிக் கொடுப்பாள் போலும். புன்னகை கொஞ்சமாகத் தான் கசியும். அவனுக்கு முகாமில் நண்பர்கள் பெரிதாக இல்லை. 'ரோள் பெட்டியுடன்' அலையும் நேரம் போக, புவனேஸ்வரியின் 'டெண்டே' கதியென்று கிடப்பான். அம்மா, "அடிக்கடி அங்கை போகாதையடா; நித்தம் போனா முற்றம் சலிக்கும்" என்று சொல்வாள். 'டெண்டுக்கு' எங்கையம்மா முற்றம் இருக்கென்று பகிடியாய் சொல்வான். அன்றொரு நாள், புவனா அம்மா வீட்டிற்குப் போனபோது புவனேஸ்வரி ரப்பர் சட்டிக்குள், பல்லுத் தீட்டும் தூரிகையினால் மினுக்கிக்கொண்டிருந்தாள். அருகில் மயூரதி அமர்ந்திருந்தாள். ஐந்து தாலிக்கொடிகள். தண்ணீரில் தங்க நிறப் பாம்புகள் போல் பிணைந்து கிடந்தன. அவற்றில் ஒன்றை புவனேஸ்வரி மினுக்கிக்கொண்டிருந்தாள். அடகு பிடித்த தாலிக்கொடிகள் என்று புவனேஸ்வரி சொன்னாள். முகாமிற்கு வந்த புதிதில், அப்பாவை வெளியில் எடுக்கக் காசு வேண்டும் என்று யாரோ அம்மாவிடம் சொன்னார்கள். கொஞ்சம், கொஞ்மாகவேனும் காசு சேர்க்க வேண்டும் என்று முடிவு செய்து... அம்மா, கழுத்தில் கடைசியாகத் தங்கியிருந்த தாலிக்கொடியை கழற்றி, வங்கியில் அடகு வைத்து, வந்த காசில் கொஞ்சத்தை எடுத்துவிட்டு,

மீதியை வங்கியிற் போட்டாள் எடுத்த காசில்தான் 'ரோள்' சுட்டு விற்கத் தொடங்கினாள். அம்மாவின் வெறுமையான கழுத்தைப் பார்க்கும்போது அந்தரமாக இருக்கும்.

அன்று ஜீவனேசனையும், மயூரதியையும் 'ரெண்டில்' இருக்கச் சொல்லிவிட்டு, வங்கி லொக்கரில், அந்த ஐந்து தாலிக்கொடிகளையும் 'போட்டு' வருவதற்குப் புறப்பட்டாள் புவனேஸ்வரி. அந்த ஐந்து தாலிக்கொடிகளுடன் தன்னுடைய கழுத்தில் கிடந்த தாலிக்கொடியையும் சேர்த்து எடுத்துக்கொண்டாள்.

"முகாமெல்லாம் கள்ளராம்; இவர், என்ரை நகையளையும் லொக்கர்ல போடச் சொன்னவரப்பன்."

"கள்ளன்" என்ற சொல் அவனை ஏதோ செய்தது. "சதோசாவில்" நின்ற ஊழியர்கள் அடிக்கும்போது சொல்லி அடித்த வார்த்தை. அவன் தலையைக் குனிந்து கொண்டான். புவனேஸ்வரி அவளுடைய "கான்ட்பாக்கில்" நகைகளை வைத்துக்கொண்டு புறப்பட்டு விட்டாள்.

போகும் போது "நான் வர நேரம் செல்லும், சோறு காய்ச்சி வைச்சிருக்கிறன்; முட்டை பொரிச்சுச் சாப்பிடுங்கோ ரெண்டு பேரும். குக்கர் மூட்டுறது கவனம்" என்று சொல்லி விட்டுப்போனாள். இவன் எதுவும் பேசாமல் குனிந்து தறப்பாள் தரையை நகத்தால் கீறிக்கொண்டிருந்தான். அருகில் இருந்த மயூரதி அமைதியாக இருந்தாள். பெரும்பாலும் அவள் அப்படித்தான். "உனக்குப் பசிக்குதோ?" கேட்டாள். இல்லையென்று தலையசைத்து விட்டு முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டான். வேண்டாத ஏதோவொரு 'வஸ்து' உள்ளே உருவாவதைப் போல் உணர்ந்தான். அப்போது அவள் லேசாக மூக்குச் சீறுவது கேட்டது. நிமிர்ந்து பார்த்தான். அழுது கொண்டிருந்தாள். "என்னடி... ஏன் அழுறாய்?" என்று பதறிப்போய் கேட்டான். அவள் விம்மல் இன்னும் அதிகரித்தது. அவளை நெருங்கி கைகளை ஆதரவாகப் பற்றினான். "அம்மா ஏதும் பேசினவாவோ?" என்றான். அடிக்கடி அவளிடம் போகும்போது கண்கள் கசங்கி, முகம் வாடியிருக்கும். "என்ன அழுதனியோ?" என்று கேட்பான். "இல்லை" என்று சமாளிப்பாள். ஆனால் திடீரெண்டு ஏன் இப்படி அழுகிறாள்? என்று அவனுக்கு விளங்கவேயில்லை. அவள் திடீரென, இவன் உடல் மேல் படர்ந்து, அணைத்துக்கொண்டு அழுதாள். திடீரென்று தோன்றிய குழப்பமான அழுகையும், மென்மையான தழுவலும் அவனைப் பதட்டமடையச் செய்திருந்தன. அவனுடைய நெருக்கம் அவளுடைய அழுகையைக் குறைக்குமென்று அவன் நம்பினான். ஆனால் அது அதிகப்பட்டுக்கொண்டே போனது. ஒரு பூனைக்குட்டியின் உடலில் இருக்கும் அதிர்வை அவளுடலில் உணர்ந்தான். கைகள் நடுங்கின.

அவளுடைய மென்மையும், அழுகையும், அவளுடைய நெருக்கத்தில் எழுந்த நெடியும் அவனுக்குப் பதட்டத்தையும், குழப்பத்தையும் கொடுத்தது. அவள் ஒரு காரணமும் சொல்லவில்லை. தொடர்ச்சியாக அழுதாள். தேற்றினான். அவனைத் தொடர்ந்தும் அணைத்துக்கொண்டாள். நாசியில் நுகரும் அவளுடைய ஸ்பரிசத்தில் இருந்தும், வியர்வை நெடியில் இருந்தும் அங்கே புதிதாக ஏதோ தோன்றுவதையும், நிகழ்வதையும் அவனுடல் உணரத் தொடங்கிற்று.

அன்று புவனேஸ்வரி மாலையில் களைத்துப் போய்த் திரும்பியபோது, மயூரதி நித்திரையாய் கிடந்தாள். அவள் முழுகியிருக்க வேண்டும். சரியாகத் துவட்டாத தலையுடன் 'ட்ரவலிங் பை' ஒன்றைத் தலைக்குக் கொடுத்துவிட்டு நிம்மதியாக உறங்கும் மகளைக் கண்டாள். ஜீவனேசனைக் காணவில்லை. அன்றிலிருந்து புவனேஸ்வரியை அவன், அம்மா என்று கூப்பிடுவதை நிறுத்திக்கொண்டான்.

*03*

இப்போதெல்லாம் பெரிதாக அவன் மயூரதியின் 'டெண்ட்' பக்கம் போவதில்லை. அந்தப் பக்கம் போனால் ரெண்டொரு கதை. அல்லது அதிகபட்சம் தேநீருடன் வந்துவிடுவான். மயூரதியின் முகத்தில் எந்த மாற்றத்தையும் அவனால் காணமுடிவதில்லை. அதே கருணை தொடர்ந்தும் வழியும். அவளை அடிக்கடி பார்க்க வேண்டும் போல் இருக்கும். எனினும், கஸ்டப்பட்டு தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டான். அந்தப் பக்கம் போவதை மிகவும் குறைத்துக்கொண்டான்.

ஒரு நாள் புவனேஸ்வரியும், மயூரதியும் ஜீவனேசனின் 'டெண்டுக்கு' வந்தனர்.

"ஏனப்பன் எங்களோடை என்ன கோவம்?"

"அப்படி ஒண்டுமில்லை அன்ரி."

"பிறகேன் எங்கட பக்கமே வாறேல்ல?"

"அம்மா தனியா இருக்கிறா, இப்ப ஒடரும் வாறது கூட வேலையும் நிறைய" மயூரதியைப் பார்க்காமலே சொன்னான்.

"இவர் அலுவல் பாத்தது சரி வந்திட்டு நாங்கள் நாளைக்குக் கதிர்காமர் முகாம் போறம்" புவனேஸ்வரி அன்ரி சந்தோசமாகச் சொன்னாள். இவன் மயூரதியை பார்த்தான். கருணை முகம் உறைந்து கிடந்தது. கண்களில் லட்சம் கதையிருந்தது. அவனுக்குப் புரியாத ஏதோ ஒரு மொழியில் அந்தக் கதைகள் இருந்தன.

*04*

பஸ் வண்டியில் எல்லாச் சாமான்களையும் ஜீவனேசன் ஏற்றி

முடித்துவிட்டான். புவனா அன்ரியிடம், "உங்கட அவர் வரேல்லையோ?" என்றான். "அவர் ஆமீன்ர ஜீப்பில கொட்டகை 'அரேஞ்' பண்ண ப்போட்டார். எங்களைச் சாமானை ஏத்திக்கொண்டு வரச் சொன்னார். ஏதோ அவங்களுக்குத் தண்ணிப் பாட்டியும் வைக்கோணுமாம் எண்டவர்" என்றாள். இவன் தலையாட்டினான். பஸ்ஸில் நான்கைந்து குடும்பங்கள் உறவுப்பாலத்தில் ஏனைய முகாம்களுக்கு மாறிச் செல்கின்றன போலும். நிறையச் சாமான்கள். எல்லாம் தொண்டு நிறுவனங்களின் பெயர் பொறித்து இருந்தன. "பஸ் வெளிக்கிட அரைமணி நேரம் ஆகும்" என்று சொன்னாள் புவனா அன்ரி. "ஜீவன் இந்தா காசு, மூண்டு வோண்டக் கோன் வாங்கிக்கொண்டு வா" என்றாள் குழந்தையைப் போல. "அம்மா, நானும் போட்டு வாறன் அவனோட" என்று புறப்பட்டாள் மயூரதி.

"இல்லை வேண்டாம் பஸ் எடுத்தாலும், நான் வாங்கிக் கொண்டு வாறன் நீ நில்" என்றான்.

"இல்லை நான் வருவன்"

'சதோசாவில்' அடிக்கடி ஊழியர் மாற்றப்படுவதால் அவனை யாருக்கும் அடையாளம் தெரியவில்லை. மூன்று வோண்டர் கோன்களை வாங்கினான். அவளிடம் பையைக் கொடுத்துவிட்டு எதுவும் பேசாமல் நடந்தான். அவள் முன்னால் நடந்தாள். போகும் பாதையில் இருந்து விலகி முட்கம்பி வேலியின் பக்கமாகப் பிரமாண்டமாய் வளர்ந்து நின்ற மரத்தின் அருகிற் போய் மறுபக்கத்திற்குப் போனாள். பெரிய காடொன்று முட்கம்பி வேலிக்கு வெளியே தெரிந்தது. மரத்தின் வேரில் இருந்து அழத் தொடங்கினாள். அவளிற்கு அழுகை சிரிப்பைப் போல இவ்வளவு வேகமாக வருகிறது. கண்கள் பெரும் கடல்களைக் கொட்டத் தயாராகவே இருந்தன. அவன் தேற்ற முயன்றான். தான் அவளைத் தேடி வருவேன் என்று கதாநாயகனைப் போலப் பேசினான். அவளுடைய தோள்களை ஆதரவாக அழுத்தினான்.

"எனக்கு அப்பா இல்லை, அவர் ஷெல் விழுந்து செத்துப் போய்ட்டார். என்ர அம்மாக்கு விசரடா" என்றாள் அழுகையோடு. கண்ணீர் திரண்டு இறங்கியது. "அப்பா இருக்கிறார் எண்டு அவா நம்பிக்கொண்டு இருக்கிறா. அப்பா ஒரு அலுவலும் பாக்கேல, உறவுப்பாலத்துக்கு நான் தான் எழுதிக் குடுத்தனான். அப்பா செத்திட்டார் எண்டு அம்மாட்டச் சொன்னா தலைய மரத்தில மோதுறா, தலை தலையா அடிக்கிறா. டொக்டரிட்டையும் வாறா இல்லை, என்னாலை சமாளிக்க ஏலாமத்தான் அத்தேட்ட கூட்டிக்கொண்டு போறன்."

"பாத்தால் அன்ரில அப்பிடித் தெரியேலையேடி?"

"அப்பா எங்கட பங்கர் வாசல்ல ஷெல் விழுந்து, அம்மான்ர கண்ணுக்கு முன்னால சிதறிப்போனார். அப்ப மயங்கின அம்மா, முழிச்ச உடனை அப்பா பக்கத்தில நிக்கிற மாதிரி கதைக்கத் தொடங்கினா. முகாமுக்கு வந்த பிறகு, எல்லாரும் சொல்லிப் பாத்தும் அம்மா கேக்கேல; அம்மா, அப்பா

அவவோட இருக்கிறதெண்டுதான் நம்பிக்கொண்டு இருக்கிறா"
அழுதாள். அணைத்துக்கொண்டான்.
"அழாதையடி அன்ரிக்கு சரியாகிடும்"
"தாலிக் கொடியள், காசு எல்லாம் எப்பிடி வந்ததெண்டு தெரியுமோ?"
"ம்கும்"
"அதெல்லாம் மாத்தளனில, செத்துக் கிடந்த சனத்தின்ர கழுத்தில கழட்டினது. அப்பா அதுகளைக் கழட்டி அம்மாட்ட குடுத்தார். பங்கருக்க இறங்கேக்க செல் விழுந்து செத்துப் போனார்" அழுதாள். இவன் கண்களும் வழிந்தன. அவளைத் தேற்றி கண்களைத் துடைத்தான். ஆறுதல் சொன்னான். உச்சியில் முத்தமிட்டான்.

பஸ் வெளிக்கிடப்போகுதென்று சொல்லி பஸ்சிற்குள் ஏற்றி விட்டான். யன்னலில் புவனா அன்ரியின் முகம்தெரிந்தது. இவள் எதுவும் பேசாமல் தாயின் பக்கத்தில் அமர்ந்து கொண்டாள். யன்னலுக்கால் வொண்டர்கோன் பையை வாங்கி மயூரதியிடமும், அவனிடமும் ஒன்றைக் கொடுத்தாள். மற்றையதை அவள் ஆசையோடு நக்கினாள். புவனா அன்ரியின் முகம் சந்தோசத்தில் இருந்தது. கழுத்தில் 'லொக்கரில்' வைத்திருந்த தாலிகளில் ஒன்றைப் போட்டிருந்தாள். நேற்றுப்போய் எடுத்து வந்திருக்க வேண்டும். றப்பர்வாளிக்குள் பாம்பு போல் நெளிந்தது ஞாபகம் வந்தது. 'வொண்டர்கோனை' குடிக்கச் சொன்னாள். உரித்து நக்கினான். மயூரி ஒன்றும் சொல்லாமல் வேறு எங்கோ பார்த்துக் கொண்டிருந்தாள். அவளின் கையில் 'வொண்டர்கோன்' உருகி வழிந்தது. பஸ் புறப்பட்டது.

புவனா அன்ரி, அவனிடம் விடைபெற்றாள். எதுவும் காதில் ஏறவில்லை. மயூரதி அவனைத் திரும்பிப் பார்க்கவேயில்லை. பஸ் நகர, 'டீசல்' புகை கண்களை மறைத்தது. 'வொண்டர்கோன்' கைகளில் உருகி வழிந்து.
"தம்பி, உந்த பஸ் எங்கை போகுது?"
"தெரியாது"

• குறிப்புகள் •




மெடூசாவின் கண்களின் முன் நிறுத்தப்பட்ட காலம்

• யதார்த்தன் •

இந்நூலின் உரைப்பகுதி *Creative Commons Attibution-Noncommercial-sharealike 3.0 Unported (CC BY-NC-SA 3.0)* உரிமத்தின் கீழ் வெளியாகிறது. அதனை விட உரிமை கூடிய விததில் பயன்படுத்த விரும்புவோர் பதிப்பாளரைத் தொடர்பு கொள்ளலாம். இந்நூலின் தளக்கோலமும், வடிவமைப்பும் 2019 யூலை வரை முழுப் பதிப்புரிமைக்கு உட்படுகிறது. 2019 யூலையிலிருந்து இந்நூலின் தளக்கோலமும், வடிவமைப்பும் ***Creative Commons Attibution-Noncommercial-sharealike 3.0 Unported (CC BY-NC-SA 3.0)*** உரிமத்திற்கு மாற்றம் பெறுவதோடு, திறந்த அணுக்கத்தில் வெளியாகும்.

மேலதிக விபரங்களுக்கு :

*https://creativecommons.org/licenses/by-nc-sa/3.0/*

BY NC SA

BY NC ND



**போர்** நினைவுகளும், வெளிப்பாடுகளும், அணுகுமுறையும் தன்னிலை சார்ந்தவை. அவற்றைப் பொதுமைப்படுத்தல் களுக்குள் அடைபட முடியாத **விலகல்களின்** தொகுப்பாக மட்டுமே வாசித்து, உரையாட முடியும். யதார்த்தனின் புனைவுகளில் திரளும் போர்த் தன்னிலை, போரை உள்ளிருந்து அணுகிய சுயமாகவே இருக்கிறது. அதற்குப் போர் குறித்த **புனிதக் கதையாடல்களைத்** தக்க வைத்திருக்க வேண்டிய தேவை இருப்பதில்லை. போரை இரத்துச் செய்யும் போக்கே புனைவில் உருவாகி வருகிறது. முள்ளிவாய்க்கால் வரை போரோடு இழுபட்டவனின், போரை மீந்திருக்கும் **உடல் களின் வலியாக** உரையாடும் புனைவுகளாக வாசிப்பின் வசதிக்காக வகைப்படுத்தலாம்.

நினைவில் அழியாத காலக்கோடுகளாகும் **கதைகளில்,** முகாம்கள் துயர்சார் குறியீடாகி மீந்திருக்கும் உடல்களின் வலிகளைப் போரில் இலக்குகளாக முன்நிறுத்தப்பட்ட **மக்கள்சார்** உளவியலில் இருந்து புனைவாக்குகிறார். போரின் உள்ளார்ந்த அழிவை, வீழ்ச்சியை துயரங்களாக முன்வைத்துக் **கழிவிரக்கத்தைக்** கோருவதில்லை அவருடைய புனைவுகள். அவர் போரின் கொடூர எதார்த்தத்தைப் புனைவுகளாக முன்வைக்கும் போது, நாம் இதுகாறும் ஆதுரமாக நம்பி வந்த 'போரின் புனிதவுடல்' அழுகி நம்மைத் தொந்தரவு செய்வதாக உருமாறி விடுகிறது.

– ஆக்காட்டி

ரூ 300 | யூரோ 8

ISBN 978 - 955 - 7481- 00 - 5